1996

மிகவும் சிறியவராகிய,
இவர்களில்
ஒருவனுக்கு எதைச்
செய்தீர்களோ,
அதை எனக்கே
செய்தீர்கள். மத்தேயு 25:40

நம்முடையவர்களும்
நற்செயல் செய்யப்
பழகட்டும். தீத்து 3:14

பத்திரிகையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும் சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்)

3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத் 28:20

4 அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.

5 அவர்களை மேய்த்து அன்பு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.

6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு -அப 1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக: இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1:1; 10:40-43)

CHIEF PASTOR N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

தேவன் இயற்கை வளங்களைத் தந்திருக்கிறார் அவைகளில் சில எல்லோருக்கும் பொதுவாக உள்ளதே. அவைகளில் சூரியன், காற்று, நீர் போன்றவையாகும். நதி நீர் என்னுடையது, உன்னுடையது என்ற சண்டையை தென்பாகங்களில் பார்க்கிறோம். பூமியின் எல்லைகளைக் குறித்தும் இவ்விதமான சண்டைகள் இந்தியாவில் உண்டு. நல்ல வேளை, காற்றைக் குறித்தும், சூரிய, சந்திர வெளிச்சத்தைக் குறித்தும் சண்டையில்லை. நீரை இறைவன் வானத்திலிருந்து பொழிகிறார். நீர் உயர நிலம் உயரும்; நிலம், உயர குடி உயரும்; குடி உயர கோல் உயரும் என்பது பழங்கவி. அதாவது, தண்ணீர் செழித்தால் வயல் நிலங்கள் நன்றாய் விளையும் அப்படி வயல் நிலம் விளைந்தால் குடிகள் செழிப்பாயிருப்பார்கள்; குடிகள் செழிப்பாயிருந்தால அரசன் உயர்ந்திருப்பான் என்பதே.

அகண்ட பாரதம் அடைந்தே தீருவோம் என்ற மதவாதிகள் எங்கே போனார்கள். அவர்கள் வந்தால் என்ன நடக்கும் என்பதை இதன் மூலம் அறியலாம். கேவலம் இந்த நதி நீரை ஒற்றுமையாய்ப் பகிர்ந்து கொள்ள முடியாதவர்கள் நாட்டை ஆளப்போகிறார்களாம், மதியீனமான மக்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மாய்ந்து போவார்கள். "மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும் போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள்" சங். 12:8 என்ற வேதவாக்கியம் உண்மையாயிற்று. நீதிமான்களின் அரசாட்சி வரும். ஆம்! இயேசு கிறிஸ்துவின் அரசாட்சி இந்த உலகத்தில் வரப்போகிறது; நாம் ஆயத்தமாவோம், எதிர்பார்ப்போம்.

1996-ம் ஆண்டு புது வருடம் பிறந்து விட்டது. இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகை நெருங்குகிறது. அதற்காக உழைப்போம், உற்சாகம் கொள்ளுவோம். அவருடைய இராஜ்யம் வந்தால்தான் எல்லோருக்கும் சமாதானம் எல்லாம் சமாதானமாகும்.

கிறிஸ்துவுக்குள்,

(CHIEF PASTOR N. LAZAR)

திருச்சபை

(தொடர்ச்சி)

ஞானஸ்நானத்தின் மூலமாய் [தண்ணீர் ஞானஸ்நானம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம்] ஒரு மனிதன் கிறிஸ்துவோடு ஒட்டப்படுகிறான்; திருச்சபையின் அங்க ஐக்கியத்துக்குள் வருகிறான்; அவன் புது பிறப்பை அடைகிறான். இவ்விதமாக புது பிறப்பு, மறுபிறப்பு உயிரினத்தின் பிறப்பைப் போன்று படிப்படியாக வளர்ந்து குறுகிய காலத்திலோ, நீண்ட காலம் கழித்தோ நிறைவேறுவது.

அதற்கு திருச்சபையின் ஐக்கியத்தில் அவன் நிலைத்திருப்பது அவசியமாகும். இப்பொழுது நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா. 2:20). என்றவண்ணமாக நான் என்கிற மையத்தை விட்டு கிறிஸ்து என்ற மையம் உள்ளே உருவாகிறது. இது உயிருக்கு ஊக்கம் ஊட்டுகிற சக்தியாயிருக்கிறது. தேவன் விசுவாசிக்குத் தமது பரிசுத்த ஆவியை அருளுகிறார் எனெனில் கிறிஸ்து பரிசுத்த ஆவி மூலமாகவே கிரியை புரிகின்றார். ஆதலால் அவர் குமாரனுடைய ஆவி என்றும் அழைக்கப்படுகிறார் (கலா 4:6).

இவ்வண்ணமாக விசுவாசியின பண்பிலே, ஒரு மனிதன் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பி, பாவ அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்போது, [முற்காலத்தில் இப்படியே செய்தார்கள்.] புதிய தொன்று புகுந்துள்ளது. அவனில ஏற்பட்டுள்ள மாற்றம் அவன் மேம்பாடடையத்தக்கதாக அவனது எணணங்கள், இலட்சியங்கள், குறிக்கோளள்க, நோக்கங்கள் ஆகியவற்றில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துகின்ற ஒழுக்கப் புதுமைமட்டுமல்ல இதுவும் ஒருவகையில் நிச்சயமாகவே உண்மைதான ஆனால் அம்மாற்றத்துக்குக் காரணமென்னவென்றால் கிறிஸ்துவின் ஆவியாகிய ஒரு புதிய கருப்பொருள் அவனது வாழ்விலுள் புகுந்துள்ளது. எற்கெனவே பரிசுத்த ஆவியானவர் அந்த இடத்தில் இருந்தவரல்லர் அவர் அருளப்படுகின்றார். அவர் வந்து அவ்விடத்திலே தமது இருப்பிடத்தை நிலையாக அமைத்துக் கொண்டார்.

இவ்வண்ணமாக ஒரு புதுப் படைப்பு நிகழ்ந்துள்ளது: புதுப்பண்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த, அதன் ஒப்பற்ற அம்சம் யாதெனில் கிறிஸ்துவின் ஆவி அதில் இருக்கின்றார் அப். பவுல் இயல்பான மனிதனுக்கும், கடவுளின ஆவி பெற்ற 1 கொரி. 2·14 ஆவிக்குறிய மனிதனுக்கும் உள்ள வேற்றுமையை வெகு தெளிவாக சித்தரித்துள்ளார். ''இயல்பான மனிதன்'' பழைய மனிதன் மோசம் போக்கும் இச்சைகளினால் கெட்டுப் போகிறான், ஆனால் புதிய மனிதன ஆகிய ''ஆவிக்குரிய மனிதன்'' சத்தியத்தினால் உண்டாகும் நீதியிலும் பக்தியிலும் கடவுளின் சாயலாக சிருஷ்டிக்கப்படுகிறான் [எபே. 4:22]. கிறிஸ்துவுக்குளளே கடவுள் ஒரு புது வகையான மனுக்குலமாகிய ஆவிக்குரிய மனுக்குலத்தை உருவாக்கிக் கொணடிருக்கிறார்.

ஆதாமுக்குள்ளானவர்களைக் கொண்டு பழைய மனுக்குலம் படிபபடியாக கிறிஸ்துவுக்குள்ளானவர்களைக் கொண்டும் 1 கொரி 15:22; ரோம 5 12-17 ஒரு புது மனுக்குலமாக உருவாக்கப்பட்டுக் கொணடே இருக்கிறது. இந்நித்தியமான பிறப்பு உயிரின வாழ்க்கையில் ஆரம்ப நிலைகளைப் போலவே மனுக்குலத்தின் கவனத்துக்கும், அறிவுக்கும் மறைக்கப்படுகின்றது. ஆனால் அது மெய்யானதாயிருந்தால் வெகு சீக்கிரத்திலோ, பிறகாலத்திலோ வெட்ட வெளிச்சமாவது உறுதியே.

திருச்சபை ஒரு புதிய படைப்பு எனினும் உருவாக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் நிலையில் தான் உள்ளது. அது விண்

னுக்குரியது எனினும் ஒரு குடியேற்றப் பகுதியாக பிலி. 3:20 இப்பாவ உலகில் வாழ்ந்து வருகின்றது. ஆதலால் நாம் இங்கே பரதேசியாய் சஞ்சரித்து வருகிற காலமெல்லாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு ஆராதனை செய்ய கிருபையைப பற்றிக் கொள்ள வேண்டும் (எபி 12 28).

அநேகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் போதும், ஞானஸ்நானம் எடுத்தால் போதும், பரிசுத்தாவி பெறுவது போதும் எப்படியும் ஜீவிக்கலாம், வாழலாம், ஊழியம் செய்யலாம், சபை தேவையில்லை, கட்டுப்பாடு தேவையில்லை என்று வாயில் வந்ததைப் பேசி கெட்டுப் போகிறார்கள். இன்னும் சிலர் சில திறமைகள் இருப்பதினால் ஊழியம் என்ற பெயரில் பிழைப்புக்கும், தங்கள் பெருமைக்கும் வழி தேடிக் கொள்ளுகிறார்கள். ஒரு கிறிஸ்தவனுடைய ஐக்கியம் நாலு பேரோடு இருக்க வேண்டும்; பிதாவோடும், குமாரனோடும் பரிசுத்தாவியோடும், திருச்சபையோடும் ஆகும் [அப்போஸ்தல ஐக்கியம்] 1 யோ. 1:1–3; பிலி 2:1; 2 கொரி. 13:14.

ஞானஸ்நானம் பெற்றும் திருச்சபையில் அங்கமாகியும் நிலைத்திராதோர் முழுமை அடைவதோ கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாவதோ அரிது. ஏனெனில் நாம் இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் இனி எவ்விதமாயிருப்போமென்று அறியோம் ஆயினும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம் அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டிருக்கிற எவனும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான். திருச்சபையாகத்தான் சுத்திகரித்து நிறுத்துவார் (எபே. 5:26 27; 1 யோவா. 3:1–3).

சபையே தேவனுடைய புதிய எருசலேம். சபையே தேவனுடைய கடைசி திட்டம் ஒரு ஆத்துமாவை தேவனுடைய திட்டத்துக்குள் வளர்த்து நிலை நிறுத்துவது மெய்யான சபையே, சபையின்றேல் இரட்சிப்பு பூரணமடையாது.

(தொடரும்)

"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" [அப். 2:47].

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

1. லூத்தரின் பிறப்பும் பாலிய பருவமும்.

மார்த்தின் லூத்தர், தமது பிராண சிநேகிதராகிய மெலாங்தோன் சாஸ்திரியாரிடம் தம் குடிப்பிறப்பைப் பற்றி ஒரு சமயம் சொன்னதாவது: "நான் பயிரிடும் சம்சாரியின் மகன், என் தந்தை பாட்டான் முதலிய முன்னோரெல்லாம் சமுசாரிகளே" என்பதே. லூத்தரின் முன்னோர்கள் வசித்த இடம் மோரா என்னும் கிராமம். இது கர்மானியா தேசத்தின் மத்தியில் துருங்கியா என்னும் காட்டுக்கருகாமையில் இருந்தது. சற்றேறக்குறைய 450 வருஷங்களுக்கு முன், மேற் சொன்ன மோரா என்னும் கிராமத்தில் ஹன்ஸ் லூத்தர் என்னும் பயிரிடும் சமுசாரி ஒருவர் இருந்தார். இவர் மார்க்கரெட் லிண்டெமென் என்னும் கன்னிகையை மணம் புரிந்தார்.

இவர்களுடைய சிரேஷ்ட புத்திரன் ஆன்ஸ் லூத்தர் என்பவர் மார்கரெட்லிகிளர் எனும் மாதை விவாகம் செய்தார். 1528-ம் வருஷம் முதல் ஐஸ்லேபன் பட்டணத்தில் மேல் விசாரணை குருவாக இருந்த சீரியாகுஸ் ஸ்பங்கன்பெர்க் என்பவர் இக்குடும்பத்தைப் பற்றி எழுதிவைத்திருக்கிறதாவது:- தம்தகப்பனர் என்ரி லூத்தருக்கும் தம் தாயார் மார்கரெட்டே அம்மாளுக்கும் [கன்னிகைப் பெயர் லின்டெமென். இவர்கள் கீழ் மான்ஸ்வெல்ட் பட்டணத்தில் விருதாப்பிய வயதில் மரணம் அடைந்தார்கள்] தெளிவாய்த் தெரிவித்தது. அவர்களுடைய மூழு சம்மதத்தின் பேரில் ஆன்ஸ் லூத்தர் மார்க்கரெட்லிகூலிர் எனும் பெண்ணைப் பரிசுத்த விவாகம் செய்தார். இது உண்மையும், திட்டமுமான விஷயம் இதற்கு போந்த ருசுபகாரம் உண்டு என்பதே.

பிறகு ஆன்ஸ் லூத்தர் துருக்கியாவிலுள்ள மேரா என்னும் கிராமத்தை விட்டு, சசோனியா நாட்டிலுள்ள ஐஸ்லேபன் சிறுபட்டணத்துக்குப் போய்க் குடியேறினர். அவர் இப்படி செய்வதற்குக் காரணம், ஆர்ட்ஸ் மலைகளின அடிவாரத்திலுள்ள சுரங்கங்களில் யோக்கியமான ஜீவியம் செய்து குடும்பத்தை முன்னுக்கு கொண்டு வரலாமென்ற நம்பிக்கைதான். ஆனல் அவருடைய சத்துருக்கள், அவர் கொலை செய்து சாசாக்கினைக்குத் தப்பிக் கொள்ளும்படி ஓடி ஒளிந்து கொண்டார் என்று தூற்றினர்கள இது உண்மையேயானல் அவர் அவர் உயிர் தப்பிக் கொள்ளும்படி ஐஸ்லேபான், மான்ஸ்வெல்ட் பட்டணங்களுக்கல்ல, அதைவிட தூரமான பட்டணங்களுக்கு ஓடி ஒளித்திருக்கவேண்டியது.

ஏனென்றல் மேற் சொன்ன இரு பட்டணங்களும் சச்சோனிய தியமுகப் பிரபுவின் அதிகாரத்துக்குட்பட்டவைகளானதால், மேராவில் எப்படி தண்டனைகுட்பட்டிருப்பரோ. அவ்வாறே இவ்விடங்களிலும் அவர் தண்டனைக்கு தப்பி இருக்க முடியாது, காரியம் அப்படி அல்ல. ஏன்? சரித்திரம் அவரைப்பற்றி எதார்த்த வாதியும், நாணயஸ்தரும், உழைப்பாளியும் கபடற்ற உத்தம இஸ்ரவேலனகிய நாத்தான் வேலைப் போல் திறந்த மனமுள்ளவரென்றும், பட்டணவாசிகளுக்குள் மதிப்புக்குரிய பதவி அடைந்தவரென்றும், பிரபுக்களால் மெத்த மதிக்கபபட்டவரென்றும், தெரிவிக்கிறது; மேலும் அவருடைய மனைவியோ கற்பிலும், பக்தியிலும் சிறப்புற்றவளும் தன் கணவனுக்கு கண்ணுக்கு கண்ணக உயிர்த் துணையாயிருந்தாளென்றும் தெரிவிக்கிறது.

இந்த எளிய குடும்பம் ஐஸ்லேபன் பட்டணத்திலிருந்த காலத்தில் 1483-ம் வருஷம் நவம்பர் 10-ம் மாதம் இரவு 11 மணிக்கும், 12 மணிக்கும் இடையில் அவர்களுக்கு ஒரு சிரேஷ்ட புத்திரன் பிறந்தார். அடுத்த நாள் பரிசுத்த மார்த்தீன் என்பவருடைய திருநாளானதால் அத்தினத்தில் அக்குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு மார்த்தீன் எனும் நாமம் இடப்பட்டது. ஆன்ஸ் லூத்தர் குழந்தையின் படுக்கைக்குப் பக்கத்தில் முழங்கால் படியிட்டு அக்குழந்தைக்கு தேவானுக்கிரகம் பரிபூரணமாய் அருளும்படி அடிக்கடி ஜெபிப்பார்.

குழந்தைக்கு அறுமாதம் ஆகிறதற்கு முன்னே, அதன் பெற்றேர் தங்கள் நிலைமையை விருத்திக்குக் கொண்டு வரும் பொருட்டு மான்ஸ்வெல்ட் பட்டணம் சென்று ஜீவியம் செய்தார்கள். குழந்தையின தகப்பன் ஆன்ஸ் லூத்தர் இங்கேயும் சுரங்க வேலைதான் செய்தார் தகப்பனைப போல் தாயாரும் வெகு உழைப்பாளி, வீட்டுக்கு வேண்டிய விறகை அந்த அம்மாள் காட்டுக்குப் போய் வெட்டித்தோளில் சுமந்து வருவார்கள தாயும் தகப்பனும் வீட்டிலில்லாத சமயங்களில், தம் இளைய சகோதர சகோதரிகளைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு மார்த்தீன் மேல் விழுந்தது.

பெற்றோர் இருவரும் வரைகடந்த கண்டிப்புககாரர். மார்த்தீனிடத்தில் எவ்விதத் தூர்க்குணமும் இல்லாதிருந்தும், பெற்றோருடைய மிதமிஞ்சிய கண்டிப்பு அவருடைய கரை கடந்த உற்சாகத்தையும், மனக்களிதயும் குறையச் செய்தது. ஒரு தரம் அவருடைய தகப்பனர் வெகு கடூரமாய்த் தண்டித்தார் அதற்குப் பிறகு வெகுகாலம் பயத்தினால் தம் தகப்பனரிடத்தில் அவர் நம்பிக்கை, அன்பு கூடகாட்டவில்லை. அவ்வாறே அவருடைய தாயாரும், மார்த்தீன் ஏதோ ஒரு கொட்டையை உத்தரவின்றி எடுத்து சாப்பிட்டு விட்டதற்காக இரத்தம் ஓட அவரை சவுக்கால் அடித்தார்கள் மார்த்தீன் தம் சிறு வயதிலேயே தம் பெற்றோர்களை விட மகா குரூரமானவர்களோடு கூடிப்பழகினர்.

(தொடரும்)

✱ ✱

"அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி. 11:4).

✱ ✱

மெய்யறிவு

இறைவன் மனிதனாக அவதரித்தார். அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் தமது சுய நிலையில் வெளிப்படாமல் மனுஷ ரூபமெடுத்து வந்து, மனிதர்கள் மத்தியில் வாசம்பண்ணினர் அவர் பெயர் இயேசு அவர் தாயார் பெயர் மரியாள் யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார். மெய்யாகவே இவர் யார்? இயேசு செய்த அற்புத செய்கைகளை கண்டவர்களும், அதிகாரத்தோடே பிரசங்கித்த பிரசங்கங்களைக் கேட்டவர்களும், அவர் அருளின ஞான உபதேசங்களைக் கவனித்தவர்களும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? மத். 21:10 என்று ஒருவரோடொருவர் விசாரிப்பதை பார்த்த எனக்கும் இவர் யார்? என்று அறிந்து கொள்ள பேரவா உண்டாயிற்று.

இவர் யார்? என்று அறிந்து கொள்ள விரும்பி, அவர் சென்று வந்த பல ஊர்களுக்கும் சென்று அவரை அறிந்த பல மனிதர்களிடமும் விசாரிக்க ஆரம்பித்தேன் நாயீன் ஊர் மக்கள் சிலரை சந்தித்து, இந்த இயேசு யார்? என்றேன். அவர் மகா தீர்க்கதரிசி, செத்துப் போனவனை உயிரோடே எழுப்பி விட்டார் என்று சொன்னார்கள் [லூக். 7:16].

நாசரேத்தார் சிலரிடம் பலத்த காரியங்களையெல்லாம் செய்கிற இந்த இயேசு யார்? என்றேன். அவர் தேவனிடமிருந்து மகா அதிகாரம் பெற்றவர் என்றனர் ஆச்சரியத்துடன் (மத் 9:8). அங்கே பலரை விசாரித்தபோது ஓ! அவனா? அவன் ஒரு தச்சன், மரியாள் மகன். அதோ அந்த யாக்கோபு, யூதா, சீமோன் ஆகியோருடைய அண்ணன் என்றனர் மிகவும் அசட்டையாய் [மாற் 6:3]. அவர்களுடைய ஜெப ஆலயம் சென்று, அமர்ந்து ஒரு பெரியவரிடம் உங்கள் ஊரைச் சேர்ந்த இயேசுவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று மெதுவாக கேட்டேன்?

அவன் எங்கோ போய் ஞானத்தையும் பெற்று வந்திருக்கிறன் போல் தெரிகிறது என்றார் [மத். 13:34] இயேசுவின் வீட்டுக்குச் சென்று அவருடைய சகோதரர்களிடமும், நண்பர்களிடமும் போய் மெய்யா

களை இந்த இயேசுவைப் பற்றி எனக்கு சொல்ல வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டேன். அவர்கள் மிக தயக்கமாய், அவனுக்கு கொஞ்சம் புத்திக்கு சரியில்லை என்று வருத்தத்தோடே சொன்னார்கள்.

இயேசு ஒரு ஞானி என்கிறார் ஒருவர். மதிமயங்கினவர் என்கிறார் இன்னொருவர். என்ன இது? முரண்பாடாயிருக்கிறதே, என்று நானும் சற்று குழப்பமடைந்தேன். ஆனாலும் இவரைப்பற்றி தீர்க்கமாய் அறிய விரும்பி யூதருக்குள்ளே போதகராகிய நிக்கொதேமு என்ற பரிசேயரை அணுகி, ஐயா, இயேசு செய்கிறதெல்லாம் உங்களுக்குத் தெரியுமே இவர் யார்? என்று கேட்டேன். அவர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று இரகசியமாக சொன்னார் [யோவா. 3:2]. அந்தஸ்துள்ள [illegible]காரனாகி ஒருவரை வினவினேன். இயேசு ஒரு போதகர் என்று மரியாதையுடன் சொன்னார் (மத் 26:18)

மிடுக்கான உடையணிந்து, வேகமாக சென்று கொண்டிருந்த வாலிபன் ஒருவனை மறித்து, எங்கே போகிறாய் தம்பி என்றேன். இயேசுவிடம் பேசப்போகிறேன் என்றான். இயேசுவா! அவர் யார்? என்றேன். அவர் ஒரு நல்ல போதகர் என்றான் [மாற் 10:17] நீண்ட அங்கிகளைத் தரித்துக் கொண்டு தேவாலயம் சென்று கொண்டிருந்த பரிசேய கூட்டத்தைப் பார்த்து, போதகராகிய இயேசு யார்? என்று விசாரித்தேன். அவ்வளவுதான் அவர்கள் முகபாவம் எல்லாம் மாறுபட்டது. கோபத்துடன் இயேசுவா? அவர் ஒரு பாவி என்றார் ஒருவர் (யோவா. 9:24) அவனோ பேய் [illegible] கிறாயே அவன் ஒரு பைத்தியக்காரன் பிசாசு பிடித்தவன் [யோவா 10:20] என்றார் மற்றவர் (யோவா 7:20).

எப்படி ஐயா, பிசாசு பிடித்தவன் பிசாசை துரத்துவான் என்று கேட்க, ஒருவருக்கு கடுங்கோபமுண்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டு பிசாசுகளை துரத்துகிறான் [லூக். 11:15]. மேலும் அவருக்கு ஆத்திரம் அடங்காமல், அவன் ஒரு போஜனப்பிரியன், சமாரியன் [தாழ்ந்த ஜாதியான்] என்று திட்ட ஆரம்பித்துவிட்டார் (யோவா.8:48)

பெரிய, பெரிய போதகர்கள் போல் இருந்தும், இவ்வளவு பொறாமையும், குணங்கெட்டவர்களுமாக இருக்கிறார்களே என வருந்திக்கொண்டு, ஏரோதுராஜாவின் அரமனை சென்றேன். இந்த இயேசுவைக் குறித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் சொல்லுகிறார்களே? இவர் யார்? என்று ஏரோது ராஜாவிடம் கேட்டேன். ஏரோது பிரதித்தரமாக நான் கொலை செய்த யோவான் [ஸ்நானகன்] உயிரோடெழுந்து வந்ததாக கேள்விப்படுகிறேன் என்று கலக்கத்தோடே சொன்னான் (லூக் 9:7)

[தொடரும்]

"இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்" [1 யோவா. 5:20]

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	இடம்	காலம்
பாஸ்டர் அலெக்சின் ராஜா	ரெபெக்காள்	பந்தாரக்குப்பம்	27-12-95

வேத பாடம்

[தொடர்ச்சி]

எண்ணாகமம்

எண் 25:9,10

அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம்பேர். 1 கொரி. 10:8ல் ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் விழுந்தார்கள் என்று பார்க்கிறோம். ஆயிரம் பேர்கள் கடவுளுடைய கட்டளையின் பிரகாரம் கொலை செய்யப்பட்டு தூக்குத் தண்டனைக்குட் பட்டார்கள் வசனம் 4,5. அப்படி தூக்கப்பட்டவர்கள் இஸ்ரவேலுடைய பிரப்புக்களாக இருந்தார்கள். இந்த விபச்சார பாவத்தில் பிரபுக்கள் முந்தியிருந்தார்கள் என்று அறிகி ரோம். ஏற்கெனவே சிமியோனின் வம்ச பிரபு ஒருவன் இதிலே சம்பந்தப்பட்டிருந் தான் என்று வாசிக்கிறோம். அவ்விதமாக கொலை செய்யப்பட்டு தூக்கப்பட்டவர்கள் ஆயிரம் பேரும். அப்பொழுது தேவனுடைய கோபத்தினால் உண்டான வாதையினால் இருப்பத்து மூவாயிரம் பேரும் செத்தார்கள் என்று பார்க்கிறோம். அந்த வாதையால் அன்றைய தினம் செத்தவர்கள் இருபத்து மூவாயிரம் பேர். தூக்குத் தண்டனையில் போடப்பட்டவர்கள் ஆயிரம் பேர் மொத்தம் இருபத்துநாலாயிரம் பேர் என்று அறிகிறோம்.

அந்த பாவத்திலே சம்பந்தப்பட்டிருந்த இஸ்ரவேலர்களில் சிமியோன் கோத்திரத் திலுள்ள சிம்ரி என்பவனும் ஒரு பிரபுவாயிருந்தான். பினகாஸ் எழும்பி ஈட்டியினால் சிம்ரியையும், கஸ்பியையும் கொலை செய்து தேவனுடைய உக்கிரகத்தை தணியும்படி செய்தார்கள். தண்டிக்கப்பட்டதினிமித்தம் தேவகோபம் நிறுத்தப்பட்டது. எப்படியும் பாவத்திற்குட்பட்டவர்கள் எல்லாரையும் வாதையினாலும், கொலை செய்யப்பட்டதினாலும் இறந்து போனார்கள் [உபா. 4:3]. பினகாஸ் எழும்பி நியாயம் செய்தபடியினால் வேதாக மத்திலுள்ள பெரிய உடன்படிக்கைகளில் ஒன்றாகிய லேவியின் உடன்படிக்கை ஸ்தா பிக்கப்பட்டது.

எண். 25:11,12

நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கையாக அது இருக்கும் என்று தேவன் திருவுளம் பற்றினார் [யாத். 40:15].

எண். 25:16-18

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டார். இவ்விதமாக இஸ்ரவேல் ஜனங்களை நெருக்கி பாவத்தில் விழத்தள்ளின மீதியானியரை வெட்டிப் போடும்படியாக கட்டளை யிட்டார். எண். 31 அதிகாரத்தில் கர்த்தருடைய இந்த கட்டளையை நிறைவேற்றின பின்பே நீ மரணமடைவாய் என்று தேவன் மோசேக்கு சொன்னார். ஆனபடியினால் மோசேயின் கட்டளைப்படி இஸ்ரவேல் புத்திரர்களின் தெரிந்து கொள்ளப்பட்ட போர் வீரர்கள் ஒவ்வொரு கோத்திரத்திலும் 1000 பேர்களாக பன்னிரண்டாயிரம் பேர் படை யெடுத்துப் போனார்கள். எலெயாசாரின் குமாரன் பினகாஸ் யுத்தத்திற்கு முன் சென்ற தாக நாம் பார்க்கிறோம் பூரிகைகளை எடுத்து சென்றான். மீதியானியரை முறியடித்து யுத்தம் பண்ணி அவர்களில் புருஷர்கள் யாவரையும் கொன்று போட்டு ஸ்திரீகளையும் குழந்தைகளையும், மிருக ஜீவன்கள், ஆடு மாடுகள் எல்லாவற்றையும் அவர்களுடைய ஆஸ்திகள் எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டு அவர்கள் குடியிருந்த

வர்களை யாவரையும் அக்கினியால் சுட்டெரித்து, அவர்கள் கொள்ளையடித்த பொருள்களையும், பிடித்த மிருக ஜீவன்கள் யாவற்றையும் சேர்த்து சிறை பிடித்துக் கொண்டு திரும்ப மோசேயினிடத்திற்கும் ஆசாரியனாகிய எலெயாசாரிடத்திற்கும் திரும்ப வந்தார்கள். இதை எண். 31:1-12ல் எழுதப்பட்டிருக்கிறது.

தேவ ஜனங்களை பாவத்தில் விழச்செய்ய நெருக்கினவர்களை இவ்விதமாக கொலை செய்யப்பட்டார்கள் என்று பார்க்கிறோம். அந்த வாதை தீர்ந்த பின்பு நடந்த சம்பவம் இந்த எண்ணாகம புஸ்தகத்தில் முக்கிய சம்பவம் மறுபடியும் எண்ணியதாகும்.

எண். 26:1-4

அந்த வாதை தீர்ந்த பின்பு கர்த்தர் மோசேயையும், ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்கள் எல்லாரையும் எண்ணுங்கள் என்று, இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்களை எண்ணும்படியாக தேவன் கட்டளையிட்டார். இந்த எண்ணாகம புஸ்தகம் எண்ணிக்கையின் புஸ்தகம் என்று சொல்லப்படுகிறது. முதலாவது எண்ணிக்கை [Census] எண். 1:3-லே முதல் தடவையாக தேவன் எண்ணும்படி கட்டளையிட்ட சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. இப்பொழுது இங்கே கடைசியாக அவர்கள் யோர்தான் கரையோரமாக வந்திருக்கிறார்கள். நதியைத் தாண்டினால் கானான் தேசம். இப்பொழுது மறுபடியும் இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்படியாக மறுபடியும் தேவன் கட்டளையிடுகிறார். இப்படியாக இந்த புஸ்தகத்தில் இரண்டுதரம் எண்ணிக்கை எண்ணப்பட்டதாக நாம் பார்க்கிறோம். இந்த எண்ணிக்கை எடுக்கப்பட்ட சம்பவம் நமக்கு அநேக ஆவிக்குரிய போதனைகளை கொடுக்கிறதாக இருக்கிறது.

[தொடரும்]

"அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாணவரிசைகளின்படி புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று"
[எண். 10:12].

ஞானஸ்நானம்

சென்னையில் 1-12-95 அன்று 14 பேர்களும்; திருச்சியில் 4-12-95 அன்று 6 பேர்களும்; கோயமுத்தூரில் 7-12-95 அன்று 14 பேர்களும்; பம்பாயில் 25-12-95 அன்று 8 பேர்களும் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையாய் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

சுவிசேஷம்

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நிக்கொதேமு என்ற போதகனிடம் "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" [யோவா. 3:3]. உலகத்தில் மனிதனாய் பிறப்பது நமக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியமாகும். "அரிது அரிது மானிடனாய் பிறப்பது அரிது" என்பது முதுமொழி. தேவன் உலகத்திலே எல்லாவற்றையும் மனிதனுடையாண்மைக்காக படைத்தார். மனிதனையோ தனது சாயலின்படியாக தேவன் விரும்பினார். "படைத்தான் படைப்பையெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்பது பழமொழி. மனிதனுக்கும் மற்ற சிருஷ்டிப்புக்கும் மாபெரும் வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் சுயாதீனமாய் சிந்தித்து நன்மை தீமை எதுவென்று பகுத்தறிவை உடையவனாக இருக்கிறான்.

மனிதன் சரீரத்தின்படி ஒரே தரம்தான் இவ்வுலகில் பிறக்கவும், வாழவும் முடியும். ஒரே ஒரு முறை தான் வாழும்படியாக வாய்ப்பு மனிதனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. "ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று வேதம் கூறுகிறது" [எபி. 9:27]. இந்து மதக் கொள்கைப்படி மனிதன் ஏழு பிறவி எடுக்கிறான் என்பதும்; பின்பு முக்தியடைகிறான் என்பதும் நிரூபிக்கமுடியாத தவறான உபதேசமாகும். ஆறு அறிவுள்ள மனிதன் ஐந்தறிவுள்ள மிருகமாக மறுபடியும் பிறக்க முடியுமா? முடியாதே! ஆடாகவோ, மாடாகவோ, புலியாகவோ, எலியாகவோ பிறக்கிறவன் எந்த புண்ணியத்தை செய்து முக்தியடைய முடியும். புலிக்கு இயற்கையான உணவே மாம்சமாக இருக்கிறது. புலியானது மற்ற மிருகங்களை கொன்று தின்று தான் உயிர் வாழ்கிறது.

ஆகையினால் அது பாவம் செய்கிறது என்றோ, பசுமாடு பால் கொடுப்பதினால் புண்ணியம் செய்கிறது என்றோ சொல்ல முடியாது. மேலும் மிருகங்களுடைய மாம்சமும், இரத்தமும் வேறே; பறவை, மீன் ஆகியவற்றின் மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும், மனிதனுடைய மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒன்றையொன்று ஒட்டாது; சேராது. மேலும் மனிதன் அடுத்து எந்த பிறவியாக பிறக்கப் போகிறான் என்றும், முன்பு எந்த பிறவி எடுத்திருந்தான் என்றும் யாரும் சொல்ல முடியாது. ஆகவே ஏழு பிறவி எடுப்பான் என்பதும், பிறவி எடுத்துக்கொண்டே இருப்பான் என்பதும் நடைமுறையில் நிரூபிக்க முடியாததால் இது மாபெரும் ஏமாற்றும் கொள்கையாகும். எந்த ஒரு கொள்கையும் விஞ்ஞான கருத்தும் கண்டுபிடிப்பும் நடைமுறையில் நிரூபிக்கப்படாவிட்டால் அது பிரயோஜனமற்ற கருத்தாகும். ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது.

மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்று மூன்றுத் தன்மையும் உள்ளடங்கினவனாயிருக்கிறான்; மனிதன் சரீரத்தின்படி ஒரே தரம் தான் பிறக்க முடியுமாதலால் மனிதனுடைய ஆவி, ஆத்துமா இந்த உலகிலேயே மறுபிறப்படைந்தால் தான் முக்தியடைய முடியும் என்றும், தேவனுடைய இராஜ்யமாகிய மோட்ச ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்று இறைமகனாகிய இயேசு திட்டவட்டமாக கூறினார். சரீரம் அழிந்து போகக் கூடியதாக இருக்கிறது. ஆனால் ஆத்துமா

காணாதது: அங்கே ஆத்துமா முக்தியடைய வேண்டுமானால் இந்த உலகிலேயே மறுபடியும் பிறக்க வேண்டும்.

உலகத்திலே பாவியாக பிறக்கிற மனிதன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் முதலில் அவன் பாவத்திற்கு மரிக்க வேண்டும்; பாவசுபாவம், பழைய மனுஷன் அடக்கம் பண்ணப்பட வேண்டும். நீதிமானாக, புதிய மனிதனாக எழும்ப வேண்டும் [யோவா. 6:3-11]. "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17).

"ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்றார் (யோவா. 3:5,6) ஒவ்வொரு மனிதனும் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்காச்சாரம் அல்ல. ஞானஸ்நானத்தின் மூலமாகத்தான் ஒருவனுடைய பாவங்கள் கழுவப்படுகிறது (அப். 22:16). ஞானஸ்நானத்தின் மூலமாகத்தான் பாவ மன்னிப்பு கிடைக்கிறது [அப். 2:37,38]

இந்துக்கள் தங்கள் பாவங்கள் கழுவப்பட காசியிலும், கங்கையிலும், கன்யாகுமரி கடலிலும் தாங்களாகவே முழுக்குப் போடுகிறார்கள். அதனால் பாவம் கழுவப்படுவதில்லை. அவர்கள் மனந்திரும்பி பாவ அறிக்கை செய்து இயேசு கிறிஸ்துவை தேவன் என்று விசுவாசிக்கிறேன் என்று சாட்சியிட்டு, பரிசுத்தவான்களால் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் பாவ மன்னிப்புக் கிடைக்கும். பாவத்தினின்று விடுதலையும், பரிசுத்த ஜீவியத்தையும், தெய்வ சுபாவத்தையும் தேவ சாயலையும் அவர்கள் அடைந்து கொள்ள முடியும். அப்படி இல்லாமல் தாங்களாகவே பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுகிறவர்களும், தோப்புகளின் நடுவிலே ஒருவர் பின் ஒருவராய் சுத்திகரித்துக் கொள்ளுகிறவர்களும் ஏகமாய்ச் சங்கரிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் [ஏசா. 66:17].

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:16). ஒவ்வொருவரும் விசுவாசத்தை கிரியையால் காண்பிக்க வேண்டும். "கிரியையில்லாத விசுவாசம் செத்ததாக இருக்கிறது" [யாக். 2:17]. ஞானஸ்நானமானது நாம் தேவனிடத்தில் உடன்படிக்கை செய்கிறதாக இருக்கிறது (1 பேது. 3:21) ஒருவனுக்கு திருமணத்திற்கு பெண் நிச்சயிக்கப்பட்டிருந்தாலும் திருமணம் ஆன பிறகுதான் மனைவி என்று அழைக்க முடியும். அப்படியே ஞானஸ்நானம் எடுக்குமளவும் அவன் இரட்சிக்கப்படவில்லை; தேவனுடைய பிள்ளையாகவில்லை (யோவா 1:12). எளிதாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றும் நாள் உயிரோடு எழுந்தார். அப்படியே ஒரு மனிதன் ஞானஸ்நானம் எடுக்கும்போது கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுகிறதினாலும், கலா. 5:24; 6:14 அடக்கம் பண்ணப்படுகிறதினாலும் அவருடைய உயிர்தெழுதலிலும் பங்கடைகிறான் (கொலோ. 2:12)

தேவன் நம்மை அங்கீகரிக்கிறதற்கு அடையாளமாக பரிசுத்தாவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் [மத் 3.11] முத்திரையாக பரிசுத்தாவியினால் நிரப்புகிறார் (எபே. 1:13,14) ஒருவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் அல்லது மறுபடியும் பிறந்திருக்கிறான் என்பதை சாதாரண உலக மனிதர்கள் எளிதாக கண்டு கொள்ள முடியாது. நாம்

...த்தியக்காரர்களைப் போல உலகத்திலே ஜனங்களை இரட்சிக்க அவருக்குப் பிரியமாயிற்று (1 கொரி 1:21).

இயேசுகிறிஸ்து மறுபடியும் பிறந்த ...லைப் பற்றி அருமையான உதாரணத்தைக் கூறினார். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் வீசுகிறது, அதன் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும், உனக்குத் தெரியாது. ஆவியினாலே பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்று சொன்னார் [யோவான் 3:8] ஆவிக்குரியவன் மற்றவர்களால் நிதானிக்கப்படான் [1 கொரி 2:11-15]

நித்தியமான வாழ்க்கை நிரந்தரமானது. ஆகவே மனந்திரும்பி, இயேசுவைகிய இயேசுவை விசுவாசித்து, தேவன் என்று சாட்சியிட்டு, பாவங்களை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்று, தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க ஆயத்தப்படுவீர்களாக!

"நீ ஞானஸ்நானம் பெற்றுவிட்டாயா? இல்லையென்றால் பெற்றுக்கொள்!!"

"மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன்னைத்தான் கெடுத்து தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? [லூக் 9:25]".

சமாதானம்! சமாதானம்!! சமாதானம்!!!

(தொடர்ச்சி)

இவர்களைக் குறித்து எண்ணங்கொள்ளாது காரியம் அறியாத மிருகத்தைப் போல் என்கிறார் ஆசாரியரான ஆசாப் [சங் 73:22]. நிச்சயமாகவே அவர்களை சறுக்கலான இடங்களில் நிறுத்தி பாழான இடங்களில் தள்ளிவிடுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் பாழாய்ப் போனார்கள், பயங்கரங்களால் அழிந்து [illegible] [illegible]. நித்திரை தெளிந்தவன் சொப்பனத்தை அசட்டைபண்ணுகிறது போல [illegible] [சங் 73 18-20]

[illegible] இவ்வளவு தெளிவாக [illegible] ஏன் மறுக்கிறார்கள் தெரியுமா? இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்கள் கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான் [2 கொரி. 4:4]. எவ்வளவு அழகான காட்சி! இதை அவர்கள் ரசிக்க வில்லையே என்று அங்கலாய்க்கலாமா? [illegible] பார்க்கமாட்டார்கள். ஒரு முறை இரு முறை சொல்லிப்பார்; கேட்காவிட்டால் விட்டு விடு.

எவ்வளவோ காரியத்தில் சரியாக இருந்த இவர் இந்த காரியத்தில் ஏன் தடுமாறிப் போனார் தெரியுமா? அவர் அசதியாய் இருந்தபோது சாத்தான் அவரை ஏவிவிட்டது. என்ன செய்தார்? இந்த ஆகாத கிரியையச் செய்துவிட்டார் [1 நாளா. 21 1] கேடு செய்தவன் பிசாசு

லவா? நம் சகோதரனை, நம்முடைய ஊழியரை உள்ளத்தில் பகைக்கலாமா? அவர் நமக்கு பல விதத்தில் நன்மை செய்திருக்கிறாரே?

ஏன் இப்படி ஒழுங்கில்லாதிருக்கிறார்கள் தெரியுமா? அவர்களுக்கு ஒழுங்கைக் குறித்த அறிவு அதிகமாயில்லை, இப்படிப் பட்டவர்கள்மேல் வெறுப்புணர்ச்சி கொள்ளுவதைவிட, எச்சரித்து, நீடிய சாந்தத்தோடே புத்தி சொல்லுவதுமேல் (1 தெச. 5:14).

ஏன் இந்தக் காரியத்தைக் கூட செய்யாமல் இருக்கிறார்கள் தெரியுமா? முடியாமை, பலவீனம், திட்டமின்மை அவர்கள் ஆவி உற்சாகமாக அதை இதை செய்ய வேண்டும் என்றுதான் விரும்புகிறது. ஆனால் பலவீனமான அவர்கள் மாம்சம் தடை செய்கிறது (மத் 26:41). கர்த்தர் பெலப்படுத்தும் போது சரியாகி விடுவார்கள், நல்லதைத்தான் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார்கள், ஆனாலும் தீமை அவர்களை மேற்கொள்ளுகிறது. இந்த நிர்பந்தமான மனிதர்கள் மீது எரிச்சலைப்பட்டு, வழக்கு போடலாமா? கர்த்தர் விடுவிக்கும்போது நற்கிரியை செய்வார்கள் [ரோம 7:6]

அவன் அவனை அதை செய்யவில்லை, இதை செய்யவில்லை, அப்படி செய்கிறான், இப்படி செய்கிறான் என்று முறுமுறுத்து, குறைவுபட்டு, முறையிடுவதை விட்டு அப்போஸ்தல் சொன்னபடி நீடிய சாந்தத்தோடே திடனற்றவர்களைத் தேற்றி, பலவீனரைத் தாங்கி நமக்குள்ளே சமாதானமாக இருப்போமாக [1 தெசலோ. 5:14,13]. ஒருவர் செய்யாத நற்காரியத்தை சிந்தியாமல், செய்த நற்காரியத்தை சிந்தித்தால் நமக்குள்ளே சமாதானம் உண்டாகும், துர்கிரியை நினைத்தால் சண்டை; நற்கிரியை நினைத்தால் சமாதானம்.

தேவ சமாதானம் நமது இருதயங்களையும், சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காக்கக்கடவது ஆமென்.

சமாதானமாயிருங்கள் [ரோம. 12:18]. யாவரோடும் சமாதானமாயிருங்கள் (எபி. 12:14). உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் [1 தெசலோ. 5:13]. சண்டை செய்யாதிருங்கள்.

"தேவ சமாதானம் உங்களுடைய இருதயங்களில் ஆளக்கடவது இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள் நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்" (கொலோ. 3:15).

சாட்சி

என் பெயர் Y. சின்னப்பன். கொடைக்கானலில் வாழ்ந்து வந்ததான நான் தற்போது மதுரையில் வசித்து வருகிறேன். எனக்கு ராணி என்ற மனைவியும், இரண்டு மகன்களும் உள்ளனர். கர்த்தர் என் வாழ்க்கையில் செய்த அற்புதங்களை உங்களுடன் சாட்சியாக பகிர்ந்து கொள்ளுகிறேன்.

கொடைக்கானலில் உள்ள பிரகாசபுரம் என்ற கிராமத்தில் பக்தியுள்ள கிறிஸ்தவ பெற்றோர்களுக்குப் பிறந்து வளர்க்கப்பட்டு ரோமன் கத்தோலிக் ஆலயத்திற்கு சென்று வருகிறவனாயிருந்தேன். என்னுடைய வாழ்க்கையோ நிம்மதியற்றுகாணப்

[illegible]டு. காரணம் நான் கிறிஸ்துவைப் பற்றி சரியாக அறியாமலிருந்தேன். இப்படி நிம்மதியற்று வாழ்ந்து வந்தபோது ஒரு நாள் இரவு ஒரு தரிசனம் கண்டேன்.

ஒரு மலையில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கிறது. அதை ஒரு பெரியவர் மேய்த்துக் கொண்டிருக்கிறார். மாலையில் ஆடுகளை தொழுவத்துக்கு அன்பாக நடத்தி சென்று கொண்டிருந்தார். நிம்மதி இல்லாமல் அலைந்த நானும் மந்தையோடு சேர்ந்து ஆடாகவே தொழுவத்திற்குச் சென்று அமைதியான வாழ்க்கை வாழ்வதாகவும் அந்த மேய்ப்பர் அன்புடன் கவனிப்பதாகவும் கண்டேன். இத்துடன் தரிசனம் முடிந்தது.

இந்த சூழ்நிலையில்தான் நான் மேய்ப்பர் யார் என சிந்திக்க ஆரம்பித்தேன். அதே சமயம் எனக்கும், எனது சகோதரருக்கும் நிலத்தகராறு காரணமாக நான் மிகவும் அமைதியில்லாமலிருந்தேன். இந்த நேரத்தில் புதிய சாரோன் சபை பாஸ்டர் A [illegible] அவர்களை சந்தித்து ஆலோசனை பெறுமாறு என் வீட்டுக் கருகில் வாழ்ந்து வந்த சாமுவேல் அவர்கள் சொன்னார்கள். அதன்படி நான் பாஸ்டர் [illegible] அவர்களை சந்தித்து என் நிலைமையை கூறினேன். அவர்கள் எனக்காக ஜெபித்து, கர்த்தர் அந்த நிலத்தை மீட்டுத் தருவார் நீங்கள் விசுவாசிக்க வேண்டும் என்று கூறி அனுப்பினார்கள். இதன் பின்னர் நாங்கள் குடும்பமாக [illegible] B L Shed ல் இயங்கும் புதிய சாரோன் சபை ஆராதனையில் [illegible] கொண்டு [illegible].

[illegible] நிலத்தகராறு [illegible] சகோதரருக் [illegible] திருச்சபை [illegible] எங்களுக்கு உதவியும், ஆறுதலாகவும் இருந்தனர் [illegible]

இருந்தது. இதற்கு பின்னர் எனது மகன் பீட்டருக்கு கடும் காய்ச்சல், மஞ்சள் காமாலை, பெரியம்மை, மூளை வளர்ச்சியில் கோளாறு என்று ஏற்பட்டு மரணப்படுக்கையில் கிடந்தான். பாஸ்டர் அவர்களிடம் சொல்லி ஜெபித்தபோது கர்த்தர் சுகம் கொடுத்தார். ஒரு முறை பரிசுத்த ஆராதனையில் இருக்கும்போது அவனுக்கு ஜன்னி வந்து மூச்சு பேச்சு இல்லாமல் அசைவற்று சாய்ந்து விட்டான். பாஸ்டர் வாசன் அவர்களுக்கு தெரிவித்தோம். அவர்கள் வந்து ஜெபம்பண்ணினார்கள் அப்பொழுது அவனுடைய ஜீவன் அவனுக்குள் வந்தது இப்படியாக தேவன் அற்புதம் நடத்தினார்.

நிலத்தகராறு மூலமாகவும் பல நெருக்கடிகள் [illegible] நாங்களோ தேவனை உறுதியாய் பற்றிக்கொண்டு, உபவாசமிருந்து, பொருத்தனை செய்து ஜெபம் பண்ணி வந்தோம். தேவன் எல்லா கஷ்டங்களையும் ஒவ்வொன்றாக மாற்றி எங்களது நிலமும் எங்களுக்குக் கிடைக்க தேவன் கிருபை செய்தார். எனது பிள்ளைகளும் நலமுடன் வளர்ந்து வருகிறார்கள். எங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவை அறிந்து கொள்ளவும், திருச்சபையோடு இணைந்து கொள்ளவும் ஊழியர்களும் திருச்சபை மக்களும் மிகவும் உதவியாக இருந்தார்கள். இப்பொழுது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

1990 - ம் ஆண்டு [illegible] மாதம் [illegible] புதிய சாரோன் சபை [illegible] ஞானஸ்நானம் பெற்று [illegible] அங்கமாக இணைந்தோம்.

இப்பொழுது மதுரையில் வசித்து வரும் [illegible] மதுரை புதிய சாரோன் சபையில் [illegible] எனது தாயாரும் ஞானஸ்நானம் பெற்று சபையோடு இணைந்து கொண்டார்கள். எங்குமே காண முடியாத சந்தோஷத்தையும் சமாதானத்தையும் திருச்சபையிலே கண்டு [illegible]

நக்கு குடும்பம் முழுவதுமாய் வாழ்ந்து வருகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும் ஆமென்.

இப்படிக்கு
சகோ. Y. சின்னப்பன்,
கூடல் நகர்,
மதுரை – 18.

"சிதறுண்ட ஆடுகளைப்போல இருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும், கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" [1 பேது. 2:25]

உன் நம்பிக்கை வீண்போகாது

நம்பிக்கை

உலகமானது நம்பிக்கையை இழந்து கொண்டிருக்கிறது. அநேகருடைய வாழ்க்கை நம்பிக்கையில்லை. மனிதனுடைய உயிர்க்கும், உடமைக்கும் நம்பிக்கையில்லை. அநேகருடைய வாழ்க்கை நோக்கமற்றதாகக் காணப்படுகிறது. சில பக்தாருடைய நம்பிக்கை வீண்பிரயோ. சிரஞ்சீவி பட்டம் பெற்றவர்கள் என்பார்கள் அவர்கள் செத்தார்கள் அவர்களுடைய சரீரம் அழிந்தது அவர்கள் இல்லை. சிரஞ்சீவி பட்டம் என்னவாயிற்றோ அறிய முடியவில்லை.

கிறிஸ்தவமோ மேலான, உறுதியான நம்பிக்கைகளையுடையது அவைகளாவன.

1 மறுமையின் வாழ்வு: நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வருவார். கிறிஸ்துவின உண்மை பக்தர்கள் மறுரூபப்பட்டு பரத்திற்கு இயேசுகிறிஸ்துவோடு எழுந்தருள்வார்கள்; கிறிஸ்துவுக்குள் மரித்திருக்கிற பரிசுத்தவான்களும் உயிர்த்தெழுந்து அவரோடு கூட பரலோகம் செல்வர். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் இந்த நம்பிக்கை உறுதியாயிருக்கிறது (1 பேது. 1:3) இது இயேசுகிறிஸ்துவின் கடைசி வருகையோடு சம்பந்தப்பட்டுள்ளது. ஆகையால் கிறிஸ்து இயேசுவே நம் நம்பிக்கை [1 தீமோ. 1:1].

2 இரட்சிப்பைப் பற்றிய நம்பிக்கை:
பாதுகாப்பை பற்றிய நம்பிக்கையாகும் அவர் நம்மை தப்புவித்திருக்கிறார், தப்புவிக்கிறார், தப்புவிப்பார் என்று நம்பியிருக்கிறோம், சென்ற கால அநுபவம் நமக்கு பெறும் நம்பிக்கையை அருளுகிறது [2 கொரி. 1:10].

3. நாம் கடவுளின் மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கை (ரோம. 5.2)
நம்மை மகிமைப்படுத்த தேவன் வாஞ்சையாயிருக்கிறார் அதற்காக கிரியை நடப்பிக்கிறார் [1 பேது. 5:10; எபேசி 5:26 27; வெளி 21:2,9,10

4. நமக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கை இருக்கிறது (தீத். 1:3;3·6)
கிறிஸ்தவன் கடவுளின் ஜீவனில் பங்குகொள்கிறான். அதை நிறைவாய் பெற்றுக் கொள்ளப் போகிறான்

5 கிறிஸ்தவ நம்பிக்கை கிறிஸ்துவின் மகிமைய பிரசன்னத்துக்காக காத்துக் கொண்டிருக்கிறது (தீத். 2:13) ஆவலோடு எதிர் நோக்குகிறது.

6. கிறிஸ்தவனின் நம்பிக்கை தேவனே [சங். 39.7; 56:3; 7:1; 11:1].

தேவன் எக்காலத்திலும், எக்காரியத்திலும் நம்பிக்கைக்குப் பாத்திரராயிருக்கிறார். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து அவரையே பற்றிக் கொள்ளுகிறவன் பாக்கியவான். அவன் செழிப்பாயிருப்பான் (எரே. 17: 7,8)

7. கிறிஸ்தவனுக்குண்டாகும் அனுபவங்களினால் அவன் நம்பிக்கை பெருகுகிறது (ரோ. 5:4; 15:13).

கிறிஸ்தவ வாழ்க்கை நம்பிக்கைகளினால் நிறைந்த வாழ்க்கை. கிறிஸ்துவானவரே மகிமையின் நம்பிக்கையாக அவர்களுள் இருக்கிறார் (கொலோ. 1:27). தேவன் தமது மக்களுக்காக செய்திருப்பவையும் செய்கிறவைகளுமான அரிய, பெரிய செயல்களே இதற்கு அடிப்படை. நம்பிக்கையை மனிதன் உண்டு பண்ணுவதில்லை. அது தேவனிடமிருந்து வருகிற ஈவாக அவன் அதைப் பெற்றுக் கொள்கிறான். விசுவாசியின் வாழ்க்கையில் இது மிக முக்கியமான பகுதியாகும். நம்பிக்கையானது கடவுள்மீதும் அவருடைய உண்மைத் தன்மையின் மீதும் வைக்கும் நம்பிக்கையோடு தொடர்புடையது. அது பெருகுகிறது.

நீ இயேசுவை விசுவாசித்தால் உன் நம்பிக்கை வீண் போகாது. காத்திரு

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவன்"

2 தெச. 2:16.

பெண்கள் [தொடர்ச்சி]

பெண்களுக்கு தன்னைப் போல், [illegible] தேகம் வேண்டும் [illegible] சாந்தம், தயை, [illegible] பொறுமை, அடக்கம், வணக்கம் முதலிய [illegible] வேண்டும்.

[illegible] இந்த தேகத் [illegible] தங்களை [illegible] கொள்ளும் [illegible] பிராணவாயு [illegible] இருந்து [illegible] செய்திருக்கிற [illegible] யும், [illegible] நம்முடைய [illegible] காக்கிறது. [illegible]

[illegible] போல் சில [illegible] இருக்கிறது [illegible] இல்லா [illegible] நிறைந்திருக்கிறது

திருடர்கள் பொதுவாக அமாவாசை இருட்டில் திருடுகிறார்கள். பிரதி தினமும் பட்ட பகலில் சகலரும் அறிய நடக்கிற திருட்டுகளுக்கு அளவில்லையே. கேட்டு லஞ்சம் வாங்கி திருடுகிற கொள்ளையர்கள் அரசாட்சி செய்கிறார்கள். பொருளாசை மிகுதியால் பொய் சத்தியம் பண்ணுகிறவர்களும், பொய் சாட்சி சொல்லுகிறவர்களும், பொய் சீட்டு உண்டு பண்ணுகிறவர்களும், பொய் வழக்கு செய்கிறவர்களும், தங்களுடைய சக்திக்கு மேல் கடன் வாங்குகிறவர்களும், வாங்கின கடனை கொடாதவர்களும், அநியாய வட்டி வாங்குகிறவர்களும், அடைக்கலமாக வைத்த பொருட்களை அபகரிக்கிறவர்களும், வேலை செய்யாமல் கூலி வாங்குகிறவர்களும், ஏழை கூலியாட்களிடத்தில் வேலை வாங்கிக் கொண்டு கூலி கொடாததும், செல்லா பணத்தை செலுத்துகிறவர்களும் அளவிலும், நிறையிலும் வித்தியாசம் செய்கிறவர்களும், சரக்குகளுக்கு அதிக விலை வாங்குகிறவர்களும், நல்ல சரகுக்கு கிரயம் வாங்கிக் கொண்டு கெட்ட சரக்குகள் கொடுக்கிறதும் சூதாடி பொருள் சம்பாதிக்கிறவர்களும், கண்டெடுத்த பொருளை சொந்தக்காரர்களை தேடி கொடாதவர்களும், பிறர் பொருளை பார்த்து பொறாமை கொள்கிறவர்களும், திருட்டு பொருளை வாங்குகிறவர்களும், திருட்டு சகாயம் செய்கிறவர்களும் திருடும்படி பிறருக்கு போதிக்கிறவர்களும், பிறருக்கு பொருள் நஷ்டம் உண்டாக செய்கிறவர்களும், கையில் பொருளை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு பிச்சை யிடாதவர்களும், மாம்ச கிரயம் வாங்கிக் கொண்டு பெண் கொடுக்கிறவர்களும் பட்ட பகலில் கொள்ளையடிக்கிற திருடர்களே!

அன்றியும் ஏழைகள் தாங்க கூடாத நாட்டு வரி, காட்டு வரி, வீட்டுவரி, மாட்டு வரி, ஆட்டு வரி, தீட்டு வரி, ரோட்டு வரி, சீட்டு வரி, சாட்டு வரி முதலிய கேட்டு வரிகளை சுமத்தி அநியாயம் செய்த பூர்வ அதிகாரர்களும் இக்கால சதிகாரர்களும் ஒன்றே

பரிதானம் வாங்கிக் கொண்டு பட்சபாதம் செய்கிற சில நியாதிபதிகள் அநியாதிபதிகளே! எங்கே கொலை நடக்கும் எங்கே களவு நடக்கும் எப்போது நமக்குப் பணம் வருகிறதென்று சதா எதிர் பார்த்துக் கொண்டு குற்றவாளிகளை விட்டு விட்டு, குற்றமில்லாதவர்களை பிடித்து உபத்திரவம் செய்கிற சில போலீஸ் வீரர்கள் சோரர்களே! எப்போது குடும்பங்களில் கலகமுண்டாகும் எப்போது வியாஜ்ஜம் வருமென்று சித்தமாய் காத்துக் கொண்டிருக்கிற சில நியாதிபதிகள் அநியாதிபதிகளே!

யாருக்கு ஜுரம் வரும், யாருக்கு பேதி வரும், யாருக்கு தலைவலியும், யாருக்கு கை கால் ஒடியும் என்று பிரார்த்தித்து கொண்டு தங்களுடைய பிழைப்புக்காக பிள்ளையை வளர்ப்பது போல் வியாதியை வளர்த்துவிட்டுக் கொண்டு ஜீவிக்கிற சில வைத்தியர்கள் சதத்தியர்களே!

பிள்ளைகள் படித்துக் கொண்டால் தங்களுடைய பிழைப்புக்கு மோசம் வருமென்று கருதி கிருஷ்ணபட்ச சந்திரனைப் போல் பிள்ளைகளுடைய அறிவை நாளுக்கு நாள் குறைக்கிற சில போதகர்கள் பாதகர்களே! மேற்சொல்லிய உத்தியோகஸ்தர்களில் அநேகர் சர்வ உத்தமர்களாய் இருக்கிறார்கள். ஆகையால் அப்படியில்லாத சிலரைப் பற்றி மட்டும் நாம் பிரஸ்தாபித்தோம்.

தன்னைப் போல் பிறரையும் எண்ண வேண்டுமென்கிற விதியை சகலரும் அனுஷ்டித்தால்; சுவாமித் துரோகிகளாய் குருத்துரோகிகளும், பிதுர் துரோகிகளும மாதுர் துரோகிகளும், புத்திர துரோகிகளும், சகோதர துரோகிகளும், புருஷ துரோகிகளும், பத்தினி துரோகிகளும்,

பரதார துரோகிகளும், பரபுருஷ துரோகிகளும், பொய்யர்களும், வெய்யர்களும், கொலைஞர்களும் தொலைஞர்களும், கொடியர்களும், குடியர்களும், கோபிகளும், லோபிகளும், பாவிகளும் உலகத்தில் இருப்பார்களா? இரார்கள்! ஆகையால் பரோபகாரம் பத்தத்தை பச்சாதாபம் முதலிய குணங்களை ஸ்திரிகளுக்கு மறவாமல் உபதேசிக்க வேண்டும்.

மிருகங்கள், பட்சிகள், ஊர்வன நீர்வாழ் முதலிய சகல ஜீவ ராசிகளிடத்திலும் கிருபையாய் இருப்பதே ஜீவகாருண்ய நியமம் என்று சொல்லப்படுகிறது. மனுஷருக்கு உபயோகார்த்தமாக சகல ஜீவ கோடிகளையும் கடவுள் சிருஷ்டித்து அருளினார் என்று நாம் முன்னமே விவரித்திருக்கிறோம்.

சில ஜந்துக்கள் நமக்கு உபயோகமான வேறே ஜந்துக்களுக்கு ஆகாரமாக உபயோகப்படுகிறபடியினால் பூமியில் ஒரு அற்ப ஜந்துவேனும் நமக்கு அனுபயோகமாய் இருக்கவில்லை. விலங்கு, பறவை முதலியவைகள் ஞானமில்லாத அசேதன ஜந்துக்களாயிருந்தாலும் நம்மைப் போலவே அவைகளுக்கும் தேகம், பிராணனும், பஞ்சேந்திரியங்களும் சுகதுக்கங்களை அறிகிற மனோவுணர்வுகளும் உண்டாயிருக்கிறபடியால் அவைகளுக்கு பரிசேதம் உபத்திரவம் செய்யக் கூடாது. அவைகளுக்கு ஞானத்தைக் குறைத்ததற்காக வேறே சில விஷயங்களில் கடவுள் அவைகளுக்கு அனுகூலம் செய்திருக்கிறார்.

மனுஷன் ஞானத்துமானானால், பலமான வீடு, போர்வை முதலியவைகளை செய்து கொண்டு உஷ்ணம், குளிர் முதலிய துன்பங்களை தடுத்து கொள்வான் என்பதை கடவுள் எண்ணியே அவனுக்கு மிருதுவான தோலையும், நிர்வாணமான தேகத்தையும் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஞானம் விலங்குகளுக்கும் பட்சிகளுக்கும் இல்லாதபடியால் அவைகளுக்கு தடிப்பான திரளான மயிருள்ள தேகங்களைக் கொடுத்திருக்கிறார். சத்துருவை நிவிர்த்திக்க தகுந்த ஆயுதங்களை செய்ய மனுஷன் தெரிந்தவனானபடியால் அவனுடைய தேகம் ஆயுதமில்லாமல் நிராயுதமாய் இருக்கின்றன.

(தொடரும்)

[illegible] ▣

"நீதிமான் தன் மிருக ஜீவன்களைக் காப்பாற்றுகிறான்..." நீதி. 12·10

[illegible] ▣

புதிய எருசலேம் சபையின் ஆங்கில பத்திரிகையான NEW JERUSALEM NEWS 1996-ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து வெளிவரும் என்பதை கிறிஸ்தவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். பத்திரிகை வேண்டுவோர் தங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் [CAPITAL LETTER] தெளிவாக எழுதி பத்திரிகையைப் பெறுக் கொள்ளவும்.

ஆண்டு சந்தா Rs 40-00

[illegible] Rs 700-00 (17 U S Dollar)

NEW JERUSALEM NEWS.
POST BOX NO 17330,
BOMBAY-400 078. INDIA

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd. No. 040088/84
Postal Regd. No MH BY NE-84/84
Tamil Monthly Magazine

ஞானம்!

Wisdom; நல்லறிவு

1. இடம், பொருள், ஏவல் அறிந்து செய்யும் செய்கை (பிர. 2:13,14) இந்த ஞானத்தை சாலமோன் ராஜா கர்த்தரிடத்தில் விரும்பிக் கேட்டுப் பெற்றுக் கொண்டார் [1 இராஜா. 3:9,12,28; ஆதி. 41:33]. 2. மெய்யறிவு (யோபு28:12). 3. நுண்ணறிவு (யாத். 31:5). 4. தந்திரம், உலக ஞானம் [2 சாமு. 13:3; யாத். 1:10] 5. உபதேசம், புத்தி, உணர்வு (யோபு. 12:12) 6. கல்வி (அப். 7:22; ரோம. 1:14). 7. தேவ பக்தி [சங். 90:12 யோபு 28:8; யாக் 3:17]. 8. மெய்வேதம் [லூக். 11:49]. 9. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீதி. 3:19, 8:22,23 இந்த அதிகாரம் முழுவதும் காண்க மேற்சொல்லியவைகளில் ஞானம் இரண்டு விதமானது என்று தோன்றும். அதாவது உலக ஞானம் [1 கொரி. 2:6], பரம ஞானம் (யாக. 3:13) லவுகீக ஞானத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க பவுல் அப்போஸ்தலன் புத்தி சொல்லுகிறார் (கொலோ 2:8) அது அற்ப பிரயோஜனமுள்ளது.

அறிவிப்புகள்

1. முழு இரவு விழிப்பு ஜெபம்

5 [திங்கள்] பிப்ரவரி 1996

5 [செவ்வாய்] மார்ச் 1996

3 [புதன்] ஏப்ரல் 1996

2. புதிய எருசலேம் செய்தி பத்திரிகை

ஆண்டு சந்தா Rs 30-00

வெளிநாடு Rs 100-00

அனுப்ப வேண்டிய முகவரி :

CHIEF PASTOR N LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR,
DARGA ROAD, BHANDUP,
BOMBAY-400 078 INDIA

3. மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும் பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. [illegible] சந்தாவை அல்லது [illegible] தெளிவாகக் குறிப்பிடவும்.

5. "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை [illegible] 30 [illegible] [illegible] (CAPITAL LETTER) [illegible] கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 139 - FEB. '96

"புதிய எருசலேம் சபை"

[illegible]

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

BOMBAY, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்கேற்கும் பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் நடக்கும்படியாகவும் சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சரீரமாய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).

3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20

4 அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.

5 அவர்களை மேய்த்து அன்பு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17

6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர், வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும். இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1:1; 10:40-43)

CHIEF PASTOR N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

உலகத்தில் மக்கள் சமாதானமற்றவர்களாக விளங்குகிறார்கள். சமாதானக் காரணரும், சமாதானப் பிரபுவாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத ஜனத்துக்கோ, இனத்துக்கோ, ஜாதிக்கோ, நாட்டுக்கோ சமாதானமேது? மதம், ஜாதி, பாரம்பரியம் என்று இருளின் ஆளுகையை பற்றிப்பிடித்துக்கொண்டு, பழைய பாரம்பரியத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம் என்று கூறிக் கொண்டு கற்காலத்துக்கு நாடு திவிரிக்கிறது. பழைய வேஷ்டியைக் கட்ட வேண்டியதுதான்.

சாமிகும்பிடுதல் அதிகமானதினால் காட்டுமிராண்டித்தனமான ஜாதிச் சண்டையும் அதிகமாகிக் கொண்டு போகிறது. ஜாதிச் சண்டையில் சாவு 300. சர்வ நாசம் பலகோடி. இது அந்த மதத்தினுடைய மகத்துவம்; மனிதனை மனிதன் அற்பமாயெண்ணி கீழ் ஜாதி, மேல் ஜாதி என்று ஒதுக்குவதும், தாழ்த்துவதும் சாத்தானுடைய சதித்திட்டமே.

ஆனபடியால் மனிதன் விக்கிரகங்களை விட்டு மனந்திரும்பி ஜீவனுள்ள தேவனை சேவிக்க வேண்டும்; தொழுது கொள்ள வேண்டும். அப்பொழுது மனித அறிவு உண்டாகும். மனிதனில் அன்பும், சமத்துவமும் உண்டாகும். தனக்கும், தன் அயலானுக்கும் சமாதானம் கிடைக்கும். தவறான மதம் உச்சகட்டமானால் என்ன நடக்கும் என்பதற்கு இன்று நாட்டின் தென் பாகத்திலும், பல இடங்களிலும் நடக்கும் கொலைபாதக செயல்களே உதாரணம்.

ஆனபடியால் ஒரே தேவ வழிபாட்டை உறுதியாய்க் கடைபிடிப்போமாக; இயேசுவைப் பிரசித்தப்படுத்துவோமாக.

கிறிஸ்துவுக்குள்,

[CHIEF PASTOR N. LAZAR]

(தொடர்ச்சி)

திருச்சபை

பூரணமான சபையின்றேல் பூரணமான இரட்சிப்பு உண்டாகாது. சரியான சபை ஐக்கியம் அவசியம். சிலர் கூடுகிற கூட்டமெல்லாம் சபை என்று எண்ணி ஏமார்ந்து போகிறார்கள். வேதாகமத்தில் ஒரே சபை தான உண்டு. "இந்த மந்தையிலில்லாத வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும் அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் [யோவா. 10:16]. ஒரே சரீரமும் உண்டு [எபே. 4 4].

பிதாவே நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்கு கொடுத்தேன் (யோவா. 17:22); இந்த விசுவாசம் வேண்டும். ஞானஸ்நானம் பெற்ற மக்கள மெய்யான திருச்சபையில் அப்போஸ்தல ஐக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டும். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்னியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம்பண்ணுவதிலும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள் (அப். 2:42).

இந்நாட்களில் ஞானஸ்நானம் எடுக்கிறது ஒரு இடம்; ஓடிப்போய் ஐக்கியப்படுகிறது ஒரு இடம். மேலும் பல பஞ்சத்துக்கு ஆண்டிகள் தங்களை யோவான்ஸ்நானகன என்று நினைத்துக்கொண்டு கண்டவர்களுக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுத்துவிடுகிறார்கள். நீ அரைகுறை ஊழியம் செய்யாதே; நீ ஞானஸ்நானம் கொடுக்கிறாயே அவர்கள் சீஷர்கள் தானா? மேலும் நீ ஞானஸ்நானம் கொடுக்கிற ஆத்துமாக்களுக்கு நீ உத்திரவாதியாய் இருக்கிறாய். "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் ஆமென் [மத். 28:18-20].

நீ சபை கட்டி, அந்த ஆத்துமாக்களை இயேசுவின் உபதேசத்தில் நடத்த வேண்டாமா? இப்படி முழு ஊழியம் செய்யாவிட்டால் தேவன் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்ற மாட்டார் (மத். 28:20). விசுவாசிகளுக்கு கடவுளைப்பற்றி போதிக்க, அவர் உபதேசத்தை போதிக்க, இயேசுவின் வழி காட்ட யோ. 14:6 திருச்சபை வேண்டும். அவர்கள் ஆதிவிசுவாசிகள் திருச்சபை ஐக்கியத்தில் நிலைத்திருந்தார்கள் [அப். 2:42; 1 யோ. 1:3; எபே. 4:1-16].

தேவன் புதிய ஒழுங்கை ஏற்படுத்தியுள்ளார். திருச்சபை ஒரு மனிதன், ஒரு சரீரம், ஒரு வீடு, ஒரு ஆலயம். திராட்சை செடி என்று அழைக்கப்படுகிறது. இயேசுவுக்கு ஒரு சரீரம்தான உண்டு. பல சரீரங்களையுடைய மாறுபட்ட பிறவியல்ல இயேசு [எபே. 5:23; 1:23; ரோம. 12 5]. பல சரீரமென்றால் பல தலைகளிருக்கும். ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு (எபே. 4:4) விசுவாசிகள் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியடையவும், சீர் திருந்தவும், பக்திவிருத்தியடையவும், சுவிசேஷ ஊழியம் நடைபெறவும் எபே 4:11-13 தேவனுக்கு ஆராதனை செய்யவும் யோ. 4· 23,24; 2 தீமோ. 2:22; எபி. 10·21,25; அப்பம் பிட்கவும் 1 கொரி. 11·23-26; அப். 20:7 தேவனுக்கு காணிக்கை செலுத்தவும் 1 கொரி. 16:2; அறியாமை நீங்கி அறிவு

பெறவும் 1 பேது. 1:14; அறியாமையினாலே உலகில் சகல பாவங்களும் நிகழ்கிறது (எபே. 4:17–19). இன்னும் பற்பல தெய்வீக ஆசீர்வாதங்களுக்காகவும் கிறிஸ்துவின் வருகை மட்டும் அல்லது விசுவாசி மரிக்கும் மட்டும் திருச்சபையில் அங்கமாய் நிலைத்திருக்க வேண்டும் [எபி. 10:21,25,36,37,38]; ஆம், திராட்சை செடியோடு கொடி இணைந்திருக்க வேண்டும் (யோ. 15:1-6)

இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் இருக்கிற தவறு சின்ன சின்ன காரியங்களுக்காக, தம்புரு அடிக்கக் கொடுக்கவில்லை என்றும், தான் சொன்ன பாட்டை பாடவில்லை என்றும், தங்கள் இஷ்டப்படி நடக்கவில்லை என்றும், பாவம் செய்து விட்டும், கலகம் பண்ணிவிட்டும் பிரிந்து ஒரு கூட்டத்தை விட்டு மறு கூட்டத்துக்குப் போகிறவர்களாம் அவர்களோடு அவர்களை சேர்த்துக் கொள்ளுகிறவர்களும் உண்டு. ஒரே சபை என்றால் ஒருங்காக இருப்பார்கள். ஆதலால் தான் வேதாகமத்தில் அப்போஸ்தல [illegible] ஒரே சபையை [illegible]கிறோம்.

[illegible] சுதந்திரமாக, பரிசுத்தமாக [illegible] விட்டு கூட்டம் மாறுகிறவர்களை பற்றி நாம் சொல்லவில்லை. தேவ சித்தம் அறிந்து தேவ கட்டளைப்படி தேவ சித்தம் செய்தால் சரியே. மெய்யான சபையில் அங்கமாக நிலைத்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அவனுடைய இரட்சிப்பு பூரணமாகாது. சாத்தான் தன்னுடைய சபையை கட்டும்படி [illegible] சபையில் நிரந்தரமில்லாத சில ஊழியர்கள் எல்லா சபைகளுக்கும் தங்களை [illegible] [ஜெபத்தைகாரர்கள் போல] [illegible] போய் அந்தந்த சபையாரை [illegible] பிரசங்கித்து பிடிக்கிறார்கள்.


தெரிந்தவர்கள் போல் நடமாடுகிறார்கள். இவர்களுக்கு ஒரு உபதேசத்திலும் பிடி கிடையாது.

இவர்கள் தங்களை சுவிசேஷகர் என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள்; ஒரு சபையில் போய் கூட்டம் நடத்துவார்கள். அங்கே பணமுள்ள நபர்களைக் கண்டு அவர்கள் விலாசத்தை வாங்கிக் கொண்டு Brother [சகோதரரே] நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன் Letter [கடிதம்] தவறாமல் எழுதுங்கள் என்று பிடித்துக் கொள்ளுவார்கள். பிறகு என்ன இவர்கள் காணிக்கையின் மேல் அவர்கள் கண். கொஞ்ச நாளில் அவர்களைக் கருவியாகக் கொண்டு அங்கு ஒரு பிரிவினை கூட்டத்தையே உண்டாக்கிவிடுகிறார்கள். இதுவா சுவிசேஷகனுடைய வேலை? இதெல்லாம் சாத்தானுடைய வேலை; சத்திய சபையில் அங்கமாவதும், நிலைத்திருப்பதும் விசுவாசியினுடைய ஊழியக்காரனுடைய கடமை. கடவுள் கட்டளையிடுகிறார் [யோ. 15:4] அதினால் உன்னில் கனியுள்ள வாழ்க்கையுண்டாகும்; அதினால் பிதா மகிமைப்படுவார் [யோ. 15:5,8]

(தொடரும்)

"தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி, இயேசுகிறிஸ்துவினால் வருகிற [illegible] நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று [illegible] பூரணமுள்ளவர்களும் [illegible] வேண்டுதல் செய்கிறேன்."

[[illegible] 1:10,11]



மார்த்தீன் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

2. லூத்தர் மான்ஸ்வெல்ட், மாக்டெபுர்க் ஐஸேனக் பட்டிணங்களில் கல்வி கற்றது.

மான்ஸ்வெல்ட் பட்டணத்தின் மேற்பாகத்தில் ஒரு மலைச்சாரிலே ஒரு சிறு பள்ளிக்கூடமிருந்தது. அப்பள்ளிக் கூடத்துக்கு ஒரு செங்குத்தான பாதை வழியாகத்தான் போக வேண்டியது. இப்பள்ளிக் கூடத்தில்தான் லூத்தர் கல்வி ஆரம்பித்தார். காலமு, மழையாயிருக்கும நாட்களிலே வயதில் முதிர்ந்த நிக்கோலஸ் எம்லா என்னும் பள்ளித் தோழர். லூத்தரை தம் தோள்களில் சுமந்து கொண்டு பள்ளிக்குப் போவார். இதே நிக்கோலஸ் எம்லர் பிற்காலத்தில் லூத்தரின் சகோதரியை மணம் புரிந்தார் இங்கே வாசிப்பு, எழுதுதல், கணக்கு முதலியவைகளைக் கற்பதுமல்லாமல், லத்தீன் பாஷையைப்படிக்க ஆரம்பித்தார். இங்கே அவர் தமது கொடூர உபாத்திமார்களிடத்தில் பெற்ற தண்டனைகள் மிகுதி.

லூத்தரின் வார்த்தையின்படி அக்காலத்து உபாத்திமார் கொடூரரும், கொலைகாரர்களுமாயிருந்தார்கள்; பள்ளிக்கூடங்கள் சிறைச்சாலையைப் போலவும், நரகத்தைப் போலவும் இருந்தனவாம். ஒருமுறை அவர் ஒரே முற்பகலில், உபாத்தியார் சொல்லிக் கொடாத ஒரு பாடத்தை ஒப்புவிக்காததற்காகப் பதினைந்து தரம் சவுக்கடிபட்டார்.

தம் பெற்றோருக்கும், உபாத்திமார்களுக்கும் பயந்ததைவிட இயேசு என்ற நாமத்தைக் கேட்டவுடனே லூத்தர் திகைந்து நடுங்குவார். லூத்தருடைய வீட்டிலும் அவர் படித்த பள்ளிக் கூடங்களிலும் அக்காலத்துக் கிறிஸ்தவர்களுடைய வீடுகளில் நடக்கிறதைவிட ஜெபங்கள் ஒருவேளை அதிக ஊக்கமாய் நடந்தன. ஆனால் ரோம் குருமாரும், உபாத்திமார்களும் கிறிஸ்து ஒரு குரூர நியாயாதிபதியானபடியால் நேராக அவருக்கு விண்ணப்பங்களும், ஜெபங்களும் செய்யக் கூடாதென்றும், அவர் தாயாராகிய [அர்ச்சிய சிஷ்ட] மரியம்மாள், மற்ற பரிசுத்தவான்கள் மூலமாய்த்தான் ஜெபிக்க வேண்டுமென்றும், தங்கள் சபையாருக்குப் போதித்தார்கள்.

ஆகையால் அக்காலத்துக் கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்களை நோக்கியே பெரும்பாலும் ஜெபித்தார்கள். லூத்தருடைய இருதயத்திலும் கிறிஸ்துவைப்பற்றிய அடிமைக்கொத்த பயம் உண்டாகி மெத்தவும் வேரூன்றிப் போனதால் கிறிஸ்து என்ற பெயரைக் கேட்டவுடனே பயந்து நடுங்குவார்.

லூத்தர் வெகு சீக்கிரம் அமைந்த கல்விப் பயிற்சியினாலும், அவருடைய உபாத்திமார் அவரைப்பற்றிக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரங்களாலும், அவர் தகப்பனுக்கு மெத்த உற்சாகமும், தைரியமும் உண்டாயிற்று. ஆகையால் தம் மகனைப் பற்றி பெரிய எண்ணங்கொண்டு, லூத்தர் நியாய சாஸ்திரம் கற்று உயர்ந்த லௌகீக உத்தியோகம் பெற வேண்டுமென்று தீர்மானித்தார். இத்தீர்மானத்திற் கேற்ப சர்வ கலாசாலையில் சேர்வதற்கு வேண்டிய ஆயத்தப் பயிற்சியை அடையும்பொருட்டு அவரை 40 மைல்கள் தூரமுள்ள மாக்டெபுர்க் கல்வி சாலைக்கு அனுப்பினார்.

அப்பொழுது லூத்தருக்கு வயது 14. லூத்தருக்கும் அவருடைய ஜீவிய கால சிநேகிதராகிய ஜான்ரைநெக் என்பவரும் மான்ஸ்வெல்ட் பட்டணத்திலிருந்து மாக்டெபுர்க் பட்டணத்துக்குப் போனார்கள். ஜான்ரைநெக் என்பவர் சுரங்க வேலைச் சாலைக்காரராகிய பீட்டர் ரைநெக் என்ப

வருடைய மகன். லூத்தர் மாக்டெபுர்க்கில் ஒரு வருஷம் பசியும், பட்டினியுமாயிருந்து படித்தார். ஆதரிப்பாரும், அரவணைப்பாருமின்றி இச்சிறுவயதிலேயே அநாதியாய் விடப்பட்டபடியால் அவரும் அவரைப் போன்ற ஏழை மாணக்கரும் வீடுகள் தோறும் பாடி பிச்சை எடுத்து வெகு கஷ்டப்பட்டு பிழைத்தார்கள். கஸ்தியும், தரித்திரமும் இச்சிறுவயதிலேயே அந்த ஏழை பிள்ளைகளுக்குக் கிடைத்த பங்காயிற்று.

அவர் தம்மைப்பற்றிச் சொல்லுகிறதாவது: நான் என்னைப் போன்ற வறுமை அடைந்த சிறுவர்களோடு கொஞ்சம் ஆகாரம் பிச்சையெடுத்து என் குறைவைத் தீர்த்துக் கொள்ளுவது எனக்கு வழக்கமாயிருந்தது. ஒரு தரம் கிறிஸ்து பிறப்பின் பண்டிகை தினங்களில், சுற்றுக் கிராமங்களில் வீட்டுக்கு வீடுபோய் கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றிய ஞான கீதங்களைச் சங்கீத சாகித்யமாக நாங்கள் பாடினோம். ஒரு சமுசாரியின் வீட்டிற்கு எதிரில் வந்து நின்றோம். அவ்வீடு அக்கிராமத்தின் கடைசியில் தனித்திருந்தது

அவர் எங்கள் பாட்டுச் சத்தத்தைக் கேட்டு எங்களுக்குக் கொடுக்கும்படியாக கொஞ்சம் ஆகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியே வந்து கடுமையான சத்தமாய்ப் பிள்ளைகளே, எங்கேயிருக்கிறீர்களென்று சொன்ன சத்தத்தைக் கேட்டு, பயந்து வேகமாய் ஓடினோம். நாங்கள் அப்படி பயந்து ஓடினதற்கு யாதொரு நிமித்தமுமில்லை. ஏனென்றால் அந்த சமுசாரி வெகு அன்போடு அந்த நன்கொடைகளை எங்களுக்கு கொடுக்க வந்தார். நாங்கள் நடுங்கிப் பயந்து அப்படி ஓடினதற்கு காரணம் எங்கள் உபாத்திமார்களுடைய கொடுங்கோன்மையும். பயமுறுத்தலுமே அவ்வுபகாரி எங்களைத் திரும்ப, திரும்ப கூப்பிட்டபடியால் நாங்கள் கடைசியில் பயந்தெளிந்து. அவரண்டைப்போய் அவரெங்களுக்கு அளித்த ஆகாரத்தைப் பெற்றுக் கொண்டோம்.''

மார்த்தீன் லூத்தர், தமது படிப்புக்காக போதுமான நேரம் செலவிட்டார். ஆனால் சரீர அப்பியாசத்திற்காக அவர் செலவழித்த நேரம் மிக சொற்பமே.

அவர் மாக்டெபுர்க் பட்டணத்திலிருக்கையில் கொடிய ஜுரத்தால் பிடிக்கப்பட்டு அநேக நாட்கள் மரணப்படுக்கையிலிருந்தார். ஜுரம் அகோரமாயிருந்த சமயங்களில் அவருக்குண்டான தாகமும் நாவறட்சியும் இவ்வளவென்று சொல்ல முடியாது. தாகத்தைத் தீர்க்க தண்ணீர் குடிக்க உத்தரவு அவருக்கு கொடுக்கப்பட்டதில்லை. ஒரு வெள்ளிக் கிழமையில் அவ்வீட்டிலிருந்த எல்லோரும் கோயிலுக்கு போயிருக்கும் சமயத்தில் அவருக்குண்டான தாகம் சகிக்க முடியாததாயிருந்தது. நடக்க சக்தியில்லாததால், அவர் முழங்காலாலும், கையாலும் நகர்ந்து கொண்டே தம்மால் கூடிய சீக்கிரம் படிக்கட்டுகளில் இறங்கிச் சமையலறைக்குள் நுழைந்தார். அங்கே சிறு தொட்டி நிறைய தண்ணீர் இருந்தது. அதில் அவர் மனங்கொண்ட மட்டும் குடித்து விட்டு, போனமாதிரியே படுக்கை அறைக்குத் திரும்பி விட்டார். கோவிலிலிருந்து வீட்டார் எல்லோரும் திரும்பி வந்த போது ஜுரம் அவரை விட்டு விட்டது.

மான்ஸ்வெல்ட் பட்டணத்துப் பள்ளிக்கூடங்களில் அவரடைந்த கஸ்டங்கள் அதிகம். ஆனால் மாக்டெபுர்க்கில் அவரடைந்த கல்வி மேன்மையானதே என்றாலும் தேவையான ஒன்று அவருக்கு அங்கே கிடைக்கவில்லை. ஏனென்றால் அங்கே சபைகளையும், பள்ளிக் கூடங்களையும், குடும்பங்களையும், ஆம், ஒவ்வொருவருடைய இருதயத்தையும் பாப்பு மார்க்க குருட்டாட்டம் முற்றிலுமாகப்பிடித்திருந்தது. வருஷக் கடைசியில் அவர் முதல் கோடைகால விடுமுறை நாட்களைத் தம் பெற்றோரோடு சந்தோஷமாய்ச் செலவிடும்படி வெகு ஆவலோடு மான்ஸ்வெல்ட் பட்டணம் போனார் அடுத்த வருஷத்தில் அவருடைய தகப்பனார் அவரை

[illegible]க் பட்டணத்திலுள்ள பாடசாலைக்கு அனுப்பினா.

ஹத்தர் ஜுன்ஸேக் போனை நோக்க மென்னவென்றால், அப்பட்டணத்திற்குச் சமீபத்தில் அவர் தாயாருடைய உறவின் முறையார் இருந்தார்களென்பதும், ஒரு வேளை அவர்கள் அவருக்குக் கொஞ்சம் உதவிச் செய்வார்கள் என்ற எண்ணமுமே. ஆனால் தங்கள் இனத்தார், ஜனத்தார்மேல் வைத்த நம்பிக்கையெல்லாம் விருதாவா யிற்று. ஆகையால் ஹத்தர் மாக்டெபுர்க் கில் பட்ட கஸ்டங்களையும், தரித்திரத்தை யும் இங்கேயும் பட்டு அநுபவித்து பசியும், பட்டினியுமாக இருக்க நேரிட்டது.

ஜுன்ஸேக் பட்டணம் அக்காலத்திலி ருந்தபடியே இப்போதும் வார்ட்புர்க் கோட் டையின் அடிவாரத்திலிருந்து உறங்குவது போல் அமைதலாயிருக்கிறது. அப்பட்ட ணத்தில் வளைந்து, வளைந்து போகும் இரண்டு, மூன்று தெருக்களும் அவைகளை ஊடுருவி செல்லும் பலசந்துகளையு இருக் கின்றன. இத்தெருக்களிலும், சந்துகளி லும், ஹத்தரும் அவருடைய தோழரும [illegible] அகாரத்திற்காக வீடுகள் தோறும் பாடிக் கொண்டு போவதை நமது கண்முன் [illegible] பதுபோல் காணலாம்.

அதிகப் பசியினால் வருந்தி ஆகாரத்திற் [illegible] பிச்சைக்குபோன அநேக சமயங் களில் அவர் ஆகாரத்திற்குப் பதிலாக குரூர [illegible] வார்த்தைகளைக் கேட்டு [illegible] பரி தாபம்! ஆனால் ஒரு நாள் அவர் மூன்று [illegible] களில் கடின வார்த்தைகளை கேட்டு [illegible] பிறகு அந்நகர் அதிகாரியாகிய [illegible] கொத்தா என்பவரின் பெரிய [illegible] எதிரே நம்பிக்கையற்றவராய் [illegible] நின்றார். அவ [illegible] [illegible] வார்த்தைகளை [illegible] [illegible] பொறுத்தார் [illegible] [illegible] [illegible] கொத்தா [illegible]. அவ

ருடைய பிரகாசிக்கும் கண்களும் இனிமை யாய்த் தொனிக்கும் குரலும் தாயின் மனதை மகிழ் செய்வதுபோல் அந்த அம் மாளின இருதயத்தையும் பூரிக்கச் செய்த தால் அத்தயைசீலி தம் வீட்டின் சகல சந்தோஷத்தையும், அன்பையும் அநுபவிக் கும்படி அவரை அழைத்து தம் கணவன் அநுமதியின்படி அவரை, தம் எளிய மாணாக்கராகிய ஹத்தரை தம் வீட் டில் வைத்து ஆதரித்து வந்தார்கள்.

ஹத்தர் சர்வ கலாசாலைக்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்தபடியால், இப்போது அவர் தம் முழு கவனத்தையும் படிப்பில் செலுத்தக் கூடிய தாயிற்று. மனப்பாக்கியம் நிறைந்த இந்த குடும்பத் தில் அவர் சொந்த குமாரனைப்போல், நடத் தப்பட்டபடியால் சந்தோஷமும், சமாதான முமாய் மூன்று வருஷம் தம் வரத்திற்கும், மனத்திற்கும் ஏற்ற புஸ்தகங்களையும் வாத் தியங்களையும் வாசித்து மனமகிழ்ந்திருந் தார். வாத்தியம் அவர் சுபாவத்திற்கு அதி சய விதமாய்ப் பொருந்தியிருந்தது.

வாத்திய வசியத்தால் [illegible] கொண் டிருந்தபடியால், அவர் [illegible] பற்றி [illegible] பிடமொழ் திரும்ப திரும்ப புகழ்ந்து பேச வாராம். சித்திரத்தின [illegible] [illegible] சொல்லப்படுமோ [illegible] [illegible] [illegible] [illegible] ஹத்தருக்குச் [illegible] [illegible] [illegible]

ஜுன்ஸேக் பட்டணத்தில ஹத்தருக்கு கல்வி கற்பித்த உபாத்தியாயர்களில் ஒரு வர் ஜான்டிரெபோனியஸ் என்பவர். அவ வசீகரமான பேச்சுவார்த்தையுடையவராயும் சாந்தகுணமுள்ளவராயும் இருந்தார். அவர் தம [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] தம்மிடத்தில் படிக்கும் [illegible] "ஏனென்றால் இச்சிறு [illegible] [illegible]

வரும், சாஸ்திரிகளும், நியாயாதிபதிகளும் ஆவார்கள்'' என்று சொன்னார் அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது தம் மாணுக்கராகிய யூத்தர் உலகமெங்கும் பெயர்போன அவ்வளவு பெரிய சாத்திரி ஆவார் என்று கனவிலும் நினைத்தது இல்லை. ஜலேனுக் பட்டணத்தில் யூதருக்கு கஷ்டங்கள் நுழைந்தும்; சந்தேகமும் மிகுந்தும் இருந்த போதிலும், மெய்ச்சமாதானமாகிய ஷாரோன் ரோஜா புஷ்பம் அவருக்கு இங்கே கிடைத்ததில்லை.

[தொடரும்]

"நல்லவன் கர்த்தரிடத்தில் தயைபெறுவான்; துர் சிந்தனைகளுள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்கு உட்படுத்துவார்"

[நீதி 12:2].

வேத பாடம்

(தொடர்ச்சி)

எண்ணாகமம்

எண் 26:1-51

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல புத்திரர்களில் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் யுத்த புருஷர்கள் எண்ணப்பட்டார்கள் முதலாவது எண்ணிக்கை எண் 1-ம் அதி. காணப்படுகிறது. அந்த முதலாவது எண்ணிக்கை தேவனுடைய பணிவிடைக்காரராகிய மோசேயும், ஆரோனும் எண்ணினார்கள் [எண். 1:1-3]. இரண்டாவது எண்ணிக்கை மோசேயும், எலெயேசாரும் எண்ணினார்கள (எண், 26 1-4) முதலாவது எண்ணிக்கை அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாவது வருடத்திலும் இரண்டாவது எண்ணிக்கை பிரயாணத்தின் கடைசியிலும் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரயாணத்தில் புறப்பட்ட எல்லோரும் (மோசே, யோசுவா, காலேப் தவிர) யாவரும் ... அந்த கீழ்ப்படியாத மக்களைத் தேவன் 40 வருடமாக வனாந்தரத்தில் அலைந்து திரியும்படி செய்தார் [யோசு 5:6].

... கடவுளுடைய அனுக்கிரகம், நீண்ட நாள் உயிரோடிருந்து விசுவாசத்தோடிருந்து இறைவனுக்கு ஊழியம் செய்வது பெரும்பாக்கியமே. ... கூட ... உயிரோடு கானான் பிரவேச பாக்கியம் உத்தமர்களாகிய யோசுவா, காலேபுக்குக் கிடைத்தது ஏனெனில் அவர்கள் வேறே ஆவியுடையவர்களாக இருந்தார்கள் (எண் 14:22-24)

ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்படுகிறது. அழிக்கப்படுகிறதும் உண்டு [யாத் 32:32-33] ஒரு பேர் ஜீவ புஸ்தகத்தில் உண்டா ... சபை ... இருக்கிறதா என்று கேட்கவில்லை. தேவனுடைய ஜீவ புஸ்தகத்தில், நீதிமான்களுடைய பேர்களோடு உன் பெயர் உண்டா? சங். 69 25 இல்லை என்றால் நீ விக்கிரக ஆராதனை ... பாவத்தில் அஞ்ஞானத்தில் இருக்கிறாய். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசு

வாசித்து நீ ஞானஸ்நானம் [முழுகி] பெற்று இரட்சிக்கப்படு. சீஷர்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருந்தது (லூக். 10:20). உண்மையாய் ஊழியம் செய்கிறவர்களுடைய பெயர்களும் அங்கு உண்டு [பிலி. 4:3]. பரலோகத்தில் பல புஸ்தகங்கள் உண்டு உன்னைப்பற்றி எவ்விதமாய் எழுதப்படுகிறதென்று பார் (எண். 26:64,65).

எண்ணிக்கை எண்ணப்பட்ட விபரம் நமக்கு அநேக ஆவிக்குரிய பாடங்களை போதிக்கின்றன.

இரண்டு எண்ணிக்கைகளின் விபரம்:-

	I		II		
1.	ரூபன் - 46500	--	43730 - 2770	Lessthan	
2.	சிமியோன் - 59300	--	22200 - 37100	,,	
3.	காத் - 45650	--	40500 - 5150	,,	
4	யூதா - 74600	--	76500 - 1900	More	
5.	இசக்கார் - 54400	--	64300 + 9900	,,	
6	செபுலோன் - 57400	--	60500 + 3100	,,	
7.	எப்பிராயீம் - 40500	--	32500 - 8000	Less	
8	மனாசே - 32200	--	52700 + 20500	More	
9.	பென்யமீன் - 35400	--	45600 + 10200	,,	
10.	தாண் - 62700	--	64400 + 1700	,,	
11.	ஆசேர் - 41500	—	53400 + 11900	,,	
12.	நப்தலி - 53400	—	45400 — 8000	Lessthan	
மொத்தம்	603550		601730 -- 1820		

5 கோத்திரத்தார்கள் இரண்டாவது எண்ணிக்கை குறைந்திருந்தார்கள்; அவர்களாவன: ரூபன் 2770; சிமியோன் 37100; காத் 5150; எப்பிராயீம் 8000; நப்தலி 8000 மொத்தம் 61020 பேர் மற்றவர்களைக் காட்டிலும் சராசரிக்குமேல் சிமியோன் கோத்திரத்தார்கள் குறைந்திருந்தார்கள் 37100 பேர் இவ்விதமாய் சிமியோன் கோத்திரத்தார் விழுந்தது விபசார பாவத்தில் என்று அறிகிறோம்.

எப்படியெனில் எண் 25:6-15 ஒருவன் அந்நிய ஸ்திரீயை பாளயத்தில் அழைத்துக் கொண்டு வந்தான்; அவன் பெயர் சிம்ரி; அவன் சல்லூவின் குமாரனும், சிமியோனியரின் தகப்பன் வம்சத்தில் ஒரு பிரபுவுமாக இருந்தான் [எண். 25:14]. நம் அவர்களைப் போல வேசித்தனம் பண்ணாதிருப்போமாக [1 கொரி. 10:8]. தேவனுக்கு கீழ்ப்படியாமல் தேவனுடைய பரிசுத்தத்துக்குக் கீழ்ப்படியாமல் புறம்பாக்கப்பட்டு எதிர்த்து நின்று, அவிசுவாசத்தினால் இடங்கொடுத்து, இச்சையுள்ளவர்களாகி, விக்கிரக ஆராதனை செய்து, அநேகர் பாவம் செய்து மடிந்து போனவர்களின் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் இருந்து கிறுக்கப்பட்டு நித்திய தண்டனையும் அடைந்துபோகிறார்கள் [1 கொரி. 10:1-11; யூதா 5; மத். 25:41,46; லூக். 16:19-31; வெளி. 21:8; 22:15]

எண்ணாகமத்தின் எண்கள் நமக்குப் போதிக்கும் பாடம் இதுவே. நீ உன் தேவனிடத்தில் எண்ணிக்கையுள்ளவனுயிரு. இரண்டாம் முறை எண்ணினதின் மூலமாக கர்த்தர் தாம் சொன்ன வாக்கை நிச்சயமாக நிறைவேற்றி முடிப்பார் என்று அறிகிறோம் [எண். 14:27-35].

[தொடரும்]



''மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்'' (நீதி. 18:21).



பெண்கள் [தொடர்ச்சி]

ஆயுதம் செய்யத் தெரியாத அநேக ஜந்துக்களுக்கு கொம்புகள், நகங்கள், தந்தங்கள், வால்கள், கால்கள் முதலிய ஆயுதங்களை அவைகளுடைய தேகங்களில் கடவுள் அமைத்து வைத்திருக்கிறார். மிருகங்களும், பட்சிகளும் தங்களுடைய கருத்துகளை ஒன்றுக்கொன்று தெரிவித்து கொள்ளுகிறபடி ஒவ்வொரு ஜாதிக்கும், ஒவ்வொரு பாஷையை கடவுள் கற்பித்திருக்கிறார் என்பது அநுபவ சித்தமாய் தெரிகிறது.

ஆனபடியால் தங்கள் மிருகாதிகளைக் காப்பாற்ற வேண்டும். பெண்கள் தங்கள் இன ஜன பந்துக்கள் ஏழை உறவினர்களுக்கு, வறியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். பெண்கள் உயர்ந்த நோக்கமுள்ளவர்களாயும், பதிவிரதா பக்தியுள்ளவர்களாகவும் காணப்படவேண்டும் தங்கள் புருஷர் அல்லாத மற்றவர்களை கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது. பெண்களுடைய வேலை அவர்கள் காரியம் [illegible] பெண்கள் நெருக்கடி நிலையில் தங்கள் வாழ்க்கையின் சிறு தேவைகளுக்காக போராடும் போது தங்களுக்கு உதவி செய்யும் பிற ஆண்களுடன் பழகி தங்களை இழக்கும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. அச்சமயங்களில் இறைவனையே நோக்கிப் பார்த்து கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு டிவிஷன் சொல்லிக் கொடுக்கும் சாக்கில் அரவங்கள் [சர்ப்பம்] தீண்ட முயற்சிக்கும்; எந்த புற்றில் எந்த பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்

சின்னப் பையன் என்று நெருங்கிப் பழக இடங்கொடுக்க கூடாது ஆண் ஆண்தான்; பெண் பெண்தான். பழக்க தோஷம் தகாத பிரியத்தையுண்டாக்கும் அல்லது ஆபத்தையுண்டாக்கும் வளர்ந்த மகனுயிருந்தால் கூட அவனுக்கு தாய் ஒரு பரிசளிப்பது கணவன் மூலமாகவே செய்ய வேண்டும்; பிள்ளைகளிடம் பட்சபாதமான அன்பு காட்டக் கூடாது. வெளியே வேலைக்குப் போகிற பெண்கள் பிற ஆண்களோடு பழக, சேர்ந்து வேலை செய்ய நேரிடும்; கண்டிப்போடும், தன்னடக்கத்தோடும் நடந்து கொள்ளல் வேண்டும்.

பெண்கள் தங்கள் உடல் நலத்தை நன்கு பேணிக் கொள்ளவேண்டும் தங்களுக்குத்தானே வைத்தியர்களாகக் காண

[illegible]பட வேண்டும் திட்டமிட்டு வீட்டு வேலைகளைச் செய்துவிட வேண்டும். எப்போதும் வேலை செய்து கொண்டிருக்கக் கூடாது. வேலை செய்யாத சோம்பேறியாக இருக்கக் கூடாது. பெண்கள் ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் இருந்தால் தான் வீட்டில் எல்லோருக்கும் மகிழ்ச்சி; ஆரோக்கியமே அருந்தனம். ஒரு சரியான தாயை பிள்ளைகளும், கணவனும் போற்றுவார்கள் (நீதி 31:28,29). சரியான நேரத்தில் ஆகாரம் சமைத்து தன் புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் ப[illegible]ளிக்க வேண்டும்

விசேஷமாய் பெண்கள் தேவபக்தியுள்ளவர்களாயிருந்து ஜெபசாலிகளாய்க் காணப்பட வேண்டும். திட்டமிட்ட ஜெப வாழ்க்கை அவர்களுடைய [illegible] இல்லாவிட்டால் பிரயோஜனமில்லை. தேவ பக்தியோடு கோயில் பக்தி மிக மிக அவசியம்.

பெண்கள் ஓய்வு நேரங்களில் தேவ பக்தியுள்ள நல்ல புஸ்தகங்களைப் படிக்க வேண்டும். வேதாகமத்தின் ஆவிக்குரிய புஸ்தகங்கள், பல அறிவு நூல்களைப் படிப்பதால் ஞானமும், அறிவும் [illegible] பெண்கள் உலகத்தில் விசேஷமானவர்கள் அவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாவிட்டால் மிகவும் தாழ்ந்து போவார்கள். அவர்கள் தங்களை [illegible] கொள்ளவேண்டும். [illegible]

பெண்கள் மதிக்கப்படுவதைக் கண்டு அவர்கள் [illegible] பிடித்திருப்பதையும் கூடாது சில தங்கள் மனைவியரை அம்மா, அம்மா என்றும்; நீங்கள், தாங்கள் என்றும்; அழைத்து அவர்கள் தகுதிக்கு மிஞ்சிய கனம் கொடுத்து அவர்களைக் கெடுக்கிறதைப் பார்க்கிறோம். அவர்கள் ஒன்றோ, இரண்டோ, மூன்றோ பிள்ளைகளைப் பெற்றுப் பேணி வளர்த்து பெரியவர்களாகட்டும் பின் பார்க்கலாம். "அம்மாள் தெருவுக்கு வருவதற்கு முன் [illegible]" என்பது போல் சில அறிவிலாத புருஷர்கள் செய்கிறபடியினால் அந்த ஸ்திரீ தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள புருஷனை மகனே என்று கூப்பிட்டு தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பிக்கிறாள் புருஷன் வியாதியாய்க் கிடப்பான் புருஷனுக்கு செய்ய வேண்டிய கடமை, பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் ஊழியம், ஊழியம் என்று சொல்லி விட்டுவிட்டு அலைகிற ஸ்திரீகளுமுண்டு.

இன்னும் சில பெண்கள் புருஷர்களின் பெலவீனத்தை அறிந்து கொண்டு என் சொல்படி கேட்காவிட்டால் உன்னையும் உன் பிள்ளைகளையும் போட்டு விட்டுப் போய்விடுவேன் என்று, புருஷர்களைப் பயமுறுத்தி பாடுபடுத்துகிறார்கள். [illegible]

பரிசுத்த விவாகம

[illegible]

Bro S. [illegible] S. M. [illegible] 17-1-96

ளுகிறார்கள். வெளியே போகும்போது கூட்டங்களுக்குப் போகும்போது, பக்திவேஷம் போடுகிறது; வீட்டிற்குள் வந்ததும் வேஷத்தைக் கலைந்து விடுதல் எவ்வளவு பரிதாபம். பாவம் பக்தி வேஷம் போடுகிறது.

சில ஸ்திரீகள் விவாகம் முடிந்ததும்; தங்கள் புருஷனை தனக்கு மாத்திரமே சொந்தம்; புருஷன் குடும்பதுக்கும், நமக்கும் சம்பந்தமில்லை. தன் தாய வீட்டோடு புருஷனைக் கொண்டு வந்து விட வேண்டும்; தன் கைவசப படுத்த வேண்டும் என்று கிரியை செய்வார்கள் இது தவறு. குழந்தையைப் பிறப்பித்து, 20 வருஷம், 30 வருஷம் பாதபாடு பட்டு வாயைக் கட்டி, வயிறைக் கட்டி, வளர்த்து, படிக்க வைத்து, உத்தியோகம் பிடித்து கொடுத்து, வாழவைத்தவர்களுக்கு ஏதும் பந்தமில்லை; இன்று வந்த நானே எல்லாவற்றையும் பெற உரிமையுள்ளவள் என்று, எண்ணும் பெண்களே உன மகளும் உனக்கு இப்படிச் செய்தால் எபபடி இருக்கும்

ஆதலால் பெண்கள் அப்படி எண்ணாமல் மாமாவோ, மாமியோ, நாத்தனரோ, புருஷன் கடமை செய்ய வேண்டியவர்கள் யாராவது உண்டானால் நீயும் சேர்ந்து அந்த நன்மையை செய்; ரூத்தைப்போல் (ரூத் 1:8; 3:11,12).

[முற்றும்]

"குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்" [நீதி. 31:10-12].

[ஜனவரி மாத தொடர்ச்சி]

மெய்யறிவு

வெளியே வந்து அரமனை முற்றத்தில் நின்றவர்களிடத்தில் விசாரித்தேன். அங்கே சிலர் காணாமல்போன எலியா மறுபடியும் தோன்றியுள்ளான என்றனர். சிலர் பூர்வ காலத்து தீர்க்கதரிசிகளில் ஒருவன உயிர்த்தெழுந்துள்ளான என்றார்கள் (லூக். 9:8) ஜனங்களில் சிலர் விவாதித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, ஒற்றுக் கேட்டேன். அவர்களும் இந்த இயேசு யார்? என்று பேசிக்கொண்டிருந்தனர். இந்த இயேசு எலியாதான் என்றார் ஒருவர், இல்லை எரேமியா என்றார் இன்னொருவர் இவர் செய்கிறதைப பார்த்தால் யோவான் ஸ்நானகன் தான என்று நம்ப தோன்றுகிறதென்றார் அடுத்தவர் [மத். 16:14]. இப்படியாக பலரையும் பல இடங்களிலும் விசாரித்தும் ஒரு தெளிவான முடிவுக்கு வர முடியவில்லை மெய்யாகவே இவர் யார்? இதை அறிய என ஆவல் அதிகமாகி கொண்டே இருந்தது.

தேவனால் அனுபபபபட்ட ஒரு மனுஷனைக் கண்டு, ஐயா இவர் யார் என்றேன்? அவர் பிரதியுத்தரமாக, "இவர் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி, விசுவாசிக்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியினை ஞானஸ்நானம் கொடுக்கிறவர், மெய்

யாகவே இவர் தேவனுடைய குமாரன்'' என்று தான் கண்டதை சாட்சியாக ஒப்புவித்தார் [யோ. 1:33,34,36]. அந்திரேயா என்பவரைக் கண்டு, யார் இந்த இயேசு என்றேன். அவர் பதிலாக ''நான் இயேசுவோடே தங்கியிருந்தேன். மெய்யாகவே அவர் மேசியா'' என்றார் திட சாட்சியாக (யோ. 1:39-41).

மேலும் பிலிப்பென்பவரைக் கேட்டபோது, ''நீ வந்து பார்'' என்று சொல்லி விட்டார். அவருடன் நடந்து போகையில் நாத்தான்வேலைக் கண்டு, நீர் வேதவாக்கியங்களை நன்கு ஆராய்கிறவராயிற்றே, இந்த இயேசு யார் என்று எனக்கு சொல்லும் என்றேன் கபடற்ற நாத்தான்வேல் ''நான் இருக்கிறதை காண்கிற இந்த இயேசு தேவனுடைய குமாரன், இஸ்ரவேலின் ராஜா'' என்றார் [யோ. 1:47-49]. உண்மையை ஒப்புக் கொள்ளும் மனதுடைய சமாரியா தேசத்து ஸ்திரீயிடம், ஸ்திரீயே உன்னோடே கிணற்றருகே பேசிக்கொண்டிருந்தாரே அவர் யார் என்றேன். அதற்கு அவள் ''நான் செய்த எல்லாவற்றையும் சொன்ன அவர் கிறிஸ்து எனப்படுகிற மேசியா'' என்றாள் [யோ. 4:25,29].

மேலும் நான் சமாரியா தேசத்தில் அந்த ஸ்திரீ குடியிருந்த ஊரில் போய் கேட்டபோது, அந்த ஊர்க்காரர்கள், ஐயா நாங்கள் இயேசு ஐயருடைய உபதேசங்களை இரண்டு நாட்கள் மிக ஆவலாய் கேட்டோம். ''மெய்யாகவே அவர் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர்'' என்றார்கள் (யோ.4: 40-42). நான் பிரயாணத்தை தொடர்ந்துஎருசலேமுக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள பெத்தானியா வந்து, இயேசுவையும், அவருடைய சீஷர்களையும் அன்புடன் ஏற்று, அவர்களுக்கு பணிவிடை செய்து வந்த மார்த்தாள் என்ற கனம் பொருந்திய ஸ்திரீயிடம் அம்மா ''இயேசுவை நீங்கள் யார் என்று விசுவாசிக்கிறீர்கள்'' என்றேன்.

அந்த அம்மா பிரதியுத்தரமாக ''அவர் உலகத்தில் வருகிறவரான தேவ குமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் தம்பி'' என்று பணிவுடன் விசுவாச அறிக்கை செய்தார்கள் [யோ. 11:27]. இவைகளைக் கேட்க, கேட்க என் விசுவாசம் பெருக ஆரம்பித்தது; பின்னும் நான் பிரயாணப்பட்டு, பேதுரு என்பவரிடம் சென்றேன். அவர் என்னைக் கண்டவுடன் நீ எதற்காக என்னிடம் வந்திருக்கிறாய் என்று எனக்கு தெரிகிறது, இயேசு யார்? என்று தானே கேட்க வந்திருக்கிறாய் என்றார். நான் தடுதடுங்கி ஆமாம் ஐயா என்றேன். ''அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து, இதை பரலோகத்திலிருக்கிற பிதா எனக்கு வெளிப்படுத்தினார்'' என்றார் [மத். 16:16,17].

மெய்யையறிய நான் மேற்கொண்ட பிரயாணம், முடிவுறும் வேளைசமீபித்தது எனகண்டேன். இருந்தாலும் நான் அறிந்ததை பலமாய் ருசிக்க விரும்பி சவுல் என்ற பவுலை சந்திக்க விரும்பி அவரிடம் சென்று, என்னுடைய பிரயாண விவரங்களை அவரிடம் ஒப்படைத்தேன். அவர், நானும் அவரை அறியாமல் அவருடைய சீஷர்களை துன்பப்படுத்தின பாவி நான், ஆனால் இரக்கம் பெற்றேன். ''அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்து எனக்கும் தரிசனமானார், ஆகவே இந்த இயேசுவே கிறிஸ்து'' என்று திருஷ்டாந்தப் படுத்தி காண்பித்தார் (ரோம. 1:5; அப். 9:22). உண்மையைக் கண்டறிந்த சந்தோஷமும், அறிவிக்க வேண்டிய அவசியமும் என்னை நெருக்கினபடியால், தாமதமின்றி ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவ குமாரன்'' என்று எங்கும் பிரசங்கித்து வருகிறேன்.

இயேசு எப்படி அறியப்பட்டிருந்தாரோ அப்படியே அவருடைய தூதரும் அறியப்பட்டிருப்பார்கள். இயேசுவை ஜனங்கள் எப்படி விளங்கிக் கொண்டார்களோ, அப்படியே அவருடைய சரீரமாகிய சபையையும் விளங்கிக் கொள்வார்கள். ஞானம் அதின் பிள்ளைகளால நீதியுள்ளதென்று ஒப்புக் கொள்ளப்படும் என்றார் [லூக். 7:35].

சாட்சி

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

என் பெயர் முருகலெஷ்மி; என் கணவர் பெயர் பாலசுப்பிரமணி; எங்கள் ஊர் கழுகுமலை. நாங்கள் ஒரு இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். என் கணவர் கடந்த மூன்று வருடத்திற்கு முன்பு வியாபார விசயத்தில் ஒரு லட்சம் வரையில் நஷ்டம் ஆகிவிட்டார். அதற்காக எங்களுக்கு இருந்த ஒரு வீட்டைவிற்று, கடனை அடைத்து விட்டு திருநெல்வேலி சென்று விட்டோம். அங்கு ஒன்றரை வருடம் இருந்தோம்; அங்கு இருக்கும்போது நன்றாகத் தான் இருந்தோம்.

அப்பொழுது என் பையனுக்கு எட்டு வயது முடியும் தருவாயில் திடீரென இரு கையும், காலும் செயல் இழந்து முடம் போல் ஆகிவிட்டான். எங்கு சென்றாலும் தூக்கிக் கொண்டுதான் செல்லுவோம்; இப்படியே ஆறுமாதம் கஸ்டப்பட்டோம்; எத்தனையோ ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் காண்பித்தோம். பல கோவில்களுக்கு நேத்திக் கடன் கூட செய்திருந்தோம் பெரிய, பெரிய ஆஸ்பெட்டலில் இரத்த பரிசோதனை, எக்ஸ்ரே எடுத்து பார்த்தோம். டாக்டர்கள் முப்பது வயது வரை ஊசி போடச் சொன்னார். இல்லை என்றால் பிள்ளைக்கு வேறு வகையில் பாதிப்பு வரும் என்றார். எங்களுக்கோ வருமானம் குறைவு முப்பது வயது வரையில் எப்படி ஊசிபோட முடியும் என்று வருந்திக் கொண்டிருந்தோம் நாளுக்கு நாள் பையன் மோசமாகிக் கொண்டிருந்தான்; எத்தனை வைத்தியம் பார்த்தும் குணமாகவில்லை.

கடைசியில் நான் என் கணவரிடம் சொன்னேன், நாம் உங்கள் அண்ணன் செல்லும் ஆலயத்தில் எண்ணெய் ஜெபம் பண்ணி வாங்கி போடுவோம் என்றேன்.

அவர் முதலில் மறுத்தார் பின்பு பிள்ளையின் நிலையைக் கண்டு கோவில்பட்டியில் உள்ள "புதிய எருசலேம் சபைக்கு" கொண்டு சென்றோம். அங்கு பாஸ்டர் ஜோசப் ஐயா அவர்கள் எங்களுக்காக ஜெபித்து, எண்ணெய் பூசி ஜெபம்பண்ணி, முப்பது நாள் ஆவதற்குள் பையன் நடந்து விடுவான் என்றார். அவர் சொன்னபடி நாளும் அந்த ஜெபித்த எண்ணெய்யை என் பையனுக்கு போட்டுவந்தேன். பாஸ்டர் சொன்னபடியே முப்பது நாட்களில் நடந்து விட்டான். மறுமுறை ஆலயத்திற்கு நடந்தேவந்தான். அற்புத சுகம் தந்த என் இரக்கமுள்ள இயேசு தகப்பனுக்கு கோடானகோடி ஸ்தோத்திரம்.

நாங்கள் அன்று முதல் "புதிய எருசலேம் சபையில்" ஒரு விசுவாசி ஆகிவிட்டோம். என் பையனுக்கு டேவிட் என்று பெயர் வைத்துள்ளோம்; இப்பொழுது நன்றாக இருக்கிறான் கர்த்தருக்கே மகிமையும், துதியும்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள்,
M. B. முருகலெஷ்மி,
கழுகுமலை.

"விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை" [1 பேது. 2:6].

ஒரே வாழ்க்கை ஒரே வாய்ப்பு

மனிதனுடைய இப்பூலோக வாழ்க்கை குறுகியது. ஊழிக்காலமோ முடிந்துபோவ தில்லை. தொடக்கமும், முடிவுமில்லாத ஊழிக் காலத்தைப் பற்றி எண்ணுவது நம்மை திகைக்கவும், திடுக்கிடவும் செய்யும் என் றும். முடிவில்லாத நித்திய காலத்தை உணர்த்துவதற்கு வார்த்தைகள் உண்டா? இக்காலத்தின் தொடக்கமோ உலகம் உண் டாவதற்குமுன், தேவதூதர்களுக்குமுன், தேவன் மாத்திரம் இருந்த காலம்! இவற் றையெல்லாம் நாம் முற்றிலும் விளங்கிக் கொள்வது கடினம். மேலும் எதிர்காலத் தைப்பற்றி ஆராய்ந்தால் இந்த உலகம் அழிந்து, புதிய வானம், புதிய பூமியும் தோன்றிய பின்னரும் முடிவில்லாத காலம் இருக்கும். நமது ஆத்துமா அழிவின்றி என் றும் வாழும் நித்திய காலம் இதுவே.

இந்த ஊழிக்காலம் எவ்வளவு நீண்ட காலம். ஹென்றி வான்லூன் இவ்வாறு [illegible] வடக்கே [illegible] என்ற [illegible] இருக்கிறது. அதில் நூறு மைல் நீளம், நூறு மைல் உயரமுள்ள ஒரு பாறை இருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு சிறுபறவை அந்தப் பாறைக்கு வந்து தன் அலகைத் தீட்டிக் கொள்ளும். அவ்வகையில் அம்மா பெரிய பாறை தேய்ந்து போகக் கூடிய காலமே ஊழிக் காலத்தின் ஓர் நாள் என்று கூறுகிறார். நல்ல விளக்கமென்றாலும் ரோலண்ட் டிக் [illegible] வர்ட் என்ன சொல்லுகிறார் என்றால், மகா சமுத்திரத்தின் தண்ணீரில் ஒரு சிப்பி தண்ணீர் எடுத்தால் அது நித்தியத்தின் ஒரு காலக்கூறு என்கிறார். உண்மை [illegible] ஊழிக்காலம் ஒரு எல்லை [illegible]; அது முடிவேயில்லாத [illegible]; அது எப்பொழுதும் [illegible]

[illegible]

தான் ஒரு பொடி மணல், மீதி மணல், தான் இன்னும் வாழப்போகிற காலம் என் பதை அறியக்கடவன். இந்த எண்ணத்து டன் ஒவ்வொருவரும் வாழவேண்டும். நீ உன் ஊழிக்காலத்தை [நித்தியத்தை] எங்கே கழிக்கப் போகிறாய். முதலாவது நீ உன் ஆத்துமாவைக் காப்பாற்று. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, ஆத்தும இரட் சிப்பைப் பெற்றுக் கொள்.

பொன்னான வாய்ப்பு:-

"நீ உன் வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" [பிர. 12:1]. கிறிஸ்தவ வாலிபனே, வாழ்க்கையின் தத்துவத்தை அறிந்து கொள்ள இதுவே ஏற்ற சமயம். ஒருவனின் சக்தி வாலிப பருவத்தில் உச்ச நிலையிலிருக்கிறது. ஊக்கமும், அறிவுக் கூர் மையும் நிறைந்த பருவம் இளமைப் பரு வம். இளமையிலேயே ஆண்டவர் மக் களை அழைக்கிறார். "விதைக்கப்படாத தேசமாகிய வனாந்திரத்திலே நீ என்னைப் பின்பற்றி வந்த உன் இளவயதின் பக்தி யையும், நீ வாழ்க்கைப் பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கி றேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 2:2).

வாலிப பருவத்தில் ஒரு [illegible] ஓடி துள்ளித்திரியும் கன்றுகளையும் ஓடி, ஆடும் குழந்தைகளையும் பார்க்க விரும்புகி றோம். சோர்ந்துபோன எருதுகளையும், [illegible] நரைகளையும் பார்ப்பதில் [illegible]. குழந்தைகளைக் காணும்போது நமக்கு மகிழ்ச்சிதான். மனிதனின் வாலிபப் பருவத்திலே தான் அநேக [illegible] சாதிக்கப்பட்டிருக்கின்றன. [illegible]

இருபத்தெட்டு வயதிற்குள் ஹெரொடாட்டன் ஒலிம்பிக் பந்தய வரலாற்றின் ஒன்பது பகுதிகளை எழுதிமுடித்தான்; ஹானிபால் ஸ்பெயின் நாட்டை வென்றான். இருபத்தைந்தாம் வயதில் டிமாஸ்தெனிஸ் கிரேக்க நாட்டிலும், சிசரோ ரோமபுரியிலும் வாக்கு வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். அதே வயதில் லாபயேல் வத்திகன் ஆலயத்தை வண்ண சித்திரங்களால் அலங்கரித்தான். கலிலேயா வானநூல் ஆராய்ச்சி செய்தான். ஷேக்ஸ்பியர் நாடகக் கவியாகப் பேர் பெற்றான். இருபத்திரண்டாம் வயதில் மகா அலெக்ஸாண்டர் பெர்சிய நாட்டைத் தோற்கடித்தான். நெப்போலியனும், வாஷிங்டனும் மகா யுத்த விரர்களாக விளங்கினார்கள்.

இருபதாம் வயதில் பிளாட்டோ சாக்ரடீஸுக்கு நிகராக் காணப்பட்டான். அரிஸ்டாட்டில் தனது பதினேழாம் வயதில் பள்ளித்திலகம் என அழைக்கப்பட்டான். பத்தொன்பதாம் வயதில் பாஸ்கல் கணித மேதையாகவும், பேக்கன் தத்துவ ஞானியாகவும் இருந்தார்கள். இருபத்தைந்தாம் வயதில் யோனத்தான் எட்வர்டும், ஜியார்ஜ் ஒயிட்பில்டும் நல்ல போதகர்களாகப் பெயர் பெற்றார்கள். முப்பதாம் வயதில் இயேசு பெருமான் உலகத்தையே மாற்றிய நற்செய்தியை அறிவிக்க ஆரம்பித்தார்

முதிர் வயதில் நமது உடலின் சக்தியெல்லாம் குன்றிப் போகிறது; கை, கால்கள் தள்ளாடுகின்றன. பற்கள் அசைகின்றன; கண்கள் ஒளிமங்குகின்றன. காதுகள் மந்தமாகின்றன; உடலில் அசதி, பசியின்மை, தூக்கமின்மை, பலவீனம், களைப்பு, சோர்வு உண்டாகின்றன. பிரசங்கி சொல்லுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது, "தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும்; எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் நீ உன் வாலிபப் பிரயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" (பிர. 12:1).

இளம் பருவம் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மாத்திரமல்ல கிறிஸ்துவுக்காக தொண்டாற்றவும் ஏற்றக் காலம், கிறிஸ்துவுக்கென்று உழைக்கக் கூடிய பகற்காலம் வாலிபப்பருவமே என்பதைக் கிறிஸ்தவ வாலிபர்கள் ஏற்றக்காலத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும். வாலிபர்களின் நல்ல சாட்சி மற்ற வாலிபர்களைக் கவர்ந்து கொள்ளும். வாலிபர்களின் ஆர்வத்தையும், அஞ்சாமையையும் மற்றவர்கள் மெச்சுகிறார்கள், முதியவர்களின் ஊக்கமும், தைரியமும் பெரிதல்ல என்பார்கள். கிறிஸ்தவ போராட்டத்தில் வாலிபர்கள் அஞ்சாது இறங்குவார்கள். ஆனால் முதிர்வயதினரோ எச்சரிப்போடு அஞ்சி பின்வாங்குவர்.

கிறிஸ்துவுக்காக தொண்டாற்ற வேண்டும் என்று சிலர் திட்டம் போடுவார்கள்.

உடனே அல்ல தாங்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகோ, அல்லது அதிக பணம் சேர்த்துக் கொண்ட பிறகோ, அதாவது வயதான பிறகு ஆண்டவருக்காக உழைக்கலாம் என்று எண்ணுகிறார்கள். தளர்ந்துபோன மூப்புக்கால ஊழியத்தை ஆண்டவருக்குக் காணிக்கையாகப் படைப்பது நியாயமா? நாம் அவரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பெலத்தோடும் அல்லவோ சேவிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் அவருக்கு ஏறெடுக்கப்பட்ட பலிகள் பழுதற்றதும், முதற்பலனும், சிறந்ததுமாயிருந்தது. புதிய ஏற்பாட்டின் காலத்தில் நம்மையே உயிர்பலியாகக் கேட்கிறார்.

நாம் ஓய்வு பெற்று சவை எதிர் நோக்கும் காலத்தில் [சாகப்போகும்] நம்மைப் பயனற்ற பலியாக செலுத்தி ஆண்டவரை ஏமாற்ற முடியுமா? ஆறும் மணி நேரத்தில் அழைப்பைப் பெற்றவன் பதினோராம் மணியில் வேலைக்குப் போய் நின்றால் ஏற்றுக் கொள்ளப்படுவானா? நமது சிறந்த வாலிபப் பருவத்தை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்பதை நமது பகுத்தறிவு நமக்கு உணர்த்த கூடுமே.

நம்மிடம் சிறப்பானதையே கிறிஸ்து கேட்கிறார். எஞ்சிய பொருளையும், நேரத்தையும், பெலனையும் அல்ல, முற்காலத்தில் பழுதற்ற ஆடுகளையும், தானியத்தில் முதற்பலனையும் செலுத்தினார்கள். இன்றும் அவர் தமக்குச் சொந்தமானவர்கள் ஊக்கத்தோடும், திறமையோடும் ஊழியம் செய்வதையே அன்புடன் எதிர் நோக்குகிறார். சிலரிடம் தாங்கள் கொடுக்கக் கூடிய சிறந்த ஈவு ஒரு கலசம் தண்ணீராகவோ அல்லது இரண்டு காசுகளாகவோ இருக்கலாம்.

அவர் (இயேசு) தமது ஆத்துமாவைக் குற்ற நிவாரணபலியாக மரணத்தில் ஊற்றினார். தமது விலையேறப் பெற்ற இரத்தத்தைச் சிலுவையில் சிந்தி, நமக்காக நீதியுண்டாக்கினார். எல்லாவற்றையும் படைத்தாளும் மன்னாதி மன்னர் நமக்காக ஈனச் சிலுவையில் தம்மைத் தியாகம் செய்து நம்முடைய பாவங்களையும், துக்கங்களையும் சுமந்தார். நாம் கொடுக்கும் எந்த காணிக்கையும் அதற்கு ஈடாகுமோ?

இதற்கு ஒரளவு கைமாறாக கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கப்பட்டு நூற்றுக் கணக்கான வாலிபர்கள், மிஷனரிகளாக காடுகளிலும், தீவுகளிலும், மனிதரைக் கொன்று தின்னும் மக்களின் நடுவிலும் சென்று உழைத்தார்கள். தங்களையே உயிர்ப்பலியாக ஊற்றினார்கள். பலர் இரத்தச் சாட்சிகளாய் மரித்தசர்கள். இது அன்று மாத்திரமல்ல இன்றும் நடைபெறுகிறது. 8-1-1956ல் இருபத்தேழு வயதான பீட்டர் ஃப்ளெமிங் என்பவர் ஈக்குடார் நாட்டில் கிறிஸ்துவுக்கென்று இரத்தச் சாட்சியாய் மரித்தார்.

உன் எதிர் காலத்தை [ஊழிக்காலம்] நினை. யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய்ப் போவான்? என்று ஆண்டவர் அழைக்கிறார்.

ஒரே ஆண்டவர் உண்டு

“எங்கள் தேவனாகிய கர்த்தாவே உம்மையல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள். இனி உம்மை மாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்துவோம். அவர்கள் செத்த ராட்சதர்கள் ஜீவிக்கமாட்டார்கள். மாண்

ராட்சதர் திரும்ப எழுந்திரார்கள். அவர்களை நீர் விசாரித்து, அவர்களை சங்கரித்து அவர்கள் பேரையும் அழியப்பண்ணினீர்.

இந்த உலகத்தில் அநேக மக்கள் இவ்விதமான நிலையிலே இருக்கிறார்கள். அநேக ஆண்டவன்மார்கள் அவர்களை ஆண்டு வருகிறார்கள். வேறே ஆண்டவன்மார்களை அவர்கள் வணங்குகிறதாகப் பார்க்கிறோம். தேவனையல்ல, தேவன் அல்லாதவைகளை தொழுது கொள்ளுகிறார்கள்; அவைகளை வணங்குகிறார்கள்; அவைகள் அவர்களை ஆளுகை செய்கிறது என்று நாம் அறிகிறோம். "தேவன் ஒருவரே; வேறே தேவன் இல்லை" வேறே ஆண்டவன்மார்களைத் தொழுது கொள்ளுகிறார்கள்; தேவனையல்லாத மற்றவைகளைத் தொழுது கொள்ளுகிறார்கள்.

சிலருக்கு பல ஆண்டவன்மார் இருப்பார்கள். ஆனால் வேதாகமம் ஒரே ஒரு தேவனைப்பற்றியே அறிவிக்கிறது. அந்த தேவனே மனுமக்களுக்கு சமாதானம் அருளக்கூடியவர். வேறே ஆண்டவன்மார்கள் மனுமக்களை ஆளுகிறதும், இந்த மக்கள் அவர்களைத் தொழுது கொள்ளுகிறதுமான காரியத்தை பார்க்கிறோம். ஆனபடியினால் அவர்களுக்கு மெய் சமாதானமில்லை, திருப்தியில்லை. உலகத்தில் மக்கள் பல ஆட்களை, பல பொருட்களை தெய்வமாகக் கருதுகிறார்கள். தொழில், பணம், சொத்து, சுதந்திரம் சிலர் அழகு, சிலர் பெலன், சிலர் கூட்டின் பத்தை, சிலர் பதவி, சிலர் படிப்பு, கல்வி, பட்டம், சிலர் மனிதர்களையே கும்பிடுகிறார்கள்; நர ஸ்துதிபாடுகிறார்கள். செத்துபோன மனிதர்களைக் கும்பிடுகிறவர்கள் அநேகர் தங்களுக்கு அருமையானவர்கள் செத்துப்போனால் அவர்களை வணங்குகிறார்கள். செத்துப்போன அரசர்களை இவர்கள் தெய்வங்களாக தொழுது கொள்ளுகிறார்கள்; தலைவர்களை செத்துப்போனவர்களைத் தொழுது கொள்ளுகிற[illegible] விக்கிரக ஆராதனைகள் வந்தது இ[illegible]

உயிருள்ள[illegible]

[illegible]

டும்; செத்தவர்களிடத்தில் விசாரிப்பானேன்? இவ்விதமாக செத்த தலைவர்களைத் தொழுது கொள்ளுகிறவர்களும், சூரிய, சந்திர, நட்சத்திரங்கள், மிருகங்கள், பிராணிகள், பறவைகள், சிருஷ்டிகள் இவைகளைத் தொழுது கொள்ளுகிறவர்களும்; அற்புத அடையாளங்கள் செய்யும் மனிதர்களையும் தொழுது கொள்ளுகிறார்கள்; இவைகள் தேவனல்லவே (1 கொரி. 8 5,6).

இவ்விதமாய் தேவனையல்லாது மற்றவர்களைத் தொழுது கொள்ளும்போது அவைகளில் சாத்தான் புகுந்து அவைகள் மூலமாக அவைகளுடைய உருவத்திலே இவர்களோடு இடைபட்டு இவர்களை வஞ்சிக்கிறான். செத்த ராட்சதர்கள் திரும்ப ஜீவிக்கமாட்டார்கள் மாண்ட ராட்சதரையும், அவர்கள் சரீரத்தையும் அழியப்பண்ணினீர் என்று மேற்கண்ட வசனத்திலே வாசித்தோம். அவர்கள் தெய்வங்களானால் அவர்கள் உயிரோடு எழும்பி வரட்டும்; அவர்கள் சரீரம் எழுப்பப்படட்டும் அப்பொழுது நாம் அதைப்பற்றி சிந்திக்கலாம்.

உலகம் முழுவதும் மக்கள் வஞ்சனையான நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் உலக ஞானத்தினால் இறைவனைக் கண்டு கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். உலக ஞானம் தேவனை கண்டு கொள்ளாது, கண்டு கொள்ளவும் முடியாது. அவர்கள் தங்களை ஞானிகள் என்று சொல்லி பயித்தியக்காரர்களாகி, அழிவில்லாத தேவனை அழிவுள்ள மனுஷர்கள், மிருகங்கள், பறவைகள், பிராணிகள், மச்சங்கள், ஊரும் பிராணிகள் இவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள் என்று ரோம. 1:22,23ல் நன்றாக சொல்லியிருக்கிறது. அநேக உலக ஞானிகள் இவ்விதமாக பயித்தியக்காரர்களாகியிருக்கிறார்கள். [illegible] தேவர்களை [illegible] மனிதன் [illegible] தேவனிடம் திரும்பவேண்டும் (அப். 11 15)

மனிதன் தேவனுக்காய் சிருஷ்டிக்க[illegible]

[illegible]

'தேவனைத் தேடு'
"SEEK GOD"

Regd No 040088/84
Postal Regd No MH BY NE-94/95
Tamil Monthly Magazine

பரனை தேவனை கண்டுகொண்டு, அவருக்கு [illegible] பூரணமாய் ஒப்புக்கொடுத்து, சமாதானம் அடைகிறோ [illegible] அப்பொழுது அவருக்கு சமாதானம் கிடைக்கும்.

தனக்கு பலமையில்லாதான் நன் [illegible] நிந்தாக்கல்லான், மனக்கவலை மாற்ற [illegible] என்று திருவள்ளுவரும் சொல் [illegible]. தேவனிடத்தில் மாத்திரம் [illegible] சமாதானம் உண்டு [ஏசா 26 12].

இதை வாசிக்கிற [illegible] நீங்களோ, மெய்தேவனை அறிந்து அவ [illegible] பெற்றவர்களாகியிருக்கிறீர்களா? நீங்கள் [illegible] ஒரு மெய்யான தேவ வழியாக [illegible] காரணம் [illegible] இரட்சிக்கப்படுகிறது [illegible] என்று உபதேசம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு [illegible] தானம் கிடைக்கும்

தேவ பக்தி

தேவபக்தி, Godliness, Piety [illegible] தேவனிடத்தில் [illegible] தேவ [illegible] நடக்கிற [illegible] (தீத. 2:12) [illegible] இது [illegible] இதற்குப்பின் [illegible] எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது (1 தீமோ. 4:8). தேவபக்திக்கு நான்கு பிரதான இலட்சணங்களுண்டு. அவையாவன: 1. மெய்யறிவு (சங். 119: 88,99). 2. [illegible] (சங். 17:3). 3. வைராக்கியம் (1 இரா 19:10; யோ. 2:17). 4. பரிசுத்தம் (கலா. 5:24) என்பவைகளே. [illegible] நீதி, [illegible], [illegible], பொறுமையும், சமாதானம், [illegible], நித்திய ஜீவன், [illegible] முதலியவை தேவபக்தியினால் வரும் பலன் (1 தீமோ 6: 6,11. 2 தீமோ 3:5. 2 பேது 2:6; 3:11) விஸ்பக்தி விபரீதமே

அறிவிப்புகள்

1 முழு இரவு விழிப்பு ஜெபம்
   5 [செவ்வாய்] மார்ச் 1996
   5 [புதன்] [illegible] 1996
   3 [வெள்ளி] [illegible] 1996
2 புதிய எருசலேம் செய்தி பத்திரிகை
   ஆண்டு சந்தா Rs 30-00
   வெளிநாடு Rs [illegible]
   அனுப்ப வேண்டிய விலாசம்:
   CHIEF PASTOR N. LAZAR
   "NEW JERUSALEM CHURCH"
   CHURCH LANE, TILAK NAGAR
   DARGA CROSS ROAD, BHANDUP,
   BOMBAY-400 078, INDIA

3 மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும் பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. [illegible] அல்லது [illegible] தெளிவாகக் குறிப்பிடவும்

- 'புதிய எருசலேம் செய்தி' பத்திரிகை வேண்டுமானால் ரூ 30 [illegible] சந்தா [illegible] தெளிவாக [illegible] (CAPITAL LETTER) [illegible] பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 140 - MAR. '96

"புதிய எருசலேம் சபை"

"...வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவுகிற நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ரோ) என்று நீங்கள் அறியீர்கள்... விழித்திருங்கள்... உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்."

-மாற்கு 13 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

BOMBAY, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமனப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ற பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும் சபையானது வஞ்சக போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:15; மாற்கு 16:15.

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).

3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28 20

4 அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.

5 அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17

6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப 1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப 1 1; 10:40-43)

CHIEF PASTOR: N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

அன்பான தேவனுடைய பிள்ளைகளே நாம் சந்தோஷப்பட்டு களிகூறுவோமாக; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்வைத் ஸ்துதிப்போமாக. அவரால் நாம் பிழைக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மெய்யான தேவனும், பூரணமான ஆளுமாய் இருக்கிறார். அவரை விசுவாசித்து, ஏற்றுக் கொள்பவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் மூலம் தங்கி அவர்களுக்கு ஜீவன் அருளுகிறார்.

வெளியேயுள்ள மதங்களில் மனிதன் நினைக்கிற பிரகாரம் பரிசுத்த ஜீவியம் செய்ய, உண்மையுள்ள ஜீவியம், மாய்மால மற்ற ஜீவியம் செய்ய வல்லமையருளும், ஜீவன் அருளும் ஆள்கிடையாது; தவறான ஆட்களே உண்டு. ஜீவனையல்ல மரணத்தை, பாவத்தையே அவர்களால் அருளமுடியும். அவைகள் செத்த ஆவிகளே.

ஒரு மெய்கிறிஸ்தவன் தனக்குள் இருக்கும் கிறிஸ்துவிலிருந்து பரிசுத்த ஜீவியத்திற்கு வேண்டிய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுகிறான். அவன் எந்த அளவுக்கு அவரோடு ஐக்கியமாக இருக்கிறானோ அந்த அளவுக்கு முடிவில்லாத ஜீவனை இழுத்துக் கொண்டு பிரகாசிக்க முடியும்.

வெளியேயுள்ள மதக்காரர்கள் எந்த அளவு பக்தி வெறியுள்ளவர்களாயிருக்கிறார்களோ அந்த அளவு பொய்யர்களாக, திருடர்களாக, கொலைக்காரர்களாக, விபச்சாரக்காரர்களாக இருப்பார்கள். ஏனென்றால் அது தவறான மதமல்லவா. அவர்கள் விரும்பினாலும் நல்லவர்களாக ஜீவிக்க முடியாது. ஏனெனில் அங்கே ஜீவன் அருளும் ஓர் ஆள் இல்லை. நமக்கு ஒரு ஆள் உண்டு. இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் "நானே ... ஜீவனாயிருக்கிறேன்:"

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N. LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திருப்பதே புதிய ஏற்பாட்டின் முக்கிய உபதேசமாகும். ஒருவன் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பிரசங்கிக்க முடியாதவனாக, பெரிய அற்புதங்கள் அடையாளங்கள் செய்ய முடியாதவனாக இருக்கலாம்; ஆனால் அவன் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனாக நிலைநிற்க முடியும். ஒருவன் கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைநிற்பதே சாட்சியாக இருப்பதே ஒரு பெரிய ஊழியமாகும்.

சிலர் இரட்சிக்கப்பட்ட புதிதிலே ஓடி ஆடி ஊழியம் செய்வார்கள், சாட்சிக் கொடுப்பார்கள், ஆனால் உள்ளான ஜீவியம் இல்லாதபடியால் திடீர் என்று விழுந்து கிடப்பார்கள். இன்னும் சிலர் கடுமையாய் ஓடி காலை ஒடித்துக் கொண்டு விழுந்து கிடப்பார்கள். இவர்களைப் பார்க்கிற மற்றவர்களும் இடறலடைந்து நாம் அங்கே போய் அவனைப்போல் விழுந்து கிடப்பதை விட இங்கேயே இருந்து விடுவோம் என்று இவர்களைப் பார்த்து இடறலடைந்து கர்த்தரண்டை வராமல் கெட்டுப்போவார்கள். ஆதலால் கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திருப்பது அவசியம். இப்படி நிலைத்திருக்கிறவர்களைப் பார்த்து அநேகர் இறைவனண்டை வந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள். ஆனபடியால் நிலைத்திருப்போமாக.

கிறிஸ்தவ ஜீவியம் மிகவும் இலேசான காரியமாகும். ஏனெனில் அது கிறிஸ்து ஜீவிக்கும் ஜீவியமே ஆதாவது நம் மூலமாக கிறிஸ்து ஜீவிக்க விரும்புகிறார். கிறிஸ்துவின் ஜீவன் நம்மூலம் வெளிப்படுவதே கிறிஸ்தவ ஜீவியம். ஜீவன் பிறப்பினால் மட்டும் உண்டாகும். ஆனபடியால் தான் நம்முடைய கர்த்தர் மறுபிறப்பைப்பற்றி பேசுகிறார் [யோ. 3:3,5]. மறுபிறப்பின் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள்ளாகப் பிறக்கிறோம் பிறப்பை உண்டாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவரே மறுபிறப்பினால் கிறிஸ்துவின் ஜீவன் இவனில் ஆரம்பமாகிறது. கிறிஸ்துவாகிய திராட்சை செடியுடன் ஒட்டப்படுகிறான்; கிறிஸ்துவோடு ஒட்டப்படுகிறான்; ஒரு அங்கமாகிறான்: கிறிஸ்துவின் ஜீவன் இவனில் பரவுகிறது: அது கனி கொடுக்கிறது; இதுவே கிறிஸ்தவ ஜீவியம். இதில் கிறிஸ்தவனுடைய பங்கு அவரோடு இணைக்கப்பட்டே இருப்பதாகும்.

"என்னில் நிலைத்திருந்தால் கனியுண்டாகும், என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது. என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன். என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்" நம்முடைய காரியம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதே, ஐக்கியமாயிருப்பதே (யோ. 15:1-8). என்னில் நிலைத்திருங்கள் இது ஒரு கட்டளை. எப்படி நிலைத்திருப்பது: என் வார்த்தை உங்களிலும், நீங்கள் என்னிலும் என்று இயேசு சொல்லுகிறார். 'என்னில்' 'உள்ளே' என்கிறார் இயேசு.

யோவான் 14,15-ம் அதிகாரங்களில் 31 முறையும்; எபேசியர் நிருபத்தில் அப். பவுல் 104 முறையும் 'உள்ளே' என்கிற வார்த்தையை உபயோகிக்கிறார்கள். புதிய உறவு உள்ளான உறவு இது ஒருவரிலுள்ள ஜீவனை மற்றவர்களுக்குள் செல்லும்படியான ஜீவன் என்னையல்லாமல் அல்லது என்னைவிட்டுப் பிரிந்து அல்லது என்னிலிருந்து துண்டிக்கப்பட்டுப் போன பின்பு நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது [யோ. 15:5]. அதாவது ஒன்றுமே உங்களால் கூடாது. ஆகையால் 'உள்ளே' நிலைத்திருங்கள் "என்னில் நிலைத்திருங்கள்" ஒரு புதிய நிலைமை "என்னில்"

இரட்சிக்கப்படாத எந்த மனிதனும் ஆதாமுக்குள்ளே இருக்கிறான். ஒருவன் மறுபடியும் பிறக்கும்போது அவனைத் தேவன்

கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனுகக் காண்கிருர். கிறிஸ்துவுக்குள் இருந்தால் கனி உண்டாகும். "பரஸ்பரம் சார்ந்திருந்தால்" நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் யோ. 15: 4,5,8 என்ற இந்த உபதேசம் தெளிவாயிருக்கிறது. நாம் கொடிகளைப் போலிருப்பதால் நம்மில் ஜீவன் இல்லை என்றும், ஜீவனுக்காக நாம் முழுவதும் அவர் மேல் சார்ந்திருக்கிறோம் என்றும் சொல்லுகிருர். எல்லாம் அவருக்குள்ளே தான் உண்டு. ஆகவே நாம் அவரில் நிலைத்திருந்து, அவரிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும்; அவரும் நம்மேல் பூரணமாய்ச் சார்ந்திருக்கிறார். இது நமக்கு பிரமிப்பை உண்டாக்குகிறது.

திராட்சை பழங்கள் செடியிலல்ல, சதா கொடியில்தான் வளருகின்றன. தம்முடைய ஜீவனை வெளிப்படுத்த அவர் பூரணமாய் நமது பேரிலே சார்ந்திருக்கிறார். இதை நாம் கவனிக்கையில் அவருடைய பெருந்தாழ்மையும், தம்முடைய பெரும் உத்திரவாதமும் வெளிப்படுகிறதல்லவா. புதிய ஏற்பாட்டின் ஜீவியம் பிரயாசையில்லாத ஜீவியம். மின்சார பல்பு ஒளி பிரகாசிக்கப் பிரயாசப்படுகிறதில்லை. அப்படியே கொடியும் கனி கொடுக்கப் பிரயாசப் படுகிறதில்லை. நான் என்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்கப் பிரயாசப்படுக் கொண்டிருக்கிறேனா அல்லது நிலைத்திருந்து கொண்டிருக்கிறேனா என்ற கேள்வியில், கிறிஸ்தவ ஜீவியத்தின் மெய்யான சோதனை அடங்கியிருக்கிறது. மின்சார பல்பும், திராட்சைக் கொடியும் பிரயாசப்படவேண்டிய அவசியமே இல்லை; ஏனென்ருல் இரண்டும் தீர்ந்து போகாத ஜீவன், தங்களுக்கு வேண்டிய ஜீவனை அவைகள் இழுத்துக் கொள்ளுகின்றன. அவருடைய ஜீவன் என் மூலமாய் வழிந்தோட, நான் தடையில்லாத வாய்க்காலாக இருக்கவேண்டும் அவ்வளவுதான்.

(தொடரும்)

"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக."

(கொலோ. 2:6,7).

உயர்வும், தாழ்வும்

ஒவ்வொரு மனிதனும், தான் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்; உயரவேண்டும் என்று நினைக்கிருன். நல்ல எண்ணம் தான். ஆனாலும் அவன் நினைக்கிறதுபோல அவனுல் உயர்வடைய முடியவில்லை. காரணம், மனிதனுடைய வாழ்க்கையில் அதை நிர்ணயிப்பது இறைவனே. ஒருவனுடைய உயர்வும், தாழ்வும் இறைவன் கையில் ... தாழ்த்தவும், உயர்த்தவும் அவராலே ஆகும். அவர் தமது சித்தத்தின்படி கிரியை செய்கிருர். ஆயினும் அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சஞ்சலப்படுத்துகிறதில்லை (புல. 3:33). மனிதனை தன்னை உண்டாக்கிய தேவனுக்கு அடங்கி, கீழ்ப்படிந்து நடக்கும்போது மென்மேலும் உயர்த்தப்படுகிறான். "தன்னைத் தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்

படுவான்'' என்று இயேசு நாதர் சொல்லியிருக்கிறார் [லூக். 14:11]. நாம் உயர்த்தப் படுவதற்கு, முதற்க்கண் நம்மைதாமே தாழ்த்தவேண்டும். நம்முடைய செயல் பாடுகளே, பழக்க வழக்கங்கள் இவையெல்லாம் இயேசுகிறிஸ்துவை மாதிரியாகக் கொண்டு அமைய வேண்டும். நாம் எடுத்துக் கொண்ட தலைப்பின் பின்பகுதியைப் பற்றி முதலாவது பார்க்கலாம்.

இதிலே இயேசுகிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, சிலுவையின மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் பிதாவாகிய தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை [கிறிஸ்துவை] உயர்த்தினார் என்று எழுதப்பட்டுள்ளது. நம்முடைய ஆண்டவர், நாம் பாவ மன்னிப்பு பெற்று இரட்சிக்கப்படுவதற்காக பரலோகத்திலிருந்துஇறங்கி,இப்பூலோகிற்கு வந்தார். அதற்காக அவர் சிலுவையில் இரத்தம் சிந்தி மரிக்க நேரிட்டது. இவ்விதமாக அவர் தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆகவே அவர் உயர்த்தப்பட்டார். எனவே இன்று நாமெல்லோரும் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாக இருக்கும் பேறுபெற்றுள்ளோம். நாமும் நம்மை இறைவனுக்கு முன்பாக, பெற்றோருக்கு முன்பாக, பரிசுத்தவான்களுக்கு முன்பாக, பெரியோர்களுக்கு முன்பாக தாழ்த்துவோமாக. அப்பொழுது, நாம் மெய்யாகவே இறைவனால் உயர்த்தப்படுவோம் [யாக். 4:10].

தன்னை உயர்த்தினவன் தாழ்த்தப்பட்டான் (சாத்தான்):-

தலைப்பு வசனத்தின் முன்பகுதியைப் பற்றி இங்கே விபரமாக காண்போம். இங்கே ஒரு தூதனைப்பற்றி படிக்கப்போகிறோம். தேவன் ஒரு தூதனை சிருஷ்டித்தார். அந்தத் தூதனுடைய பெயர் லூசிபர். காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருபாக இருந்தான். தூதர்களின் ஒரு கூட்டத்தை ஆராதனை செய்யும் முக்கியமான தூதனாக தேவனால் ஏற்படுத்தப்பட்டான் [எசே. 28:14]. அவன் ஒரு சிருஷ்டிதான். அந்த சிருஷ்டியாகிய லூசிபர் ஒரு நாள் தனக்குள் பெருமை கொண்டு, தன்னைத் தேவனுக்கு மேலாக உயர்த்தப்பட்டு, "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வட புறங்களிலிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமான வருக்கு ஒப்பாவேன என்றும்'' தன் இருதயத்தில் சொன்னான் அதன் விளைவு, அந்தோ! பரிதாபம், அவன் தேவ சந்நிதியிலிருந்து துரத்திவிடப்பட்டு, கீழே அதாளமான பாதாளத்திலே தள்ளப்பட்டான். (ஏசா. 14:12-15). அது முதல், விழுந்து போன அந்த தூதனுக்கு சாத்தான் என்ற பெயர் வழங்கலாயிற்று. "உயர உயர பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாகுமா"? அது போல சிருஷ்டியானது ஒருபோதும் சிருஷ்டிகர்த்தருக்கு ஒப்பாக முடியாது. தேவன், சாத்தானுக்காகவும், அவனைச் சேர்ந்தவர்களுக்காகவும் நரகத்தை நியமித்தார்.

நம்மிலும்கூட சிலருக்கு தங்களுடைய வசதி, படிப்பு, திறமை, மொழி, ஊர், ஆவிக்குரிய வரங்கள், அறிவு இவற்றைக் குறித்துப், பெருமையுண்டு. ஆனால் நாம் இனிமேல் அவ்விதம் செய்யாமல், அவற்றை இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கென்று உபயோகிப்போமாக. ஏனெனில் "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'' [1 பேது 5:5; யாக். 4:6]. "எபிரெயு, கிரேக்கு, இலத்தீன மொழிகள் உனக்குத் தெரிந்தால், அதை பிலாத்துவைப்போல் கிறிஸ்துவின் சிரசுக்கு மேல் வைக்காமல், அவர் காலடியில் வைத்துவிடு'' யோ. 19:19-22 என்று வேல்ஸ்நாட்டு முதுமொழி ஒன்றுண்டு. ஆகவே நாம் ஒருபோதும் பெருமைக்கு இடங்கொடாமல், மனத்தாழ்மையாக நடந்து கொள்வோமாக.

உலக வாழ்க்கையில் சாதாரணமாக நடைபெறும் ஒரு சம்பவத்தைப்பற்றி இப்போது நாம் பார்க்கலாம். புதிதாக வீடு கட்டப்படுவதை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒரு வீடு கட்டப்படுவதற்கு முன்பாக, அந்த இடத்திலே ஆழமாகக் குழி தோண்டி (வானம் தோண்டுதல்) அஸ்திபாரம் போடுவார்கள். பின்னர் அதின் மீது படிப்படியாக கற்களையோ அல்லது செங்கற்களையோ வைத்து வீடு கட்டி எழுப்புவார்கள். அப்படியில் லாமல் காணப்படுகிற தரையின்மேல் நேரடியாக வீடு கட்ட மாட்டார்கள். அவ்வாறு கட்டினால் வீடு நிலை நிற்காது. ஆகவே ஒரு இடத்தில் வீடு கட்டப்பட்டு உயர்த்தப்படும் முன்பு, அந்த இடத்தைத் தாழ்த்துவார்கள். அதாவது அந்த இடத்தில் குழி தோண்டி, அங்கே காணப்படுகிற தேவையில்லாத மண்ணை அகற்றி விடுவார்கள். அதற்குப் பதிலாக, அந்தக் குழியில் கருங்கற்களை வைத்து சாந்து பூசி, திடமான அஸ்திபாரமிட்டு, வீடு கட்டுவார்கள். "மேன்மைக்கு முன்னானது தாழ்மை" என்று எழுதப்பட்டுள்ளது.

இதைப்போலவே, நம்முடைய ஆவிக்குரிய மாளிகையும் கட்டி எழுப்பப்படுகிறது. வேதவசனத்தைக் கொண்டு, நாம் நம்முடைய இருதயத்தை ஆழமாகத் தோண்டி அதில் காணப்படுகின்ற, "பொய், களவு, பொறாமை, வஞ்சகம், பெருமை, அசுத்தம், பொருளாசை, கீழ்ப்படியாமை, புறங்கூறுதல்" போன்ற பொல்லா குணங்களை வெளியேற்ற வேண்டும். பின்னர் அவைகளிருந்த இடத்தில், "நீதி, நியாயம், நேர்மை, இரக்கம் உண்மை, அன்பு, சாந்தம், சமாதானம், சந்தோஷம் பொறுமை, தயவு, விசுவாசம், மனத்தாழ்மை, நம்பிக்கை" ஆகிய நற்குணங்களால் நிரப்பி, கிறிஸ்துவின்மேல் அஸ்திபாரமிட்டு, தேவ ஆவியானவர் எப்போதும் வாசம்பண்ணத்தக்கதான தெய்வீக மாளிகையாக நம்முடைய வாழ்க்கையைக் கட்டி எழுப்பவேண்டும். தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் ஒருங்கிணைத்து, தேவாலயமாக, திருச்சபையாக கட்டி வருகிறார். அவருக்கே சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.

"ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்"
[1 பேது. 5:6].

வேத பாடம் [தொடர்ச்சி]

எண்ணாகமம்

எண். 27:1-5

எண். 27:1-5 ல் மனாசேயின் குமாரனாகிய மாகீரின் மகனான கிலேயாத்துக்குப் பிறந்த எப்பேரின் புத்திரனாயிருந்த செலொப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்களைப் பற்றிய சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது.

அந்த பெண்கள் தங்கள் தகப்பனாகிய செலோப்பியாத்தின் சுதந்திரத்தை கேட்க மோசேயினிடத்தில் சென்றார்கள்

மோசேயினிடத்திலும், ஆசாரியனாகிய எலெயாசாரிடத்திலும், சபையின் பிரபுக்கள் சபை அனைத்திற்கும் முன்பாக வந்து, எங்கள் தகப்பனுடைய சுதந்திரம் எங்களுக்கு வேண்டும்; எங்கள் தகப்பனுக்கு குமாரன் இல்லை, ஆனபடியால் அவருடைய குமாரத்திகளாகிய எங்களுக்கு அவருடைய சுதந்தரம் கொடுக்கப்பட, எங்கள் தகப்பனுடைய பெயர் இஸ்ரவேலின் கோத்திரங்களிலிருந்து அற்றுப்போகாமல் இருக்க, எங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தங்கள் தகப்பனுடைய சுதந்திரம் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டார்கள். இது ஒரு விசுவாசத்தின் அறிக்கையாக இருக்கிறது. விசுவாசத்தினால் அவர்கள் சுதந்திரத்தை கேட்கிறார்கள். இன்னும் இஸ்ரவேலர்கள் கானானுக்குள் போய் சேரவில்லை; யோர்தானைக் கடக்கவில்லை. தங்கள் தகப்பனும் இறந்து போய் விட்டார். ஆனால் அவர் கலகத்தாராகிய கோராகு கூட்டத்தோடு சேர்ந்து இறக்கவில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

தன் பாவத்தினால் இறந்தார்; அவருடைய பெயர் இஸ்ரவேலில் நிலைக்க எங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்று கேட்கிறார்கள். என்னே! அவர்களுடைய விசுவாசம், மனாசேயின் குடும்பத்தார் மனாசே மகன் மாகீரின் மகனான கிலேயாத்துக்கு பிறந்த எப்போரின் மகன் செலோப்பியாத்தின் குமாரத்திகள் விசுவாசத்தினால் சுதந்திரம் வேண்டும் என்று கேட்கிறார்கள்.

மோசே இவர்களுடைய வழக்கை தேவனிடம் கொண்டு சென்றார் [வசனம் 6-11]. தேவன் அவர்கள் சொல்லுவது சரியே; அவர்கள் தகப்பன் சுதந்திரத்தை அவர்களுக்கு கொடு என்று கட்டளையிட்டார். அதோடு சுதந்திர பாகத்தையும், சம்பந்தப்பட்ட புதிய சட்டங்களை தேவன் சொன்னார்.

1 செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு செலோப்பியாத்தின் சுதந்திரத்தை கொடு

2 இஸ்ரவேல் புத்திரர்கள் யாராவது குமாரர் இல்லாமல் மரித்தால் சுதந்திரம் குமாரத்திகளுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

3 மரித்த மனிதனுக்கு குமாரத்திகள் இல்லாவிட்டால், அந்த மனிதனுடைய சகோதரருக்கு அந்த சுதந்திரம் கொடுக்க வேண்டும்.

4 அந்த மனிதனுக்கு சகோதரன் இல்லாவிட்டால் அந்த மனிதனுடைய தகப்பனுக்கு அந்த சுதந்திரத்தை கொடுக்க வேண்டும்.

5 அவன் தகப்பனுக்கு சகோதரன் இல்லாவிட்டால் தகப்பனைக் [illegible] [[illegible]] உறவினருக்கு கொடுக்க வேண்டும்

6. இது இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயவிதி பிரமாணமாக இருக்கக்கடவது என்று கட்டளையிட்டார்

செலோப்பியாத்தின் குமாரத்திகளின் இருதயத்தில் சுத்தமான [illegible] [illegible] [illegible] அவர்கள் இன்னும் கானானுக்குள் போகவில்லை [illegible] [illegible] புத்திரருக்கு [illegible] போது, கானானை சுதந்தரிக்க செய்[illegible] [illegible]

[illegible]க்கு. யோசுவாவுக்கு கட்டளையிட்டிருக்கிறபடியினாலே, தங்களுக்கு சுதந்திரம் வேண்டு மென்று அவர்கள் இப்பொழுது கேட்டு பெற்றுக் கொண்டார்கள்; இதை விசுவாசத் தினால் பெற்றுக் கொண்டார்கள்

எண்ணா. 36ம் அதிகாரத்திலே அவர்களுக்கு அவருடைய சகோதரர், கோத்திரத் தார் நடுவிலே சுதந்திரம் வழங்கப்பட்டது என்று பரிசுத்த ஆவியானவர் எண்ணா 36ம் அதிகாரத்தில் குறிப்பிட்டு இருக்கிறார். எண்ணா. 36ம் அதிகாரத்திலே நாம் இவ்விதமாக வாசிக்கிறோம் (எண்ணா. 36:10-12) ஆனால் இந்த சம்பவம் நிகழ்ந்தது. அவர்கள் கானா னுக்குள் பிரவேசித்த பின்பு, செலொப்பியாத்தின் குமாரத்திகளுக்கு மனாசே கோத்திரத் தில் செலொப்பியாத்தின் சுதந்திரம் கொடுக்கப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம்.

யோசு. 17:3-4-ல் அவர்களுக்கு யோசுவா சுதந்திரத்தை கொடுத்தான் என்று பரி சுத்த ஆவியானவர் திட்டமாக எடுத்துக்காண்பித்துள்ளார்.

நாமும் நம்முடைய இருதயங்களை கர்த்தருக்கு பரிசுத்தப்படுத்த வேண்டும். நம் முடைய நம்பிக்கையை குறித்து, நாம் அடையப் போகிற சுதந்திரத்தை, பரலோகத்தை குறித்து, வாக்குத்தத்தங்களை குறித்து, நாம் பற்றிக் கொள்ளப்போகிற [illegible] குறித்து நாம் நம்பிக்கையுடையவர்களாய் நம்மிடத்தில் விசாரிக்கிறவர்களுக்கு [illegible] நாம் பதில் சொல்லக்கூடியவர்களாக இருக்க வேண்டும் (1 பேது. 3:15). [illegible] குறித்து [illegible] பேசுவேன் என்று [illegible] [சங் 119:46]. அப்படியே அப். பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் [illegible] (அப். 4:8). ஆனபடியினால் நாம் அடையப்போகிற சுதந்திரத்தைக் குறித்து திட்டமான விசுவாசம் நமக்கு இருக்க வேண்டும். அப்படி நாம் விசுவாசியாது இருதயத்தில் கர்த் தரைப் பரிசுத்தப்படுத்துவதாக. கேட்கிறவர்களுக்கும் நிதானமாக நாம் உத்தரவு சொல்லுவோம் [கொலோ. 4:6].

எண். 27 12-14

இதை தொடர்ந்து நாம் வாசிக்கிற இந்த பாகம் மோசேயின் வாழ்க்கையிலுள்ள கடைசி சம்பவமாகும் கர்த்தர் மோசேயை நோக்கி: அபாரீம் மலைகளில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் தேசத்தைப் பார். நீ அதைப் பார்த்தபின் உன் சகோ தரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனத்தாரோடே சேர்க்கப்படு வாய். ஜனசபை வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்திரத்தில் நீங்கள் [illegible] அந்த தண்ணீர் அவர்கள் கண்களுக்கு முன்பாக பரிசுத்தம்பண்ணாமல் [illegible] என் [illegible] மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்திரத்தில், காதேசிலுள்ள [illegible] மேரிபாவின் தண்ணீர் [illegible].

செலொப்பியாத்தின் [illegible] [illegible]

மோசே செய்த தவறை பரிசுத்தாவியானவர் இங்கே சுட்டிக் காட்டுகிறதாக நாம் பார்க்கிறோம். சிலர் நினைக்கிறார்கள்; கர்த்தர் மிகவும் அன்புள்ளவர், தயாளமுள்ளவர் ஆனபடியினால் தாங்கள் செய்கிற பாவங்களெல்லாம் மன்னித்துக் கொண்டே இருப்பார்; தண்டனை கொடுக்க மாட்டார் என்று சொல்லி எண்ணுகிறார்கள். அவர் அன்புள்ளவர், தயாளமுள்ளவர் என்பது சரிதான். ஆனால் அவர் பரிசுத்தரும், நீதியுள்ளவராகயிருக்கிறார். தன்னுடைய நீதியிலே அவர் எப்பொழுதும் கண்டிப்பாக இருக்கிறார்.

மோசே, ஆரோன் செய்த பாவம் பல தடவைகளில் அவர்களுக்கு ஞாபகமூட்டப்படுகிறது; அது வேதாகமத்திலும் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது; அப்படியே நாம் பார்க்கிறோம் [உபா. 3:23-28]. இங்கே மோசே கானான் தேசத்தைப் பார்க்கும்படி [illegible] கொண்டதாகவும், கர்த்தர் அதற்கு செவிகொடுக்க மறுத்துவிட்டதாகவும் [illegible] அப்படியே உபா. 32:48-52ல் மறுபடியும் ஞாபகப்படுத்தப்படுகிறது. அதனால் [illegible] தெளிவான கட்டளையை துணிகரமாய், வெளிப்படையாய் மீறுகிறவர்களுக்கு இங்கே கடும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது "நீ [illegible]" கர்த்தர் எல்லோருடைய இருதயங்களையும், அறிந்து அவர்களுடைய சூழ்நிலையையும் [illegible] அவர்களுக்கு [illegible] நெருக்கங்களையும் அறிந்திருக்கிறார் [illegible] கரமாய் தவறு செய்கிறவர்கள் அதற்கான தண்டனையை அடையாமல் தப்பமுடியாது என்று அறிந்து கொள்ளுகிறோம் மேலும் அவர்கள் செய்கிற பாவங்கள் அவ்வப்பொழுது ஞாபகப்படுத்தப்படும் [எண்ணா. 27:15-17].

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப்போல இராதபடிக்கு அந்த சபைக்கு முன்பாக போக்கும், வரத்துமாய் [illegible] அவர்களை போகவும், வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் அதிகாரியாக [illegible] வேண்டும் என்றார். மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு தகப்பனைப்போல [illegible] மிகப்பெரிய தலைவராகும். கர்த்தர் தான் நடத்துகிறார் என்றாலும், தேவனால் [illegible] குருக்கள் தேவை, [illegible] தேவை; [illegible]

[illegible]

கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சபை [illegible] இலக்குள் ஒழுங்காக பிரயாணப்பட்டு போய் சேர வேண்டிய இடத்தில் சேரும் என்று மோசே நன்றாக அறிந்திருந்தார். இந்த அறிவு, இன்றைய கிறிஸ்தவர்களுக்கு [illegible] அவசியமாகும். "தன்னைத்தான் நடத்துகிறவனை தகாதவர்கள் நடத்தப்படுகிறான்" என்று பொன்மொழி உண்டு. தகாதவிதம் என்றால் [illegible] நடத்தப்படுகிறான் என்று. ஆகவே நீ உன்னைத்தானே நடத்திக் கொள்ள முடியாது; நடப்பிப்பவர் வேண்டும் என்று பரிசுத்தாவியானவர் குறிப்பிடுகிறார் [எபி. 13:7,17,24] உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்கள் தேவை என்று குறிப்பிட்டு [illegible] அதற்காக நாம் தேவனை ஸ்தோத்திரிப்போமாக.

[illegible]

◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻

"விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்."
[எபி. 11:33]

◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻ ◻

[தாய்மார்களுக்கு]

மோசேயின் பெற்றோரின் விசுவாசம்

மோசே பிறந்தபோது அவனுடைய தாய் தகப்பனார் அவனை அழகான பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே ராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள் (எபி 11:23). [illegible]

[illegible]

சட்டங்களை [illegible] [illegible] பிள்ளைகளையெல்லாம் நதியிலே போடவும் பெண் பிள்ளைகளையெல்லாம் [illegible]

[illegible]

பெற்றோரை ஜனங்கள் எல்லோரும் வாழ்த்துவார்கள். ஆனால் இங்கே அப்படி வாழ்த்த முடியாத சூழ்நிலையில்தான மோசே பிறந்தார். அப்பொழுது அவர்கள் மனதில் "விசுவாசம்" கிரியை செய்தது.

எல்லா ஜனங்களும் தங்கள் ஆண் பிள்ளைகளை ராஜாவுடைய கட்டளைக்கு பயந்து நதியிலே போட்டிருப்பார்கள். ஆனால் இவர்களோ அந்த குழந்தையை குறித்து இதுவே இஸ்ரவேலை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவரப்போகிற குழநதை என்று கண்டு, அதை மூன்று மாதம் அதன் தாயாகிய யோகெபெத் யாத். 6:20 ஒளித்து வைத்தாள். அது மாத்திரமல்ல அவர்கள் இராஜாவினுடைய கட்டளைக்கு பயப்படவில்லை என்று எபிரெயர் நிருபத்தில் சொல்லப்பட்டுள்ளது [எபி. 11:23].

ஒரு குழந்தையை மூன்று மாதம் ஒளித்து வைப்பதென்றால் மிகவும் கஷ்டமான காரியம். அந்த வீட்டில் அவர்களுக்கு ஏற்கனவே மிரியாம், ஆரோன் என்னும் இரண்டு பிள்ளைகள் இருநதார்கள். மிரியாமுக்கு ஒரு எட்டு வயதும், ஆரோனுக்கு மூன்று வயதுமாய் இருந்தது. தேவன இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க இன்னும் 80 வருஷம் செல்ல வேண்டும் ஆனால் 80 வருஷம் கழிந்து நிச்சயமாய் தேவன் இஸ்ரவேலரை விடுதலையாக்குவார் என்று பூரண நம்பிக்கையும் விசுவாசமும் இந்த பெற்றோரின மனதில் பதிந்திருந்தது. ஜோசபஸ் எனகிற சரித்திர ஆசிரியர் "ஒரு தேவ தூதன் தரிசனத்தில் மோசேயின் பெற்றோருக்கு தோன்றி பிறந்த குழந்தைதான் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து [illegible] அழைத்து செல்லுவான்" என்று கூறினதாக எழுதியுள்ளார். [illegible] அதைப்பற்றி [illegible] வேதாகமத்தில் எதும் [illegible]

[illegible] இது முக்கியமான காரியம் [illegible] அவர்கள் அந்த [illegible] ஒளித்து வைத்து [illegible]

வளர்த்த விதமே. இபபொழுது மூன்று மாதம் முடிந்துவிட்டது. இனிமேல் அதை ஒளித்து வைக்க முடியாது என்று திட்டமாய் அந்த தாய் அறிந்தவுடன், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்கு பிசினும், கீலும், பூசி அந்த குழந்தையை அதில் வைத்து, எடுத்துக் கொண்டு சென்றாள். இதையெல்லம் அந்த சிறுமியாகிய மிரியாம் பார்த்துக் கொண்டிருந்தாள். நாது அம்மா நம் தம்பியை தண்ணீரில் போட போகிறார்கள், அதற்கு என்ன சம்பவிக்கப் போகிறது என்று பார்க்க கூடவே சென்றாள்.

அந்த நாணற்பெட்டியினுள் தண்ணீர் ஏறி, தன குழந்தை குளிரினால் வருந்தக் கூடாது என்றே அந்த தாய் அதற்கு பிசினும் கீலும் பூசினாள். அவள் அதை எடுத்துக் கொண்டு போய், ராஜாவினுடைய கட்டளைப்படி தண்ணீரில் போடவில்லை. ஆனால் அதற்கு மாறாக அதை நாணலுக்குள்ளே வைத்தாள். வைததுவிட்டு அங்கேயே அந்த அம்மா நிற்கவில்லை. ஆனால் அவர்கள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். அதையே ஸ்தேவன் தனது பிரசங்கத்தில் கூறும்போது "அவன் (மோசே) வெளியே போட்டுவிடப்பட்டபோது" (அப். 7:21) என்று எழுதுகிறார். அந்த அம்மா திட்டமாய் விசுவாசித்தார்கள். தன் குழந்தை எப்படியாவது காப்பற்றப்படும், தேவன தங்களை இரட்சிப்பார் என்று, கடைசியாக அந்த குழந்தை அதன சொந்த தாயாகிய யோகெபெத்திடமே திரும்ப வந்தது மிரியாமுடைய கிரியையும் இதிலே மிகவும் போற்றப்பட வேண்டியது.

பார்வோனுடைய குமாரத்தி [illegible] குழந்தையாகிய மோசேயை கண்டு [illegible] அழுதும் [illegible] குழநதை [illegible] சவுந்தரியமுள்ளதாய் [illegible] பார்வோனுடைய குமாரத்தி [illegible] நாணற்பெட்டியை [illegible] [illegible] கடந்து சென்று [illegible] [illegible] பேசி, [illegible]

னுடைய குமாரத்தியிடம் அழைத்துப் போனாள். பார்வோனுடைய குமாரத்தி அந்த குழந்தையை அதின் தாயாகிய யோகெபேதிடம் கொடுத்து "நீ இந்த பிள்ளையை எடுத்துக் கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு. நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன் என்றாள்" [யாத். 2:9]. ஆனால் யோகெபேதோ அந்த குழந்தையை கொண்டு போய் அதை தேவனுக்காக வளர்த்து விட்டாள். இனி அவனுக்கு எந்த பயமும் இல்லை யாரும் எதும் அவனை செய்ய முடியாது.

யோகெபேத் அம்மா தன் விசுவாசம் முழுவதையும் தனது குமாரனாகிய மோசேக்கு கூறிக் கொடுத்தாள். அதுமாத்திரமல்ல நாம் அடிமைத்தனத்திலிருக்கிறோம் என்பதை அவள் தனது குமாரனுக்கு போதித்தாள் சரியாக மோசேயின் இருதயத்தில் எல்லாவற்றையும் விதைத்து விட்டு அந்த தேவனே வளர செய்ய வேண்டும் என்று அவர் கையில் அந்த குழந்தையை ஒப்படைத்து அதை பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விட்டாள்.

மோசே பார்வோனுடைய அரமனையில் வளர்க்கப்பட்டபோதும் தான் ஒரு எகிப்தியன் அல்ல, எபிரெயன் என்பதை சரியாக உணர்ந்திருந்தார். அவர் எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவராயிருந்தபோதும், தேவ ஜனங்களுடைய துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டார் இதற்கெல்லாம் காரணம் அந்த அம்மாவுடைய பக்தி போதனையே.

லேவி கோத்திரத்தை எடுத்து பார்க்கும்போது சாப வார்த்தை கூறியிருந்தபோதும் தேவன் லேவி கோத்திரத்திலிருந்து

தயவு செய்து கவனிக்கவும்

1. உங்கள் விலாசம் மாறும்போது, புதிய, பழைய விலாசத்தை எழுதுங்கள்.

2. சந்தா அனுப்புகிறவர்கள், பழைய சந்தாவா, புதிய சந்தாவா என்று எழுதுங்கள்.

3 சந்தா பணம் M.O, D.O அனுப்புகிறவர்கள் உங்களுடைய சந்தா எண்ணை, விலாசத்தை இரண்டையும் எழுதுங்கள்

4. உங்கள் முகவரி, சந்தா எண் எல்லாவற்றையும் தெளிவான எழுத்துக்களில் எழுதுங்கள்; இவைகளை செய்து, இந்த ஊழியம் வளர உதவியுங்கள்.

மோசேயை எழும்பச்செய்து இஸ்ரவேலருக்கு பிரமாணங்களையும், கட்டளைகளையும் கொடுத்தார் நாமும் நமது பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே "விசுவாசம்" என்னும் வித்தை விதைப்போம். அப்பொழுது அது பிற்காலத்தில் வளர்ந்து கனி கொடுக்கும்.

சுருக்கமாக சொல்வதாயின் ஒரு விசுவாச பெற்றோரின் செய்கை ஒரு சந்ததியையே அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கிற்று மோசே, ஆரோன், மிரியாம் என்னும் தலைவர்களை உருவாக்கிய அந்த தாய்க்கு பரலோகத்தில் இடம் கிடைத்தது போல் பூலோகத்திலும் அவர்கள் பெயர் மங்காமல் நிலைபெற்றிருக்கிறது. நாமும் ஒரு பக்தியுள்ள சந்ததியை உருவாக்குவோமாக! நாம் கிறிஸ்துவினுடையவர்கள் என்பதை பிள்ளைகளுக்கு போதிப்போமாக!!

"மோசே பிறந்தபோது — [illegible] மாதம் ஒளித்து வைத்தார்கள்"

(எபி. 11 23).

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

3 லுத்தர் எர்ப்புற் சர்வ கலா சாலையில் கல்வி கற்றது.

லுத்தருக்கு 18 வயதானபோது, அவர் தகப்பனார் சற்று நல்ல ஸ்திதியில் இருந்தார்; அவரை எர்புர்ற் கலாசாலையில் கல்வி கற்பதற்கு அனுப்பக் கூடியவராய் இருந்தார். அக்காலத்திலிருந்த [illegible] கலாசாலைகள் எல்லாவற்றிலும் எர்புர்ற் கலா சாலை மகா முன்னேற்றமடைந்து [illegible] பெற்றதாயிருந்தது. [illegible] [illegible]தாவில் 1501ம் வருஷம் லூத்தர் தத்துவ [illegible] [illegible], இலக்கியமும், கற்கும் [illegible] [illegible] [illegible]

அவர் 20-ம் வயதில் சத்திய வேதப் புஸ்தகத்தை அப்புஸ்தக சாலையில் முதல் விசையாக திறந்து வாசித்து, அதின் பெயரில் பேர் ஆவல் கொண்டு அதை புரியபோடும், ஆவலோடும் வாசித்தார். அப்புஸ்தகத்தில் தாம் நினையாத அநேக விஷயங்களைக் கண்டார். அன்னாளையும், பாலிய சாமுவேலை பற்றிய சரித்திரத்தைக் கண்டு மிகுந்த சந்தோஷத்தோடு வாசித்து [illegible] இப்படிப்பட்ட புஸ்தகம் [illegible] வேண்டும் என்று விரும்பினார். 1505-ம் வருஷம் ஜனவரி மாதம் கலாநிபுதி [illegible] என்று சிறந்த வித்தியா [illegible] பெற்றார். அச்சமயத்தில் [illegible] [illegible] திடீட்டுப்போடு [illegible] [illegible] அத்தாட்சிகளையும் [illegible] [illegible] [illegible]

[illegible]

லாமல் சர்வ கலாசாலை மாணக்கருக்கும் தத்துவ சாஸ்திரம் அரிஸ்டோட்டலின் நீதி சாஸ்திரங்களையும் கற்பித்தார். 1505-ம் வருஷம் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையின் விடுமுறை நாட்களில், பெற்றோரிடம் பிரயாணம் போகையில் அவருக்கு ஓர் ஆபத்து நேரிட்டது. அக்காலத்து மாணாக்கருடைய வழக்கப்படி அவர் இடையில் கட்டி தொங்கின பட்டயம் நடுவழியில் தற்செயலாய் அவர் தொடையில், இரத்த குழலில் ஒன்றை வெட்டிவிட்டது. அவருடைய தோழர்கள் ஒரு ரண வைத்தியனை அழைக்கும்படி ஓடிவந்த சமயத்தில், மல்லாக்காக படுத்துக் கொண்டு, காயத்தில் தம் பெரு விரலால் அழுத்தி, இரத்த ஓட்டத்தை நிறுத்திக் கொண்டு வியாகுலமும், திகிலும் நிறைந்தவராய் ஓ! பரிசுத்த கன்னி மரியம்மாளே எனக்கு ஒத்தாசை செய்யும் என்று ஜெபித்துக் கொண்டிருந்தார்.

இந்த காயத்தினால் அவர் படுக்கையிலிருந்த நாட்களில் வீணை வாசிக்க கற்றுக் கொண்டார். இதனால் அவர் தோழர்கள் அவருக்கு வாத்தியக்காரர் என்று பட்டப் பெயர் இட்டார்கள். அவர் எர்ப்புற் நகரத்தில் இருந்த காலத்தில், சர்வ கலாசாலை அங்கத்தினர் வழக்கப்படி பல சங்கக்காரரோடு கூட்டுறவு செய்ய நேரிட்டது. அச்சங்கங்களில் பூர்விக சிறந்த இலக்கிய, இலக்கண நூல்களில் பாண்டித்தியம் அடைந்த பாச நுபுணர்கள் அல்லது பாவலர் என்பவர்களாகிய சங்கம் ஒன்றிருந்தது. அச்சங்கத்தாருடைய நீதி, நெறி, சன்மார்க்க போதகங்களெல்லாம் அவர்கள் ஆராய்ச்சி செய்து பாண்டித்தியமுடைய பூர்விக கிரேக்க, ரோம, அஞ்ஞான நூல்களின் மாதிரியையே பின்பற்றி இருந்தபடியால் அவர்கள் எதேச்சியாய் துன்மார்க்கத்தில் நடந்தார்கள்.

அக்காலத்து மாணாக்கர் பெரும்பான்மையோர் இப்படிப்பட்டவர்களாயே இருந்தார்கள். ஆனால் லூத்தர் மாணாக்களிலிருந்த [illegible] எல்லாருக்கும் [illegible]யாக சன்மார்க்க ஜீவியம் செய்தபடியால் அவர் அப்படிப்பட்ட துன்மார்க்கத்திலிருந்து விலகி நல் மாதிரியாய் நடந்தார் என்றாலும் அவர் எவ்வளவு கல்வி நாட்டமடைந்து சன்மார்க்க ஜீவியம் செய்தும் கிறிஸ்துவை தம் இரட்சகர் என்னும் விசுவாசத்தினால் உண்டாகும் மன சமாதானத்தை அவர் இனனும் அடையாமல் இருந்தார். வித்தியா பண்டித் அடையவில்லை. வித்தியா பண்டிதராகிய லூத்தர் கிறிஸ்து தான் தம் இரட்சகர் என்று அறியாதிருந்தார்.

4. லூத்தரின் சன்னியாசம்:-

அக்காலத்தில் தேவனுக்கு ஊழியம் செய்து இரட்சிப்படைவதற்கு மகா உசிதமான வழி சன்னியாசமே என்று எண்ணினார்கள். சன்னியாசியாக வேண்டும் என்கிற விருப்பமும், எண்ணமும், லூத்தருக்கு பெற்றோர் வீட்டிலிருக்கும்போதே தொடங்கி அவர் எர்ப்புற் நகரத்திற்கு திரும்பின போது முடிவும், உறுதியுமான தீர்மானமாயிற்று. அவர் பெற்றோரிடமிருந்து திரும்பி வரும் வழியில் பயங்கரமான புயல் காற்று எழும்பி அவர் காலண்டை ஒரு பலத்த இடி விழுந்தது. அப்போது அவருக்கு பயமும், திகிலும் பிடித்தது. தேவ கோபாக்கினை பற்றி எரிந்து அந்த இடி அவர் சரீரத்தின் மேல் விழுந்து அவர் உயிர் விட்டிருந்தால் தேவ நியாயாசனத்திற்கு முன்பாக அவர் என்ன நியாயம் சொல்லுவார். வியாகுலம் நிறைந்த அந்நேரத்தில் பரிசுத்த அன்னமாளே எனக்கு ஒத்தாசை செய்யும்; நான் உடனே சன்னியாசியாகிறேன் என்று கதறி பயபக்தியோடு பிராத்தனை செய்தார்.

சன்னியாசியாகிறேன் என்று பொருத்தனை செய்து விட்டார். ஆனால் பிறகு அதற்காக விசனப்பட்ட போதிலும், அதை நிறைவேற்றுவது தம் கடமையென்று அறிந்துணர்ந்தார் 1505ம் வருஷம் [illegible] மாதம் 15ம் தேதி இரவு [illegible]

கெல்லாம் தம் பிரிவை முன்னிட்டு ஒரு சந்தோஷகரவிருந்தளித்து தம் தீர்மானத்தை அவர்களுக்கு வெளியிட்டபோது எல்லாரும் திடுக்கிட்டார்கள். பரிசுத்த அலேக்சியுஸ் நாளாகிய அடுத்த தினத்தில் அவர்கள் அவரோடு ஊர்வலம் செய்து அகுஸ்தீன் சன்னியாச மடத்திற்கு வந்தபோது, வாசல் கதவுகளை சாத்தி அவர் உள்ளே நுழைய மடத்தார் இடங்கொடுத்ததால் அவர் மிகவும் சந்தோசம் அடைந்தார்.

அவர் கவிஞரான ஆசிரியர்களாகிய பிலாட்டுஸ், வெர்ஜில் என்பவர்களுடைய நூல்களை எடுத்துக் கொண்டு போயிருந்தார். அவர் இச்சம்பவத்திற்கு பிறகு உடனே தம் தீர்மானத்தை பெற்றோருக்கு தெரிவித்து, அவர்களுடைய சம்மதத்திற்காக கெஞ்சி கேட்டார். அவர் தகப்பனுடைய எண்ணங்களெல்லாம் வேறாய் இருந்தபடியால், அவர் மெத்த விசனமடைந்து தடை சொன்னார். அவருக்கு சன்னியாசத்தின் பேரில் சிறிதும் நம்பிக்கையில்லை.

தம் மகன் லௌகீக உத்தியோகம் பெற்று உயர்ந்த பதவியடைந்து, உயர்ந்த குடும்பத்தில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்கிற எண்ணம், நம்பிக்கை யெல்லாம் [illegible]. அவர் தம் மகனை [illegible] மடத்திலிருந்தும், தீர்மானத்திலிருந்தும் [illegible] வேண்டும் என்று [illegible] ஒரே பிடிவாதமாய் [illegible]. ஒரு பக்கத்தில் [illegible] தகப்பனை [illegible], சமாதானப்படுத்துவது அசாத்தியமாய் இருந்தது; மறுபக்கத்தில் லூத்தர் இளைஞராய் இருந்தும் அவர் கொண்ட நோக்கத்தை விட்டு திரும்புவது முடியாத காரியமாய் இருந்தது.

[illegible]

உலக மகிமையும், மகத்துவமும் பெற்றோருடைய விருப்பமும் பிரதானமானவைகளாக லூத்தருடைய புத்திக்கு புலப்படவில்லை. சன்னியாசத்திலே தான் தேவ கிருபையை அடையலாம் என்கிற நம்பிக்கையே அவர் உள்ளத்தில் பலமாய் வேலை செய்தது. அகஸ்தீயனியரின் மடங்களில் சன்னியாசம் பெற விரும்புவோர், ஒரு வருஷகாலம் பரீட்சா நிலையில் இருக்க வேண்டியது. ஆனால் லூத்தர் அவ்வளவு காலம் காத்திருக்க அவசியமிருந்தது இல்லை.

ஆகையால் 1505ம் வருஷம் முடிகிறதற்கு முன் அவர் அகஸ்தீயனியரின் மடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு தமக்கு பெயராக அகஸ்டின் என்னும் நாமத்தை தெரிந்து கொண்டார். அவர் உடன் சன்னியாசிகளாகிய சகோதரர் தமக்கு விதித்த இழிவான வேலையை எல்லாம் வெகு பணிவாய் செய்தார். ஆனால் சர்வ கலாசாலையார் லூத்தர் சன்னியாசியான போதிலும் அவர் இன்னும் சர்வ கலாசாலையின் அங்கத்தினராக எண்ணினபடியால் அவருக்கு இழிவான வேலையை விதிக்கக் கூடாது என்று அவர்கள் தடை செய்தார்கள். ஆகையால், அதற்கு பிறகு லூத்தர் மரியாதையாக நடத்தப்பட்டார்.

கர்த்தருடைய ஜெபத்தையும், [illegible] மரியாளுக்கு ஜெபங்களையும் மடத்தார் விதித்த இலக்கப்படி [illegible] பக்தியாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பார். அது புண்ணியம் என்றும் அதினால் தேவ சந்தோஷத்திற்கு [illegible] என்கிற நம்பிக்கையோடே [illegible] செய்தார். பசியினால் சோர்ந்து, [illegible] அடைபட்டு நீண்ட நேரம் உபவாசிப்பார், [illegible] அடிக்கடி உபவாசித்தார் [illegible] இப்படி செய்வதனால் [illegible].

[illegible]

டைய தராசில் தாம் இன்னும் குறைந்திருக்கிறதாக உணர்ந்தார். நூதனமான தபசு முறைகளைக் கண்டு பிடிக்க தம் எல்லா யுக்தியையும் உபயோகித்தார். இதைப்பற்றி அவர் சொல்லுகிறதாவது, தேவ சமாதானம் அடையும்படி மரண பரியந்தம் தம்மை வதைத்து கொண்டேன். ஆனால் அதை, நான் இன்னும் இருளில் இருந்ததாக உணர்ந்தேன். சன்னியாசத்தால் ஒருவன் மோட்சம் அடைவானாகில் நானும் அடைந்திருப்பது நிச்சயம் என்பதே.

மனச்சாட்சியினால் உண்டான சந்தேகத்தினால், அவர் அடிக்கடி தனிப் பாவசங்கீர்த்தனம் செய்து வெளியே வரும் பொழுதே எல்லாப் பாவங்களையும் அறிக்கையிட்டாரோ இல்லையோ என்னும் சந்தேகத்தோடும் தம் அறைக்குள் வந்து அவநம்பிக்கையினால் சோர்வுற்று தடுமாறும் கொள்வார். ஒரு நாள் விருத்தாப்பிய சன்னியாசி ஒருவர் சிநேகிதனே நீ விசுவாசப் பிரமாணத்தால் பாவமன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன் என்கிற அருமையான வார்த்தைகளை உண்மையாய் விசுவாசித்து கெட்டியாய் பிடித்துக் கொள் என்று சொன்னார். இது லூத்தருக்கு ஆறுதல் அளித்தது. அக்காலத்தில் அகஸ்தீனியர் மடத்திற்கு பிரதிநிதியாய் இருந்த ஸ்செவ்பிச் சாஸ்திரியார் செய்த புதுச் சட்டங்களில் ஒன்றை எல்லா சன்னியாசிகளும், சத்திய வேதத்தை வாசிக்க வேண்டுமென்று விதித்தது. ஆகையால் லூத்தர் சன்னியாச மடத்துக்குள் நுழைந்தபோது அவருக்கு ஒரு சத்திய வேதாகமம் கொடுக்கப்பட்டது.

லூத்தர் சத்திய வேதாகமத்தை அவலோடும் அதிக சந்தோஷத்தோடும், வாசித்தும்; அது அவருக்கு ஒரு புதை பொருளாகவே இருந்தது. காரணமென்னவென்றால் பாபபு மார்க்கத்தின் போதகங்களில் அவர் முழுவதும் ஊறிப்போய் குருட்டாட்டம் அடைந்திருந்தது. சக்சோனியா நாட்டின் நேபோகம் பிரபுவாகிய ஞானி என்றழைக்கப்பெற்ற பிரதரிக் என்பவரால் மிக மதிக்கப்பட்டவரும், விதன் பேர்கி சர்வ கலாசாலையை ஸ்தாபித்த பிரதரிக் பிரவுக்கு மெத்த உதவியாய் உதவி புரிந்தவருமாகிய ஜோபிஸ் சாஸ்திரியார் லூத்தருக்கு வெகு அருமையான ஆலோசனைகளை அடிக்கடி புகட்டி வந்தார்.

(தொடரும்)



உன் வஸ்திரம் எப்படி?

"ஆடையில்லாத மனிதன் அரை மனிதன்" என்பது பழமொழி அதாவது குறைந்த அறிவுள்ளவன் என்பது பொருள். உலக தொடர்பில்லாத தீவுகளிலும், காடுகளிலும் அறிவு வளர்ச்சியில்லாத நாகரீகமற்ற ஆதிவாசிகள் ஆடையணியாமலிருக்கிறார்கள். ஆடை அணியாவிட்டால் மனிதனுக்கும், மிருகங்களுக்கும் வித்தியாசம் [illegible] அறிவு வளர்ச்சியுள்ள மனிதர்களும் சரியானபடி தன் நிர்வாணத்தை மறைக்காமல் அரைகுறையாக ஆடைகளை நாகரிகம் என்று அணிகிறார்கள்.

நிர்வாண சாமிகள் என்று, சிலர் மிருகங்களைப்போல பைத்தியக்காரர்களாய் சமுதாயத்தில் காணப்படுகிறார்கள். ஒருவனுடைய உடை, நடையை வைத்து அவன் எப்படிப்பட்டவன் என்று நிதானித்து விடலாம். "அகத்தின் அழகு முகத்தில் தெரி

யும்''. இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளும் இவ்வுலக நாகரீகத்தில் இழுக்கப்பட்டு அநாகரீகமான வஸ்திரங்களை அணிய ஆரம்பிக்கிறார்கள். புற ஜாதியின் மார்க்கத்தை கற்றுக் கொள்ளாதிருங்கள் என்று வேதம் கூறுகிறது (எரே. 10:2; உபா. 18:9). ஆண்கள் வஸ்திரத்தை பெண்கள் அணிவதும், பெண்கள் வஸ்திரத்தை ஆண்கள் அணிவதும் பாவமாகும் [உபா. 22:5].

உன் வஸ்திரம் எப்பொழுதும் வெள்ளையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக [பிர. 9:8] என்று வேதத்தில் வாசிக்கிறோம். ''கந்தையானாலும் கசக்கி கட்டு; கூழானாலும் குளித்துக் குடி'' என்பது பழமொழி. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் சுகாதாரத்துடன் ஜீவனம் பண்ண வேண்டும். வஸ்திரங்களை நன்றாக துவைத்து சுத்தமாக அணியவேண்டும். ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் நாம் சுத்தமாக இருக்க வேண்டும். எப்பொழுதும் வெண் வஸ்திரம் தரிக்க வேண்டுமென்பதல்ல. சுத்தமான கலர் வஸ்திரம் வீடுகளிலும், உலக வேலைக்கு போகிற போதும் அணியலாம். ஆராதனைக்கு, ஆலயத்திற்கு செல்லும் போது பெரும்பாலும், வெண் வஸ்திரம் அணிவது நல்லது.

பள்ளிக் கூடப்பிள்ளைகள் சீருடை அணிவதுபோல வெண் வஸ்திரம் எல்லோருக்குள்ளும் சமத்துவத்தையும், தேவபக்தியையும், ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்ற வேற்றுமையில்லாத படி ஒருமனத்தையும், ஒற்றுமையும் உண்டாக்குகிறது (வெளி. 3:17,18,4,5). வெண் வஸ்திரம் அணிவது, நாம் தேவபக்தியுள்ளவர்கள் என்பதை மற்றவர்களுக்கு காண்பிக்கும் சாட்சியாக இருக்கிறது (1 தீமோ. 2:9,10). அநேகர் வெண் வஸ்திரம் அணிய வெட்கப்படுகிறார்கள்; நாம் வெட்கப்பட்டால் தேவனும் நம்மைக் குறித்து வெட்கப்படுவார் (மாற். 8:28).

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் பரலோக ராஜ்யத்தின் பிள்ளைகளாக இருக்கிறோம். தூதர்களுடைய வஸ்திரம் வெண்மையாக இருக்கிறது [மத். 28:3; வெளி. 19:14]. பரலோகத்தில் பரிசுத்தவான்களுக்கும் இரத்த சாட்சியாய் மரித்தவர்களுக்கும் வெண் வஸ்திரம் கொடுக்கப்படுகிறது (வெளி. 7:9-14; 6:9-11). இருபத்து நான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரம் அணிந்து இருக்கிறார்கள் [வெளி. 4:4]. ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாக அழைக்கப்பட்டிருக்கிற நாமும் வெண் வஸ்திரம் தரித்து நம்மை அலங்கரிக்க வேண்டும் (வெளி. 19:8).

தேவனுடைய ஊழியக்காரர்கள் ஏற்ற வஸ்திரம் அணிய வேண்டும். சில பாஸ்டர்கள், ஊழியர்கள் என்று சொல்லிக் கொண்டு ஹிப்பிமாதிரி டிசைன் டிசைனாக வஸ்திரம் போட்டுக் கொண்டு பிரசங்க மேடையில் பிரசங்கம் பண்ணுகிறார்கள். இவர்கள் தேவனுடைய ஆவியினாலே நிரப்பப்பட்டவர்கள் தானா? ''நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி, உன் பாதரட்சையை கழற்றிப்போடு'' என்று முள் காட்டில் மோசேயினிடத்தில் கர்த்தர் கட்டளையிடவில்லையா? [யாத். 3:2-5] இவர்கள் எந்த ஆவியினால் நடத்தப்படுகிறார்கள் என்று அவர்களின் கிரியைகளினாலேயே அறிந்து கொள்ளலாம்.

போலீஸ்காரர்கள், சப் இன்ஸ்பெக்டர், டிக்கட் பரிசோதகர், கண்டக்டர், டாக்டர், நர்ஸ் என்று ஒவ்வொருவருக்கும் வேலைக்கு ஏற்ப அணியக் கூடிய வஸ்திரம் உண்டாயிருக்க, உன்னத தேவனுடைய ஊழியர்களுக்கு ஆராதனை ஸ்தலத்தில் அணிய தனிப்பட்ட வஸ்திரம் தேவையல்லவா? ஆசாரியனான ஆரோனுக்கு பரிசுத்த வஸ்திரம் அளிக்கப்பட்டதே [யாத். 28:2-4; 39 1-5; 27-29]. தேவனுடைய ஊழியக்காரன் என்று சாட்சியாக வஸ்திரம் அணிய வேண்டும். உதவி ஊழியக்காரர்களும் சோதிக்கப்பட்டு குற்றஞ்சாட்டப்படாதவர்

களானதும் ஊழியர் வஸ்திரம் அணிந்து கொள்ள வேண்டும் [1 தீமோ. 3:10; வெளி. 3:4]. ஒரு சிலர் வெளியில் ஊழிய வஸ்திரம் அணிவதற்கு வெட்கப்படுகிறார்கள். ஒரு ஊழியக்காரருக்கு, கர்த்தர் ஒரு தரிசனம் கொடுத்திருக்கிறார். அதாவது அவர் சாதாரண உடையில் பஸ்சில் பயணம்பண்ணி வருவதாகவும் அப்பொழுது தீமை செய்பவர் தோன்றி உன் இராஜவஸ்திரம் எங்கே? என்று கேட்பதாகவும் தரிசனம் கண்டு விழித்திருக்கிறார். உண்மையிலேயே நாம் ராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருக்கிறோம் [வெளி 5:10]. ஆகவே இது ராஜ வஸ்திரம் தான். ஆகவே நாம் தைரியமாக எல்லா இடங்களிலும் இராஜ வஸ்திரம் அணிய வேண்டும்.



FORM IV

(See Rule 8)

1.	Place of Publication	:	Bombay
2.	Periodicity of its publication	:	Monthly
3.	Printer's Name	:	Chief Pastor: N. LAZAR
	(Whether citizen of India?	:	YES
	(if foreigner, state the country of origin)		
	Address	:	Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Bombay-400 078
4	Publisher's Name	:	Chief Pastor: N LAZAR
	(Whether citizen of India?)	:	YES
	(if foreigner, state the country of origin)		
	Address	:	Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Bombay-400 078
5	Editor's Name	:	Chief Pastor: N. LAZAR
	(Whether citizen of India?	:	YES
	(if foreigner state the country of origin)		
	Address	:	Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Bombay-400 078
6	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital	:	New Jerusalem Church Church Lane Tilak Nagar, Darga Road Bhandup, Bombay-400 078

I, Chief Pastor: N. LAZAR hereby declare that the particulars givenabove are true to the best of my knowledge and belief

Sd.
Chief Pastor N Lazar
Signature of Publisher

Dated: 28 2-96

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd. No. 040088/84
Postal Regd. No. MH BY NE-84/85
Tamil Monthly Magazine

வீண்பக்தி

வீண்பக்தி. Superstition: வீண்பக்தியானது புத்தியைக் கையாடாமல், வீண் தோற்றங்களை நம்புகிற மருளையும், [மயக்கம்] வீண் வைராக்கியத்தையும் (Fanaticism) தனக்குள்ளே கடவுள் வியப்பாகமென்று மவுனம் சாதிக்கும் ஞானமென்று சொல்லப்படுகிறதையும் (Mysticism), பிராந்தி கொண்டிருக்கிறவன் (பைத்தியம்) ஒன்றை பலவாகக்கண்டு நம்புவதுபோல அநேகம் தேவர்களும், விக்கிரகாராதனை உண்டாக்கும் அஞ்ஞானத்துக்கும் இடங்கொடுக்கும் "Superstition and Atheism are the Extremes". வீண்பக்தியும், நாஸ்திகமும் அறிவீனத்தின் கடை முனைகளாயிருக்கிறது. மெய்பக்தியே புத்தி; மெஞ்ஞானமே நடுவு நிலைமை.

அறிவிப்புகள்

1 முழு இரவு விழிப்பு ஜெபம்
3 [புதன்] எப்ரல் 1996
3 [வெள்ளி] மே 1996
3 [திங்கள்] ஜுன் 1996

2 புதிய எருசலேம் செய்தி பத்திரிகை
ஆண்டு சந்தா Rs 30-00
வெளிநாடு Rs. 100-00
அனுப்பவேண்டிய முகவரி :
CHIEF PASTOR N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR,
DARGA CROSS ROAD, BHANDUP,
BOMBAY-400 078, INDIA.

3 மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்

5 "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ. 30 [முப்பது] சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 141 - APR. '96

"புதிய எருசலேம் சபை"

"...வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்... விழித்திருங்கள்... உங்களுக்கு நான் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்..."

— மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும் சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).

3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20

4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.

5 அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.

6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலருக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1:1; 10:40-43).

CHIEF PASTOR: N LAZAR

இதழின் உள்ளே ..

ஆசிரியர் உரை

மனிதன் தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். சூரியனின்றி உயிர்கள் வாழ முடியாததுபோல தேவனின்றி மனிதன் சுகமாய் வாழமுடியாது. சூரியனின் நேரடிப்பார்வையில் இருக்கிறவைகள் நன்றாய் வளருவதுபோல தேவனோடு ஐக்கியமாய் வாழும் மனிதனும் நன்றாய் இருப்பான். அவன் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் சுகமாய் இருப்பான். அதற்கு அவன் செய்ய வேண்டியது தேவனுக்கு நேரே வரவேண்டும். தேவனுடைய பார்வையில் தன்னைக் கொண்டு வரவேண்டும், ஜெபத்தின் மூலமும், தேவனுடைய வார்த்தையின் மூலமும் தேவனோடு தொடர்பெடுக்க வேண்டும். அவருடைய கடமைகளைச் செய்ய வேண்டும். அவரைக் கனம்பண்ண வேண்டும். அவருக்கு செலுத்த வேண்டிய மகிமையைச் செலுத்த வேண்டும். இப்படிச் செய்து நீதியைச் செய்கிற மனிதன் என்றென்றும் அசைக்கப்படுவதில்லை. மனிதன், பொருளாசையைப் பின்பற்றி கடவுளைவிட்டுப் பின்மாறுகிற போது, மனிதன் நிராசையடைந்து என்றென்றும் வேதனைக்குள்ளாவான். நன்மையைக் காணமற்போவான். அவனுக்குச் சமாதானமில்லை.

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

1. கிறிஸ்து உங்களில் வாசம்பண்ணு கிறார் என்பதை அறிந்து கொள்ளுங் கள் :-

விசுவாசத்தினால் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கிறார் (எபே. 3:17). உணர்ச்சியினாலல்ல "விசுவாசத்தினாலே" இயேசு கதவைத் தட்டினார் உட்பிரவேசிக்க வெளி. 3:20 விருந்தாளி வந்தால் கதவைத் திறந்து அவரை ஏற்றுக் கொள்ளுகிற வண்ணம் அவரை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் [யோ. 1:12]. ஆகையால் குமாரனை உடையவனை ஜீவனை உடையவன் (1 யோ. 5: 12.13), கிறிஸ்து உங்கள் ஆள்தன்மையில் ஒரு பங்காகிறார்.

2. அவர் சமுகத்தில் உணர்ச்சியைப் பயன்படுத்துங்கள் :-

கிறிஸ்து என்னில் வாசம்பண்ணுகிறார் [கலா. 2:20]. அப். பவுல் தன் வாழ்க்கையில் இதை அன்றாட சாதனையாக்கிறார் நீங்களும் அவருடைய சமுகத்தை மனமார உணர அவருடன் சம்பாஷிங்கள் பகலில் அவருடைய சமுகத்தைத் திரும்ப ஞாபகப் படுத்துங்கள், அதாவது இப்பழக்கத்தை விசேஷமாக அமைத்துக் கொள்ளுவோமாக. "கிறிஸ்து என்னில் வாசம்பண்ணுகிறார்" என்ற நிச்சயத்தை அன்றன்று அடையும் வண்ணமாக அதிகாலையிலே படுக்கையிலிருந்து எழுந்தவுடன் உறுதி செய்யும் வரை அடுத்த வேலை செய்யாதேயுங்கள்.

அடுத்தபடியாக பரிசுத்த ஆவியானவர் பரலோகத்தின் தம்முடைய வீட்டை விட்டு உங்களிடம் தம்முடைய வீட்டை அமைத்துக் கொள்ள விருப்பமாய் உங்களிடம் உங்களுக்குள் வந்திருக்கிறார் என்பதை நன்றியுடன் காட்டிக் கொள்ளுங்கள். அவர் உனக்குள் வாசம்பண்ணுவதினால் (பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்களுக்கு நன்றாய்த் தெரியும்) அவனுடன் அவரை துதியுங்கள், அவருடன் பேசுங்கள், அவரை அந்நாளின் தத்துவமாக்கிக் கொள்ளும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள்; பொறுப்பை அவர் எடுத்துக் கொள்ள அழையுங்கள்.

3. உங்களுடைய ஜீவியத்தையெல்லாம் அவருடைய சமுகத்திற்கேற்றபடி திருத்திக் கொள்ளுங்கள் :-

அவருக்கு பிரியமாயிருக்க நாடுகிறேன் (2 கொரி. 5:9) என்ற இலக்கை உங்களுக்கு முன் வையுங்கள். அதுவே புதிய விதமாய் ஜீவிக்குதல். வேறொரு ஆளை நீங்கள் உங்களுக்குள்ளே எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஜீவியம் அவரைச் சுற்றிலும் வட்ட மிட்டும் அவரை பிரியப்படுத்துவது எப்படி என்று ஆராயுங்கள். அவருடைய இஷ்டங்கள், அவருடைய பிரியங்கள், அவருடைய பிரியமில்லாதவைகள் எவை என்று சிந்தித்து பாருங்கள். அவருக்கு விருப்பமில்லாதது எதுவோ அதற்கு இடங் கொடாதேயுங்கள் அப்பொது உங்கள் ஜீவியம் இன்பமும் திருப்தியானதுமாகும்.

4. சம்மந்தந்தைக் கெடுக்கிறவைகளை உறுதியாய் மறுதது விடுங்கள் :-

மின்சாரக்காரன், மின்சார சக்தியின் பிரயாணத்தை ஆராய்ந்து, அது தடையின்றி ஓடும் நிபந்தனையைச் சந்தித்து, ஓட்டத்தை நிறுத்தும் தடைகளெல்லாம் [illegible] யாய் விலக்குவதுபோல, [illegible] பாதையையும் வெறிந்தோடும் கிறிஸ்துவின் ஜீவனை தடை செய்யும் [illegible] சிறுகாரியத்தையும் நீக்கிவிட நாம் [illegible] [illegible] "[illegible] அறுபட்டவனாகி போனால் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" [யோவா. 15:5]. [illegible]

தத்தைக் கெடுக்கிறவர்களை ஒழிக்க வேண்டும். சிறு காரியங்களும், தோற்றத்தில் தீமையில்லாத பழக்கங்கள் கனியற்ற ஜீவியத்திற்கு உங்களை நடத்தினால், இந்தநிலையில்லாத ஜீவியத்திற்கு விலையாக அவைகளைத் தைரியமாக வெளியே அகற்றுங்கள்.

5. சிந்தையையும், இருதயத்தையும் அவருடைய வசனத்தால் நிரப்புங்கள்:-

நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் யோ 15:7 ஒரு ஆளின் வார்த்தைகள் அவருக்கு ஒப்பாயிருக்கின்றன. நான் என் சிநேகிதனை விட்டு தூரமாயிருக்கும் போது அவனுடைய வார்த்தைகளினால் மறுபடியும் அவன் என் ஜீவியத்திற்குள் வருகிறான். அவனுடைய அன்பு என்னைத் தைரியப்படுத்துறது. அப்படியே கிறிஸ்தவனுமிருக்கிறான். "உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" என்ற ஜெபத்துடன் உங்கள் வேதாகமத்தைத் திறவுங்கள், வாசிங்கள் உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது என்ற துதியுடன் அதை மூடுங்கள் அவருடைய வார்த்தை, நமக்கு அவருடைய அன்பையும், நமக்குள் அவருடைய சமுகத்தையும் உண்மையாக்கி விடுகிறது [சங் 119: 25,50] அவருடைய வார்த்தையை (Bible) வாசிக்காமல் ஒரு நாளையும் கழிக்காதேயுங்கள்.

6. ஜெப ஜீவியமாய் ஜீவியுங்கள்:-

ஜெபம் என்பது கேட்பதையும், தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுதலையும்விட மேலானது இவைகள் பாலிய பருவமுள்ள ஜெபமாகும். நிலைத்திருக்கிற ஜீவியம் இயற்கையாய் வெளிப்படுகிறதே ஜெப ஜீவியம். இரு நண்பர்களிடையில் உள்ளது போல் ஜெபம் அவ்வளவு அந்நியோந்நியமாய் இருக்கிறது அவர் நமக்கு வேண்டும் ஆகையால் ஜெப ஸ்தலங்களைத் தேடுகிறோம். இதைவிட அதிகமாக நமக்குள்ளே ... பரிசுத்த ஆவியானவர்

நமக்குள்ளிலிருந்து பரிந்து பேசுதலை எடுக்க விரும்புகிறார். நிலைத்திருக்கிற ஜீவியத்தின வெளி ஜீவியமே ஜெபம்.

7. ஆவியில் நடவுங்கள்:-

ஆதாமின் ஜீவியம் சதா நம்மோடிருக்கிறது; ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்: அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் [கலா. 5:16]. இது விடுதலைக்காக தேவன் கொடுக்கும் உத்திரவாதம். உங்களுடைய மாம்ச சிக்கல்களினிமித்தம் தேவனை நம்பிநடக்குதலை நீங்கள் செய்யுங்கள். நிறைவேற்றுமலிருக்கும் வேலைகளை ஆவியானவர் கையாடுவார். இதின் பயனாக கிறிஸ்துவின் வாசனை வீசும் ஜீவியத்தின் கனியாகிய அவருடைய அன்பு சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், விசுவாசம், இச்சையடக்கம் வெளியே புறப்பட்டு வரும். இவைகள் ஆவியினால் நிரப்பப்பட்ட ஜீவியத்தின் அடையாளங்களான தன்மைகள்: மீண்டும் நிலைத்திருக்கும் ஜீவியத்தைத் திருப்திபண்ணும் அத்தாட்சிகளும், அதை பிரியப்படுத்தும் வெகுமதிகளாகவும் இருக்கின்றன. நடக்குதலாகிய செயல் ஒப்புக் கொடுத்தலைக் காட்டுகிறது நீங்கள் நடக்கும் போது நிலைத்தும் இருக்கிறீர்கள், ஒப்புக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறாய். அதாவது திராட்சை செடியும், கொடியும் சேருகிறக்கும் உறவின் இரகசியமும் வெளியாகின்றன.

9. நிமிஷந்தோறும உள்ளே வசிக்கும கிறிஸ்துவிலிருந்து இழுத்துக் கொள்ளுங்கள்-:


அவர் உங்களுடைய ஆதாரமாகவும் சாதனைக்குரிய மூலமாகவும் ஒவ்வொரு நிமிஷ ஜீவித்திருக்கும்போது மானவராகவும், உங்கள் நிலைமையும், தேவையும் எவ்விதமாயினும் உங்களில் நிலைத்திருக்கிறார். கிளை தனியில் தனக்கு ஜீவன் இல்லாதிருக்கிறது

அப்படியே உங்களுக்கும் ஜீவன் இல்லை, பொறுமையின்மை, தயவின்மை, எரிச்சல், அன்பு, சந்தோஷம், சமாதானக்குறைவு, முதலியவைகள் தோன்றும்போது உங்கள் ஜீவியத்தில் ஏதோ தவறிப்போயினவென்று அவைகள் காட்டுகின்றன. சக்தி நின்றுபோயிற்று நீங்கள் நிலைத்திராமல், உங்கள் சொந்த ஜீவியத்திலிருந்தே இழுத்துக் கொள்ளுகிறீர்கள் ஆனல் நாம் நிலைத்திருந்து அவரிலிருந்து இழுத்துக் கொண்டால் கிறிஸ்துவின் ஜீவனைப் புதுப்பிக்கலாம். நீடித்திருக்கவும் செய்யலாம் அப்பொழுது அவருடைய ஜீவன் நமது மூலமாய் ஊற்றப்படும்.

இந்த எட்டு காரியங்களையும் நிலைத்திருக்கிற ஜீவியத்தை நடத்துகிறவைகள் என்று சொல்லலாம். இவ்விதமாய்ப் பிரயாசமில்லாத, சுத்தமான புதிய ஏற்பாட்டின் ஜீவியத்தை அடையலாம். ஆனல் இவைகளில் ஏதாகிலும் ஒன்றை நாம் கவனிக்காமல் விட்டால் நமது ஆவிக்குரிய ஜீவநாடி அறுந்து போயிற்று என்று அர்த்தம். அதன்பின் சுயமாய் நாம் நம்மைச் சார்ந்து ஜீவிக்க நேரிடும். நம்முடைய சுகத்திற்காக பிரமாணங்களையும், இன்னும் ஜீவியத்தின் இதர பாகங்களின் வளர்ச்சியையும் எவ்வளவோ நாம் கவனிக்கிறோம். அப்படியானல் ஆவிக்குரிய விலையில்லாத காரியங்களை எவ்வளவு அதிகமாய் நாம் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என்று பாருங்கள் மெய்யான திருச்சபையின் அங்கமாகிறதும், நிலைத்திருப்பதும் தேவனுடைய கட்டளையாகும். சபை கூடிவருவதை சிலர் விட்டுவிடுகிறதுபோல நீங்கள் விட்டுவிடாதிருங்கள் [எபி. 10:25]. "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்னியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் தரித்திருந்தார்கள்" [அப். 2:42].

[தொடரும்]

"என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" [யோ. 15:4].



மார்த்தீன் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம் (தொடர்ச்சி)

5. லூத்தர் குருப்பட்டம் பெற்றது:-

நாளாவர்த்தியில் லூத்தரின் மிகுந்த பக்தியினிமித்தமும், கல்வி பெருக்கத்தினிமித்தமும் அகஸ்தீனிர் மடத்தார் அவரை தங்களுக்கு ஒரு கிரீடமாக எண்ணினர்கள். மடத்திலுள்ள குருக்கள் எல்லோரும் லூத்தருக்கு குருப்பட்டம் கொடுக்க தீர்மானித்தபோது, அவர் அதற்கு பணிவாக சம்மதித்தார். குருத்துவம் தேவ தயவுக்கு ஓர் அடையாளம் என்று எண்ணினர். குருத்துவ தொழில் செய்வதினால் சஞ்சலமடைந்திருந்த மனசாட்சிக்கு [illegible] தாம் விருதாவாய் தேடின மனச்சமாதானத்தை குருத்தொழிலால் நிச்சயமாய் [illegible] அடையலாம் என்று உறுதியாய் நம்பினாலென்றாலும், குருபட்டம் பெறுவதற்கு [illegible]

ஓத்தரும் தகப்பனரும் சமாதானமானர் கள்.

சமீப காலத்தில் கீழ் ஜர்மானியாவில் கொடிய கொள்ளை நோய் பரவிற்று. அத னல் ஓத்தருடைய இரண்டு சகோதரர்கள் மரணமடைந்தார்கள். ஓத்தரும் மரித்தார் என்று செய்தி அவர் தகப்பனருக்கு எட் டிற்று. ஆனால் அது ஒரு பொய் பிரஸ்தா பம் என்று அறிந்தபோது, அவருடைய சிநேகிதர் ஓத்தரை ஆண்டவருக்கு ஒரு பலியாக நிறுத்தி அவருடைய சந்நியாசத் துக்கும், குருபட்டத்துக்கும் சம்மதம் கொடுக்க வேண்டும் என்று வருந்தி கேட்ட பொழுது ஓத்தரின் தகப்பனர் அரை மன தோடு இணங்கி அப்படியே ஆகட்டும். தேவன் அதை நன்மையாக முடிப்பாராக என்று பெருமூச்சிட்டு சொன்னதுமல்லாமல் தன் மகனுடைய குரு அபிஷேகத்தில் தாம் வந்து தரிசிப்பதாகவும் ஒத்துக் கொண் டார். அவருடைய வசதியின் பொருட்டு 1907 – ம் வருஷம் 2ம் தேதியில் அபிஷே கத்தினமாக நியமித்தார்கள். அச்சமயத்தில் ஓத்தரின் தகப்பனர் நல்ல அந்தஸில் இருந்தபடியால் 20வது குதிரைகளோடு வந் திருந்து ஓத்தருக்கு 20 கில்ப்டஸ் [Quilpers] நாணயங்களை பரிசளித்து தகப்பனுடைய பணிவான அன்பை காட்டினர்.

அபிஷேக சடங்குகளின் வார்த்தைகள் ஓத்தரின் உள்ளத்தில் நாககரம் போல் ஊடுருவிபாய்ந்து வருத்திற்று. அபிஷேக சடங்கு முடிவதற்கு முன்னமே அவ் விடத்தை விட்டு ஓடிப்போக எண்ணங் கொண்டார். தம்மை அபிஷேகம் பண் ணின குரு பரித்தோருக்காகவும், ஜீவி யுள்ளோருக்காகவும் பலியிடும் அதிகா ரத்தை பெறுக்கொள் என்று சொன்ன வார்த்தைகளை அப்பல வருஷங்களுக்கு பின்சொன்னதாகவது பூமி தன் வாயை திறந்து எங்கள் இருவரையும் விழுங்காமல் இருந் தது தேவனுடைய இரக்கமும் நீடிய சாந் தமுமே என்பதே.

அபிஷேகமான பிறகு ஓத்தரும் தகப் பனரும், சிநேகிதரும் ஒன்றாய் இருந்து விருந்துண்டார்கள். அச்சமயத்தில் ஓத்தா தன் தகப்பனரை நோக்கி: எவ்வளவு புண் ணியமும், புகழ்ச்சியுமான செய்தி என்று சொன்னார். அப்பொழுது அவர் தகப்ப னர் கோபமுகத்தோடு தகப்பனுக்கும், தாய்க்கும் கீழ்ப்படி என்று தேவன் சொல் லுகிறதில்லையா என்று கேட்டு, தேவனு டைய சத்தத்துக்கு இணங்கி என்கிற வார்த்தைகளை குறித்து அவை சாத்தானின் ஏமாற்றம் இல்லாதபடி தேவன் அருள்புரி வாராக என்றார்.

இந்த வார்த்தைகள் வாலிப குருவின் இருதயத்தில் ஊடுருவி பாய்ந்து வருத்தின. தம சகோதர குருக்களால் புதிதாய் தகப் பனே! என்று அழைக்கப்பட்ட புது வாலிப குரு இப்போது மடத்தில் பிரசங்கம் செய்ய தொடங்கினார். தொமாஸ் அர்சிவிநாஸ், டன்ஸ்கோட்டஸ், ஒக்கம், பேதுரு அலியாக், கோப், கேர்லோர் என்னும் மத்திய காலத்து பெயர் பெற்ற ஆசிரியர்களின் நூல்களை ஊக்கத்தோடு வாசிக்க துவங்கினர். நிண்ட பாகங்களை பாராயணம் செய்வார். இவ்வி தமாய் அகஸ்தீனிய சந்நியாசிகள் எல்லா ரிலும் மத்திய காலத்து நூல்களை அதிக மாய் அறிந்தவர் என்று பெயர் பெற்றார்.

அவ்வொரு நாள், 100 வருஷங்களுக்கு முன் கான்ஸ்டன் பட்டணத்தில் அக்கினி ஜுவாலையில் தகனிக்கப்பட்டு, உயிர்விட்ட போஹிமிய இரத்தசாட்சியான ஜோவான் உஸ் என்பவர் எழுதின பிரசங்களில் ஒன்றை மடத்து புஸ்தக சாலையிலிருந்து தற்செயலாய் எடுத்து வாசித்தார். ஓத்தர் அவரை மிகள் சாட்டாளபதியர் என்று நினைத்து அவரை அக்கினி ஜுவாலையில் தகனித்து கொன்றது போதுமான நியாயமே என்று எண்ணியிருந்தார். ஆனல் அப்புஸ் தகத்தை அவர் திறந்து வாசித்தபோது, அதில் அடங்கிய கவிசேஷ சத்தியங்களை கண்டு பிரமிப்படைந்தா

சத்திய வேதத்தை அவ்வளவு வன்மையாய் கையாடினவரை அவர்கள் எப்படி கொல்லக்கூடும் என்று மலைத்தார். ஆனால் யோவான்உஸ், பாப்பின் சாபத்துக்குள்ளானவர் என்று தெரிந்தபடியால் அவரை நல்லவர் என்று நிர்ணயிப்பது தம்மை பாப்பின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஏதுவாயிருக்குமென்று பயந்தார். புஸ்தகத்தை விசனத்தோடு மூடி தான் அந்த பிரசங்க புஸ்தகத்தின் வாசித்தவைகளெல்லாம் தேவசத்தியம் என்றுநிச்சயம் அடைந்தும் ஒருவேளை தாம் வாசித்த அந்த சத்தியங்களை உஸ் என்போர் வேதப்புரட்டாகவும் எழுதியிருக்கலாம் என்று தம்மை தேற்றிக் கொண்டார். சத்திய வேதத்தை வாசிப்பதே தம் விசேஷித்த வேலை என்றெண்ணி விடா முயற்சியாலே வாசித்தார். லூத்தர் தன் அறையில் தனித்து அமர்ந்திருக்கும் போழுது ராயித்சிலீம் என்பவர் பதிப்பித்திருந்த எபிரெய அகராதியின் உதவியைக் கொண்டு எபிரெய பாஷையை கற்க துவங்கினார்.

(தொடரும்)

"சத்தியத்தை வாங்கு அதை விற்காதே" (நீதி. 23:23).

வேத பாடம்

(தொடர்ச்சி)

எண்ணாகமம்

எண். 27:12-23

மோசே தன்னுடைய மரணத்திற்கு ஆயத்தம் பண்ணுகிறார். கர்த்தருடைய க[illegible] [illegible]யின் பிரகாரம் தான் அந்த ஆயத்தங்களை செய்கிறார். ஏனென்றால் கானானுக்குள் [illegible] அவர் பிரவேசிக்க இறைவன் அனுமதி கொடுக்கவில்லை. ஆனபடியினால் தன [illegible] ஆயத்தங்களை அவர் பல விதத்திலும் செய்கிறார்.

1. அவர் முதலாவது தேவ ஜனங்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளாயிராதபடி அவ[illegible] [illegible] தலைவனை நியமிக்க வேண்டுமென்று ஜெபம் பண்ணுகிறார்.

[illegible] அதிகாரப்படுத்துகிறா[illegible] [illegible] 15-23; [illegible] 31 [illegible] 8,11,15 39]

3. புதிய [illegible] இஸ்ரவேலருக்கு கொடுக்கிறா[illegible] (எண். 2[illegible] 130; [illegible]16; [illegible] 1-[illegible]

4. மீதியானியர்களை அழிக்கிறார் (எண். 26 16-18, 31 1-54)

5. புதிய பாடல் ஒன்றை இயற்றி இஸ்ரவேலருக்கு கொடுக்கிறா[illegible] [எண். [illegible] 1-4. [illegible]

6. இஸ்ரவேலருடைய பிரயாணங்களை [illegible] எகிப்திலிருந்து [illegible] [illegible] ஸ்தலங்களை எழுதினா[illegible] (எண். 33 1-50).

7. மற்றவர்கள், தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை சுதந்தரிப்பதற்கான ஆயத்தங்களை; ஆயத்தப்படுத்தி கொடுக்கிறார் (எண். 33:51; 34:29).

8. உபாகமத்தை அவர் எழுதி பதிவு செய்கிறார். புதிய சட்டங்களையும் கொடுக்கிறார்; எச்சரிப்புகளும் கொடுக்கிறார்; தேவ ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்; பாடல்களை கொடுக்கிறார். இவ்விதமாக அவர்கள் எப்பொழுதும் ஞாபகத்துக்குள் வைத்துக் கொண்டு தேவனை பற்றிக் கொண்டிருக்கும்படியாக எச்சரிப்பு கொடுக்கிறார்.

மோசே தன்னை மரணத்திற்கு ஆயத்தப்படுத்துகிறதை குறித்து நாம் இப்பொழுது பார்க்கிறோம். தேவ ஜனங்களைப்பற்றி அவருக்கு மிகுந்த கவலை இருந்தது. அவர்களை ஆடுகள் என்று சொல்லுகிறார். ஆனபடியினால் ஆடுகளுக்கு ஒரு மேய்ப்பன் தேவை என்பதை அவர் இறைவனிடத்தில் விண்ணப்பம் செய்து தெரிந்து கொள்ளுகிறார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் யோசுவாவை ஜனங்களுக்கு முன்பாகவும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாகவும் நிறுத்தி, அவருடைய தலையில் கையை வைத்து தன்னுடைய அதிகாரத்தை அவருக்கு பகிர்ந்து கொடுத்து, தன் கனத்தில் கொஞ்சம் அவருக்கு கொடுத்து, அவரை தைரியப்படுத்தி, கட்டளையிட்டு ஜனங்களும் அவருக்கு கீழ்ப்படிந்து இருக்கும்படியாக கட்டளையிடுகிற சமயம் தான் சிறந்த ஊழியர்களை அதிகாரப்படுத்துவதற்கு ஆதாரமான வேதபாகமாக இருக்கிறது.

யோசுவா, மோசேயினுடைய இடத்தில் தலைவராக, இஸ்ரவேல் ஜனங்கள் மேல் நியமிக்கப்பட்டார். ஆனாலும் அவர் தேவ சித்தத்தை ஆசாரியனாகிய எலெயாசாரிடம் ஊரீம் தும்மீம் மூலமாக கேட்டு சிலக்காரியங்களை செய்யும்படியாக கட்டளை பண்ணப்படுகிறது.

எண். 27:21

இவ்விதமாய் மோசே யோசுவாவை அழைத்து, கட்டளை கொடுத்து, அதிகாரப்படுத்தினது மாத்திரமல்ல தேவனும், யோசுவாவை பலப்படுத்தி, கட்டளை கொடுக்கிறதாக ஆசீர்வதிக்கிறதாக நாம் வாசிக்கிறோம் உபா. 31:14 23-ம் வசனத்திலே இறைவன் யோசுவாவோடு இருப்பேன் என்று வாக்கு கொடுப்பதை நாம் பார்க்கிறோம் (எண் 31:7,8) மோசே யோசுவாவை பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, தைரியப்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம்

கானானுக்குள் பிரவேசிக்க மீந்திருக்கிற மூப்பரானவர்கள் காலேபும், யோசுவாவும் தான. யோசுவாவுக்கு பதவி கொடுக்கப்படுகிறது. இதைப் பற்றி காலேப் [illegible] பட்டதாகவும் அவர் அதைப்பற்றி தவறாக சிந்தித்ததாகவும் நாம் பார்க்கவில்லை. தேவன் தெரிந்து கொண்டது யோசுவாவை. அதை மோசேயும், காலேபும் [illegible] அங்கீகரித்து கொண்டது. இவ்விதமாக மோசே யோசுவாவுக்காக [illegible] நிமித்தம், தலையில் கைகளை வைத்ததுநிமித்தமாய் தேவனுடைய ஞானத்தினால் [illegible] யோசுவாவை நிரப்பினார். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் அவருக்கு கீழ்ப்படிந்து இருந்தார்கள் என்று சொல்லி உபா. 34:9ல் நாம் வாசிக்கிறோம். உண்மையான [illegible] முறையாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, அதிகாரப்படுத்தப்பட்டு முன்புள்ள அதிகாரிகளால், ஞான அதிகாரிகள் மூலமாக அதிகாரப்படுத்தப்படுகிற தேவனுடைய [illegible] ர்களுக்கு தேவன் தம்முடைய ஞானத்தை அருளுகிறார்; வல்லமை அருளுகிறார் [illegible] காரத்தை கொடுக்கிறார். ஜனங்கள் அவருக்கு கீழ்ப்படிந்து அடங்கி [illegible]

இந்த அதிகாரத்தின் விளக்கம் புதிய ஏற்பாட்டிலும் தொடர்ந்ததாக நாம் வாசிக்கிறோம். ஆதி சபையாரிலே பந்தி விசாரிப்பு விஷயமாக பிரச்சனைகள் உண்டான பொழுது அப்போஸ்தலர்கள் சீஷர் கூட்டத்தை வரவழைத்து பந்தி விசாரனை செய்வ உங்களுக்குள் ஞானமும், பரிசுத்தாவியும் நிரம்பின மனிதர்களை தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்கு நியமிப்போம். நாங்களோ தேவவசனத்தை போதிக்கிற ஊழியத்திலும், ஜெபம் பண்ணுகிற ஊழியத்திலும் தரித்திருப்போம் என்று சொல்லி சொன்னதாக (அப். 6:1-4).

அப்படியே சபையார் 7 பேரை தெரிந்து கொண்டதாகவும் அவர்களுக்காக அப்போஸ்தலர்கள் ஜெபம்பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள் என்றும் [அப். 6 6] வாசிக்கிறோம். அப்படியே ஆதியிலே சபை உண்டானபோது முதலாவது சபைகளிலே மூப்பர்களை ஏற்படுத்தி, ஜெபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து இவ்விதமாக ஊழியத்திற்கு ஏற்படுத்தினார்கள் என்று சொல்லி அப். 14-23ம் வசனத்திலே வாசிக்கிறோம். சபைகளுக்கு கண்டிப்பாக அதிகாரம்பண்ணப்பட்ட ஊழியர்கள் தேவை. அவர்களே சபையை கண்காணிக்க வேண்டும்; அவர்கள் சபையை நடத்துவார்கள். அந்தபடி இல்லாமல் தாந்தோன்றித்தனமாக சபையாரே ஒருவரையொருவர் மேய்த்துக்கொள்ளுவதோ, தன்னை தானே ஊழியக்காரன் என்று ஆக்கிகொள்ளுவதோ தேவநியமம் அல்ல; இவ்வாறு செய்வது தோல்வியடையும். அப். 13-ம் அதிகாரத்திலே பரிசுத்தாவியானவர், பர்னபாவையும், பவுலையும் அப்போஸ்தல ஊழியத்திற்கு பிரித்து விடும்படியாக வழிநடத்திய சம்பவத்தை அந்தியோகியா சபையில் பார்க்கிறோம். அப். 13:1-4 வரை அது எழுதப்பட்டுள்ளது. அப்படியே அப். பவுல் தீத்துவை கிரேத்தா தீவிலே அங்குள்ள சபைகளை ஒழுங்கு படுத்தி மூப்பர்களை அங்கே நியமிக்கும்படியாக விட்டு வந்ததாக பவுல் எழுதுகிறார் [தீத். 1.5]. இவ்விதமாய் ஊழியர்கள் நியமிக்கப்படுகிறதும், ஊழியர்களுக்கு சபையார் கீழ்ப்படிந்து இருப்பதும் தேவனுடைய திட்டம்தான்.

எண்.28:1

கர்த்தர் மோசேயை நோக்கி: எனக்கு சுகந்த வாசனையாக தகனபலிகளுக்கு அடுத்த காணிக்கையையும், அப்பத்தையும் குறித்த காலத்தில் எனக்கு செலுத்தும்படிக்கு கவனமாயிருப்பீர்களாகவென்று நீ இஸ்ரவேலருக்கு கட்டளையிடு என்று இறைவ[illegible]

◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘

ஞானஸ்நானம்

18-3-96 அன்று திட்டக்குடி (கிளை) சபையில் 11 பேரும்; நெய்வேலி [கிளை] சபையில் 2 பேரும்; அதங்குடி (கிளை) சபையில் ஒருவரும் [1]; கடலூர் (கிளை) சபையில் 3 பேரும்; கோபியம் [கிளை] சபையில் 2 பேரும்; [illegible] (கிளை) சபையில் ஒருவரும் [1]; ஞானஸ்நானம் பெற்று திருச்சபையாய் சேர்க்கப்பட்டதை [illegible] எமது மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘ ◘

சொன்னதாக நாம் வாசிக்கிறோம். தேவனுக்கு செலுத்த வேண்டிய காணிக்கை, ஆராதனை குறித்த காலத்தில், தக்க சமயத்தில் செலுத்தப்பட வேண்டும். நமக்கு இஷ்டமான பிரகாரமாக அல்ல, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட, அறிவிக்கப்பட்ட, சரியான நேரத்தில் தேவனுக்கு ஆராதனை ஆரம்பிக்கப்பட வேண்டும்; ஸ்துதி, மகிமை ஏறெடுக்கப்பட வேண்டும். நிர்ப்பந்தமான சம்பவங்கள் நடந்தால் ஒழிய ஆராதனைகள், தேவனுக்கு மகிமை செலுத்துகிறது முந்தி, பிந்தி ஒழுங்கற்ற விதமாக செய்யக் கூடாது.

குறித்த காலத்தில் எனக்கு செலுத்தும்படிக்கு கவனமாய் இருக்கக்கடவீர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருக்கு செலுத்துகிற கனம், மகிமையை சரியான நேரத்தில் அவருக்கு நாம் செலுத்த வேண்டும். நான் பிதாவானால், நான் எஜமானானால் எனக்கு செலுத்தப்படுகிற கனம் எங்கே, பயம் எங்கே என்று தேவன் கேட்கிறார் [மல். 1:6]. சிலர் தேவனுடைய ஆராதனையை அசட்டை பண்ணுகிறதையும், அலட்சியமாய் நடந்து கொள்ளுகிறதையும். இது மகா தவறான காரியமாகும். நாம் சரியான சமயத்தில் கர்த்தருக்கு மகிமை செலுத்த வேண்டும் [மல். 1:12].

எண். 28:3-9

நித்திய சர்வாங்க தகனபலிக்குரிய நியமங்கள் எழுதப்பட்டுள்ளது. ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைக் கொண்டு வந்து காலையில் ஒன்றும், மாலையில் ஒன்றும், அதற்கு போஜனபலி, பானபலியோடு கூட சேர்ந்து தேவனுக்கு செலுத்த வேண்டும். அது காலையிலும், மாலையிலும் செலுத்தப்பட வேண்டும் என்று

கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

திருமதி. அந்தோணியம்மா [வயது 71], அவர்கள் வடசால், 26-8-95 அன்று காலையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்களுடைய இழப்பினால் துக்கத்திலிருக்கும் குடும்பத்தார், மற்றும் உறவினர் யாவருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆறுதல் கூறுகிறோம்.

சொன்னதாக நாம் வாசிக்கிறோம் தேவனுக்கு செலுத்த வேண்டிய காணிக்கை, ஆராதனை குறித்த காலத்தில், தக்க சமயத்தில் செலுத்தப்பட வேண்டும். நமக்கு இஷ்டமான பிரகாரமாக அல்ல, ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட, அறிவிக்கப்பட்ட, சரியான நேரத்தில் தேவனுக்கு ஆராதனை ஆரம்பிக்கப்பட வேண்டும்; ஸ்துதி, மகிமை ஏறெடுக்கப்பட வேண்டும். நிர்ப்பந்தமான சம்பவங்கள் நடந்தால் ஒழிய ஆராதனைகள், தேவனுக்கு மகிமை செலுத்துகிறது முந்தி, பிந்தி ஒழுங்கற்ற விதமாக செய்யக் கூடாது.

குறித்த காலத்தில் எனக்கு செலுத்தும்படிக்கு கவனமாய் இருக்கக்கடவீர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது நாம் கடவுளுக்கு செலுத்துகிற கனம், மகிமையை சரியான நேரத்தில் அவருக்கு நாம் செலுத்த வேண்டும். நான் பிதாவானால், நான் எஜமானானால் எனக்கு செலுத்தப்படுகிற கனம் எங்கே, பயம் எங்கே என்று தேவன் கேட்கிறார் [மல். 1:6]. சிலர் தேவனுடைய ஆராதனையை அசட்டை பண்ணுகிறதையும், அலட்சியமாய் நடந்து கொள்ளுகிறதையும். இது மகா தவறான காரியமாகும். நாம் சரியான சமயத்தில் கர்த்தருக்கு மகிமை செலுத்த வேண்டும் [மல். 1:12].

எண். 28:3-9

நித்திய சர்வாங்க தகனபலிக்குரிய நியமங்கள் எழுதப்பட்டுள்ளது. ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைக் கொண்டு வந்து காலையில் ஒன்றும், மாலையில் ஒன்றும், அதற்கு போஜனபலி, பானபலியோடு கூட சேர்த்து தேவனுக்கு செலுத்த வேண்டும். அது காலையிலும், மாலையிலும் செலுத்தப்பட வேண்டும் என்று

கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

திருமதி. அந்தோணியம்மா [வயது 71], அவர்கள் ஊசரல், 26-8-95 அன்று காலையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்களுடைய இழப்பினால் துக்கத்திலிருக்கும் குடும்பத்தார், உற்றார், உறவினர் யாவருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆறுதல் கூறுகிறோம்.

சொல்லி நாம் வாசிக்கிறோம். இறைவனுக்கு காலையிலும், மாலையிலும் கண்டிப்பாக ஸ்துதி செலுத்தப்பட வேண்டும்; மகிமை ஏறெடுக்கப்பட வேண்டும்; ஆராதனை செய்யப்பட வேண்டும். மத்தியானதிலேயும், தேவனுக்கு மகிமை ஏறெடுக்கப்பட வேண்டும்; பலி செலுத்துவது நல்லது.

நம்முடைய சபைகளில் மூன்று வேளைகளிலும் தேவனுக்கு மகிமை ஏறெடுத்துக் கொண்டு வருகிறது. இதும் நல்லதான காரியம் [யாத் 29:38]-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நித்திய சர்வாங்க தகனபலி தேவன் மகிமைப்படுவதற்கும், வாசமாயிருப்பதற்கும் தெரிந்து கொண்ட இடத்தில் செய்யப்பட வேண்டும் என்று நாம் வாசிக்கிறோம். எந்த இடத்தை தேவனுக்கென்று நாம் பிரதிஷ்டைபண்ணி அங்கே தொழுகை செய்கிறோமோ அந்த இடத்தை கர்த்தரும் முக்கியப்படுத்துகிறார். இங்கே தேவனுக்கு குறித்த வேளையில் செலுத்த வேண்டிய பலியை, ஆராதனைகளை, ஸ்துதி பலியை ஏறெடுக்க நாம் கவனமாய் இருப்போமாக காலையில் முடியாவிட்டாலும், மாலையில் கண்டிப்பாக தேவ சமுகத்தில் போய் அவருக்கு மகிமை ஏறெடுக்க வேண்டும்; இது கர்த்தருடைய கட்டளை.

[தொடரும்]

"நான் பிதாவானால் என் கனம் எங்கே" [மல். 1:6].

[எச்சரிப்பு]

தேவனை சந்திக்க ஆயத்தப்படு

மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தங்களைப் பலவிதத்திலும் ஆயத்தம் செய்து கொள்வதைப் பார்க்கிறோம். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தேர்வுக்காகத் தங்களை ஆயத்தம் செய்து கொள்ளுகிறார்கள். விளையாட்டு வீரர்கள் பந்தயத்திற்காக தங்களை ஆயத்தம் பண்ணிக் கொள்ளுகிறார்கள். ஒரு வீடு கட்ட வேண்டுமானால், வீட்டில் திருமணம் வந்துவிட்டால் அதற்காக நாம் எத்தனையோ விதமான ஆயத்தங்களை செய்கிறோம். தேசத்தில் தேர்தல் வரும்போது அதனைச் சந்திக்க அரசியல் கட்சிகளும், அரசாங்கமும் செய்துவருகிற ஆயத்தங்களை நாம் காணமுடிகிறது. பிரயாணம் போகிறதென்றால் ஆயத்தம் செய்கிறோம். ஆனால் வேதம் சொல்லுகிறது "உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு" என்று (ஆமோ. 4:12)ல் சொல்லுகிறார்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இன்று கிருபையுள்ளவராக, 'வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு (உங்கள் ஆத்துமாவிற்கு) இளைப்பாறுதல் தருவேன்'' என்று தமது அருள் கரங்களை நீட்டி மனுமக்களை அழைக்கிறார். அவருடைய அழைப்பை ஏற்று அவரண்டை சேருகிற மக்களை அவர் இரட்சிக்கிறார். இவ்விதமாக இரட்சிக்கப்பட்ட மக்கள் தங்கள் ஆத்துமாவில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்று மகி

வில் நித்திய ஜீவனையும் அடைவார்கள். இறைவனோடு நீடூழி காலம் வாழுவார்கள். இந்த அழைப்பு இன்னும் கொஞ்ச காலத்திற்கு மட்டுமே. பின்னர் கிருபையின் வாசல் அடைக்கப்படும். இப்பொழுது தேவனைச் சந்திக்க மனதில்லாதவர்கள் கைவிடப்படுவார்கள்; தேவனால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள், தாங்கள் மறுதலித்த கிறிஸ்துநாதரை, கிருபையின் ஆண்டவரை நியாயதீர்ப்பின் நாளிலே சர்வலோக நியாயாதிபதியாக நிச்சயமாகவே சந்திக்கப்போகிறார்கள். அந்நாளில அவர்களுக்கு ஐயோ! அவர்கள் தங்களுடைய பாவங்களுக்குத் தக்கதாக தண்டிக்கப்பட்டு, இறுதியில் அக்கினியும், கந்தகமும் எரிகிற நரகத்தில் தள்ளப்படுவார்கள்; யுகயுகமாக கொடிய வேதனை அடைவார்கள்; முடிவில்லை, மீட்பும் கிடையாது. ஓ! மானிட சமுதாயமே இந்தக் கிருபையின் காலத்தில், இறைவனை இயேசுகிறிஸ்துவைச் சந்திக்க இன்றே ஆயத்தப்படு.

இரட்சிக்கப்பட்ட தேவ ஜனங்களும் கூட இந்நாட்களில் ஆவிக்குரிய தூக்கத்தில் மூழ்கியிருக்கிறார்கள். இரண்டாம் வருகையில், மத்திய ஆகாயத்தில் மணவாளனை இயேசுகிறிஸ்துவை சந்திப்பதற்கு போதுமான ஆயத்தம் இல்லாமல் காணப்படுகிறார்கள். இயேசு நாதர், பத்துக் கன்னிகைகளைப் பற்றி சொன்ன உவமையில், ஆயத்தமாயிருந்த புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் மணவாளனோடு கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். மற்ற ஐந்து கன்னிகைகள் ஆயத்தமில்லாமல் இருந்தபடியால், கதவு அடைக்கப்பட்ட பின்பு வெளியிலிருந்து ஆண்டவரே! ஆண்டவரே! எங்களுக்குத் திறக்க வேண்டும் என்று கெஞ்சிய போதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று மத். 25:1-12ல் வாசிக்கிறோம்.

ஒரு ராஜா தன் குமாரனுக்கு கலியாண விருந்தை ஆயத்தம்பண்ணினான். இதோ என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன்; எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு தன் ஊழியக்காரரை அனுப்பினான். ஆனால் அழைக்கப்பட்டவர்களோ, அவ்வழைப்பை அசட்டை பண்ணினதால் முடிவில் தண்டிக்கப்பட்டார்கள் என்று மத். 22:2-7 ல் எழுதப்பட்டுள்ளது. தேவன் நமக்காக மகிமையான, பேரின்ப வாழ்வை, நித்திய விருந்தை ஆயத்தம்பண்ணி வைத்துள்ளார். அதற்காக அவர் நம்மை அழைக்கிறார். கிறிஸ்தவ சமுதாயமே! தேவனை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறாயா? அல்லது அசட்டை பண்ணிக் கொண்டிருக்கிறாயா?

இன்றைய நாட்களில், அநேக கிறிஸ்தவர்கள், தாங்களும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று இறுமாந்திருக்கிறார்கள். ஆயினும் அவரைச் சந்திப்பதற்கு அவர்கள் எவ்வளவேயினும் ஆயத்தமில்லாமல் இருக்கிறார்கள். தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும், ஆயத்தமாயிராத ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான (லூக் 12:47). பரிசுத்த ஆவியானவரின் உதவியில்லாமல் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாவது கூடாத காரியம். ஆனால் இன்றைய கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் ஆவியை அவித்துப் போட்டவர்களாகவும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் புறக்கணித்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிச்சயமாகவே கைவிடப்படுவார்கள். அதிகாரம் பெற்ற அப்போஸ்தலனே சபையை ஆயத்தப்படுத்த முடியும்; வேறொருவரும் ஆயத்தப்படுத்த முடியாது [2 கொரி. 11:2]

இரட்சிக்கப்பட்ட தேவ ஜனமே! உன் தேவனை சந்திக்க இன்று நீங்கள் ஆயத்தமா? நீங்கள் இன்று இருக்கிற ஆவிக்குரிய மந்தமான நிலைமையில் தேவன் உங்களை மறுரூபமாக்கி எடுத்துக் கொள்ளுவாரா? கிறிஸ்தவ [illegible]

யத்தின் மகிமையைப்பற்றி சிந்திப்பாரில்லை, இந்த உலக வாழ்வே இன்பமானது இதுவே போதும், இதற்காகவே வாழ்கிறோம் என்பதுபோல் அவர்களது ஆத்தும நிலை காணப்படுகிறது. நாம் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால், மற்ற எல்லாரை பார்க்கிலும் மிகவும் பரிதவிக்கப்படத்தக்கவர்களாகக் காணப்படுவோம் [1 கொரி. 15:19] ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் (வெளி 19:7). அதாவது, இயேசு கிறிஸ்துவானவர் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய், மத்திய ஆகாயத்தில் வருவார்; வந்து ஆயத்தமாயுள்ள தம்முடைய பரிசுத்தவான்களை, பின்னைகளை மறுரூபமாக்கி எடுத்துக் கொள்வார். இதற்காக திருச்சபையானது [மணவாட்டி] தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. சபையே உங்களை ஆயத்தப்படுத்த முடியும்; அப்படிப்பட்ட சபையையே தேவன் மறுரூபப்படுத்தி எடுத்துக் கொள்வார் [எபேசி 26:27].

ஆகையால் இன்னும் இரட்சிக்கப்படாதவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து பாவமன்னிப்பு பெற்று, தேவனை சந்திக்க ஆயத்தப்படவும், இரட்சிக்கப்பட்ட மக்கள் பூரணமான சபையில் ஐக்கியமாகி இயேசுகிறிஸ்துவை சந்திக்க வேண்டிக் கொள்ளுகிறோம்

"அந்தப்படியே நீங்களும் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார்; ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்" (லூக் 12:40).

தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

இரட்சிப்பு மகா அருமையானது. நம் [illegible] இரட்சிப்பு தேவனுடைய [illegible] "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே 2:8)

[illegible]

மையைப் புறக்கணிக்கும் மனிதன் தாழ்மையைப் புறக்கணிக்கிறான் கடவுளைத் தேடுமாறு நாம் நம் சொந்த முயற்சியால் நம்மைத் திருப்பக்கூட முடியவில்லை என ஒப்புக் கொள்வதுதான் உண்மையான கிறிஸ்தவ தாழ்மையாகும். கடவுள் தாம் தெரிந்து கொண்ட மக்களைத் தமக்குச் சித்தமான காலத்தில் திருப்பும்போது தான் நாம் திரும்ப முடியும்; திரும்புவோம் அவைபக்தர் இந்த உபதேசம் கடினமானது என்று கூறலாம் ஆனால் நாமோ அதை மறைத்து வைக்கக் கூடாது.

தெரிந்து கொள்ளுதல் கடவுளின் முன்னறிவைச் சார்ந்தது என்று சிலர் கூறுவர் அதாவது தம்மண்டை திரும்பி இரட்சிப்பைத் தேடுவோர் யார் யார் என்பதைக் கடவுள் முன்னறிந்து அவர்களையே தெரிந்து கொண்டார் என்பர். இல்லை கடவுள் யாவற்றையும் முன்னறிவார் என்று நாமும் ஒப்புக் கொள்ளுவோம். ஆனால் தெரிந்து கொள்ளுதல் முன்னறிவுக்கு அப்பாற்பட்டது. ஒரு சிலர் முடிவில்லா வாழ்வுக்கும் வேறு சிலர் முடிவில்லா அழிவுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு சிலருக்கு ஜீவன் முன் குறிக்கப்பட்டது வேறு சிலருக்கு அழிவு முன் குறிக்கப்பட்டது

தெரிந்து கொள்ளுதலுக்கு ஓர் எடுத்துக் காட்டாக கடவுள் இஸ்ரவேல் ஜனத்தை தெரிந்து கொண்டார் சகல ஜனங்களிலும் நீங்கள் சிறுபான்மையான ஜனமென்று கர்த்தர் உங்கள் மேல் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள் சகல ஜனங்களிலும் [illegible] கொஞ்சமாயிருந்தீர்கள் கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும் உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும் உங்களை [illegible] [illegible]டுக் கொண்டார் (உபா. 7:7,8) [illegible] [illegible] தெரிந்து கொண்டதினால் [illegible] [illegible] [illegible]

ஓர் இனத்துக்கு இரக்கம் காட்டினதினிமித்தம் நாம் கடவுளைக் குற்றப்படுத்தலாகுமோ?

தாம் தெரிந்து கொண்ட மக்களுக்குத் தம் கைகளை நீட்டி இரட்சண்யத்தைக் காட்டுவதோடு அவர்கள் அந்த நன்கொடையை நன்றியுடன் ஏற்றுக்கொள்ள அவர், அவர்களுக்கு புத்துயிரை அளிக்கின்றார் [அதாவது மறுபிறப்பு] தாம் தெரிந்து கொண்ட மக்களை பலவிதமான அழைப்பினால் அழைக்கின்றார்; அந்த அழைப்பு வீணாபோகாது (ரோம. 8.30). கிறிஸ்துவின் குடும்பத்தில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்களில், கடவுளின் அளவற்ற அருள் சிறந்து விளங்குகின்றது கிறிஸ்துவின் ஒளியிக்கப்பட்ட விசுவாசிகள் ஒரு நாளும் கெட்டுப்போவதில்லை அவர்கள் மகிமை அடைவது நிச்சயம் (ரோம 8 30)

ஒரு சிலர் தம் கிருபையை ஏற்கத் தகுதியுள்ளவர்களாயிருப்பர் என்று கடவுள் முன்னறிந்து, அவர்களையே தமக்குப் பிள்ளைகளாக்கிக் கொள்ளத் தெரிந்து கொண்டார் என்று கூறுவார் அநேகருண்டு. இல்லை "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு அவர் உலக தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார் (எபேசி. 1 4) நாம் பரிசுத்தராயிருப்பதினால் அன்று நாம் பரிசுத்தராயிருக்கும்படி நம்மைத் தெரிந்து கொண்டார் நாம் நல்லவர்களாயிருப்பதினால் அன்று (2 தீமோ. 1 3-5) நாம் பாத்திரர் என்றெண்ணப்படும்படிக்கு 2 தெச 1-5 நம்மைத் தெரிந்து கொண்டார்.

இந்த உபதேசம் [illegible] [illegible] பிக்கப்பட்டிருக்கிறது. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] நான் இந்த [illegible] [illegible] [illegible] [illegible] (ரோம 7, 29) [illegible]

பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளா விட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" [யோ 6:44]. அநேகர் அழைக்கப் படுகிறார்கள்; ஆனால் தெரிந்து கொள்ளப் படுகிறவர்கள் சிலர் (மத். 20:16; 22:14). நற்செய்தியின் பொதுவான அழைப்பினால் அநேகர் மனந்திரும்பவும், விசுவாசிக்கவும் அழைக்கப்படுவர். ஆனால் மனந்திரும்புதலின் ஆவியும், விசுவாசமும் யாவருக்கும் அருளப்படுவதில்லை. சிலருக்குத்தான் [தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குத்தான்] அருளப்பட்டிருக்கிறது. விசுவாசம் என்ற அருளானது சிலருக்கு மட்டும் கொடுக்கப் படுகிறது ஆனால் அவிசுவாசம் ஆக்கினைக் கேதுவான பாவம் என்பதாகும் நியாயமில்லை. இது நியாயமானது. என்று ஆட்சேபனை கூறுவோருக்கு வேதமே பதில் அளிக்கட்டும்

மனிதனே தேவனோடு எதிர்த்து தர்க்கிக்கிற நீ யார்? .. மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரமில்லையா [ரோம.9:20,21]. நாம் வாயைப் பொத்திக்கொண்டு பேசாமலிருக்க வேண்டாமா? முன் குறிப்பு என்ற உண்மை இதே அதிகாரத்தில் கற்பிக்கப் பட்டிருக்கிறது. பிள்ளைகள் இன்னும் பிறவாமலும் நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு . யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்தேன் என்று எழுதியிருக்கிறது (ரோம 9: 11-13).

முன் குறித்தலுக்கு மாறாகக் கூறும் ஆட்சேபனைகளுக்குப் பதில்:-

1 [illegible] எல்லாருக்கும் ஒரே அளவாய் [illegible] அருளாதிருப்பது பட்சபாத [illegible] இல்லை! எல்லாரும் [illegible]; எல்லாரும் ஆக்கினைக்குள்ளானார்கள். எல்லாரையும் [illegible] அழிப்பது நியாயமாகும் [illegible] ஒரு [illegible] படுவது அவருடைய அளவற்ற கிருபைக்கு ரூபகாரமாகும்.

2. புனித வாழ்க்கை ஆற்றும்படி நாம் சபையாரைத் தூண்டத் தேவையில்லை. அவர்கள் நல்லன செய்தாலும் முன் குறித்தலின்படி எல்லாம் நடைபெறுமாம் பவுல் அப்போஸ்தலனின் போதனையை நன்றாய்ப் பாருங்கள். அவையே இந்த தப்பான கருத்துக்கு மறுப்பு கூறும். அவர் திட்டமும் தெளிவுமாக தெரிந்து கொள்ளுதலைப் போதித்தார்; அதே சமயத்தில் அவர் புனித வாழ்க்கையின் அவசியத்தை அழுத்தம் திருத்தமாய்ப் போதித்தார் (ரோம. 6-8 அதிகாரங்கள்)

3. முன் குறித்தல் என்னும் கொள்கையை நம்பும் மக்கள் நற்கிரியைகளைச் செய்ய அசதியாயிருப்பார்கள். தாங்கள் இரட்சிப்படைய நியமிக்கப்பட்டதாக நினைக்கும் மக்கள் தீமை செய்தாலும், நற்கிரியை செய்யாதிருந்தாலும் தாங்கள் பெற்றுள்ள இரட்சிப்பு பாதிக்கப்படாது என்ற துணிவுடன் எண்ணுவார்களாம். ஆனால் மறை நூலின் உபதேசம், இந்துக்கள் போதனைக்கும், அக்கிரம கருத்துக்கும் சிறிதும் ஆதரவு அளிப்பதில்லை பாவம் செய்யலாமா "கூடாதே" "கூடாதே" [ரோம 6:11 15]

தெரிந்து கொள்ளப்பட்டோர் யார் யார் என்பது நமக்கு தெரியாததினால், எல்லாரும் [illegible] வேண்டும் என [illegible] முயல்வதும் [illegible] யென்று அவர் கூறினார். [illegible] வாழ்த்துங்கள் [illegible] [அதாவது தெரிந்து கொள்ளப் [illegible]] [illegible]

நியாயப் பிரமாணம்

கற்பனை, பிரமாணம்

நியாயப்பிரமாணம் The Moral Law:

நாம் தேவனுக்குப் பிரியமும், பரிசுத்தமுமாய் நடக்க வேண்டிய விதம் இன்னதென்றும் கர்த்தருடைய சித்தத்துக்கு ஏற்றபடி பிறனுக்கும், நமக்கும் செய்ய வேண்டியது இன்னதென்றும் காட்டி, இரண்டு கற்பலகைகளின் மேல் எழுதப்பட்டு மோசே மூலமாய்க் கர்த்தர் நமக்கு அருளிச் செய்த பத்து கற்பனைகளே நியாயப்பிரமாணம் என்னப்படும்

கற்பனை Commandment:

பிரமாணம் வேதம் (உபா. 11:22; சங். 119:96; நீதி. 13:13; மத் 15:3; 22:36,38; மாற். 12:29; வெளி. 22:14). பத்துக் கற்பனையை யாத். 20-ம் அதிகாரத்தில் காண்க.

பிரமாணம் Law:

நடக்க வேண்டிய விதத்தைக் குறிக்கிறதே பிரமாணமென்னப்படும் A Rule of actino.

1. பொதுவாகப் பிரமாணம் உயர்திணைப் பொருள்களுக்கும் அஃறிணைப் பொருட்களுக்கும் உரிதாயிருக்கிறது. ஆதி கடவுள் ஒன்றுமில்லாமையினின்று தம்முடைய வல்லமையினாலே உலகத்தை உண்டாக்கின போது "பகுதி" எனப்பட்ட அஃறிணைப் பொருள்களுக்கும் பிரமாணங்களை ஏற்படுத்தினார். சூரியன் ஒரு நிலையில் மற்றக் கிரகங்களுக்கு மத்தியில் நின்று வெளிச்சத்தையும், வெப்பத்தையும் கொடுக்கவும், பூமி நியமித்த காலங்களில் நாள்தோறும் தன்னைத் தான் சுற்றியோடவும், வருஷந்தோறும் சூரியனை சுற்றியோடவும், வித்து முளைத்து கனிதரவும் அந்தந்தப் பொருள்களுக்கு இயல்பான பிரமாணங்களை ஏற்படுத்தினார். அஃறிணைப் பொருட்கள் பிரமாணப்படி நடக்கிறதே அவைகளுக்குரிய சீராயிருக்கிறது; அவைகளின் இயல்பு மாறிப்போகும்.

அஃறிணைப் பொருள்களுக்கு சிருஷ்டிகர் கொடுத்த பிரமாணங்களைப் போலவே உயர்திணைப் பொருள்களுக்கும் அவைக்குரிய பிரமாணங்களைக் கொடுத்தார். தேவன் புத்தி சித்தமுள்ள மனிதர்களை பிரமாணத்தால் ஆள்கிறார். இந்தப் பிரமாணம் யாவருக்குள்ளும் அவர்கள் ஒத்துக் கொள்ளும வண்ணமாயிருக்கிறது. நாம் உத்தமமாய் நடந்து கொள்ள வேண்டும் என்றும், தீதொழித்து நன்மை செய்ய வேண்டுமென்றும், மனிதனுக்குப் படிப்பிக்கிறது. இந்தப் பிரமாணத்தை கைக்கொள்வதே மனிதனுடைய சிறக்கும், மெய் பாக்கியத்திற்கும் மூலமாயிருக்கிறது. இது நன்மை, தீமை அறியத்தக்க பிரமாணமாயிருக்கிறது. சிருஷ்டிகரின நீதியுள்ள திருச்சித்தமே இந்தப் பிரமாணத்திற்கு மூலம் ரோம. 2:12-15. இந்தப் பிரமாணம் மனிதன் பாவஞ் செய்யாததற்கு முன் அவனது மனது சீருள்ளதாயிருந்த போது தகுமான பிரமாணமாயிருந்தது

2. மனிதன் பாவம் செய்த பின்பு அதிலிருந்த சுபாவப் பிரமாணம் சீரழியவே கிருபையுள்ள சிருஷ்டிகர் சுபாவப் பிரமாணத்தை உறுதிப்படுத்தவும் சீர் கெட்ட மனிதன் சீர்படவும் புறத்துப பிரமாணமாகிய வேதப்பிரமாணத்தைக் கொடுத்தார். The Law of the ReVeletion Religion [சங். 19:5]. இந்த வேதப்பிரமாணத்தை மோசேக்கு முன்னிருந்தவர்களுக்கு ஒலி வடிவாயும் மோசேக்குப் பின்னிருந்தவர்களுக்கு வரி வடிவாயும் கொடுத்தார். மோசேயால் கொடுக்கப்பட்ட பிரமாணம் மூன்று விதமானது

a) சன்மார்க்கப் பிரமாணம் The Moral Law அது பத்து கற்பனைகளே இதாம்,

நியாயப்பிரமாணம் என்று பெயர். இந்தப் பிரமாணத்தின் மேன்மையை காண்பிக்க தேவன் தாமே அதை இரண்டு கற்பலகைகளில் எழுதினார். அப்படி இந்த பிரமாணம் கல்லிலே எழுதப்பட்டதால் அது உறுதியுள்ளதென்றும், மனிதனுடைய இருதயம் கல்லைப்போலிருக்கிறதென்றும், கற்களில் இருபக்கங்களிலும் எழுதப்பட்டபடியால் அதிலிருந்து ஒன்றுகிலும் குறைக்கவும், கூட்டவும் கூடாதென்று விளங்குகிறது. இந்தப் பிரமாணம் இரண்டு வகுப்புள்ளது. முதலாம் வகுப்பு நாலு கற்பனைகளடங்கியது. அது நாம் தேவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளைப் படிப்பிக்கிறது. இரண்டாவது ஆறு கற்பனைகள் அடங்கியிருக்கிறது. அது நாம் மனிதருக்கு செய்ய வேண்டியது கடமைகளைப் படிப்பிக்கின்றது (யாத். 20அதி) புதிய ஏற்பாட்டில் இந்த பத்துக் கற்பனைகளை கிறிஸ்து இரண்டு கற்பனைகளாகத் தொகுத்து சொல்லியிருக்கிறார்.

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக இது முதலாம் கற்பனை. இதற்கொப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே (மத். 22:37-39; உபா. 6:5; லேவி. 19:18; ரோம. 2:25; 7:7; 13:8; 10:7; கலா. 3:24,25). இது அழியாத பிரமாணம் மத 5:17 ஆகும்.

பிரமாணம

சடங்கு பிரமாணம் Ceremonial Law:

தேவாராதனை முதலானவைகளை நடப்பிக்கும்படிக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள் சடங்கு பிரமாணமாம். இந்தப் பிரமாணம் ஆலயம், ஆசாரியர், பலி, காணிக்கை தூபம், ஸ்நானம், உபதேசம், திருநாட்கள் முதலியவற்றிற்குரியது. இந்தக் கட்டளைகளின் பயன் கிறிஸ்துவே.

தர்மப்பிரமாணம் Civil Law:

இஸ்ரவேலர் ஆளும்படிக்கும், அவர்களுடைய வழக்குகளைத் தீர்க்கும்படிக்கும் கொடுக்கப்பட்ட கட்டளைகள் தர்மப்பிரமாணம் என்னப்படும் [யோ. 1:17].

மனிதர்கள் தனித்தனியாய் இராமல் தேசத்தார்களாகவும், கூட்டத்தார்களாகவும் ஜாதிகளாகவும், சமுசாரசம்பந்த முள்ளவர்களாய், வியாபாரம் முதலிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கிறதுமன்றி பெரியோர், சிறியோர், அரசன், குடிமக்கள் என்கிற நியாயமான வித்தியாசமுடையவர்களாயிருக்கிறபடியால் மேற் சொல்லிய இரண்டு விதமான சுபாவப்பிரமாணம். வேதப்பிரமாணம் என்பவைகளைத் தவிர அந்தந்த தேசத்துக்குரிய பிரமாணங்களுண்டு (Law of Nations). ஒவ்வொரு தேசத்திலும் பலப் பிரிவுமனுண்டு; அந்தப் பிரிவுகளில் அவற்றிற்குரிய பல விசேஷங்களிருக்கலாம். ஒரு ஊருக்கடுத்தப் பிரமாணம் இன்னொரு ஊருக்கு உதவாது. ஆகையால் அந்தந்த ஊர்களுக்குரிய பிரமாணங்களுமுண்டு இதற்கு ஊர்ப்பிரமாணம் அல்லது தேச சட்டமென்று சொல்லலாம் (Municipal or Civil Law).

தேசத்தையாளும் பெரியோர்கள் பிரஜைகளுக்கு நியாயமானதைச் செய்ய வேண்டுமென்றும், அநியாத்தைச் செய்யலாகாதென்றும் கட்டளைக் கொடுக்கிறதே இந்தப் பிரமாணமாம். இந்த பிரமாணத்தை உண்டாக்குகிறவர்கள் சுபாவப்பிரமாணத்திற்கும், வேதப்பிரமாணத்திற்கும் விரோதமானவைகளைச் செய்யக் கூடாது செய்தால் இயல்பு மாறிப்போம். கொலை பாதகம்

சுபாவப் பிரமாணத்திற்கும், வேதப் பிரமாணத்திற்கும் விரோதமாயிருக்க, யாதொரு இராஜன் கொலை செய்யலாமென்று தன் தேசத்தாருக்கு கட்டளை கொடுப்பானாகில் குடிகள் அந்த கட்டளையை நியாயமாய் விரோதிக்கலாம். ஆனால் இரண்டு விதமான பிரமாணங்களில் சொல்லியிராமல் இருந்தும் தேசத்தாருக்குப் பிரயோஜனத்தைக் கொடுக்கும் நியாங்களைத் துரைத்தனத்தார் ஏற்படுத்துவார்களாகில் அந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டியதே.

இத்தேசப் பிரமாணங்களைக் குறித்து உண்டாக்கப்பட்ட தர்ம சாஸ்திரத்திலும், இங்கிலாந்து தேசத்துப் பிரமாணங்களைக் குறித்து பல இங்கிலீஸ் புஸ்தகங்களிலும் காணலாம். இதுவுமன்றி, சத்தியம், திருஷ்டாந்தம், மூல நியாயங்களைக் குறிக்கும் (Truth, Evidence, Principle) வேறு பிரமாணங்களுமுண்டு.

சத்தியம் பிரமாணமே இருந்ததும், இருக்கிறதும், இருப்பதுமே சத்தியம். இயல்பால் மனதுக்கு சத்தியமென்று தோன்றுவது அகத்தறிவுப் பிரமாணம் அல்லது பிரத்தியட்சப்பிரமாணமென்று சொல்லப்படும். (Inluitiue Euidence) மனதுக்குப் புறத்திலிருக்கும் காரியங்களைப் பல காரண காரியங்களினாலே கிரகித்தறிவது சப்பவப் பிரமாணமென்று சொல்லப்படும். அதாவது அகத்தறிவுப பிரமாணம் இரண்டு விதமாயிருக்கிறது. அதாவது அகத்தியப் பிரமாணமும் (Necessary Truth) அகத்தியமல்லாப் பிரமாணமுமே. இரண்டும் இரண்டும் நாலாயிருப்பது அத்தியாசய பிரமாணமாம் அது ஒருபோதும் ஐந்தாயிருக்கமாட்டாது. நான் எழுதுகிற காகிதம் வெள்ளையாயிருந்தும் அது வெள்ளையாகவே இருபபது அகத்தியமாயிராமல் கறுப்பாயிருக்கக் கூடுமானகையால் அது அகத்தியமல்லாப பிரமாணமாம். எல்லா சாஸ்திரங்களிலும் அகத்தியப பிரமாணங்கள் உண்டு.

பண்பு தோன்றும்போது அப்பண்புக்கு பொருளும் தோன்ற வேண்டுமென்பது ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒருவினைச் சொல் தொக்கியாவது வெளிப்படையாயாவது இருக்க வேண்குமென்பதும் இலக்கணப் பிரமாணமாயிருக்கிறது.

மொழிகளும், அம்மொழிகள் குறிக்கும் காரியங்களும் ஒத்திராமற்போனால் பொருள் சத்தியமல்லவென்பதும், ஒரு பிரதம வாக்கியம் (Proposition) மெய்யையும், பொய்யையும் கூறுதென்பதும் தர்க்கப்பிரமாணமாயிருக்கிறது ஐந்தும் ஐந்தும் பத்தென்பது இலக்கணப் பிரமாணமாயிருக்கிறது.

ஒருவன் தன் சக்திக்கு மேற்பட்ட காரியத்தைச் செய்யக் கூடாதென்பதும், பிறர் நமக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படியே நாம் அவர்களுக்குச் செய்ய வேணடுமென்பதும் நீதிப் பிரமாணமாயிருக்கிறது. இன்னும் பல பிரமாணங்களுணடு. ஆகவே தேவன் உலகத்தைப பிரமாணங்களால் ஆளுகிறார். பிரமாணங்களுககு கீழ்ப்படிந்து, ஒத்து நடப்பதே மனிதர்களுக்கு சீரும் சௌபாக்கியமாம்.

"ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும், நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது" [ரோம, 7:12].

"தேவனைத் தேடு"

"SEEK GOD"

Regd. No. 040906/84
Postal Regd. No. MH BY NE-04/95
Tamil Monthly Magazine

திறக்கிறது

To Open

1. திறக்கிறது (அப். 16:26). 2. விஸ்தரிக்கிறது (லூக். 24:25-27,45). 3. பெற்றுக் கொள்ளுகிறது (மத். 7:7). 4. கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறது (உன். 5:2; வெளி. 3:20). புஸ்தகத்தை திறக்கிறதென்பது அதிலுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துகிறதே (வெளி 5:2,9). கண்களைத் திறப்பதென்பது, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே (அப். 26:18). இருதயத்தை திறக்கிறதென்பது, நல்லறிவை உண்டாக்கி சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறதே (அப். 16:14) உதடுகளைத் திறக்கிறதென்பது, துதிக்கிறதே (சங். 51:15). வாயை விரிவாய்த் திறக்கிறதென்பது, நன்மைக்கு ஆவலாய் இருக்கிறதென்பதாம் [சங். 81:10].

அறிவிப்புகள்

1 முழு இரவு விழிப்பு ஜெபம்
3 [வெள்ளி] மே 1996
3 [திங்கள்] ஜூன் 1996
30 [செவ்வாய்] ஜூலை 1996

2 புதிய எருசலேம் செய்தி பத்திரிகை
ஆண்டு சந்தா Rs. 30-00
வெளிநாடு Rs 400-00
அனுப்ப வேண்டிய முகவரி :
CHIEF PASTOR N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR.
DARGA CROSS ROAD, BHANDUP,
BOMBAY-400 078, INDIA.

3 மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும் பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4 பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்

5 "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ 30 [முப்பது] சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 142 - MAY. '96



"புதிய எருசலேம் சபை"

"வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவார்(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள் ... விழித்திருங்கள்... உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்குஞ் சொல்லுகிறேன், விழித்திருங்கள்"

— மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப. 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28.19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).

3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத் 28:20

4 அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.

5 அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.

6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப. 1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கிறார்களே, அது எப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இல்லை, அஸ்திபார உபதேசங்கள் [illegible] [illegible]ம் (நீதி. 9:1-6). இந்த ஏழு அப்போஸ்தலருக்கு, நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகிய இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப. 1:1; 10:40-43)

CHIEF PASTOR N LAZAR

இதழின் உள்ளே ..

1 ஆசிரியர் உரை

1 [illegible]

ஆசிரியர் உரை

தேவனுடைய இராஜ்யம் புளித்தமாவைப்போல உலகமெங்கும் பரவி வருகிறது. நாடுகளின் எல்லைகளிலும் அது அதிசயவிதமாய்ப் பரவி வருகிறது. "இஸ்ரவேல் பூத்து காய்த்து பூமியைப் பலனால் நிரப்பும் காலம் வரும்" என்று வேதம் சொல்லுகிற பிரகாரம் தேவ ஜனங்களின் வாழ்க்கை, நற்குணங்கள், நற்கிரியைகளினால் உலகத்தில் பெரிய மாற்றங்கள் உண்டாகிக்கொண்டிருக்கிறது. தேவஜனங்களால் உலகத்தில் அதிர்ச்சி. உலகத்தாரோடு சேர்ந்து குடித்து, வெறித்து அவர்களைப் போல் தேவஜனங்கள் வாழாததால் அந்த துன்மார்க்க உளையில் விழாததால் அவர்கள் ஆச்சரியப்பட்டு தேவஜனங்களை தூஷிக்கிறார்கள் (1 பேது. 4:4).
தேவ ஜனங்கள் தேவனை ஸ்துதி பாடி, ஆராதனை செய்து, தேவ வல்லமையை, தேவ மகிமையை பூமியில் இறங்கச் செய்து வருகிறார்கள். இதனால் தேவஜனங்கள் மிகுதியாய் இருக்கிற இடங்களில் அக்கிரம செய்கைகள் குறைகிறது. தேவ ஜனங்களே பூமியை பலனால் நிரப்புங்கள். "...உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத் 5:16).

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N LAZAR

(தொடர்ச்சி)

திருச்சபை

தசமபாகம் கொடுப்பதற்கான காரணங்கள்:-

1. கர்த்தர் தமது திருச்சபைக்கு வேண்டிய பணத்தை திரட்டுவதற்குப் பூமியிலே எந்த விதத் திட்டமும் இல்லாமலா விட்டுச் சென்றார்? கிறிஸ்துவின் இராஜ்யம் பரவுவதற்கு ஒவ்வொர் அங்கத்தினரும் அவரவர்களுடைய வருமானத்தில் குறைந்தது பத்தில் ஒரு பங்காகிலும் கொடுத்தல் ஒரு நல்ல திட்டம் என்று நீங்கள் சிந்திக்கவில்லையா? இதைவிட ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் நினைத்துப் பார்க்க இயலுமா? புதிய ஏற்பாட்டில் ஒரு சட்டத்தைக் குறித்து நாம் ஒன்றும் சொல்லவில்லை. நடைமுறை உறுதியுடன் பின்பற்றுவதற்கு ஏற்ற வேறொரு திட்டத்தைப் புதிய ஏற்பாட்டிலிருந்து உங்களால் கொடுக்க இயலுமா? நாம கர்த்தருக்குக் கொடுத்தலிலே தசமபாகம் கொடுக்கத் தொடங்குதல் ஓர் அற்புதமான தொடக்க இடம் என்பதை மறுக்கக் கூடியவர்கள் யாரேனும் உண்டா?

ஒவ்வொரு கிறிஸ்தவரும் கர்த்தருக்குக் கொடுப்பதற்குரிய ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டுமென்றால் தசமபாகத்தைவிட ஒரு நல்ல திட்டத்தை உங்களால் தொடங்க இயலுமா?

2. தசமபாகம் கொடுத்தல் நம்முடைய அன்பை வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல வழியாகும். நம்முடைய பொக்கிஷம் எங்கேயோ அங்கே நம்முடைய இருதயமும் இருக்கும். நமது பணத்தில் பத்தில் ஒரு பங்கினைக் கொடுத்தல் நம்முடைய இருதயத்தின் நிலைமையை வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல வழியாகும் நம்முடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கினைக் குறை[illegible] [illegible]

ஆண்டவர் மீது கொண்டுள்ள அன்பினை வெளிப்படுத்துவதற்கு குறைந்தது தசமபாகமாகிலும் கொடுக்க வேண்டியது ஓர் அவசியமில்லையா? எல்லாச் சொத்துக்களையும் சாதனங்களையும் உண்டாக்கிக் கொடுத்த ஒரு பங்குதாரருக்குத் தொழில், உலகம் பத்தில் ஒருபகுதியைப் பங்காகக் கொடுப்பது மிகக் குறைந்த ஓர் அளவு என்று சிந்திக்க வேண்டும்.

3. மோசேயின் நியாயப்பிரமாணத்தைவிட வாழ்க்கையின் ஒவ்வொரு தரத்தையும் இயேசு உயர்த்தியுள்ளார். பழைய ஏற்பாட்டில் பலிகளெல்லாம் கடந்து போனதை நாம் திரும்ப நினைவு கூறுவதில்லை [பலிகளிருந்தது]. ஆனால் நமது பலியாகிய கிறிஸ்துவை நாம் நினைவு கூறுகின்றோம் ஆனால் ஆசரிப்பு கூடாரம், தேவாலயம் இவற்றின் செல்வக்களஞ்சியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது திருச்சபைக்கு அவ்வளவு செல்வக்களஞ்சியம் உண்டா? தேவாலயத்தின் செல்வக்களஞ்சியத்தைவிட திருச்சபைக்கு அதிகம் இருக்க வேண்டுமா அல்லது குறைவாயிருக்க வேண்டுமா? நமக்கும் அதிகமாக இருக்க வேண்டும் என்பது வெளிப்படை. ஆனால் கிறிஸ்தவர்கள் தசமபாகத்தைவிட அதிகமாகக் கொடுத்தாலன்றி அது ஒரு போதும் அதிகமாகாது கிறிஸ்துவின் [illegible] யில் தோன்றும் நீதியின் தரங்களின் [illegible] [illegible] உங்கள் பணத்தைக் [illegible] கொடுப்பீர்களாக? [illegible] என்பவர்களை [illegible] அதிகமாயிருந்[illegible] [illegible]

4. [illegible]

ளென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்தி லுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா?" அப்படியே "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாக வேண்டும் என்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" [1 கொரி 9 13,11]

இவ்வளவாக [illegible] ஊழியத்தைத் தாங்குவதற்கு இந்த திருவசனத்தில் பொருளின் முழு முக்கியத்துவத்தையும் நாம் உணர்ந்து கொண்டிருக்கின்றோமா? இதனை மறுபடியும் படியுங்கள், சிந்தியுங்கள். ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும் . பங்குண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே . கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார் லேவியருடைய பங்கு எண். 18·21-26 இஸ்ரவேல் இராஜ்யத்தைத் தாங்குவதற்கு இஸ்ரவேல் மக்கள் தசமபாகங்களையும், காணிக்கைகளையும் கொடுத்தார்கள். தசமபாகங்கள், காணிக்கைகள் மூலமாக லேவியர், ஆசாரியர்கள் வாழ்ந்தார்கள்

பவுலும், பர்னபாவும் லேவியருடைய ஆசாரிய ஊழியத்தின் நேரான ஊழியர்கள் என்றும், அவர்கள் செய்யும் நற்செய்தி பிரசங்க ஊழியத்தின் வாயிலாக அவர்கள் வாழ வேண்டும் என்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். எபிரேய ஆசாரியனுக்குக் கொடுக்கப்படும் உதவிக்குக் குறைவாக கிறிஸ்துவப் பிரசங்கியாருக்குக் கொடுக்கலாமா? கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இருக்கும் நாம் இஸ்ரவேல் இராஜ்யத்தின் மக்களை விட அதிகமாகக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோமா அல்லது குறைவாகக் கொடுக்கக் [illegible] "அந்தப்படியே" [illegible] லேவியரின் வாழ்க்கையைத் தாங்கியதுபோல, நற்செய்தியினை அறிவிக்கும் ஊழியர்களின் வாழ்க்கையையும் தாங்க வேண்டும் என்றும்,சொல் [illegible]

[illegible]ரால், கிறிஸ்தவ ஊழியத்தைத் தாங்குவதற்குரிய தேவ திட்டம் தசமபாகங்களும் காணிக்கை கொடுத்தலுந்தான் என்று அப்பவுல் கூறுகிறார். இந்தக் கோட்பாடு இத்தகைய ஒரு நடைமுறையை உண்டாக்கிக் கொண்டிருக்கவில்லை என்று நீங்கள் நினைத்தால் நமக்கு "நற்செய்தியினால் உண்டாகும் பிழைப்பு" லேவியரின் பங்கினைக்காட்டிலும் குறைந்த பணத்தினால் ஆகும் என்று எப்படி உங்களால் சொல்ல இயலும்? எல்லா நாட்டவருக்கும் நற்செய்தியைப் பரப்ப வேண்டும் என்னும் திருப்பணி இஸ்ரவேல் மக்களாகிய ஒரு நாட்டவருக்குப் போதனை புகட்டுவதற்குச் செலவிடப்பட்ட பணத்தை விடக் குறைந்த பணம்தேவை என்று சொல்லக்கூடுமா?

5. கொடுக்கும் முறையைவிட . கொடுக்கும் பண்பு முக்கியமானது. இயேசுவானவர் இது குறித்துக் கூறியுள்ளது "மனிதர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் , பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் "நீ தர்மஞ் செய்யும்போது மனிதரால் புகழப்படுவதற்கு மாயக்காரர்கள் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்யப்படுவதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" [மத் 6 1-4].

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் அமுக்கி, [illegible] சிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள் நீங்கள் [illegible] அளவினால் அளக்கிறீர்களோ [illegible]

வினல் உங்களுக்கு அளக்கப்படும் என்றார்' (லூக். 6:38).

"வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?" [லூக். 16:12].

"அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்" (யோ. 6:27)

"முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" [மத். 6·33]

"வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 5:20).

அப. பவுல் சொல்லுகிறதையும் கேளுங்கள்: "பின்னும் நான் சொல்லுகிறேன்; சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" [2 கொரி 9.6,7].

'உலகத்தில் நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அதுபோதுமென்றிருக்கக்கடவோம். பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1 தீமோ. 6:7,8,10)

"மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்". மோசம் போகதிருங்கள் [தசமபாகம், காணிக்கைகள் கொடுக்காமல்] தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாதிருங்கள்; நாம் சோர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" கலா. 6:6-9 என்கிறார்

6. கொடுக்கிறதில் ஒழுங்கு: (2 கொரி. 8: 1-4; 1 கொரி. 16:2). சிலர் ஒழுங்காகத் தசமபாகம், காணிக்கைகளைக் கொடுக்கமாட்டார்கள். ஏதாவது ஏவப்பட்டதை உற்சாகமாய் செய்வதுபோல் காட்டுவார்கள் அது தவறு. ஒழுங்கும் கிரமமுமாக கடவுளுக்குக் கொடுக்க வேண்டும். சிலர் பிந்தின மாதங்களில் விட்டுப்போனதையும் கணக்குப் பார்த்து கொடுத்து விடுவார்கள் அது நல்ல காரியமே. அதைவிட அவனவன் தன் தவணைக்குத்தக்கதாய் அவ்வப்போது செலுத்திவிட வேண்டும். தர்ம சகாயத்துக்கு இப்படி தீவிரப்பட்டார்கள் என்றால் 2 கொரி. 8:1-5 மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் கடவுளின் பங்கை செலுத்துவதில் நாம் குறைந்த தீவிரம் கா[illegible]"

7. நாம் எவ்வாறு தசமபாகம் கொடுப்பது தசமபாகம் கொடுப்பது என்பது ஒருவர் தனது நிகர வருமானத்தில் பத்தில் [illegible] பாகத்தைக் கர்த்தருக்குக் கொடுத்தல் [illegible] ஒருவர் கூலி [illegible] சம்பளம் வாங்குகிறவராயிருந்தால் [illegible] மாதம் 500 ரூபாய் சம்பளம் வாங்குகிறவரானால் 50 ரூபாய் கொடுக்க [illegible]


டும் ஆண்டவருடைய பங்கு பணமாகவோ, பொருளாகவோ இருந்தாலும் அதனை எடுத்து முதலாவது பிரித்துவைத்துவிட வேண்டும். ஒருவருக்கு மொத்தமாக பணம் கிடைக்கிறதென்றால் அவர் கர்த்தருடைய பங்கினை அவருடைய களஞ்சியத்திற்கு எடுத்துச் செல்வதற்காக உடனே பிரித்து வைத்துவிடல் வேண்டும் இது பழைய ஏற்பாட்டின் மாதிரியின்படி அமைந்துள்ளது [எண். 18:12-17; உபா. 18:5; நீதி. 3:9] இந்த வழியில் கடவுள் எப்பொழுதும் அவர் பங்கினைப் பெற்றுக் கொள்வார். ஒருவர் தம் செலவினங்களுக்கெல்லாம் பணம் கட்டிவிட்டு, தேவையான பொருள்களையெல்லாம் வாங்கிக் கொண்ட பின்னர் ஆண்டவருக்குக் கொடுப்போம் என்று காத்திருந்தால், அவரும் தமது பங்கிற்காகக் காத்திருந்து அது கிட்டாமல் போகும் நிலை தான் ஏற்படும்

"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" (1 பேது. 5·7) உலகப பொருளின் தேவையிலும் நமக்கு பாதுகாப்பு உண்டு என்பதற்கான வேதாகம வாக்குறுதியை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள. நாம் அவருடைய வாக்குத்தத்தங்களின்மேல் நிற்கலாம்" அவர் தம்மைத் தாமே மறுதலிக்க மாட்டார். கடவுள் மீது நம்பிக்கைக் கொள்வது மட்டும் போதாது. விசுவாசத்தில் செல்வந்தர்களாக வாழ்வதற்கு (யாக். 2:5) எல்லா ஞானமும் நிறைந்த பரலோகப் பிதாவில் முழுவதும் அன்பு கூறல் வேண்டும். அவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும். உமக்கு வருத்தம் உண்டாகும்போது ஏன் ஜெபம்பண்ணுகிறீர். கவலைப்படுவது பாவமா? மத். 6: 25-34ன் ஒளியில் அதனை நாம் வேறு என்னவென்று அழைக்கலாம்? நாம் அவருடைய வாக்குத்தத்தங்களின் மேல் நிற்கலாம் [மத். 6:33]. "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார்" (2 தீமோ. 2:13).

கர்த்தாவே சொல்லும் அடியேன கேட்கிறேன்; தசமபாகம் செலுத்துவோம்; ஆசீர்வாதம் பெறுவோம் மல்கி. 3: 8-10) உள்ளூர் திருச்சபையைப் போஷிப்பதிலே மக்கதொனியர்களைக் காட்டிலும் [2கொரி. 8:1-6] தீவிரமாயிருப்போமாக தசமபாகம் செலுத்துவது ஜீவப் பிரமாணங்களில் ஒன்று என்று கர்த்தர் சொன்னார்

(தொடரும்)

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப்பினாலே வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து"
[உபா 14:22]



மார்த்தீன் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

6. லூத்தர் வித்தன் புர்க்கில் பண்டித ராய் இருந்ததும் ரோமாபுரிக்கு சிந்தா யாத்திரை செய்ததும்:-

ஞானியென்று பெயர் பெற்ற சக்சோனிய நாட்டு நியமிகப் பிரபுவாகிய பிரதரிக் என்பவர் 1502-ம் வருஷம் வித்தன்புர்க் சர்வ கலா சாலையில் செக் சாஸ்திரியாரின் வாரிசின் பெயரில் லூத்தர் தத்துவ சாஸ்திர பண்டிதராக நியமிக்கப்பட்டார். லூத்தர் சாஸ்திரியார் அவ்வழைப்புக்கு இணங்கி காலதாமதமில்லாமல் ஏர்ப்புர்ட் நகரத்தை விட்டு வித்தனபுர்க்குக்கு போனார். அவர் 1508-ம் வருஷம் வித்தன்புர்க் சர்வ கலா சாலையில் சம்பளமின்றி வேலை செய்ய துவங்கினார்.

சர்வ கலாசாலை தலைவராகிய ஸ்தொப்பின் சாஸ்திரியார் லூத்தர் நீண்ட காலம் தத்துவ சாஸ்திர பண்டிதராக இருக்கப் பிரியாபபடாததால் லூத்தருக்கும் 1509-ம் வருஷம் முதல் வேத சாஸ்திர பட்டம் பேச்சிலர் ஆப் தியாலாஜி கொடுக்க, வேத சாஸ்திர பண்டிதரானார். அவருடைய வித்தியாப்பியாசங்களை கேட்க, மாணுக்கரும், பண்டிதரும் ஏராளமாய் வந்து கூடினார்கள். லூத்தர் இன்னும் உயர்ந்த பட்டங்கள் பெறுவதற்கு முன் பாப்பின் வல்லமையையும், அதிகாரத்தையும் அவரைக் கொண்டு தகர்த்து எறிய வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருந்தபடியால், லூத்தர் ரோமாபுரியைப்போய் பார்த்து, பாப்பு மார்க்கம் மெய்யாய் எந்த சீரில் இருந்தது என்று அறியும் பொருட்டு அனுபபப்பட்டார்

அகஸ்சீனிய சன்னியாசிகளுக்குள் அச்சமயம் ஒரு பிரிவினை உண்டாயிருந்தது. அதன் தன்மை இன்னதென்று நிச்சயமாய் சொல்ல முடியாது. ஆனால் எதிர் கட்சிகள் பாப்பின் தீர்ப்புக்கு அதை ஒப்புவித்து அவருடைய தீர்மானத்திற்கு உட்படுவதாக ஒத்துக் கொண்டார்கள். ஆகையால் இரு கட்சியாருடைய நியாயங்களையும், உள்ளதை உள்ளபடி எடுத்து சொல்லக்கூடிய இரு கட்சிக்காரருடைய நம்பிக்கைக்குரிய ஒருவரை அனுப்புவது மெத்த அவசியமாய் இருந்தது.

எல்லோராலும் நம்பப்பட்டவரும், மெத்த மதிக்கப்பட்டவருமாகிய லூத்தர், அவர்களுடைய பிரதிநிதியாக தெரிந்து கொள்ளப்பட்டார். லூத்தர் மேற்சொன்ன தீர்மானத்திற்கு உட்பட்டு 1511-ம் வருஷம் கிறிஸ்தவ ராஜ்யங்களுக்கும் பரிசுத்த

தலைநகரமாகிய ரோமாபுரிக்கு சிந்தா யாத்திரை செய்தார். ரோமாபுரி ரோமன் கிறிஸ்தவர்களுக்கு பிரதான குருவாகிய பாப்புவானவர் வாசம் செய்து, சகல தேவ ஆசீர்வாதங்களையும், ஆவியின் வரங்களையும் பகிர்ந்தளிக்கும் புண்ணிய ஸ்தலமாக அக்காலத்தில் எண்ணப்பட்டது.

லூத்தர் ரோமாபுரிக்கு பிரயாணம் செய்த போது, வழியில் இருந்த மடங்களிலெல்லாம் பாலிய வித்தக பண்டிதராகிய அவருக்கு உபசரணை செய்து தங்க தக்க இடங் கொடுத்து விருந்தளித்தார்கள். இத்தாலியா தேசத்திற்குள் வந்தபோது, புல்பூண்டு விருட்சங்களின் செழிப்பைப்பார்த்து பிரமிப்படைந்த அவர் குருக்களின் மரியாதையற்ற களியாட்டங்களையும், துன்மார்க்கத்திற்கு ஏதுவான தாக்ஷிணையையும் கண்டு பிரமிப்படைந்தார். லூத்தர் கபடற்ற மனமுடையவரானதால் அவர்களுடைய கேவலமான உல்லாச நடக்கைக்காக அவர்களை கடிந்து புத்தி சொன்னார். அவர்களோ அதற்கு பதிலாக அவரைக் கொல்ல உபாயம் செய்தார்கள் ஆனால் அவருடைய பொல்லாத எண்ணத்தை வாசல் காப்போன் லூத்தருக்கு தெரிவித்து, அவர் உயிர்தப்பி ஓடும்படி உதவி புரிந்தார். அந்நகரம் அவர் கண்ணுக்கு தென்பட்ட உடனே அவர் தமது முழங்காலை முடக்கி, இரு கைகளையும்விரித்து இரத்த சாட்சியுடைய உதிரத்தால் மூன்று முறை பிரதிஷ்டை பண்ணப்பட்ட பரிசுத்த ரோமாபுரியே வாழ்க என்றார்

அச்சமயத்தில் ரோமாபுரியில் பாப்புவாய் இருந்தவர் இரண்டாம் ஜூலியுஸ். அவர் யுத்த பிரியரும், யுத்த வீரரும் ஆனவர். போர் கவசம் தரிக்கதக்கவரேயல்லாமல் மேய்ப்பன் கோலை கையாடக் கூடியவரல்ல.

லூத்தர் ரோமாபுரிக்கு வந்த காலத்தில் பாப்புவானவர் பிரான்ஸ் தேசத்தோடு போர் தொடுத்திருந்தார் (ஆகையால் லூத்தரை கவனிக்கவும், அவர் விசேஷித்ததை விசாரிக்கவும் அவருக்கு அவகாசம் இல்லை). இருந்த போதிலும் லூத்தர் தம் பிரார்த்தை புத்திகரமான முடிவுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்து கொண்டார் என்று தெரியவருகிறது. லூத்தர் ரோமபுரியில் அகஸ்தினியர் மடத்தில் தங்கியிருந்த நாட்களில் ரோமாபுரியிலுள்ள அருமை, பெருமையான புதுமைகளையும், சரித்திர சம்பவமான சாட்சிகளையும் பார்க்க அவருக்கு நேரம் இருந்தது. ரோமாபுரி குருக்களும், குருக்கள் அல்லாத சேகரத்தாரும் தேவதாப்பக்தியில் மிக மேன்மையானவர்களாக இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்த்திருந்தார். அதற்கு மாறாக அங்கே பரிசுத்தத்தை அல்ல, சகலவித அக்கிரமம், தூஷணமும், பரியாசமும் மோச தந்திரங்களும், குருக்களிடத்திலும் லௌகீக உத்தியோகஸ்தரிடத்திலும் கண்டார்

ரோமாபுரியின் அக்கிரமங்கள் சோதோமின் அக்கிரமங்களைவிட அதிகமாய் இருந்தது. முந்தின பாப்புவாகிய ஆறாம் அலெக்சாந்தரையும் அவருக்கு விபசாரத்தில் பிறந்த பிள்ளைகளைப் பற்றியும் மகா கேவல

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	இடம்	காலம்
[illegible] A [illegible]	Sis G. [illegible]	[illegible]	[illegible]

மும் துர்க்கந்தமான பேச்சு எங்கும் பேசப்பட்டு வந்தது. ரோமையில் சனிக்கிழமையில், பரிசுத்த யோவான் ஆலயத்தில் எந்த அம்மாளுடைய மகன் மீசா என்னும் பூசை செய்கிறுரோ அந்த அம்மாள் வெகு பாக்கியவதி என்ற சொல் வழங்கியது. லூத்தர் அவர்கள் சொன்னவைகளை எல்லாம் நம்பினபடியால் தன் தாயாருக்கு அந்த பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று அதில் அதிக ஆசைபட்ட போதிலும் ஏராளமான பேர் அதற்காக போட்டி போட்டபடியால் லூத்தருக்கு சமையம் கிடைக்கவில்லை.

லூத்தர் ரோமாபுரியில் பலதடவை மீசா என்னும் பூசையை விசனத்துடன் நடத்தினர். காரணமென்னவென்றல் தன்னுடைய பூசை, நற்கிரியை, ஜெபங்களால் தம் பெற்றோர் இன்னும் உயிரோடிருந்தபடியால் அவரை உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்துமீட்க கூடாமல் போயிற்றே என்றதுதான் அந்த கவலை. தற்காலத்திலும் மூடபக்தியுள்ள பேதைகளை ஏமாற்றும்படி வைத்திருக்கிற போலி ஞாபகக்குறிகளில் ஒன்று பிலாத்துவின் படிக்கட்டுகள். அதை பரிசுத்த ஏணி என்றும் சொல்லுகிருர்கள். அது பாப்புவின் அரண்மனைக்கும் பரிசுத்த ஆலயத்திற்கும் எதிரே இருக்கிறது.

அது எருசலேமிலுள்ள பொந்திய பிலாத்தின் அரண்மனையிலிருந்து அற்புதமாய் ரோமாபுரிக்கு கொண்டுவரப்பட்டதாக சொல்லுகிருர்கள்.

(தொடரும்)



"இஸ்ரவேலிலே அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை" (2 நாளா. 15:3).



வருந்துகிறோம்
திருத்தம்

எக்காளசத்தம் 141 எப்ரல் 96இதழில் பிழையை திருத்தி வாசிக்க கேட்டுக் கொள்ளுகிறோம்.

I) பக்கம் – 5ல் – முதல் பத்தி – 21வது வரி 1907ம்வருஷம் மே மாதம் 2ம் தேதியென்றும், 2ம் பத்தியில்– 35 வதுவரியில் மிக சண்டாளப்பாதகன் என்றும்,

II) பக்கம் 14ல் – 2ம் பத்தியில் 5வது வரியில் நல்லன செய்தாலும், தீமை செய்தாலும் என்றும், 23வது வரியில் இந்த போதனைக்கும் என்றும்,

III) பக்கம் – 15ல் 2ம் பத்தியில் 2வது வரியில் சீராயிருக்கிறது அல்லவெனறல் என்றும் திருதகி வாசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

வேத பாடம் [தொடர்ச்சி]

எண்ணாகமம்

எண். 28:9,10

ஒவ்வொரு ஓய்வு நாளிலும் [சபத்நாள்] செலுத்த வேண்டிய பலிகள்.

28:11-15 மாதந்தோறும் செலுத்த வேண்டிய பலிகள.

28:16 -- முதலாம் மாதம் 14-ம் தேதியில் பஸ்காபண்டிகை.

28:17-25 அந்தமாதம் 15-ம் தேதியிலிருந்து 21-ம் தேதி வரை 7 நாட்கள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை.

28:26-31 பெந்தேகோஸ்தே பண்டிகை [லேவி. 23:10,15].

29:1-6 எக்காளப்பண்டிகை (லேவி. 23:23,24).

29:7-11 பாவ நிவாரணநாள் [லேவி. 23:26,27]

29:12-40 கூடாரபண்டிகை 8 நாட்கள் கொண்டாடப்பட்டது.

அந்தந்த நாட்களுக்குரிய பலிகளும் குறிக்கப்பட்டுள்ளன. இந்த வேதபாகத்தில் 6 பண்டிகைகளைக் குறித்து சொல்லப்பட்டிருக்கின்றது (லேவி 23-ம் அதிகாரம்) இஸ்ரவேலின் பிரதானபண்டிகைகள் 3ஐப் பற்றி கூறப்பட்டுள்ளது.

எண். 30 1,2

பொருத்தனை, விசேஷித்த பொருத்தனை பற்றிய விபரம்:-

பொருத்தனை. மனிதன் ஆபத்தில் பொருத்தனை செய்கிறான்; தான் நினைத்தகாரியம் நிறைவேற பொருத்தனை செய்கிறான்; உபகாரத்தில் பொருத்தனை செய்கிறான். தேவனை [illegible] பொருத்தனை செய்கிறான்; தன்னை பக்தியானவன் என்று காட்ட [illegible] பக்தியினாலும் பொருத்தனை செய்கிறான்; பொருத்தனை செய்தால் அதை நிறைவேற்ற வேண்டும். "கர்த்தர் கட்டளையிட்டது என்னவென்றால் ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனைபண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டு தன் ஆத்துமாவை நிர்ப்பந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும் அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்" [எண் 30 1,2].

நல்லது பொருத்தனை செய்யக்கூடாது பொருத்தனையைக் கர்த்தர் கேட்பார். [illegible] தேவனாகிய கர்த்தருக்கு பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்த

தாமதம் செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும். நீ பொருத்தனை பண்ணாதிருந்தால் உன்மேல் பாவமில்லை; உன் வாயினால் சொன்னதை நிறைவேற்ற வேண்டும்; உன் தேவனாகிய கர்த்தருக்கு உன் வாயினால் பொருத்தனைப்பண்ணிச் சொன்ன உற்சாகப் பலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக" [உபா. 23:21-23]

சிலர் மிஞ்சின பரிசுத்தவான்கள் போல், தலைமுடி வெட்டமாட்டேன்; செருப்பு போடமாட்டேன்; கட்டிலில் படுக்கமாட்டேன்; போர்வை போர்த்த மாட்டேன்; பணத்தை கையில் வாங்கமாட்டேன்; மூக்கு கண்ணாடி போடமாட்டேன் அப்படி, இப்படி என்று நிறைவேற்ற முடியாத பொருத்தனைகளை செய்துவிட்டு, பின் வீழ்ச்சியடைந்து தலைகீழாய் மாறி நடக்கிறதைப்பார்க்கிறோம். இது கேவலமும், பாவமுமாகும். ஒருவர் காவி நிறம்தான் உடுப்பேன் நான் சாது என்று சொல்லிக் கொண்டார். பொதுவாகவே சாது என்றால் என்ன, சந்நியாசி என்றால் என்னவென்றே தெரியாத இவர்களுக்கு இது தகாது. சாது என்றால் விவாகமே ஆகாதவராய் காவி வஸ்திரம் போட்டு வாழ்பவர். சந்நியாசி என்றால் விவாகம் ஆகி காவி ஆடை அணிந்து திரிபவர் என்பதாம்.

மேலே சொன்ன பக்தருக்கு மனைவி பிள்ளைகள் உண்டு. சில நாள் ஆயிற்று காவி வஸ்திரம் போய் பேண்ட், சர்ட் போட்டு புல்கானின் தாடி மீசைவைத்து நடக்கிறார். செருப்பு போட மாட்டேன் என்று சாதித்தவரை சில நாள் சென்று பார்க்கும்போது, ஷூ போட்டு மிடுக்காய் நடக்கிறார். இதெல்லாம் என்ன? வீழ்ச்சி. நீ பெரிய பொருத்தனை செய்கிறாயா? நல்லது உனக்கு மேலுள்ள ஞான அதிகாரிகளிடம் ஆலோசனை கேட்டு செய் "...பொருத்தனை செய்தபின் யோசிக்கிறது மனுஷனுக்கு கண்ணியாயிருக்கும்" (நீதி. 20:25). யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனை செய்தார் [நியா. 11:30] (இதில் இரண்டு பகுதி உண்டு) யெப்தா தன் பொருத்தனைபடியே செய்தார் [நியா. 11:39].

ஜெபத்தில் பல படிகள் உண்டு, அதில் விசேஷித்து பொருத்தனைப்பண்ணி ஜெபிப்பதாம். பொருத்தனைபண்ணி அதைக் கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள் (சங். 76:11) பொருத்தனை ஜெபத்தைக் கர்த்தர் கேட்கிறார் [சங். 61:5]; பொருத்தனை நம்மேல் இருக்கிறது சங். 56:12 அதைக் கர்த்தர் கேட்பார். யாக்கோபு சீரியா தேசத்துக்கு ஓடிப்போகும்போது, கர்த்தரிடம் ஒரு பொருத்தனை செய்தார் (ஆதி 28:19-22). திரும்பி வந்தபோது கர்த்தர் அதை ஞாபகப்படுத்தி பொருத்தனையை நிறைவேற்ற சொன்னார் (ஆதி 35:1-7) ஆபத்துக் காலத்தில் உன்னதமானவருக்கு பொருத்தனை செய்து அதைச் செலுத்து. தேவன் உன்னை விடுவிப்பார்; அதினால் தேவனை மகிமைப்படுத்துவாய் [சங் 51:14,15] சபை மத்தியிலே தேவ ஜனங்களுக்கு முன் அதைச் செலுத்துங்கள் (சங். 22:25; 66:13-20) தேவ ஜனங்களே கர்த்தருக்கு பொருத்தனை செய்து அதை சபையிலே செலுத்தி தேவனுக்கு நிறைவேற்றுங்கள் [சங். 76:11]. தேவ சமூகத்தில் வாயில் வந்ததை சொல்லாதிருங்கள் [பிர 5:1-6]

எண் 30:3-5

தன் தகப்பன் வீட்டிலிருக்கிற சிறுபெண் கர்த்தருக்கு ஒரு பொருத்தனைபண்ணி தன் ஆத்துமாவை நிர்ப்பந்தத்துக்குட்படுத்திக் கொண்டால் அவளுடைய தகப்பன் அதைக்

கேள்விப்படும் நாளிலே அதை வேண்டாம் என்று தடுத்தால் அது ரத்தாகும். அப்பொழுது தகப்பன் ஒன்றும் சொல்லவில்லை என்றால் அது நிறைவேற்றப்பட வேண்டும் பின் அவன் அதை தடுத்தால் அது அவனுக்குப் பாவமாகும் (எண், 30:15).

எண். 30.6-9

விவாகம் ஆன ஸ்திரீ ஒரு பொருத்தனை செய்தால் புருஷன் அதைக் கேட்கும் அதே நாளில் அதை வேண்டாம் என்றால் ரத்தாகும். ஒன்றும் சொல்லவில்லை என்றால் அது நிறைவேற்றப்பட வேண்டும்

எண். 30:9-16

விதவையானவளும், விவாகரத்தாகி தகப்பன வீட்டில் வந்து தங்கியிருக்கிற ஸ்திரீகளின் பொருத்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். புருஷன இருக்கும்போது செய்யப்பட்டதானல் புருஷன் அதை தடுக்கவில்லை என்றால் நிறைவேற்றப்பட வேண்டும். இதன் மூலமாய் எண். 30:13 தகப்பன் அல்லது புருஷன், ஸ்திரீகளின் பொருத்தனையை அங்கீகரிக்கவும், ரத்து செய்யவும் அதிகாரம் உண்டு.

நாம் அறிகிறது என்னவென்றால் கிறிஸ்தவ குடும்பத்தில் ஆளுகையும், சமாதானத்தையும் தேவன் நிலை நாட்டியுள்ளார். இதற்கு மாறாய் ஸ்திரீகளின் ஆளுகையோ, தான் தோன்றித்தனமான நிலையோ காணப்படும் குடும்பத்தில் தேவ ஆளுகையும், தேவ ஆசீர்வாதமும், பாதுகாப்பும் இருக்காது ஆனால் புருஷர்கள் பொருத்தனை செய்யவும், நிறைவேற்றவும் அதிகாரமுடையவர்களாயிருக்கிறார்கள் [எண். 30 2,16]

(தொடரும்)

"...யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி; உன் பொருத்தனைகளைச் செலுத்து" [நாகூம் 1:15].

சுவிசேஷம்:

இது முதற் கொண்டு

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

ஜீவிய வாழ்க்கை உயிர்வாழ்க்கையென் இந்த உயிர் வாழ்க்கை நீடூழிபோல ரும் எனனி மனிதன் பிறக்கிறன் வாழ்கி இருக்கிறது. நீழல் நீளம், ஆ ஹை யு ட ன ஒரு நாள் மரிக்கிறன் மரணமெ மறைந்து போகும் நீழல் உண்மையுல யும் நியாத்துடனே மனிதன பிறக்கிறன். உண்மையான உ ரு வ ம் வேற்ற. நீடூ

ளைத்து உருவம் என்ன என்று கண்டு கொள்ளமுடியாது. மனிதனுடைய சராசரி வயது குறைந்து கொண்டே போகிறது. மிருகங்களும் பிறக்கின்றன இறக்கின்றன. ஆனால் அவைகளுக்கு பாவபுண்ணியம் இல்லை. ஆதலால் அவைகளை மிருகங்கள் அல்லது பிராணிகள் என்கிறோம். பொல்லாங்கு செய்கிற எந்த மனித ஆத்துமாவுக்கும் வியாகுலமும், உபத்திரவமும் உண்டாகும் (ரோம. 2:9).

மனிதனுக்கு மிருகங்களைப்போல ஜீவனும், அதோடு கூட ஆத்துமா என்ற அழியாத வஸ்துவும் அவனுக்குள் இருக்கிறது. நன்மை, தீவினையை பாவம் புண்ணியம் எது என்று அறியும் அறிவு அவனுக்குள் இருக்கிறது. மனிதன் செய்யும் நன்மைக்கோ, தீமைக்கோ தக்கபலனை அடைவான். ஒருவர் மரிக்கிறார் என்றால் அவருடைய சரீரம் தான் மரிக்கிறது; ஆத்துமா சரீரத்தை விட்டு வேறு பிரிக்கிறது. "ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்படைவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" [எபி. 9:27].

இரண்டு பேர் இருந்தார்கள் ஒருவர் மரித்து பரத்தில் நல்லவர்கள் இளைப்பாறும் இடத்தில் சுகமாய் வாழ்ந்தார். மற்றவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். அவருடைய ஆத்துமா வேதனையுள்ள பாதாளத்தில் அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறது (லூக். 16:21-31). காரணம் இவர் தன் மனம்போல் ஜீவித்து, பாவம் செய்து மரித்தார், பாதாளத்தில் தள்ளப்பட்டார். முந்தினவர் ஏழையாய் இருந்தபோதிலும், தேவ பக்தியுடன் ஜீவித்து இறைவனோடு தொடர்புடையவராய் ஜீவித்ததினால் முக்தி பெற்று சுகமாய் வாழ்ந்தார்.

நீ மரிக்கப்போவது நிச்சயம். அது எந்த வழியிலும், எந்த நாளிலும் வரும்; வியாதியினாலோ, விபத்துகளினாலோ, வயது முதிர்ந்ததினாலே அல்லது வேறு விதங்களினாலோ வரலாம். நீர் கடவுளைக் கண்டடைந்தீரா? பாவமன்னிப்பு பெற்றுவிட்டீரா? பாவத்தை விட்டு மனந்திரும்பி விட்டீரா? அதற்கு ஒரே வழி உம்முடைய பாவங்களை மன்னிக்கிறதற்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்த இயேசுவிடம் வாரும்; அவரை நோக்கி பாரும்; பாவத்தை விட்டு மனந்திரும்பி இயேசுவை நோக்கிப் பார்த்து கூப்பிடும். ஆண்டவரே என் பாவத்தை மன்னியும் என்று கேளும்; அவரே உம்முடைய பாவத்தை மன்னித்து, உம்மை பாவத்திலிருந்தும், ரோகத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், பேய் பிடியிலிருந்தும் விடுதலையாக்க கூடிய தெய்வம். இப்படி நீ மனந்திரும்பி இயேசுவை சொந்த இரட்சகராகவும், தெய்வமாகவும் ஏற்றுக் கொள்ளும்போது உம்முடைய ஆத்துமா இறைவனைக் கண்டடைகிறது.

இப்போ நீர் மரித்தாலும் பிழைப்பீர், மரியாமலும் இருப்பீர். இப்படி கடவுளைக் கண்டடைந்து கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் அவர்களுடைய பிரயாசங்கள் அவர்களோடே கூடப்போகும். அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டோய்ந்து இளைப்பாறுவார்கள். கர்த்தருக்குள் இல்லாமல் மெய்யான கடவுளை, இயேசுவைக் கண்டடையாமல் நீர் மரித்தால் நீர் பாக்கியமுள்ளவரே உமக்கு ஐயோ! நீர் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் அங்கே அவர்கள் அக்கினி அவியாமலும், அவர்கள் புழு சாகாமலும் இருக்கும். நித்திய காலமாய் அவியாத அக்கினிக் கடலாகிய நரகத்தில் வேதனையுள்ள இடத்துக்கு நீர் ஏன போக வேண்டும்.

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று இயேசு அழைக்கிறார் [மத். 11:28-30] இயேசுவண்டை வாருங்கள்; கர்த்தருக்குள்ளாகுங்கள் நீங்கள் பாக்கியவான்கள்

இதுதான் அது, அதுதான் இது என்பது

ஒரு ஊரிலே ஒரு விவசாயி இருந்தார். அவர் குடும்பமாய் தூரத்திலுள்ள தன் உறவினர் கிராமத்திற்குப் போய்வர வேண்டியதாயிருந்தது. ஆனதால் தன் வீட்டிற்குப் பக்கமுள்ள தன் சிநேகிதன் ஒருவரிடம் தான் அருமையாய் வளர்த்து வந்த தன் இரண்டு வெள்ளாடுகளை அவரிடம் ஒப்படைத்து செலவுக்கு கொஞ்சம் பணமும் கொடுத்து ஆடுகளைப நன்றாய் பார்த்துக் கொள்ளுங்கள்; நான் திரும்பி வந்ததும் ஆட்டுக்கு அதிக செலவானாலும் தந்து விடுகிறேன் என்று சொல்லி விட்டுப் போனார் இந்த மனிதன் ஒரு ஆட்டை வெட்டி கறி சமைத்து தின்று விட்டான்

சில நாட்கள் கழித்து ஆடுகளின் உரிமையாளராகிய விவசாயி தன் ஊருக்குத் திரும்பி வந்தார் அன்றைய தினமே தன ஆடுகளை ஒப்படைத்தவரிடம் போய ஆடுகளைத் தாருங்கள் எதும் அதிகம் செலவாயிற்றோ அந்த பணத்தைத தருகிறேன என்றார். மேற்படி திருட்டு ஆசாமி ஒரு ஆட்டைக் கொண்டு வந்து நிறுத்தினா. ஆடுகளின் உடமையஸதா் கேட்டார் ஒரு ஆடு இருக்கிறத இன்னொரு ஆட்டைக் காணோமே இன்னொரு ஆடு எங்கே? என்றார் ஆசாமி இருக்கிற ஒரு ஆட்டைக் காட்டி இதோ இருக்கிறதே என்றான். உடமையஸ்தர் கேட்டார் இரண்டு ஆட்டையல்லவா ஒப்படைத்தேன் ஒன்று இருக்கிறது இன்னொன்று எங்கே என்றார் ஆசாமி நிற்கிற ஆட்டைக் காட்டி இதோ இருக்கிறதல்லவா? என்றான். உடமையஸதா் கேட்டார் மற்றொரு ஆடு எங்கே? ஆசாமி இதோ இருக்கிறது என்றான் [illegible] ஒப்படைத்தேன், ஒன்று இருக்கிறது மற்றொன்று எங்கே என்றார் ஆசாமி [illegible] இதோ இருக்கிறதே என்றான், உடமையஸ்தர் சரி

ஒன்றையாவது காப்பாற்றுவோம் என்று இருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு நடந்தார்.

வேத உபதேசகர்: இயேசு நாமக்காரரிடம் என்னையா இயேசுவானவர் தானகவே, அவராக வந்தாரா? அல்லது அனுப்பபபட்டு வந்தாரா?

இயேசு நாமக்காரர்: அனுப்பபபட்டு வந்தார்.

வேத உபதேசகர்: யாரால் அனுப்பப்பட்டு வந்தார்?

இயேசு நாமக்காரர்: தேவனால் அனுப்பப்பட்டு வந்தார்

வேத உபதேசகர்: தேவன் யார்?

இயேசு நாமக்காரர்: இயேசு

வேத உபதேசகர்: இயேசுவே இயேசுவை அனுப்பிக் கொண்டு வந்தாரா?

இயேசு நாமக்காரர்: தேவன் ஒருவரே

வேத உபதேசகர்: இயேசுவானவர் சொல்லுகிறார் தேவனே என் பிதா என்று

இயேசு நாமக்காரர்: அது அவர் மனிதனாய் வந்தபடியினால் நமக்கு மாதிரி காட்டும்படி என் பிதா என்றார்

வேத உபதேசகர்: யோ. 20 17ல் இயேசுவானவர் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று [illegible] மத். 6·9ல் பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று [illegible] நோக்கி [illegible]

இயேசு நாமக்காரர்: அது இயேசுவானவர் பூலோகத்திலிருக்கும் போதும் பரலோகத்திலும் இருக்கிறார். பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்தில் ஏறினவன் ஒருவனுமில்லை என்று பைபிளில் எழுதியிருக்கிறது

வேத உபதேசக்காரர்: எங்கே?

இயேசு நாமக்காரர்: நான் குறித்துக் கொண்டு வரவில்லை, அடுத்த தடவை வரும்போது குறித்துக் கொண்டு வருகிறேன்.

வேத உபதேசக்காரர்: நீர் வரமாட்டீர் நான் வசனத்தைச் சொல்லுகிறேன் எடுத்துக் வாசியும் [யோவா 3:13] வசனம் வாசிக்கப்பட்டது

இயேசு நாமக்காரர்: ஆ! இதோ இங்கே இருக்கிறது

வேத உபதேசக்காரர்: அப். யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதும் போது இயேசுவானவர் மகிமையடைந்து பரலோகத்துக்குப் போய் அங்கே இருக்கிறார் என்பதை அவர் (அப. யோவான்) சாட்சியிடுகிறார். உங்களுக்கு பைபிள் விளங்காததினால் குழப்புகிறீர்கள்; இந்த வசனம் அப். யோவானின் சாட்சியாகும்.

இயேசு நாமக்காரர்: பிதாவின் நாமம் என்ன?

வேத உபதேசக்காரர்: பிதா

இயேசு நாமக்காரர்: இல்லை பிதாவின் நாமம் இயேசு.

வேத உபதேசக்காரர்: பரலோகத்திலிருந்து பரிசுத்தமாய்ப் பிறந்து சிலுவையில் நமக்காக இரத்தம் சிந்தி மரித்தது பிதா அல்ல, குமாரனே குமாரன் பெயர்தான் இயேசு [மத் 1:21; 1 யோவா. 4:9,10,14,15] இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று நீங்கள் அறிக்கை செய்யாதவரை இரட்சிக்கப்படமாட்டீர்கள் [அப். 8:37,38; 2 யோ. 7,9,10,11].

இயேசு நாமக்காரர்: தேவன் ஒருவரே அவர் இயேசுவே

வேத உபதேசக்காரர்: தேவன் என்றால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்று அர்த்தம்.

இயேசு நாமக்காரர்: அது எங்கே இருக்கிறது.

வேத உபதேசக்காரர்: தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று இயேசு சொல்லுகிறார் [யோ. 14:1].

இயேசுவுக்கு கீழ்ப்படியுங்கள்; பிதாவையும், பரிசுத்த ஆவியானவரையும் விழுங்கி விடாதீர்கள். ஏற்கனவே உங்கள் கூட்டத்தார்களை பேசி ஜெயித்ததற்கு தர வேண்டிய [அவர்கள் திரித்துவத்தை பழைய ஏற்பாட்டிலிருந்து நிரூபிக்கிறவர்களுக்கு Rs. 2000/- பரிசு என்று அறிவித்தது] பணத்தை தரவில்லை. அந்த பணத்தையும் அவர்கள் தரனும் பிதாவை மறுதலிக்காதிர்கள். Good Bye



"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்" (எபே. 1 17)



சாட்சி

என்னிடத்தில் வருகிறவனை புறம்பே தள்ளேன்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் வாழ்வில் செய்த மகத்துவ கிரியைகளை புதிய எருசலேம் செய்தி மூலமாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

என் பெயர் எம் ராஜன் நான் ஒரு இந்து வைணவ குடும்பத்தில் பிறந்தவன். சிறு வயது முதலே பய பக்தியுடன் வைணவ தெய்வங்களை பூஜித்து வந்தேன். பிற மார்க்கத்தவரை காரணமின்றி பகைத்து வந்தேன் ஏனெனில் நான் அச்சமயம் போதிக்கப்பட்ட விதம் அப்படி. ஒரு நாள் எங்களது கிராமத்திற்கு கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷம் கூறும் மிஷனெரிகள் வந்து கர்த்தராகிய இயேசு மனிதனுக்கு அருளும் இரட்சிப்பைப் பற்றியும், சமாதானத்தை பற்றியும் பிரசங்கித்துக் கொண்டிருந்தனர். அப் பிரசங்கத்தினை கேட்டு, நான் பலவிதத்திலும் அவர்களை பரியாசம் செய்து, பகடி பேசி, எள்ளி நகையாடி அவர்களை வேதனைப்படுத்தினேன். இது போதாதென்று சுவிசேஷ பிரதிகளையும், புதிய ஏற்பாட்டு பிரதியையும் தீயிட்டு கொளுத்தினேன் இதெல்லாம் எனது அறியாமையினால் செய்ததினால் இறை கோபத்திற்கு தப்பினேன்.

எனது பால்ய பருவத்திலேயே தேவனுக்கு துரோகியாய் காணப்பட்டதினால் என் வாழ்க்கையில் சமாதானமே இல்லை. மனிதர்களும் குறிப்பாய் எனது குடும்பத்தினரே என்னை வெறுத்தனர். இவ்வுலகில் என்னை நேசிப்பவர்கள் அன்பு கூறுகிறவர் [illegible] என தேடிப் பார்த்த போது [illegible] கூட இல்லை அன்பு, பாசம், [illegible] வார்த்தைகளுக்கு [illegible] புரியாது [illegible]வேன்றே அறியா[illegible] வந்தது இதனால் [illegible] முடிவு எடுத்தேன். இவ்வுலகில் நம்மை உண்மையாய் நேசிப்பவர்கள் அன்பு கூறுகிறவர்கள், நம்மீது கரிசனையில்லாதவர்கள் இருக்கும்போது நாம் ஏன் இப் பூமிக்கு பாரமாய் இருப்பானேன் என எண்ணி தற்கொலைக்கு முயன்றேன் அதில் தோல்வி. தொடர்ந்து பல முறையில், பல நேரங்களில் நான் முயற்சித்தும் கருணையுள்ள கர்த்தர்தான் என்னை தடுத்தாட்கொண்டார் என்று இப்போழுது எண்ணுகிறேன் இல்லையெனில் தற்சமயம் எனது விலாசம் நரகத்தில் இருக்கும் என எண்ணுகிறேன்

[illegible] [illegible] [illegible] அற்றவனுனேன். எல்லோருக்கும் பரியாச பொருளானேன். அடிக்கடி என வாழ்க்கை மீது நானே நம்பிக்கை இழந்து விட்டேன். ஆறுதலற்று, தேற்றுவாரின்றி இருந்த எனக்கு தொடர்ந்து அரசு தேர்வு எழுதியதில் தோல்வி என்னை படிக்க வைக்க பெற்றோர்களும் முன் வரவில்லை. காரணம் மீண்டும் தோல்வியாகிவிடுவேன் என்று அவர்கள் உறுதியாய் நம்பினதேயாகும். இதனால் நான் தமிழ் நாட்டிலிருந்து பம்பாய் செல்ல முடிவு எடுத்தேன்

எனது 17வது வயதில் பல விதக் கனவுகளோடு பம்பாய் வந்து சேர்ந்தேன். ஏற்கனவே வாழ்க்கையில் [illegible] வயதில் [illegible] இருந்தன. அதையெல்லாம் மறந்து விட்டு பம்பாயில் எனக்கு [illegible] தும் பாவ வழியில் [illegible] லாததால் பலவிதமாக [illegible] மாறும் [illegible] என்னை [illegible] டேன்.

அச்சமயம் [illegible] பாய் [illegible]

சபை செல்லும் வாய்ப்பு கிடைத்தது. ஏதோ ஒப்புக்காக செல்ல ஆரம்பித்த நான், அங்கு காணப்படும் பரிசுத்தவான்களும் தேவனுடைய பிள்ளைகளில் நன்நடத்தையினால் கவரப்பட்டு தொடர்ந்து சென்றுவரலானேன் அப்போது என்மீது கொண்ட அன்பு என்னை சிந்திக்க வைத்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவர் அளிக்கும் இரட்சிப்பைப் பற்றியும், மனிதன மீது கொண்ட அவரது அளவில்லா அன்பினைப் பற்றியும் எனக்கு பரிசுத்தவான்கள் போதித்தனர்

ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் மனமாற நேசிக்கவில்லை. பரிசுத்தவான்கள் சொல்லுகிறார்களே என்ற காரணத்துக்காக நான் தொடர்ந்து ஆலயம் செல்லலாயினேன். அப்போது அங்குள்ள தேவ ஜனங்கள் என்னிடம் காட்டிய அன்பு கர்த்தரை கண்டடைய தக்கதாய்த் ஏவினது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனனுடைய பாவத்திற்காகவும், சாபத்திற்காகவும் இப்புவியில் வந்து மனிதனைப் போலவே பாடுபட்டு எனக்காகவும் கல்வாரி சிலுவையில் மரித்தார் என்று நான் உணர்ந்து மெய் மனஸ்தாபத்துடன் மனந்திரும்பினேன். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளேன்" என்று திருவுளம் பற்றின உலக இரட்சகர் இயேசு, கொடிய பாவியாகி துரோகியாய் இருந்த என்னையும் ஏற்றுக் கொண்டார் அல்லேலூயா!

பரிசுத்தவான்களது ஆலோசனையின்படி நான் பாவ மன்னிப்புக்கென்று எனது பாவத்தையெல்லாம் வேத வசனத்தின்படி அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன் கர்த்தர் என்னை மிகுந்த சந்தோஷத்தினால் நிரப்பினார். அதுவரையிலும் சமாதானமின்றி என் வாழ்வை முடித்துக் கொள்ள எண்ணியிருந்த நான், இனி கிறிஸ்துக்காக வாழவேண்டும் என்று எண்ணி ... தர, சகோதரிகளும் என் குடும்பத்தினர் என்மீது காட்டத்தவறிய அன்பைக் காட்டிலும் மேலான அன்பு செலுத்துகின்றனர். நல்ல குணங்கள், நற் சிந்தனை, நன்னடத்தை இவையாவும் தேவன் தமது திருச்சபையின் மூலமாக பெற்றுக கொள்ள அநுக்கிரகித்தார்; வாழ்க்கையிலும் தேவன் என்னை உயர்த்தினார். அதுமட்டுமல்லாது தேவன் தமது தூயாவியினால் என்னை அபிஷேகித்தார். அநுதினமும் நடத்துகிறார். போதிக்கிறார். வாழ்வில் ஏற்படும் எவ்வித நெருக்கமாயினும் அவர் பாதம் அமர்ந்து அவரது உதவியை தேடும்போது தினமும் உதவுகிறார்; அவைகள் ஏராளம்; கர்த்தர் எனக்கு சகாயர்.

இதைப் படிக்கிற அன்பான வாசகரே, நீங்களும் இவ்வுலகில் பலவிதத்தில் நெருக்கப்பட்டோ, ஒடுக்கப்பட்டோ, ஆறுதலற்றவராய் இருப்பீராயின் இன்றே இறை இயேசுவின் சுவிசேஷத்திற்கு செவிசாய்த்து அவரண்டை தயங்காது வாருங்கள். நான் பெற்ற இம்மேலான அநுபவத்தினை விடவும் அவர் உங்களை உயர்த்த வல்லவராயிருக்கிறார். சகல ஆசீர்வாதத்திற்கும், சமாதானத்திற்கும், நன்மைக்கும் காரணராகிய கிறிஸ்து இயேசு உங்கள் வாழ்விலும் இக்கிரியைகளை நடப்பிக்க ஆவலுள்ளவராயிருக்கிறார் என்று கூறி எனது சாட்சியை இயேசுவின் நாமத்தில் முடித்துக் கொள்ளுகிறேன்.

கிறிஸ்துவுக்குள்,
சகோ. எம். ராஜூ
புதிய எருசலேம் சபை
தாராவி கிளை,
மும்பை – 17

"கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். இரட்சிப்பார்" [சங். 72:12,13]

சபை தலைவர்கள்

ஜெபிக்க வேண்டிய விதமாவது (சங். 141).

தேசத்துக்கு அதிபதி [தலைவன்] ராஜா. ராஜா அதிபதிகளை நியமித்து தமது தேசத்தை பரிபாலனம் செய்கிறார் ஜனங்களை ஆள கர்த்தரே ராஜாவைத் தருகிறார் ராஜாவின் ஜெபத்தைக் கர்த்தர் கேட்கிறார் சபைக்கு காணப்படாத தலை [Invisible head] கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. காணப்படுகிற தலைவன் அவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலன். சபையை ஆளுகை செய்யும் அதிகாரம் அப்போஸ்தலனுக்கு உண்டு. இவருடைய ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார்.

சபையை நிர்வகிக்க மேய்ப்பர்கள் [illegible] பர்கள், போதகர்கள், ஊழியக்காரர்கள் என்று பலரும் இறைவனாலும், தலைவனாலும் ஏற்படுத்தப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் எல்லைகள் கொடுக்கப்பட்டு, ஒரே தலைவனுக்கு கீழே இயங்கி வருகிறது. சபையை மேய்கிற கண்காணிகள், அவரவர்களின் எல்லைக்குள்ளிருந்து மந்தையை கண்காணிக்கிறார்கள். அது சீரான சபை [illegible].

1. சபையார் இளமையில் ஓங்கி வளருகிற விருட்சக்கன்றுகளைப் போல் ஆவிக்குரிய வளர்ச்சியை தீவிரமாய் அடைந்து கொண்டே இருக்க வேண்டும்

2. சபை பிள்ளைகள் அரமனையில் சித்திரம் [illegible] மூலைகளில் வைக்கப்பட்ட அலங்கார கற்களைப்போல், தங்கள் சாட்சியுள்ள வாழ்க்கையால் திருச்சபைக்கு அலங்காரமாய் கொடுக்க வேண்டும்.

3. சபை [illegible] உலகப்பிரகாரமாக [illegible] ஆவிக்குரிய பிரகாரமாகவும் மிகுதியாய் ஆசீர்வதிக்கப்பட்டு செழிப்பாய் இருக்க வேண்டும் தரித்திரராய், நோயாளிகளாய், [illegible] விருத்திகிய [illegible] களாய் ஆவிக்குரிய அறிவில்லாதவர்களாய், தேவ தொடர்பற்றவர்களாய் இராமல், எல்லா அறிவிலும், எல்லா உபதேசங்களிலும், எல்லா வரங்களிலும் நிறைந்து, ஜெய, ஜெய ஜீவிகளாக இருக்க வேண்டும்.

4. மந்தை பெருகுகிறதுபோல் திருச்சபையில் ஆத்துமாக்கள் பெருகிக்கொண்டே இருக்க வேண்டும்.

5. சபையிலே எருதுகளைப்போல் [illegible] கிற ஊழியர்கள் [illegible] நாளுக்கு நாள் [illegible] குதிரைகளைப்போல, [illegible] ஜீவியத்தில், [illegible] பலத்தவர்களாய், விசுவாசத்திலும், [illegible] மையிலும் நிறைந்தவர்களுமாய் ஊழியர்கள் இருக்கவேண்டும். சபைக்குள் நாய்கள் போன்ற கள்ள ஊழியர்கள் பிரவேசிக்க இடமிருக்கக்கூடாது.

அக்கறை ஆவிகள் [illegible] ஜனத்தை பாவத்தில் விழத்தள்ளாதபடி ஆத்தும உத்திரவாதிகளான, ஆலோசனைக்காரரால் சபை காக்கப்பட்டிருக்க வேண்டும் இந்த சபையில் என்ன இருக்கிறது என்று மக்கள் ஆவிக்குரிய வறுமையால் வேறு சபைக்கு போகக்கூடாது [பரிசுத்தத்தை விரும்பாதவர்கள் [illegible] மற்றவர் ஓடிப்போனார்கள், போகட்டும்] சபையிலே கூக்குரல், [illegible] ஒன்றையே சிந்தித்து, ஒரே [illegible] ஒரே இலக்கை நோக்கி, ஒருமனப்பட்டவர்களாய், [illegible] வேண்டும் [illegible] இதுவே சீரான சபை [illegible]

[தொடரும்]

தேவனைத் தேடு
SEEK GOD

Regd. No 040088/84
Postal Regd. No MH BY NE-84/35
Tamil Monthly Magazine



நோவா Noah

[illegible]

[illegible] லாமேக்கின் குமாரன். இவர் ஆதாமின் [illegible] [illegible] (2பே. 2:5). இவர் நீதிமானா[illegible] [illegible] கட்டளையின்படி [illegible] பேழையை [illegible] ஒரு [illegible] உண்டானபோது தேவனுடைய கட்டளையின்படி ஒரு [illegible] அதிலே தானும் தன் குடும்பமும் பிரவேசித்து இரட்[illegible] [illegible]; அப்போது கர்த்தர் அவரோடு ஒரு உடன்படிக்கை பண்ணினார் [illegible] (ஆதி 9:1,9,15; ஏசா 54:9,10). நோவாவுக்கு 3 குமாரர்கள் இருந்தார்கள். இவர் உலகமுண்டான பின் 1500ம் வருஷத்திலே பிறந்து 950 வருஷம் உயிரோடி[illegible] 2006ம் வருஷத்திலே மரணமடைந்தார்.

நோவா 7 கட்டளைகளைக் கொடுத்தார். 1. [illegible] நியாயங்களை [illegible] [illegible]தென்பதும், 2. கர்த்தரின் திருநாமத்தை [illegible] வேண்டும் என்பதும், [illegible] செய்யக் கூடாதென்பதும், 4. விபசாரம் பண்ணக் கூடாதென்பதும், 5. களவு செய்யக் கூடாதென்பதும், 6. [illegible] வேண்டும் என்பதும், 7. மாம்சத்தை இரத்தத்தோடே புசிக்கக் கூடாதென்பதுமே.

[illegible] இரவு விழிப்பு ஜெபம்

[illegible]

1 [வெள்ளி] மே 1996
1 [திங்கள்] ஜூலை 1996
30 [செவ்வாய்] ஜூலை 1996

தேவனைத் தேடு செய்தி பத்திரிகை

ஆண்டு சந்தா Rs. 10-00
ஆயுள் சந்தா Rs. 100-00

[illegible]

CHIEF PASTOR N. LAZAR
NEW JERUSALEM CHURCH
CHURCH LANE, TILAK NAGAR
DARGA CROSS ROAD, BHANDUP
BOMBAY-400 078, INDIA

1. [illegible]

2. [illegible]

3. [illegible] (CAPITAL LETTER) [illegible]

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 143 - JUN. '96

"புதிய எருசலேம் சபை"

'...வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்... விழித்திருங்கள்... உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்..."

– மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள் :

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.
2. விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).
3. திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20
4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.
5. அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.
6. இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)
7. நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக "இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு தூண்கள் (நீதி. 9:1-6) இது அதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1:1; 10:40-43).

CHIEF PASTOR- N LAZAR

இதழின் உள்ளே . . .

ஆசிரியர் உரை

தேவ ஜனங்கள் யுத்தம் செய்து கானானைக் (கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை) பிடிக்க வேண்டும். யோசுவாவின் மூலம் முக்கியமான எதிரிகள் முறியடிக்கப் பட்டு, கானானை பங்கு போட்டு, இன்னின்ன கோத்திரத்திற்கு இந்த, இந்த சுதந்திரம் என்று அளந்து கொடுக்கப்பட்டது. தேவ ஜனங்கள் இரட்சிக்கப்படும்போது, பெரிய, பெரிய பாவங்களிலிருந்து கிறிஸ்து விடுதலையாக்கி, மீதியுள்ள சின்னச், சின்ன பிசாசுகளை, பாவங்களை வெளியேற்றிவிட்டு சுகமாய் கானானை அநுபவியுங்கள் என்றார். ஆனால் இஸ்ரவேலர்களோ பலத்தபோதும், புற ஜாதிகளைத் துரத்திவிடாமல் தங்களுக்கு அடிமைகளாய் அவர்களை வைத்துக் கொண்டார்கள். இது இவர்களுக்கு பிரச்சினையாயிற்று. புற ஜாதிகள் பலத்தபோது, இஸ்ரவேலர்களை அடிமை கொண்டார்கள். நீ கிறிஸ்தவ ஜீவியத்தில் சோரும்போது, ஜெபவாழ்க்கை இல்லாதபோது, விழிப்பாயில்லாதபோது, நீ விட்டு விட்ட சின்னச், சின்ன பாவங்கள் (ஒரு பாவம்போதும், உன்னை வீழ்த்த, நரகத்துக்கு கொண்டுபோக) உன்னை மேற்கொள்ளும், அடிமைப்படுத்தும். இதை நியாயாதிபதிகளின் புத்தகம் வெகு அருமையாக சித்தரிக்கிறது. நீ யுத்தம் செய்து, இரத்தம் சிந்தத் தக்கதாய் போராடு எபி. 12:4, எந்த மனிதனும் தேவபயமில்லை என்றால், பாவத்தை உள்ளத்தில் வெறுக்காதவரை பாவத்திலிருந்து விடுதலையாக மாட்டான். மாய்மாலமான ஜெபத்தினால் எந்த பிரயோஜனமுமில்லை. உண்மையாய் கர்த்தரை நோக்கி கூப்பிடு, நீ யுத்தம் செய். தேவ வசனத்தின்படி நடந்து உன்னை காத்துக் கொள் (சங். 199:1.9). பாவத்தையும், உலகத்தையும், பிசாசையும் ஜெயிப்பீர்கள் (1 யோ. 2:12-17). "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 5:5).

கிறிஸ்துவுக்குள்,

N. Iyer

CHIEF PASTOR· N LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

தசமபாகம் கொடுப்பதற்கான காரணங்கள்:-

கடந்த மாதத்தில் திருச்சபையின் பொருளாதாரத்தைக் குறித்து எழுதியிருந்தோம். அதைச் சம்பந்தப்பட்டு திருச்சபையின் சட்டங்கள், முற்பிதாக்களின் கூட்டுகள், முற்பிதாக்கள் இதைப்பற்றி என்ன சொன்னார்கள் என்பதையும் பார்ப்போமாக

தசமபாகம் தருதலைப்பற்றி ஆதி திருச்சபையின் பிதாக்கள் கூறியவைகள்: கி.பி. 200ல் உருவான அப்போஸ்தல சட்டத்தில் நாம் பின் வருமாறு படிக்கிறோம். முதற்பலன்களையும், தசமபாகங்களையும், கண்காணியார் தாமே அவற்றில் பங்கெடுத்துக் கொண்டு மறறவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அவர் கடவுளின் ஓர் மனிதர் என்ற நிலையில் கடவுளின் கட்டளைப்படி கொடுக்கப்பட்ட இந்த தசமபாகங்களையும் முதற்பலன்களையும் உபயோகப் படுத்தட்டும். ஆகையினாலே கண்காணிமார்களே, நீங்கள்தான் திருச்சபைக்கு ஊழியம் செய்யும் ஆசாரியர்கள். மற்ற ஊழியர்கள் லேவியர்; திருச்சபைக்கு ஊழியம் செய்பவர்கள் திருச்சபையாரால் காப்பாற்றப்பட வேண்டும் நீங்கள் இப்பொழுது இதனை அறிந்திருக்க வேண்டும். ஆண்டவர் உங்களை கூடுதலான கட்டுகளினின்று விடுதலையாக்கியிருப்பினும், பாவத்துக்கு பிரயாசித்தம் பலியாக மிருகங்களை பலியிடாமல் தடுக்கப்பட்டிருப்பினும் இவை போன்ற மற்ற ஆசாரங்களை செய்யாதவாறு தடுக்கப்பட்டிருப்பினும் நீங்கள் ஆசாரியர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளிலிருந்து விடுதலையளிக்கப்படவில்லை. அல்லது ஏழைகளுக்கு நன்மை செய்வதிலிருந்தும் விடுவிக்கப்படவில்லை என்பதே

ஜெரோம் கி.பி. 345-420, என்பவர் [illegible]

பங்காகவும், அவருடைய சுதந்திரத்தின் வரிசையிலும் இருப்பேனானால்; ஆசாரியர்களையும் லேவியரையும்போல தசமபாகத்தினால் வாழ்வேன். பலிபீடத்தில் ஊழியம் செய்வேன். அதன் காணிக்கைகளால் உணவு கொடுத்து ஆதரிக்கப்படுவேன்." பழங்காலத்தில் ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் கொடுக்கப்பட்ட தசமபாகங்களும், காணிக்கைகளும் இப்பொழுது திருச்சபைக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதை விளங்கிக் கொள்ளுகிறோம். ஒருவன் இதனைச் செய்யாவிட்டால் அவன் கடவுளை வஞ்சிக்கிறான்; ஏமாற்றுகிறான் என்பதே.

மிலானைச் சேர்ந்த அம்புரோஸ் (கி.பி. 340-397) என்பவர் கடவுள் பத்தில் ஒரு பங்கினை தமக்காக ஒதுக்கி வைத்துக் கொண்டுள்ளார். எனவே கடவுள் தமக்காக ஒதுக்கி வைத்துக் கொண்டுள்ளதை மனிதன் வஞ்சித்து எடுத்துக் கொள்வது அவனுக்கு சட்ட விரோதமானது. உமக்கு அவர் ஒன்பது பங்குகளைக் கொடுத்திருக்கிறார். பத்தில ஒருபங்கினை (1/10) அவர் தமக்காக ஒதுக்கி வைத்துக் கொண்டுள்ளார். எனவே நீர் அந்த பத்தாவது பங்கினை கடவுளுக்கு கொடுக்கவில்லையென்றால், அவர் உம்மிடத்திலிருந்து ஒன்பது பங்குகளையும் எடுத்துக் கொள்ளுவார். ஒரு நல்ல கிறிஸ்தவன் தசமபாகங்களை கொடுப்பான் என்று கூறியுள்ளார்.

அகஸ்டின் [கி.பி 345-430] பின் வருமாறு கூறுகின்றார் நமது முன்னோர்கள் எல்லா விதமான செல்வத்திலும் பெருகினார்கள் காரணம் என்னவென்றால் அவர்கள் தசமபாகங்களைக் கொடுத்து வந்தார்கள். [illegible] வரி கட்டினார்கள். நமது தசமபாகங்களை நாம் கடவுளுடன் பகிர்ந்து கொள்ள [illegible]

ருந்த எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டது. வேதபாரகரும், பரிசேயரும் தசமபாகங்களை செலுத்தினார்கள். என்றாலும் கிறிஸ்து அவர்களுக்காக அப்பொழுது இரத்தம் சிந்தவில்லை. நமக்காக மரித்த அவர் உயிரோடு இருந்தபோது என்ன கூறினார் என்பதை நான் சொல்லாமல் இருக்க இயலாது. வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்கள் பத்தில் ஒரு பங்கு கொடுத்தார்கள். நீங்கள் எந்த அளவில் கொடுக்கிறீர்கள்.

இயேசுவானவர் இதைக் குறித்துக் கூறியுள்ளது: மனிதர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தருமங்களைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். செய்தால் பரலோகத்தில் உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மம் செய்யும்போது மனிதரால் புகழப்படுவதற்கு மாயக்காரர் ஆலயங்களிலும், வீதிகளிலும் செய்வதுபோல உனக்கு முன்பாக தாரை ஊதுவியாதே. அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மம் செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலதுகை செய்வதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத் 6:1-4).

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" [லூக். 6:38]. "வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றை சொந்தமாகக் கொடுப்பவர் யார்?" [லூக். 16:12]. "என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்" [மத் 19:29].

"அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார். அவரை பிதாவாகிய தேவன் முத்திரிக்கிறார் என்றார்" யோ. 6:27. "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத். 6:33). நாம் கொடுக்கிறதினால் என்ன நிகழும் என்பதை அப்பவுல் சொல்லுகிறதையும் கேளுங்கள்:

"பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி 9:6,7) "ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்" [2 கொரி. 8:12]. இப்படியிருக்க, ஒருவனும் மனிதனைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே; பவுலாகிலும், அப்போல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமானாலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும் எல்லாம் உங்களுடையது: 1 கொரி. 3:21,22 "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர் (1 கொரி 3:23).

"உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொள்ளுகிறார்கள்." நாம் கடவுளிடத்தில் நம்பிக்கை கொள்ளுவது மாத்திரம் போதாது. விசுவாசத்தில் செல்வந்தர்களாக வாழ்வதற்கு எல்லா ஞானமும் நிறைந்த பரலோகப பிதாவில் முழுவதும் அன்புகூற வேண்டும் அவரில் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். நம்முடைய விசுவாசம் எவ்வளவு மதிப்புள்ளது தெரியுமா? உலகப பொருட்களின் தேவையிலும் நமக்குப பாதுகாப்பு உண்டு என்பதற்கான வேத வாக்குறுதியை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' மத். 6:25-33 விசேஷமாய் வச. 32,33ல் இந்த வாக்குறுதியின்மேல் நாம் நிற்கலாம். இறைவன் தம்மை மறுதலிக்கமாட்டார் (2தீமோ. 2:13). நான் அப்படி எழுதிக் கொடுக்கவில்லை என்று சொல்லமாட்டார், நாம் அவருடைய வாக்குத்தத்தங்களின் மீது நிற்கலாம. இறை ஆசீர் பெருகும்.

(தொடரும்)

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" [லூக். 6:38].

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அந்த பிலாத்துவின் படிக்கட்டுகளில் 28 படிகள் உண்டு. இயேசு இரட்சகருடைய கால்கள் பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட அந்த படிகளில் எவனொருவன் முழங்காலால் நகர்ந்து ஏறுகிறானோ அவனுக்கு ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒன்பது வருஷத்து பாவங்கள் [illegible] மன்னிக்கப்படும் [illegible] வரத்தையடைய [illegible] பக்தியோடு தேய்ந்துபோன அந்த படிக்கட்டுகளில் முழங்காலால் ஏறி தபசு செய்தார். எதிர்பார்த்த [illegible] போலி பரிசுத்த படிக்கட்டுகளில் ஏறி தபசு செய்யும்போதே விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் என்னும் சத்திய வாக்கு இடி இடித்தாற்போல் அவருடைய உள்ளத்தில் தொனித்தது.

லூத்தர் ஏறக்குறைய ஒரு மாதம் ரோமாபுரியில் [illegible] யும் ஆகி[illegible]து. மனச்சோர்வடைந்து. மயக்கமெல்லாம் தெளிந்து தான் முன்போலவே இன்னும் பெரும்பாவிதான் [illegible] ரோமாபுரியை விட்டு [illegible]

டார். மேலே சொன்ன சத்திய வேதத்தின் வார்த்தைகள் அவர் மனதில் தொனித்துக் கொண்டிருந்தன. அந்த வார்த்தைகள் அவருடைய ஆத்துமத்தில் ஊடுருவி பாய்ந்து, பிடுங்கமுடியாத ஒரு ஆணிபோல் இருந்தன.

7. லூத்தர் வேத சாஸ்திரம் பட்டம் பெற்றது:-

நியாமக பிரபுவாகிய பிரதரிக் என்பவர் லூத்தருடைய கல்வி மேன்மையையும், பேச்சு வல்லபத்தையும் கேள்விப்பட்டு தாமே நேரில் பார்த்துக்கேட்டு அறிய வித்தன் பூர்க்குக்கு வந்தார். பொருட்களையும், வாக்கு வல்லமையையும் கண்டு வியப்புற்றார். இதற்குப் பிறகு வெகு சீக்கிரம் நியமப் பிரபும் அவர் ஆலோசனைக்காரரகியஸ்தொப்பிக் சாஸ்திரியாரும், மற்ற அகஸ்தீனிய சந்நியாச சகோதரர்களும் லூத்தரை வசியப்படுத்தி வேத சாஸ்திரப்பட்டம் தமக்குக் கொடுக்கும்படி சர்வகலைசாலையாருக்கு மனு பண்ண அவரைத் தூண்டினார்கள். லூத்தருக்கு அது இஷ்டம் இல்லாதபடியால் அவர்கள் தம்மை பலவந்தப்படுத்தாதபடிக்கு கெஞ்சி கேட்டார்.

அப்பெரிய பட்டத்திற்காக தாம் படவேண்டிய வெகு பிரயாசங்கள் தம்மைவிரைவில் பலவீனமாக்கி வியாதிபடுத்துமென்றும் அதற்காக தாம் செய்யவேண்டிய செலவுகளை தம்மால் செய்யமுடியாது என்று மறுத்து தடை சொன்னார். ஆனால் அவரை இணங்கச் செய்வதற்கு ஸ்தெபிக் சாஸ்திரியாருக்கு ஒரு உபாயம் தெரிந்தது. அது என்னவென்றால், லூத்தர் தாமே ய மேலதி காரிகளுக்கும், அகஸ்தீனிய சந்நியாச சங்கத்திற்கும் அவர் கீழ்ப்படிய வாக்குக் கொடுத்ததை எடுத்துக் காட்டுவதுதான். ஸ்தொப்பிக் சாஸ்திரியர் நியாயத்தை எடுத்துச் சொன்னபோது தாம் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவதும், மடத்தாருக்கு தாம் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதும் தன கடமை என்று உணர்ந்து, சம்மதித்து அவர்கள் சொன்னபடி செய்தார். அப்படியே லூத்தர் 1512-ம் வருஷம் அக்டோபர் மாதம் 19-ம் தேதி; சர்வ கலாசாலையாரின் மூலம் வேத சாஸ்திரியார் (Doctor of Divinity) என்னும் பெரிய பட்டம் பெற்றார்.

தாம் பெற்ற இந்த பட்டத்தைப் பற்றி லூத்தர் பிறருக்குச் சொன்னதாவது; கீழ்ப்படிதலினிமித்தமே நான் வேத சாஸ்திரியார் என்னும் பட்டம் பெற கட்டாயம்பண்ணப்பட்டேன். நான் கீழ்ப்படிய கடமைப்பட்டபடியால் அப்பட்டத்தைத் தரித்துக் கொண்டு விலையேறப் பெற்ற பரிசுத்த வேதத்தை உண்மையாயும், சுத்தாங்கமாயும் போதிக்க ஆணையிட்டு வாக்குக் கொடுத்தேன் என்பதே.

இதற்குப் பிறகு அவர் அதிக ஊக்கத்தோடும் முயற்சியோடும் தவறாத வேத வசனத்தை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்து, முழு மனதையும் செலுத்திப்படித்தார். லூத்தர் ஜனானுகூலரும், ஜனங்களால் நேசிக்கப்பட்டவருமாயிருந்தார். அவர் அதி[illegible] சாடசியுள்ளவர். [illegible]

[illegible]

ஞானஸ்நானம்

1[illegible]-[illegible]-76 அன்று வள்ளியூர் கிளை சபையில் 56 பேர் ஞானஸ்நானம் [illegible] ராயனை அங்கமாய்ச் சேர்ந்து கொண்டார்கள் என்பதை [illegible] கிறோம்

சாட்சியின்படி நடக்க வேண்டும் என்று கருத்தும், கரிசனையுமாய் போதித்தார்கள். அவர் ஆழ்ந்த மனோதியான அனுபோகஸ்தர் தீர கற்றவர் இரட்சிப்புக்கு அவசியமான ஒன்றான அறிவில் அதிசீக்கிரம் பெருகி விருத்தியடைந்தார்.

பாப்பு மார்க்கத்திலிருந்த அநேக தாஷணங்களை நன்றாய் அறிந்தவர் என்றாலும் அது தாய் சபை என்னும் அன்பும், மரியாதையும் அவருக்கு அதிகமாயிருந்தது. அவரைப்போல் தாய் சபைமேல் பக்தியும். உருக்கமும் உள்ளவர் ரோமச்சபையில் எவரும் இருநததில்லை. அவர் துவக்கத்தில் சங்கீதங்களின் பேரில் பிரசங்கம் செய்தார். இந்த பிரசங்கங்களில் வெகு சொற்ப துண்டு துணுக்குள் தாம் தற்காலம் இருக்கின்றன. ஆனால் சங்கீத புஸ்தகத்தின் அருஞ்சொல் அகராதி குறிப்புகளில் சத்திய வேதத்தின் முக்கிய போதனை வெகு தெளிவும், சுருக்கமுமாய் குறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது விசுவாசத்தினால் கிருபையாய் நீதிமானாக்கப்படுகிறோம் என்பதே ரோமர் நிருபத்தை அதிக ஊக்கமாய் படித்தார் என்பது மேற்சொன்ன வியாக்கியான குறிப்புகளால் தெரியவருகிறது.

லூத்தர் தம்முடைய பிரசங்கங்களில் ரோமர் நிருபத்திலிருந்து அநேக வசனங்களை எடுத்து உபயோகித்திருக்கிறார். அவர் வேத சாஸ்திரியான மூன்றாம் வருஷத்தில் ரோமர் நிருபத்தின் பேரில் பிரசங்கம் செய்தார். நான்காம் வருஷத்தில் கலாத்திய நிருபத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார். லூத்தர் அச்சமயத்தில் மெய்யறிவில் எவ்வளவு தேர்ச்சி அடைந்தாரென்று அவர்தம் சிநேகிதராகிய பால்லாடின் என்பவருக்கு 1516-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 17-ம் தேதி எழுதிய கடிதத்தைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். அவர் எழுதின கடிதம் "உமது ஆத்துமா விஷயம் எப்படியிருக்கிறதென்று அறிய [illegible]க்கிறேன். உமது அந்தரங்க சுயநீதியி[illegible] வெறுப்புற்று சோர்ந்து போகிறதா? [illegible] தன் நம்பிக்கையை கிறிஸ்துவின்மேல் வைக்கக் கற்றுக் கொண்டதா? தற்காலத்தில் அகந்தை நிறைந்த மாய அஞ்ஞானத்தால் இழுப்புண்டு வழிதவறி போயிருக்கிறார்கள்.

இலவசமாயும், தாராளமாயும் நமக்குக் கொடுக்கப்படுகிற கிறிஸ்துவின் நீதியை அறியாமல் தங்கள் சுய பலத்தினால் நீதிமான்களாயிருக்கிறார்களென்று பாசாங்கு செய்கிற போலி நீதிமான்கள் விசேஷமாய் இப்படி இழுப்புண்டிருக்கிறார்கள். ஆண்டவருக்கு முன்பாக சுய புண்ணியத்தினால் நீதிமான்களாக நிற்கலாம் என்று எண்ணுகிறார்கள். அது ஒருக்காலும் ஆகாத விஷயம். நீர் எங்களோடு இருந்த காலத்தில் நீரும் அவர்களைப்போல் தான் இருந்தீர். நானும் அதில் ஒருவன்தான். இப்போதோ அதற்கு விரோதமாய் போராடிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அந்த அஞ்ஞானத்தை நாம் இன்னும் தீர மேற்கொள்ளவில்லை. ஆகையால் பிரிய சகோதரரே: சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை நன்றாக அறிந்து அவரை துதிபாட கற்றுக்கொள்ளும். உமது சுய பலத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை வேரோடு பிடுங்கிப்போட்டு, இயேசு இரட்சகர் நீரே என் கதி; உம்முடையதல்லாத பாவத்தை உம்மேல் ஏற்றுக் கொண்டீர், என்னுடையதல்லாத நீதியை எனக்குக் கொடுத்தீர் என்று ஜெபிக்க கற்றுக் கொள்ளும் நீர் பாவியில்லை என்று உமக்கே தோன்றுகிற அப்படிப்பட்ட போலி பரிசுத்தத்தை [illegible]மென்று தப்பு எண்ணத்திற்கு எச்சரிக்கையாயிரும் கிறிஸ்து பாவிகளில் வசிக்கிறார். நீதிமான்கள் வாசஞ்செய்யும் பரமண்டலத்திலிருந்து பாவிகளிடத்தில் வாசஞ்செய்ய அவர் பூலோகத்திற்கு வந்தார் இந்த அவருடைய அன்பைப்பற்றி ஆழ்ந்து தியானியும். அது உமக்கு மகா இன்பமான ஆறுதலைத் தரும்.

நம்முடைய பிரயாசங்களால், [illegible]

னத்தைக் கொடுக்குமானால் கிறிஸ்து நமக்காக மரிக்கவேண்டியதில்லை ஆகையால் கிறிஸ்துவில் மாத்திரம்தான் நீர் சமாதானத்தைக் கண்டடையக்கூடும். அவர்தான் உம்மை கிருபையாய் ஏற்றுக்கொண்டு உம்முடைய பாவத்தை தம்மேல் சுமத்திக் கொண்டார். தம்முடைய நீதியையும் உமக்குச் சொந்தமாக்கினார்'' என்பதே

மேலும் அவருக்கு எழுதியதாவது: நீர் பூர்விக கலப்பற்ற வேத சாஸ்திரத்திரத்தை ஜர்மானிய பாஷையில் வாசிக்க விரும்பினால் ஜான் டாலர் என்பவருடைய பிரசங்கங்களை வாசியும் என்பதே.

[தொடரும்]

''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது''

[ரோம 1:17].

[மே மாத தொடர்ச்சி]

சபை தலைவர்கள்

ஜெயிக்க வேண்டிய விதமாவது (சங். 144).

இந்நிலைக்கு சபையை, சபைகளை கொண்டுவர தலைவர்கள் ஜெயிக்க வேண்டிய விதமாவது:-

1. தேவனே, என் ஆண்டவனே, என்னுடைய எதிராளிகளைக் கண்டு நான் மருளாதபடி, எதிர்த்து போராடி ஜெயிக்கத்தக்கதாக என்னுடைய கரங்களை யுத்தத்திற்கும் என்னுடைய விரல்களை போருக்கும் பழக்குவிப்பீராக.

2. எனக்கு உமது கண்களில் தயை கிடைப்பதாக; எனக்கு நீரே கோட்டையும், உயர்ந்த அடைக்கலமுமாயிருப்பீராக; நான் கூப்பிடும்போது, என் ஆபத்தில் என்னை விடுவிப்பீராக. நான் நம்பியிருக்கிற என் கேடகமே, என் ஜனத்தை எனக்கு கீழ்ப்படுத்துவீராக.

3. எனது பார்வையில் பலவான்களாய் காணப்படுகிற சத்துருக்கள், தாக்குதலானமையாய் இருக்கிறபடியால், நீர் இறங்கி வந்து, அவர்கள் கலங்கி, சிதறுண்டு போகும்படி தொடுவீராக. ஜலப்பிரவாகம் போன்றுள்ள பற்பல சோதனைகளில் தவிக்கிற என்னை மீட்டு இரட்சிப்பீராக. மாயை பேசும் வாயையும், கள்ளத்தனமான வலது கையையுமுடைய அந்நிய புத்திரன் என் முன் இராதபடி துரத்திவிடுவீராக.

4. கர்த்தாவே, உம்மை துதித்துபாடி கீர்த்தனம்பண்ணி, ஆராதனை செய்ய அனுக்கிரகிப்பீராக.

5. தேவனே என் காரியங்களிலெல்லாம் எனக்கு ஜெயம் கிடைக்கச் செய்வீராக.

6. பட்டையக்கருத்துக்கள் போல் குத்துகிற

பொல்லாத நாவுக்கு என்னைத் தப்புவிப்பீராக.

7. மறுபடியும் கேட்கிறேன் கர்த்தாவே, மாயையைப் பேசும் வாயையும், கள்ளத்தனமான கிரியைகளையுமுடைய மனிதர்கள் என் முன் இல்லாதபடி செய்வீராக.

என்னைத் தமக்கு பணிவிடை செய்யும்படி அழைத்திருக்கிறபடியால் ஏழையின் இந்த விண்ணப்பத்தை இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கிறேன் பிதாவே ஆமென், அல்லேலூயா என்பதே.



''...அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்'' (சங். 28:6).





வேத பாடம்

[தொடர்ச்சி]

எண்ணாகமம்

எண். 31:1-12

கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் நிமித்தம் மீதியானியரிடம் பழி வாங்குவாயாக அதன்பின் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய் என்றார். மோவாபியரும், மீதியானியர்களும் ஒரே ஜனம்போல அவர்கள் சேர்ந்திருந்தார்கள். இவர்கள் மேலே பாலாக் இராஜாவாயிருந்தான். தேவனுடைய ஜனங்களை சபிக்கும்படியாக பிலேயாமை அவன் வரவழைத்தான் [எண். 22:2-6]. மேலும் மீதியானியரின் பிரபுக்கள் ஒருவனுடைய மகளாகிய கஸ்பியை குறித்து எண். 25:1-15 முடிய வாசிக்கிறோம். அவ்விதமாக பிலேயாமும் சபித்து தேவ ஜனங்களுக்கு தீமை உண்டாக்காதபடியினால் தேவ ஜனங்கள் மேல் தேவகோபம் உண்டாக, அவர்களை பாவம் செய்ய வைக்க, பிலேயாம் துர்போதனை பாலாக்கு கொடுத்தான்.

பிலேயாமின் ஆலோசனை என்று இது சொல்லப்படுகிறது. இதினிமித்தம் மோவாபியரின் ஸ்திரீகளும்மீதியானிய ஸ்திரீகளும் இஸ்ரவேலரோடு பழகி, அவர்களை பாவத்திலே விழத்தள்ளினார்கள் (எண். 25-ம் அதிகாரம்). இதினிமித்தம் பெரிய வாதை உண்டாகி அந்த வாதையால் செத்தவர்கள 240 00 பேர் [எண். 25:9].

கடவுள் மகா பரிசுத்தமானவர் அவருக்கு விரோதமாக இஸ்ரவேலரை பாவம் செய்ய வைத்தால் அவர்களை தேவனே அழித்து போடுவார்; நாம் ஜெயித்து விடலாமென்று மோவாபின் ராஜாவாகிய பாலாக் நினைத்தான். இதினிமித்தம் தேவ ஜனங்களை பாவம் செய்ய வைக்க விழாக்களும், விருந்துகளும், தங்கள் தெய்வங்களுக்கு பண்டிகைகளும் கொண்டாடி இஸ்ரவேல் ஜனங்களையும் அழைப்பித்து, கவர்ந்து கொள்ள

பெண்களை முன்னுக்கனுப்பி இஸ்ரவேல் ஜனங்கள் பாவம் செய்யும்படியாக ஏற்பாடு செய்தார்கள். விக்கிரக ஆராதனையில் எல்லாம் காம விகார நடக்கைகள் இருக்கும். இதினிமித்தம் மீதியானியரிடம் பழி வாங்கும்படியாக கர்த்தர் மோசேயினிடத்தில் கட்டளையிட்டார். அந்தப் பிரகாரம் கோத்திரத்திற்கு 1000 விதம் தெரிந்து கொள்ளப்பட்டு ஆசாரியனான எலெயாசருடன்கூட யுத்தத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். எலெயாசார் பரிசுத்த பணிமுட்டுகளையும், தொனிக்கும் பூரிகைகளையும், எடுத்துச் செல்லும்படியாக மோசே கட்டளையிட்டார். இந்த பூரிகைகள் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம் செய்யப் போகும்போது, ஊதும்படியாக கொண்டு செல்லப்பட்டது. அப்படி ஊதும்போது தேவ சந்நிதானத்தில் நினைவு கூறப்பட்டு சத்துருக்கள் மேல் ஜெயம் உண்டாகும் (எண். 10:9-10). தேவனை துதியுங்கள் ஜெயமுண்டாகும்; ஆசாரியன் முன் செல்ல வேண்டும்.

இவ்விதமாக கடந்து யுத்தம் செய்து மோவாபியர், மீதியானியர்களை முறியடித்தார்கள் சங்கரித்தார்கள். அவர்களுடைய பிரபுக்களாகிய, ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா, என்னும் பிரபுக்களை கொன்றுபோட்டார்கள். அதோடுகூட குறி சொல்லுகிறவனாகிய பேயோரின் குமாரன் பிலேயாமையும் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள் (வச. 8). ஆண்கள் எல்லாரையும் கொன்றுபோட்டு, ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறைபிடித்து, அவர்களுடைய மிருக ஜீவன்களாகிய ஆடு, மாடுகள், ஆஸ்திகள் எல்லாவற்றையும் கொள்ளையிட்டு அவர்களுடைய பட்டணங்கள், ஊர்கள் எல்லாம் அக்கினியால் சுட்டெரித்துப்போட்டு மிகுந்த கொள்ளைப்பொருள்களோடும், வெற்றியோடும் இஸ்ரவேலர்கள் திரும்பி மோவாபின் சமவெளிக்கு மோசேயும், எலெயாசாரும் இஸ்ரவேல் புத்திரரும் தங்கியிருக்கிற இடத்திற்குத் திரும்பி வந்தார்கள். இந்த சம்பவத்

கர்த்தருக்குள் நித்திரையானார்

Bro. முத்துராஜ் (தாளை, "புதிய எருசலேம் செய்தி" ஆசிரியர்) 15-5-1996 புதன் கிழமையன்று மரித்து, தன்னுடைய [illegible] [illegible] விட்டு ஓய்ந்து இளைப்பாறுதலுக்குள் சென்று விட்டார் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவருடைய பிரிவால் வருந்துகிற அவருடைய [illegible] [illegible]; பிள்ளைகள் எலிசபெத்ராணி, [illegible] [illegible] ஆகியோருக்கு ஆறுதல் கூறிக் கொள்ளுகிறோம். கர்த்தர்தாமே அந்தக் குடும்பத்தைக் காப்பாராக.

தின் மூலமாய் தேவ ஜனங்களை பாவம் செய்யும்படியாக தூண்டுகிறவர்களை, நெருக்குகிறவர்களை எதிர்க்க வேண்டும் என்று சொல்லி நாம் அறிந்து கொள்ளுகிறோம். அறியாமையினாலும், வஞ்சகத்தினாலும், நெருக்கடியினாலும் அநேகர் கிறிஸ்தவ ஜீவியத்தில் விழுந்துபோகிறார்கள். இதற்கு காரணமாய் இருப்பவர்கள் மேல், வஞ்சிக்கிறவர்கள் மேல் தேவ தண்டனை வரும்.

இங்கே மோவாபியரிலும், மீதியானியரிலும் உள்ள எல்லா ஆண்களும் சங்கரிக்கப்பட்டார்கள் என்று நாம் வாசிக்கிறோம் [வச. 13-16]. மோசேயும், ஆசாரியனான எலெயாசாரும் சபையின் பிரபுக்கள் எல்லோரும் ஜெயத்தோடு திரும்பி வருகிற சேனையை சந்திக்க பாளயத்திற்கு வெளியே புறப்பட்டு போனார்கள். அப்பொழுது மோசே 1000 பேருக்கு தலைவன் மேலும், 100 பேருக்கு தலைவன் மேலும் கோபங்கொண்டு, அவர்களை நோக்கி: ஸ்திரீகள் எல்லோரையும் உயிரோடே விட்டு விட்டீர்களா? பிலேயாமின் ஆலோசனையினால், இஸ்ரவேல் புத்திரர் துரோகம் பண்ண காரணமாயிருந்தவர்கள் இவர்கள் தானே அதினால் கர்த்தருடைய வாதையும் நேரிட்டதே என்று எச்சரித்ததாக வாசிக்கிறோம் [வச. 17-21].

ஆனபடியினால் ஸ்திரீகளையும் சங்கரித்து போடும்படியாக கட்டளையிட்டதாக தெரிகிறது. ஆனால் கன்னிகையான ஸ்திரீகளும், குழந்தைகளும் விடப்படுகிறார்கள் (தப்புவிக்கப்படுகிறார்கள்). பிரேதத்தை தொட்டவர்கள், யுத்தத்திலே சென்றவர்கள் எல்லோரும் ஏழு நாள் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொண்டு பின்பு பாளயத்திற்கு உள்ளே வரலாம் என்று மோசே கட்டளையிட்டதாக வாசிக்கிறோம். இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியரிடம் பழி வாங்குவாயாக என்று கர்த்தர் கட்டளையிட்டதாக முதல் வசனத்தில் வாசிக்கிறோம் (வச. 26-54). கொள்ளையடிக்கப்பட்டு கொண்டு வந்தவைகளை இரண்டு பங்காக்கி: யுத்தத்திற்குப் போனவர்களுக்கு ஒரு பங்கும் பாசறையில் இருந்தவர்களுக்கு ஒரு பங்கும் கொடுக்கப்பட்டது.

யுத்தத்திற்கு சென்றிருந்தவர்களில் ஒருவரும் மரணமடையவில்லை. எல்லோரும் வெற்றியடைந்து சுகமாய் திரும்பி வந்தார்கள். அதினிமித்தம் தங்கள் ஆத்துமாவிற்கு பாவ நிவிர்த்தி செய்யும்படி அவர்களுக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளாகிய கால் வஸ்திரங்களையும், மோதிரங்களையும் காதணிகளையும் ஆபரணங்களையெல்லாம் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தினார்கள். அதினுடைய நிறை 16,750 சேக்கலாய் இருந்தது என்று வச. 52-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக இந்த நகைகள் எல்லாம் கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது.

எண். 32:1-5

ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் தங்களுக்கு ஆடு, மாடுகள் ஏராளமாய் இருக்கிறதினால் யாசேர் தேசத்தையும், கீலேயாத் தேசத்தையும் பார்த்தபொழுது அது ஆடு, மாடுகளுக்கு தகுந்த இடம் என்று கண்டார்கள். ஆகையால் ரூபன் புத்திரரும், காத் புத்திரரும், மனாசேயின் பாதி கோத்திரத்தாரும், மோசேயும், ஆசாரியனான எலெயாசாரிடத்திலும் வந்து, பிரபுக்களிடத்திலும் வந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக முறியடித்த அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலே, சேபாம், நேபோ, பெயோன் என்னும் பட்டணங்களைச் சேர்ந்த நாடானது ஆடு, மாடுகளுக்கு தகுந்த இடம், உமது அடியாருக்கு ஆடு, மாடுகள் உண்டு: உம்முடைய கண்களில்

எங்களுக்குத் தயை கிடைத்ததானால், எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்து போகப் பண்ணீராக; இந்த நாட்டை உமது அடியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்க வேண்டும் என்றார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்கருளப்பட்ட தேசம் யோர்தானுக்கு அப்புறமாய் இருக்கிறது. கானானை நோக்கி பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்த இவர்கள் கானானின் சமீபமாய் வந்த உடனே இது தங்களுக்கு செழிப்பான தேசமாகக் காணப்படுகிறதினாலும் இந்த தேசத்தை தங்களுக்கு சுதந்தரமாக தரவேண்டும் என்றபொழுது மோசே கோபங்கொண்டார் (வச. 6-15).

அப்பொழுது மோசே அவர்கள்மேல் கோபங்கொண்டு, நீங்கள் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களை திடனற்று போகப்பண்ணுகிறதென்ன, காதேஸ் பர்னேயாவிலிருந்து கானானைச் சுற்றிப்பார்க்க அனுப்பினவர்களும் இப்படியே செய்தார்கள். கடவுளை உத்தமமாய் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேப்பும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, கானானில் இருந்து வந்தவர்களில் 20 வயது முதல் அதற்கு மேற்பட்ட மனிதர்களில் ஒருவனும் என்னை உத்தமமாய் பின்பற்றாதபடியால் அவர்கள், நான் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கும், ஆணையிட்டு கொடுத்த தேசத்தை காண்பதில்லை என்று ஆணையிட்டிருக்கிறார். அப்படியே அவர் அந்த 40 (நாற்பது) வருஷம் அவர்களை அலையப்பண்ணி அவர்களெல்லாரும் செத்து மடியும்படியாக செய்தார் [மோசே, காலேப், யோசுவா மட்டும் தற்பொழுது உயிரோடிருக்கிறார்கள்].

இப்பொழுதும் நீங்கள் பெருங்கூட்டமாய் எழும்பி மீதி இருக்கிறவர்களையும் கானானுக்குள் போகவிடாமல் தடுக்கும்படியாய் கடவுளுடைய கோபம் ஜனங்கள்மேல் உண்டாகுகிறதினால் அவர்களை அவர் அழிக்கும்படியாக இங்கே இருந்து விடலாம் என்று எண்ணுகிறீர்களோ? என்று கடிந்து கொண்டார். அப்பொழுது ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் மோசேயினிடத்திலும், ஆசாரியனிடத்திலும், பிரபுவினிடத்திலும் கிட்ட நெருங்கி வந்து, சபையின் மத்தியில் வந்து மிகவும் பணிவாய் வேண்டிக் கொண்டார்கள் [வச. 16-19].

நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்காகவும், ஆடு மாடுகளுக்காகவும் அரணான பட்டணங்களை கட்டி, அதில் புறஜாதியாருடைய தாக்குதலில்லாமல் [illegible] பிள்ளைகளை தங்க வைத்து விட்டு, கானானுக்குள் பிரவேசித்து, எங்கள் சகோதரருக்கு முன் சென்று, கானானை அவர்கள் சுதந்தரிக்கும் வரை யுத்தம் செய்வோம் என்றார். கானானுக்குள் நாங்கள் சுதந்திரம் கேட்கமாட்டோம் என்றும் சொன்னார்கள் (வச. 20:21).

மோசேக்கு அந்த காரியம் சரி என்று தோன்றியது; அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று எண்ணினார். அப்பொழுது மோசே அவர்களோடு ஒரு ஒப்பந்தம் செய்தார். நீங்கள் யுத்த சன்னத்தராய் இப்பொழுது சொன்னபடியே கர்த்தர் தம்முடைய சத்துருக்களையெல்லாம் தம் முகத்தைவிட்டு துரத்தும் மட்டும் கர்த்தருடைய சமுகத்தில் யுத்த சன்னத்தராய் யோர்தானை கடந்துபோய் உங்களுடைய சகோதரர்களோடு யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள கானானை சுதந்தரிக்கும் மட்டும் யுத்த சன்னத்தராய்

முன் சென்று அவர்களுக்கு முன் செல்ல வேண்டும் கானான் சுதந்திரமான பின்பு நீங்கள் திரும்பி வந்து இந்த தேசத்தில் குடியிருக்கலாம். இல்லையென்றால் உங்களுக்கு கானானிலே சுதந்திரம் கொடுக்கப்படும். நீங்கள் இந்த வார்த்தையின்படி செய்யாவிட்டால் அது கர்த்தருக்கு விரோதமான பாவமாயிருக்கும். உங்கள் பாவம் உங்களை தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள் என்று எச்சரித்தார் (வச. 25-27).

ரூபன் புத்திரரும், காத் புத்திரரும். மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் எங்கள் ஆண்டவன் கட்டளையிட்டபடி உமது அடியாராகிய நாங்கள் செய்வோம். எங்கள் பிள்ளைகளுக்காகவும், மனைவிகளுக்காகவும், ஆடுமாடுகளுக்காகவும், மிருக ஜீவன்களுக்காகவும் பட்டணங்களைக்கட்டி, ஒழுங்குபடுத்திவிட்டு நாங்கள் யுத்த சன்னத்தராய் முன் செல்லுவோம்; எங்கள் ஆண்டவன் வார்த்தையின்படியே செய்வோம் என்றார்கள் (வச. 28-30). அப்பொழுது மோசே ஆசாரியனான எலெயாசாருக்கும், நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும் இஸ்ரவேல் புத்திரர் கோத்திரத்தாருடைய தலைவர்களுக்கும் கட்டளையிட்டு காத் புத்திரரும், ரூபன் புத்திரரும், மனாசே புத்திரரும் அவர்கள் கர்த்தருடைய சமூகத்தில் யுத்த சன்னத்தராய் யோர்தானை கடந்துபோனால் அத்தேசம் வசப்பட்டபின்பு அவர்களுக்கு கீலேயாத் தேசத்தை சுதந்திரமாய் கொடுக்கக்கடவீர்கள். அவர்கள் யுத்த சன்னத்தராய் கடந்து போகாதிருந்தார்களானால் அவர்கள் உங்கள் நடுவே கானானில் சுதந்திரம் அடையக்கடவர்கள் என்றார் [வச. 31,32].

காத் புத்திரரும், ரூபன் புத்திரரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் பிரதியுத்தரமாக உமது ஊழியக்காரராகிய நாங்கள் கர்த்தர் எங்களுக்கு சொன்னபடியே செய்வோம் யோர்தானுக்கு இக்கரையிலே எங்கள் சுதந்திரத்தின் காணியாட்சி எங்களுக்கு உரியதாகும்படி கர்த்தருடைய சமுகத்தில் யுத்த சன்னத்தராய் கானான் தேசத்திற்கு போவோம் என்றார்கள் (வச. 33). அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனான மனாசேயின் பாதிகோத்திரத்திற்கும் எமோரியருடைய ராஜாவாகிய சீகோனின் ராஜ்யத்தையும், பாசானுடைய ராஜாவாகிய ஓகின் ராஜ்யத்தையும், அவைகளை சேர்ந்த தேசங்களையும், அவைகளின் எல்லையைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் அவர்களுக்கு கொடுத்தான். அந்தப்பட்டணங்கள் ஒன்பதாகும் [வச. 34-42]

[illegible] ராஜாவாகிய ஓகின் ராஜ்யத்தையும், [illegible] ராஜா சீகோனின் ராஜ்யத்தையும், அவைகளை சேர்ந்த பட்டணங்களை, எல்லைகள் எல்லாவற்றையும் ரூபனியருக்கும், காத்தியருக்கும் மனாசேயின் பாதிகோத்திரத்திற்கும் கொடுக்க ஒப்புக் கொண்டார்கள். அப்படியே அவர்கள் தங்களுக்கு பட்டணங்களைக் கட்டினார்கள், கட்டி தங்கள் தகப்பன் பெயரின் பிரகாரம் புதிய பெயர்களை தரித்தார்கள். இவ்விதமாக ரூபன் புத்திரரும், காத் புத்திரரும், மனாசேயின் பாதிகோத்திரத்தாரும் தங்களுடைய சுதந்திரத்தின் பட்டணங்களை புதுப்பித்து கட்டினார்கள் இந்த பட்டணங்களில் அநேகம் அழிக்கபடாதிருந்தது சிலது சிறிது சேதமாயிருந்தது [illegible] முற்றிலுமாய் அழிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவைகள் எல்லாவற்றையும் [illegible]

கள் மறுபடியும் ரிப்பேர் செய்தும், புதிதாக கட்டியும், ஒழுங்கு படுத்தியும் அரண்களை யும், ஆட்டுத் தொழுவங்களையும், மிருக ஜீவன்களுக்கான தொழுவங்களையும் கட்டி, ஒழுங்குபடுத்தி இவ்விதமாக அதை தங்களுடைய காணியாட்சிக்கும்படியாக ஒழுங்கு படுத்தினார்கள் என்பதாம்.

இதன் மூலமாய் நாம் அறிகிறது என்னவென்றால், ஆவிக்குரிய ஜீவியத்திலே வளர்ந்த தேவனுடைய பிள்ளைகள் எல்லோரும் காலேபின் ஜீவியம், கிறிஸ்தவ ஜீவியத்தில் மற்றவர்கள் வெற்றியடையும் மட்டும் அவர்களோடு சேர்ந்து சாத்தானுக்கு விரோதமாய், உலகத்துக்கு விரோதமாய் போராடி, தேவன் வாக்கருளிய அந்த கிறிஸ்தவ வாழ்க்கையை முழுமையாய் பெற்றுக் கொள்ளும்படி உதவிச் செய்ய வேண்டும். அவரவர்களுக்கு கிடைத்த ஆவிக்குரிய வாழ்க்கை போதும் என்று சொல்லி அமைதியாக பின்தங்கி வீட்டிலே உட்கார்ந்து கொள்ளக்கூடாது. அது அவர்களுக்கும் சேதத்தை உண்டாக்கும். மற்றவர்களுக்கும் இடையூறைக் கொண்டுவரும்.

மோசே சொன்னது வாக்கருளப்பட்ட தேசத்திலே போய் யுத்தம் செய்து அதைப் பிடிக்கப்போக பின்வாங்கினதினிமித்தம், அவிசுவாசத்தினிமித்தம் தேவன் அந்த சந்ததியில் உண்மையாய் தேவனை பின்பற்றினவர்களை தவிர மற்றவர்கள் நுழையக்கூடாதென்று சொல்லி கட்டளையிட்டார். இப்பொழுது மோசே, காலேப், யோசுவா ஆகிய மூன்று பேரும்தான் 58,60 வயதுக்கு மேலானவர்கள் இருக்கிறார்கள். மற்ற எல்லோரும் மரித்துப்போனார்கள்; இப்பொழுது இருக்கிறது ஒரு புதிய சந்ததியாகும். ஆனபடியினால் நாம் விசுவாசத்தில் வளர்ந்தவர்கள் முன்சென்று மற்றவர்களும் அந்த ஆவிக்குரிய நிலையை பெற்றுக் கொள்ளும்படி முன் செல்ல வேண்டும்; உதவிச் செய்ய வேண்டும்; உற்சாகப்படுத்த வேண்டும்; மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று தேவன் போதிக்கிறார் என்பதாம்.

(தொடரும்)

"கர்த்தர் நம்மேல் பிரியமாய் இருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டு போய், பாலும் தேனும் ஓடுகிற அந்த தேசத்தை நமக்கு கொடுப்பார்" [எண். 14:8].

பரிசுத்தவான்களுக்கு ஊழியம்

பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய மனிதர்கள், ஊழியர்கள் பரிசுத்தவான்கள் அநேகர் செய்த ஊழியங்களும், பிரயாசங்களும், பாடுகளும், செய்த

சாதனைகளைப் பிரதானமாக எழுதப்பட்டுள்ளது. அதே போல அவர்களுக்கு உதவியாக, உதவியாக பல விதங்களிலே ஊழியம் செய்த அநேக ஊழியர்கள் தேவனின் [illegible]

எழுதப்பட்டுள்ளது.

இன்று அநேகர் ஊழியம் என்றால் மேடையில் ஏறி பிரசங்கம் செய்வதும், தலையில் கைவைத்து ஜெபம்பண்ணுவதும் பிசாசுகளைத் துரத்துவதும், தீர்க்கதரிசனம் சொல்லுதலும் தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் உதயப்பூருக்கு (Rajasthan) ஊழியத்திற்குப் போனோம் 3 ராஜஸ்தானி ஊழியர்கள் எங்களுக்கு உதவியாய் கூடவே வந்தார்கள். ஒருவரிடம் கேட்டேன், நீர் என்ன ஊழியர்; பாஸ்டரா [மேய்ப்பன்] என்றேன். இல்லை நான் பாஸ்டர்களுக்கு உதவி ஊழியக்காரனாய் உதவி செய்கிறவன்; ஒரு பாஸ்டர் அவராக எல்லாம் செய்யமுடியாதே. ஆனபடியால் பாஸ்டருக்குப் பின்னாலிருந்து அவர் திறம்பட அந்த ஊழியத்தைச் செய்ய எல்லா உதவியும் செய்யும் உதவி ஊழியக்காரன் நான் என்றார். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது அவர் பதில். ஆம்! இது பெரிய ஊழியமாயிற்றே என்று ஆலோசிக்க ஆரம்பித்தோம்.

ஒரு ஆராதனை நடக்க வேண்டுமானால் இடத்தை ஆயத்தம் பண்ணுகிறதும், ஆராதனை பணிமுட்டுகளை சுத்தம் செய்து பந்திக்கு ஆயத்தம் பண்ணுகிறதும், இசைக் கருவிகளை இயக்குவதும், தேவனுடைய மனிதர்கள் ஆராதனையை நடத்துவதற்கு செய்கிற ஒவ்வொரு வேலையும் ஊழியமாகும். சபையின் போதகரே எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருப்பது சரியாகுமா? ஒரு பெரிய கன்வென்ஷன் நடத்த வேண்டிய சமயத்தில் எல்லா வேலைகளையும் பிரசங்கியே கவனிக்க நேர்ந்தால் அவர் வல்லமையாய் செயல்பட தேவதாசர்களுக்கு உதவியாக அநேகருடைய ஊழியம் அவசியம் தேவைபபடுகிறது

ஆதிசபையிலே சீஷர்கள் பெருகின போது கிரேக்க விதவைகள் சரியாக கவனிக்கப்படவில்லை என்று பிரச்சனை வந்த போது, அப்போஸ்தலர்கள் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல் பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆகவே நற்சாட்சி பெற்ற ஏழுபேரை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்று அவர்கள்மேல் கைகளை வைத்து, அபிஷேகம்பண்ணி ஜெபம்பண்ணினார்கள்; தேவ வசனம் விருத்தியடைந்தது. சீஷருடைய தொகை மிகவும் பெருகிற்று [அப். 6:1-7].

மோசே இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் நியாயம் விசாரிக்க அவர் ஒருவர் மாத்திரம் பிரயாசப்பட்டபோது ஜனங்கள் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் காத்து நிற்கவேண்டியதாயிருந்தது. அவருடைய மாமன் நீர் செய்கிற காரியம் நல்லதல்ல, நீர் ஒருவராய் அதை செய்ய உம்மாலே கூடாது. ஆகையால் திறமையான மனிதர்களைத் தெரிந்து கொண்டு ஆயிரம் பேருக்கு அதிபதியாகவும், நூறுபேருக்கு அதிபதியாகவும், ஐம்பது பேருக்கு அதிபதியாகவும், பத்துபேருக்கு அதிபதியாகவும் ஏற்படுத்தும். அவர்கள் ஜனங்களை விசாரித்து, சிறிய காரியங்களை அவர்களே தீர்க்கட்டும் பெரிய காரியங்களை உம்மிடம் கொண்டுவரட்டும் என்று சொன்ன ஆலோசனையின்படி செய்தபடியினால் அவர்களை இலகுவாக விசாரிக்க முடிந்தது (யாத். 18 13:26).

தேவனுடைய பரிசுத்தவான்கள் தேவ சமூகத்தில் காத்து கிடக்கவும், தேவ சித்தம்கேட்டு தேவ சித்தத்தை சரியாய் செய்யவும், பிரசங்கிக்கவும், போதிக்கவும், உபதேசிக்கவும், உறுதுணையாக அநேகருடைய ஊழியமும, சேவையும் தேவைப்படுகிறது. அவர்களும் மனிதர்களானபடியால் உலகப்பிரகாரமாக, சரீரப்பிரகாரமான தேவைகளை பூர்த்தி செய்யவும் உணவு, உடை, மற்றும் சபையின் காரியங்களைப் பொறுப்பேற்று கவனிக்கவும் அநேகருடைய உழைப்பும் தேவைப்படுகிறது இப்படி பரிசுத்தவான

களுக்குச் செய்யும் ஊழியம் தேவனுக்கு ஊழியம் செய்ததாக கருதப்படுகிறது.

"பசியாயிருந்தேன் எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன் என் தாகத்தை தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன் என்னை சேர்த்துக் கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிருந்தேன் என்னை பார்க்க வந்தீர்கள்....மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்றார் இயேசு [மத். 25:35-40].

ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களென்றும் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படிக்கு தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே [1 கொரி. 16:15] என்றார் அப். பவுல்.

வேதாகமத்திலே பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இயேசு கிறிஸ்துவுக்கும், பரிசுத்தவான்களுக்கும் பலவிதங்களிலே ஊழியம் செய்த பலருடைய பெயர்களும், ஊழியங்களும், நற்கிரியைகளும் எழுதப்பட்டுள்ளதை விரிவாக நாம் காணலாம்.

பணிவிடை ஊழியம் :-

பரிசுத்தவான்கள் சொல்லுகிற எந்த வேலையையும் சலிப்பில்லாமல், முறுமுறுக்காமல் மனத்தாழ்மையோடு செய்து அதில் சந்தோஷப்பட்டு மகிழ்வதே பணிவிடை ஊழியம் ஆகும். அப்படி பணிவிடை செய்தவர்கள் மந்தையை மேய்க்கும் ஸ்தானத்தைப் பெற்றார்கள். இரட்டிப்பான கிருபை பெற்றார்கள்; வாழ்க்கையில் அற்புத அதிசயங்களைக் கண்டார்கள்; உயிரோடு எடுக்கப்பட்டார்கள்

யோசுவா – மோசேக்கு பணிவிடைக்காரனாயிருந்தார் (யாத். 33:11).

எலிசா – எலியாவிற்கு ஊழியம் செய்தார் [1 இராஜா. 19:21].

மார்த்தாள், மரியாள், லாசரு, மகதலேனா மரியாள், சாலமே, யோசேக்குத் தாயாகிய மரியாள் "இயேசுவுக்குப் பணிவிடை செய்தார்கள்" [லூக். 10:38-40; யோ. 12:1,2; மாற். 15:40].

வைத்தியனாகிய லூக்கா, தேமா, தீமோத்தேயு, தீத்து, ஒநேசிப்போருவின் வீட்டார், பிலேமோன் "அப். பவுலின் ஊழியத்தில் பணிவிடை செய்தார்கள்" (கொலோ.4:14; 2 தீமோ. 1:16-18; பில. 7).

காயு - அப். பவுலையும், சபை சகோதரர்களையும், அந்நியர்களையும் உபசரித்தார் (ரோம. 16:23; 3 யோ. 5-8).

காவலிலும், சோதனையிலும் உடன் இருந்தவர்கள்:-

அப்போஸ்தலர்களும் பரிசுத்தவான்களும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருக்கும்போது சத்தியத்திற்காக அவர்களோடு காவலிலும், சோதனையிலும் அநேகர் உடன் இருந்தார்கள். அப். பவுலுக்கு ஆபத்து வந்தபோது வழித்துணையாக அநேகர் போனார்கள்.

"அப். பவுலோடு காவலில் இருந்தவர்கள்" சீலா – அப். 16:22-25
அரிஸ்தர்க்கு – கொலோ. 4:10
தீமோத்தேயு – எபி. 13:23
எப்பாப்பிரா – பில. 23

"அப். பவுலுக்கு வழித்துணையாய் வந்தவர்கள்" சோபத்தரும், அரிஸ்தர்க்கும், செக்குந்தும், காயுவும், தீமோத்தேயுவும், தீகிக்குவும், துரோப்பீமும் (அப். 20:4; அப். 19:29)

உடன் வேலையாட்கள்:-

அப்போஸ்தலருடைய நடபடிகளிலும், நிருபங்களிலும் அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கும், பவுலுக்கும் உடன் ஊழியர்களாக அநேகர் இருந்தார்கள் என்று நாம் அறியலாம். அவர்கள் செய்த ஊழியங்களை புகழ்ந்து அவர்களுடைய பெயரும் குறிக்கப்பட்டுள்ளது.

"அப்போஸ்தலனாகிய பவுலின் உடன் வேலையாட்கள்" தீகிக்கு – கொலோ. 4:7
யுஸ்து – கொலோ. 4:11
ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் - ரோம. 16:3; அப். 18:2,3
எப்பாப்பிரா – கொலோ4:12
அரிஸ்தர்க்கு தேமா. லூக்கா - பில. 24
சிலமெந்து – பிலி. 4:3
ஸ்தேவான், அகாயுக்கு பொர்த்துனாத்து – 1 கொரி. 16:16,17
உர்பான் – ரோம. 16:9
கிரஸ்கே, தீத்து – 2தீமோ. 4:10
எரஸ்து, துரோப்பீமு, ஐபுலு, புதேந்சு, கிலவுதியாள் – 2தீமோ. 4:20,21
பர்னபா – அப். 14:14; 15:35
யோவான் - அப். 13:5
சீலா, அப். 15:40
தீமோத்தேயு - அப். 16:1–3

"அப். பேதுருவுக்கு உடன வேலையாட்கள்" யோவான் – அப். 3:1; 8:14.

வீட்டில் சபை கூடிவரும்படி உதவினார்கள்:-

அந்நாட்களிலே ஆலயஸ்தலங்கள் இல்லாதபடியினால் ஆங்காங்கே வீடுகளிலும், கடற்கரையிலும், பொது இடங்களிலும் கூடி வந்து ஆராதித்தார்கள். அதன்பின் விசுவாசிகளான சபை மக்களின் வீடுகளில் ஆராதித்து வந்தார்கள். அதற்கு தங்கள வீடுகளை ஆராதனைக்கு என்று கொடுத்தவர்கள் இருந்தார்கள்.

ஆக்கில்லா,பிரிஸ்கில்லாள் - 1கொரி. 16:19; ரோம. 16:3–5
நிம்பா – கொலோ. 4:15
பிலமோன், அர்க்கிப்பு, அப்பியாள் – பில. 2

பரிசுத்தவான்கள் தங்குவதற்கு இடத்தை ஆயத்தம் பண்ணினவர்கள்:-

பரிசுத்தவான்கள் ஊழியத்தினிமித்தம் பல இடங்களுக்குப் பயணம் செய்யும் போது இளைப்பாறுவதற்கு தங்கள் வீடுகளில் அவர்களை ஏற்றுக்கொண்டு, விருந்து பசாரணைகள் செய்து, தாங்கினவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

எலியாவுக்கு சாரிபாத் ஊர் விதவை – 1 ராஜா. 17:8–22
எலிசாவுக்கு சூனேமியாள் – 2 ராஜா. 4:8–16
"அப். பவுலுக்கு" மெலித்தா தீவின் அதிபதி புபிலியு – அப். 28:1,27–10
கார்ப்பு – 2 தீமோ. 4:13
சீப்புரு தீவானாகிய மினேசோன் – அப். 21:16
பிலமோன் – பில. 22
"அப். பேதுருவுக்கு" சீமோன் – அப். 9:43.

பணம் கொடுத்து உதவினார்கள் :-

பரிசுத்தவான்களின் குறைவில் அவர்களை விசாரித்து, பண உதவி செய்து, கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் உடன்பட்ட சபையோரைப்பற்றி வாசிக்கிறோம்.

பிலிப்பு சபையார் - பிலி. 4:15–19,10
அகாயா பட்டணத்தார் - 2கொரி. 9:1–5, 12,13
மக்கதோனியா சபை - 2கொரி. 8:2–7.

ஐசுவரியத்தினால் உதவியவர்கள்:-

கர்த்தராகிய இயேசுவிற்கு - ஆஸ்திகளால் ஊழியம் செய்த ஸ்திரிகள் - லூக். 8:3
சிலுவையை சுமக்க சீமோன் [illegible] 23:26

அடக்கம்பண்ண ஐசுவரியவனாகிய யோசேப்பு மத். 27:57-60
நிக்கதேமு யோ. 19:39
சகேயு – ஆஸ்தியை ஏழைகளுக்கு – லூக். 19:8.

ஜெபம் பண்ணுகிற ஊழியம்:-

பரிசுத்தவான்களுடைய ஊழியத்திற்காகவும், சுகத்திற்காகவும், பெலத்திற்காகவும், வல்லமைக்காகவும், சபையோர் ஜெபிக்க வேண்டியது மிகவும் அவசியம். போர்க்களத்தில் சத்துருவான சாத்தானோடு போர்தொடுத்து முன்னணியில் நிற்கிற தேவ தாசர்களுக்கு பின்னால் இருந்து ஆதரவு, ஆகாரம் மற்றும் உதவிகள் வருவது போல தேவனிடத்தில் மன்றாட்டு செய்து அவர்களை ஆவியில் தாங்குவது மேலான ஊழியமாகும்; அப். பவுல் சபையோரின ஜெப உதவியை நாடினர்.

திருவசனத்தை பேசவேண்டிய பிரகாரமாக பேச – கொலோ. 4:3,4
தைரியமாக பேச – எபே. 6:18-20
துன்மார்க்கரிடமிருந்து பாதுகாக்கப்பட – ரோம. 15:30-32; 2கொரி 1:11; எபி 13:16-18.

பிரியமானவர்களே! ஊழியம் என்பது ஒரு கூட்டு முயற்சியாகும். ஆகவே தேவனுடைய ஊழியம் வல்லமையாய் செய்யப்பட சபை மக்களின் உதவியும், ஆதரவும் அநேக விதங்களில் தேவைப்படுகிறது. ஊழியக்காரர்கள் தான் ஊழியம் செய்ய வேண்டுமென்று எண்ணுவது தவறாகும். நீங்கள் எதைச் செய்தாலும் மனுஷர்களுக்கென்று செய்யாமல் தேவனுக்கென்று செய்யுங்கள். அநேகர் செய்த ஊழியங்கள் மறைவாக எழுதப்பட்டிருந்தாலும் சிலருடைய நற்கிரியைகள் வெளியரங்கமாயிருக்கும், அப்படி இராதவைகளும் மறைந்திருக்கமாட்டாது [தீமோ. 5:25]. அவர்கள் நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது (பிலி. 4:3).

நாம் கர்த்தருக்காக படுகிற ஒவ்வொரு பிரயாசத்திற்கேற்றபலன் நிச்சயமாக உண்டு [1 கொரி. 15:58]. என் நாமத்தினிமித்தம் ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு சொல்லுகிறார் [மத். 10:41,42]

தேவ மனிதர்களோடு உழைக்கிறவர்களை கர்த்தர் யோசுவாவைப்போல் மேன்மைப்படுத்துவார். எலிசாவைப்போல இரட்டிப்பான வரம் பெறுவார்கள். பரிசுத்தவான்களை உபசரிப்பவர்கள் சாரிபாத் விதவையைப் போல பஞ்சத்தில் பாதுகாக்கப்படுவார்கள். சூனேமியாளைப்போல புத்திரனைப்பெற்று மரித்தாலும் உயிரோடு பெறுவார்கள்; அற்புத அதிசயங்களை வாழ்வில் காண்பார்கள்; அவர்கள் நாமம் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும், இவ்வுலகத்திலும் ஆசிர்வதிக்கப்படுவார்கள்; விசேஷமாய் மறுமையில் விசேஷித்த ஸ்தானத்தையும், கிரீடத்தையும் பெறுவார்கள். எல்லோரும் சேர்ந்து இந்த அப்போஸ்தல ஊழியத்தில் நம் பங்கை செய்வோமாக! பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்து அவர்களை தாங்குவோமாக!! தேவ ஆசீர்வாதம் பெறுவோமாக!!!

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd. No. 040008/84
Postal Regd. No. MH BY N8-84/85
Tamil Monthly Magazine

தேன் HONEY

கானான் தேசமெங்குமுள்ள மலையின் வெடிப்புகளிலும், மரங்களிலும் தேன் கூடுகள் உண்டு. ஆகையால் எபிரெயர்கள் அந்த தேன்களை எடுத்து வழக்கமாய்ச் சாபிடுவார்கள் (யோசு. 5:6). எபிரெயர் தங்கள் குழந்தைகளுக்குத் தேனும் சாப்பிடக் கொடுப்பார்களென்று தெரிகிறது (ஏசா. 7:15). யோவான் ஸ்நானகன் தேனையும், வெட்டுக்கிளிகளையும் சாப்பிட்டுக் கொண்டு, அநேகநாள் சஞ்சரித்தார் [மத். 3:4]. தேனை நைவேத்தியத்தோடே கலக்கக் கூடாது என்று தேவன் விலக்கியிருக்கிறார் (லேவி. 2:11). தேனானது இனிமையாயிருக்கிறது போல, தேவ வசனம் ஆத்துமாவுக்கு இனிமையாயிருக்கிறது (சங். 19:11). கர்த்தருடைய சபையையழிக்க வேண்டுமென்று கூட்டமாய்வரும் சத்துருக்களை தேனீக் கூட்டங்களுக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள் (ஏசா. 7:18).

முழு இரவு விழிப்பு ஜெபம்

அறிவிப்புகள்

3 [திங்கள்] ஜூன் 1996
30 [செவ்வாய்] ஜூலை 1996
28 [புதன்] ஆகஸ்டு 1996

புதிய எருசலேம் செய்தி பத்திரிகை

ஆண்டு சந்தா Rs. 30-00
வெளிநாடு Rs. 400-00

அனுப்ப வேண்டிய முகவரி :

CHIEF PASTOR N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR,
DARGA CROSS ROAD, BHANDUP,
BOMBAY-400 078, INDIA.

3. மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.

5. "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ. 30 [முப்பது] சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 144 - JUL. '96

"புதிய எருசலேம் சபை"

"...வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ
நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ,
எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்...
விழித்திருங்கள்... உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்
கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்..."

—மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும் சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.
2. விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).
3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 25 20
4 அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.
5 அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.
6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப. 1:5-8)
7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26.

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக: இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு தான் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும் இவைகளை [illegible] உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப 1:1; 10:40-43)

CHIEF PASTOR- N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

இது சரீரமரணத்தைத் தான் குறிப்பிடுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம. 6:23). ஏனோக்கு மரணத்தைக் காணாமல் எடுத்துக் கொள்ளப்பட்டார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது, மனிதன் பாவம் செய்யவில்லையென்றால் மரிக்கவும்மாட்டான். ஏனோக்கு, எலியா போன்றவர்கள் மரணத்தைக் காணவில்லை; பாவம் செய்யவில்லை என்றால் மரணத்தைப்பற்றிய பயமுமில்லை. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை; பரத்துக்குப் போனவர்கள் இனி மரிப்பதில்லை. ஆனபடியால் பாவம் செய்து விட்டு, மன்னிப்பு பெற்றுக் கொள்ளுவோம் என்பதைவிட்டு, பரிசுத்தமாய் வாழ்வோம்; மரணத்தைக் காணாதிருப்போம். பாவம் வஞ்சனையுள்ளது; அது மரண விதையை நம்மில் விதைக்கிறது. நாம் கடவுளுக்குப் பிரியமாயிருந்தால் கடவுள் நாம் பாவத்தில் விழாதபடி தப்புவிப்பார். தேவ கிருபையினாலே தான் மனிதன் பரிசுத்த வாழ்வை அடைய முடியும். இ ர ட் சி ப் பு எப்படி? விசுவாசத்தைக் கொண்டு கிருபையினாலே கிடைக்கிறதோ, அப்படியே பரிசுத்தமும் தேவ கிருபையே, விசுவாசித்தால் பரிசுத்தமடைவோம்; தேவ மகிமையைக் காண்போம். தேவன் ஏனோக்கை எடுத்துக் கொண்டார். தேவன் எடுத்துக் கொண்டவர்களை திரும்ப பூமிக்கு அனுப்பி மரணத்துக்குட்படுத்தார். சில கிறிஸ்தவ எழுத்தாளர்கள் தேவன் எடுத்துக் கொண்டவர்களை மறுபடியும் பூமிக்கு அனுப்பி மரணத்துட்படுத்துவார் என்று பயங்கரமான கொள்கையை எழுதுகிறார்கள் அது அபத்தம். "விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான், தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற் போனான்..." (எபி. 11:5) என்று பரிசுத்த ஆவியானவர் எழுதி வைத்திருக்கிறார். நாமும் விசுவாசித்தால் எடுத்துக் கொள்ளப்படுவோம்.

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N LAZAR

நற்கிரியைகளை செய்யும்படிக்கு தேவன் நம்மை மறுபடியும் சிருஷ்டித்திருக்கிறார்

"ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" [எபே. 2:10].

உலகத்தில் அநேக மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய ஜனங்கள்தான். ஆனால் அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் அல்ல, தேவன் அவர்களுக்கு மத்தியில் நம்மை மறுபடியும் சிருஷ்டித்திருக்கிறா என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. முதல் முறை நாம் நம்முடைய பெற்றோர்களால் மாம்சத்திலே இந்த உலகத்திலே பிறந்தோம். மறுபடி தேவன கிறிஸ்துவுக்குள் சிருஷ்டித்தார் என்று எழுதப்பட்டுள்ளது. நமக்காக ஆயத்தம்பண்ணி வைத்திருக்கும் நற்கிரியைகளை நாம் செய்யவே தேவன் நம்மை சிருஷ்டித்திருக்கிறார். ஆத்மிக பிரகாரம் நாம மறுபடியும் பிறந்திருக்கிறோம் இது தேவனுடைய செய்கை. தேவன் அவருக்காக நம்மை சிருஷ்டித்தார். கிறிஸ்துவுக்குள நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோமெனறல் இது மாபெரும் அதிசயமான காரியம்.

நாம் பாவத்துக்குள்ளாய் மரித்தவர்களாயிருந்தோம், அதிலிருந்து தேவன் தாமே மறுபடியும் நம்மை ஆத்துமாவிலே ஜெநிப்பித்தார். தேவன் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற நற்கிரியைகளைச் செய்யும்படியாய் நமமை சிருஷ்டித்திருக்கிறார். இந்த உலகத்தில் அனைவரும் தங்கள் மனதின்படி செய்து கொண்டிருக்கிறாகள். ஆனால் தேவனுடைய பிள்ளைகளோ தேவன் தங்களுக்குச் செய்யும்படி ஆயத்தம்பண்ணின [illegible]ரியைகளை நாம் செய்ய வேண்டும். இந்த மறுபிறப்பு எப்படி ஏற்பட்டதென்றால் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்..." [எபே. 2;8] என்று எழுதப்பட்டுள்ளது. இதுதேவனுடைய ஈவு என்று எழுதப்பட்டுள்ளது நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை அறிக்கை பண்ணுவதினிமித்தம் நாம் மறுபடி பிறந்திருக்கிறோம்

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று ரோம. 10:9ல் எழுதப்பட்டுளளது. யோ. 3;16ல் தேவன தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்று எழுதப்பட்டுள்ளது. 1 யோ. 1;9ல் "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உணமையும், நீதியும் உளளவராயிருக்கிறார்" என்று எழுதபபட்டுள்ளது. அபபடியே நாம் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டோம் இது தேவனுடைய கிரியை. தேவன் அதற்காகவே நம்மை சிருஷ்டித்தார்; நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

..."நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்.." என்று 1 கொரி. 3 9லே எழுதப்பட்டுள்ளது. 2 கொரி 5-17-19 வரை நாம் பார்க்கும்போது [illegible] எழுதபபட்டுள்ளது. இப்படியிருக்க, [illegible] கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" [illegible] பொல்லாப் தேவ[illegible]லே [illegible]

அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக் கொடுத்தார் "அதென்னவெனில் தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்".

..தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம் என்று 2 கொரி 5:20ல் எழுதப்பட்டுள்ளது. நாங்கள் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்யும்படிக்கு தேவன் எங்களை ஸ்தானாபதிகளாய் ஏற்படுத்தியிருக்கிறார்; நற்கிரியைகளை செய்யும்படி தேவன் நம்மையும் படியும்சிருஷ்டித்திருக்கிறார். உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் என்று எபே. 4:23 24ல் எழுதப்பட்டுள்ளது கிறிஸ்துவுக்குள்ளாய் நற்கிரியைகளை நாம் செய்யும்படி அவர் நம்மை சிருஷ்டித்தார்.

ரோம. 9:23லே இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. "தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்களமேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன? இவ்வாறு நம்மை மகிமை பொருந்தின கிருபாபாத்திரங்களாய் சிருஷ்டித்திருக்கிறார். புறஜாதிகளிலிருந்து தேவன் நம்மை தெரிந்தெடுத்தார் என்று எழுதப்பட்டுள்ளது அவருடைய [illegible] நாம் வெளிப்படுத்தும்படி அவருடைய ஐசுவரியத்தை நம்மில் காண்பிக்கும்படி நம்மை [illegible] என்று எழுதப்பட்டுள்ளது

இந்த உலகத்திலே எல்லா இடங்களிலும் கிரியை நடந்து கொண்டிருக்கிறது. சிலர் சாத்தானின் கிரியையை செய்து கொண்டிருக்கின்றனர். அநேகர் தங்கள் மனதின்படி கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளாகப் பிறப்பிக்கப்பட்டவர்கள், தேவன் அவர்களை எந்த கிரியை நடப்பிக்கும்படி பிறப்பித்தாரோ அந்த கிரியையை நடப்பிக்க வேண்டும். நாம் "...இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம் (1 யோ. 3;2).

"அநதப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியை பெற்றீர்கள்" என்று ரோம 8:15ல் எழுதபபட்டுள்ளது. கலா. 4:6 லேயும் மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் என்று எழுதப்பட்டுள்ளது

நாம் நீதி செய்கிறதினிமித்தம் நாம் தேவனுடைய புத்திரர்கள் என்பதைக் காண்பிக்க வேண்டும். "நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்" என்று 1 யோ 2 29ல் எழுதியிருக்கிற பிரகாரம் நாம் நீதியைச் செய்ய வேண்டும். தினந்தோறும் தேவனுடைய வேலையைச் செய்ய தேவன் நம்மை சிருஷ்டித்துள்ளார் நம்முடைய போக்கு [illegible] யின கிரியைகள் யாவும் தேவனுடைய சித்தத்தின்படி [illegible] யான ஊழியர்களாகும்படி [illegible] கள். [2 கொரி 2 11-17] நாம் [illegible] தேவன் [illegible]

கள் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்." "...இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம்..." என்று சொல்லுகிறார். எங்கள் மூலமாய் தேவ நாமம் மகிமைப்படுகிறதென்று சொல்லுகிறார். நாங்கள் தினந்தோறும் தேவனுடைய நற்கிரியைகளைச் செய்கிறோம் என்று அப் சொல்லுகிறார்.

நல்ல வேலையை செய்யும்படியாய் தேவன் நம்மை சிருஷ்டித்துள்ளார். சொந்த கையால் வேலைசெய்து சாப்பிட வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது. நற்கிரியைகளை செய்யும்படி தேவன் நம்மை பாவங்களிலிருந்து மீட்டு அவருடைய சொந்த பிள்ளைகளாய் மாற்றியிருக்கிறார். தீமோத்தேயுவிலும், தீத்துவிலும் தேவன் நம்மை இரட்சித்து நற்கிரியைகளை செய்யும்படி வைத்துள்ளார் என்று எழுதப்பட்டுள்ளது (தீத். 2·11-14). வாசிக்கும்போது "...அவர் நம்மை சகல அக்கிரமங்களின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்..." என்று எழுதப்பட்டுள்ளது. தீத். 3·8லும் மனுஷருக்குப் பிரயோஜனமுள்ள நற்கிரியைகளைச் செய்ய வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது. தேவன் விரும்புகிற வேலைகளைச் செய்யும்படியாக நம்மை சிருஷ்டித்துள்ளார். அவ்வாறே 2 தீமோ. 2: 20,21ல் "ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னை சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான் என்று வாசிக்கிறோம்.

நாம் விரும்புகிற வேலையையல்ல, தேவன் ஒவ்வொருவருக்கும் செய்யும்படியாய் ஆயத்தம்பண்ணி வைத்த அந்தந்த வேலைகளைச் செய்யும்படியாய் தேவன் விரும்புகிறார். எலியாவுக்கென்று ஒரு வேலை, ஏனோக்குக்கு என்று ஒரு வேலை, நோவாவுக்கென்று ஒரு வேலை, நெகேமியாவுக்கென்று ஒரு வேலை, எஸ்றாவுக்கென்று ஒரு வேலை, தானியேலுக்கென்று ஒரு வேலை, அப். பவுலுக்கென்று ஒரு வேலை, அப். பேதுருவுக்கென்று ஒரு வேலை இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையை தேவன் நியமித்துள்ளார். அவரவர்கள் அவரவர்களுக்கு நியமித்த வேலையைச் செய்ய வேண்டும். தேவன் சொன்ன வேலையைச் செய்யாமல் அடுத்த வேலையை செய்தால் அதில் அவர்களுக்கு நஷ்டம் உண்டாகும்.

ஒருவன் தான் செய்யும்படியாய் நியமித்த வேலையை செய்யாமலிருந்தால் அந்த வேலையை தேவன் வேறுயாராவது ஒருவருக்குக் கொடுத்துவிடுவார். தேவன் ஒவ்வொரு சிருஷ்டியையும் அதனதன் வேலைகளைச் செய்யும்படியாய் சிருஷ்டித்துள்ளார். ஒவ்வொரு தானிய வகைகளும் அதனதின் தானியங்களைக் கொடுத்து தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நாம் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்றும், அவருக்கு உடன் வேலையாட்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது. தேவன் நமக்கு உபதேசத்தைக் கொடுத்து ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக் கொடுத்துள்ளார். தேவனுடைய வேலை நமக்கு எது கொடுக்கப்படுகிறதோ அதை நாம் செய்யவேண்டும். அதில் சோம்பேறியாயிருக்கக் கூடாது. தேவன் இல்லாமல் நம்மால் ஒரு வேலையும் செய்ய முடியாது. பரிசுத்தாவியானவர் நமக்கு உதவி செய்யாவிட்டால் நம்மால் ஒரு நல்ல வேலையையும் செய்ய முடியாது.

எலியா என்னை எடுத்துக் கொள்ளும் என்று ஜெபம் பண்ணினபோது, தேவன் அப்படி செய்யாமல், இன்னொன்று வேலை செய் என்று [illegible]

கொடுத்தார். எலியா அந்த வேலைகளை செய்து முடித்தபோது தேவன் அவரை எடுத்துக் கொண்டார். சரீரத்தோடுகூட அவரை எடுத்துக் கொண்டார். எலியாவின் வேலையை எலியாவே செய்யவேண்டும். எலியா தன்னுடைய உடன் சேவகர்களையும் ஆயத்தப்படுத்தி அவருக்கு பின் வேலைகளை செய்யும்படியாய் நியமிக்க வேண்டும்; ஆயத்தப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவர் என்ன வேலையைச் செய்ய ஏவுகிறாரோ அந்த வேலையில் தீவிரமாயிருந்து அதை நிறைவேற்ற வேண்டும். இந்த வேலையைச் செய்யும்படி தேவன் உன்னை ராணியாக ஏற்படுத்தினார். நீ செய்யவில்லை என்றால் யூதருக்கு இரட்சிப்பு எங்கிருந்தாவது வரும் என்று எஸ்தருக்கு சொல்லப்பட்டது. எஸ்தர் தனக்கு சொல்லப்பட்ட வேலையை செய்து முடித்தாள். அதை எஸ்தரே செய்ய முடியும், வேறு யாரும் செய்ய முடியாது. தேவன் உன்னை எதற்காக அழைத்துக் கட்டளைக் கொடுத்தாரோ அந்த வேலையை நீ தான் செய்ய வேண்டும்

இப்படியே உலகத்தில் ஒவ்வொரு சிருஷ்டிகளும் எதற்காக அவைகளை சிருஷ்டித்தாரோ அந்த வேலையைச் செய்யும்பொழுது அதன் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படும். அப்படியே தேவன் உன்னை எந்த கிரியையை செய்யும்படி அழைத்தாரோ அந்த கிரியையை நீ செய்யும்போது தேவனுடைய நாமத்தை நீ மகிமைப்படுத்துவாய். நாம் சில வேலைகளில் இறங்கும்போது பல பிரச்சினைகள் வரலாம். பயம் வரலாம், ஆனால் நாம் எதற்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அப்படியே இஸ்ரவேலர்களுக்குத் தேவன் சொன்னார். பயப்படும் சூழ்நிலைகள் ஏற்பட்டால் பரிசுத்தவான்கள் ஜனங்களுக்கு முன் சென்று தேவ செய்தியை அறிவித்து தைரியப்படுத்த வேண்டும். [2 இராஜா. 6:16.]ல் அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான் என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியே இஸ்ரவேலர்களை ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் தைரியப்படுத்தினார்கள், ஆயத்தப்படுத்தினார்கள். அப்படியே விசுவாசிகள் விசுவாசிகளுக்குத் தைரியம் சொல்லவேண்டும். "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்" என்று முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

தேவன் நம்மை என்ன வேலையை செய்யும்படி, சித்தங்கொண்டு சிருஷ்டித்தாரோ, அந்த அவருடைய சித்தத்தை நாம் செய்து, நிறைவேற்றி முடிக்கும்போது தேவனும் மகிமைப்படுவார்; நமக்கும் அதற்கான வெகுமதிகள் கிடைக்கும். சிலர் தங்கள் மனம்போல் தாங்கள் விரும்புகிறதைச் செய்து கொண்டு தேவ சித்தம் செய்கிறோம் என்று எண்ணுகிறார்கள். அவர்கள் இரட்சிப்பை நஷ்டப்படுத்துகிறார்கள். அப்படியானால் இரட்சிக்கப்பட்டவர்களுக்கும் இரட்சிக்கப்படாதவர்களுக்கும் உள்ள வித்தியாசம்தான் என்ன? இப்பொழுது இரட்சிக்கப்பட்ட நீ தேவனுடைய சித்தம் எது என்று அறிந்து செயல்பட வேண்டும். முந்திய நாட்களில் நீ உன் மனம்போன போக்கில் ஜீவித்திருக்கலாம். இப்பொழுதோ நீ பரிசுத்த ஆவியின் நடத்துதல்படி நடக்க வேண்டும். தேவனுடைய சித்தத்துக்கு மாறாக செய்கிற நன்மையும் பாவம் என்று எண்ணப்படும்.

அப்போஸ்தலர்கள் அப்போஸ்தலர்களுக்குரிய வேலைகளைச் செய்ய வேண்டும். போதகர்கள் போதகர்களுக்குரிய வேலையைச் செய்ய வேண்டும், மூப்பர்கள் மூப்பர்களுக்குரிய வேலையைச் செய்ய வேண்டும், விசுவாசிகள் விசுவாசிகளுக்குரிய வேலையைச் செய்ய வேண்டும். [illegible] அதிகாரிகள் [illegible] சொல்வதைக் கேட்டு அதின்படி செய்யவேண்டும். [illegible]யும் நற்கிரியை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அதற்கான பலன் அவர்களுக்குக் கிடைக்

கும். சிலர் பாவமும் செய்து கொண்டு, நற்கிரியையும் செய்கிறார்கள் அப்படிப்பட்டவர்கள் நஷ்டம் அடைவார்கள். தேவன் செய்யச் சொல்லுகிற வேலைகளைப் பழகு, அதிலே முன்னேறிச் செல். ஏனெனில் தீத். 2:14ல் "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்று எழுதப்பட்டுள்ளது. தீமையானவைகளை நாம் ஒருபோதும் செய்யக்கூடாது. நம்முடைய விருப்பப்படி நாம் நீதியைச் செய்கிறோம் என்றால் அதுவும் சரியல்ல. அப்படியே ஒருவருக்கு ஒரு வரம் கொடுக்கப்பட்டால் அதை அவர் செயல்படுத்த வேண்டும். இல்லையெனில் அந்த வரம் அவரிடத்திலிருந்து எடுபட்டுபோய் விடும் 1 கொரி. 3:9ல் சொல்லப்பட்டபடி நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம் என்று சொல்லி அவருடைய வேலையைச் செய்ய வேண்டும்.

தேவனோடு சேர்ந்து நாம் அவருடைய வேலைகளைச் செய்ய வேண்டும் தேவன் இன்ன, இன்ன காரியங்களை இப்படி இப்படி செய் என்று நம்மோடுகூட பேசி, நம்முடன்கூட சேர்ந்து அதை செய்வார், நாம் அவருடைய சித்தத்தின்படி செய்யும் பொழுது. அப்படியே அப். பவுல் சொல்லும்பொழுது "இப்படியாக, எந்த மனுஷனும் எங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும், எண்ணிக் கொள்ளக் கடவன்" என்று 1 கொரி. 4:1ல் சொல்லியுள்ளார். இந்த உலக வாழ்க்கையில் ஒருவன் முன்னேற வேண்டுமானாலும் அவன் தனக்குக் கிடைக்கும் எந்த வேலையையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். அந்த வேலையை இவன் படிக்க வேண்டும் அப்படியானால் ஒருநாள் இவனே அந்த வேலையை செய்ய முழுமையாக தயாராகி விடுவான்.

உன்னுடைய வாழ்க்கையிலே சந்தர்ப்பத்தை ஒருபோதும் அல்லல்தட்டி விடாதே. சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை உடனடியாகச் செய்துவிடு. இல்லையெனில் அதை ஒருபோதும் நீ அடையமுடியாது. கர்த்தருடைய வேலையை உண்மையாய் செய்யும்போழுது கர்த்தர் ஆசீர்வதிப்பார், நன்மை செய்வார், கிரீடம் தருவார். தேவன் சொல்லுகிற வேலையை விட்டு விட்டு மற்றவைகளைச் செய்தால் அதனால் நஷ்டம்தான் உண்டாகும். தேவனுடைய பிள்ளைகள், தேவன் செய்யச் சொல்லுகிறதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனபடியினால் தேவன் உங்களுக்கு செய்யச் சொல்லுகிற வேலையை செய்யுங்கள்; நற்கிரியைகளை செய்யுங்கள். அப்பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார், மென்மேலும் பெருக்குவார்; நீங்கள் மகிழ்ச்சியாயிருப்பீர்கள். நாம் அவருடைய நற்கிரியைகளைச் செய்யும்படி அவர் நம்மை சிருஷ்டித்திருக்கிறார்; அதற்காக நம்மை முன்னமே குறித்திருக்கிறார். நாம் அவர் சித்தமே செய்வோம் ஆமென்.

திருச்சபை (தொடர்ச்சி)

திருச்சபையின் செயல் நோக்கம்:-

எல்லா நாட்டவருக்கும் நாம் நற்செய்தியை பிரசங்கம் செய்ய வேண்டும்; அவர்களை சீடராக்க வேண்டும்; திருமுழுக்கு கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட எல்லாவற்றையும் போதிக்கவேண்டும்; கர்த்தருடைய வருகைக்கு விசுவாசிகளை ஆயத்தப்படுத்த வேண்டும். இது திருச்சபையின் செயல் நோக்கமாகும்.

ஆதி சபையின் காலத்தில் நாம் இருந்தோமென்றால், அவர்கள் எவ்விதமாக சுவிசேஷ செய்தியை பரப்பினார்கள் என்பதை நாம் அறியமுடியும். அப்பொழுது நாம் இல்லாவிட்டாலும், அப்பொழுது அவர்கள் சாட்சியாய் நடப்பித்த காரியங்கள் அப்போஸ்தல நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்காலத்தில் இவ்வளவு வாய்ப்புகளும், வசதிகளும், போக்குவரத்து வசதிகளும், சுதந்திரமும், சுதந்திரமான நாடும் இருந்ததில்லை. ஆனாலும் அவர்கள் வெகுவாய் ஆத்தும ஆதாயம் செய்து திருச்சபையை பரப்பினார்கள். கர்த்தருக்கு ஒவ்வொரு விசுவாசியும் சாட்சியாக விளங்கினார்கள். அதில் எந்த அளவிலும் நாம் குறையுள்ளவர்களாக காணப்பட்டால் அது ஒப்புக்கொள்ள முடியாத காரியமாயிருக்கிறது.

இக்காலங்களிலே நமக்கு போதுமான போக்குவரத்து வசதிகள் உண்டு; நவீன இயந்திர வசதிகள் உண்டு; சுதந்திரமான நாடு உண்டு; சுதந்திரமான வாழ்வு உண்டு; ஆனாலும் பாவ சந்தோஷத்துக்கும், உண்மையான சந்தோஷத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் சரியாக உணராமல் இருக்கிறோம். உலகம் தன்னுடைய பாவத்தின் இச்சையிலும், கண்களின் இச்சையிலும், வாழ்க்கையின் பெருமையிலும், பாவ சந்தோஷத்தையும், சிற்றின்ப போகத்தையும் அநுபவிக்கின்றது (1 யோ. 2:15-17; எபி. 11:24-29).

ஆனால் இயேசு உண்மையான மகிழ்ச்சியை, பேரின்பத்தை, அவருக்கு ஊழியம் செய்வதினால் நமக்கு அருளிச் செய்கிறார். இவ்விதமான மகிழ்ச்சியும், மனதிருப்தியும் கிறிஸ்துவிலும் நாம் அவருக்காக செய்யும் ஊழியத்திலும் இருக்கிறபடியினால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்ற, அறிக்கையிடுகின்ற நாமே குருடனைப் போல, சாத்தானுக்கு கையாட்களாக அவன் கொடுக்கும் உலக மகிழ்ச்சிக்கு நம்மை அடிமைப்படுத்தி கொண்டிருப்பது எப்படி? கிறிஸ்துவின் செயல் நோக்கத்தை நாம் ஆராய்ந்து தீர்மானிப்பது அவசியம்.

நாம் திருச்சபை என்று சொல்லியிருப்பதை தயவு செய்து கவனமாய் கவனிக்க வேண்டும். திருச்சபையின் அலுவலர்களையோ அல்லது அவர்களின் கடமைகளையோ அல்ல, உலகத்தில் நற்செய்தியை பரப்புவதில் திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இருக்கும் உத்திரவாதத்தை நிறைவேற்ற வேண்டும்.

வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்க வேண்டும்; வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது. புதிய ஏற்பாட்டில் விளக்கவிவரத்துடன் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒரு திருச்சபை காணப்படுகிறது. அதின் அங்கத்தினுடைய நடபடிக்கைகள் ஒவ்வொரு புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவரும் மற்றவர்களுக்கு கிறிஸ்துவை அறிவிப்பது தனக்குரிய சொந்த ஒரு பெரும் பொறுப்பென்று உணர்ந்து செயல்பட்டார்கள் [அப். 8:4, 11:19-21]

அந்த மாதிரியை மட்டும் அறிந்து கொள்வது போதாது, சத்தியத்தைப்பற்றிய அறிவு நடைமுறைபடுத்தி ஆகிவிட்டது என்று பொருளாகாது. சத்தியத்திற்கு மறுமொழி கொடுத்து விட்டோம் என்பதும் சரியல்ல. அப்போஸ்தல காலத்தில், கிறிஸ்தவர்கள் உலகத்துமக்கள் ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிக்க பெரும் விருப்பமுள்ளவர்களாய் இருந்தார்கள். அதற்கான காரணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பொருப்புள்ளவர்களாக ஆக்குகிறது.

1. கிறிஸ்துவின் அதிகாரமும், கட்டளையும்:-

ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அவருக்கு சாட்சியாக விளங்கவேண்டும்; வாழவேண்டும் என்பது வலியுறுத்துகிறது [மத். 28: 18-20; 16:15,16; லூக். 24:46-49; யோ. 20: 21-23; அப். 1:8]. நாம் கிறிஸ்துவின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டு கிறிஸ்துவின் வாக்குக்கு செவிகொடுத்து வாழாமல் இருக்கலாமா?

2. திருக்கட்டளை:-

இயேசுவினால் நமக்கு கட்டளையிடப்பட்டது. உலகத்தில் வேறு ஒருவருக்கும் இல்லாத அதிகாரம் இயேசுவுக்கு உண்டு. வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உரிமைபாராட்டுகிறார். அவர் இந்த உலகத்தில் வந்து, வாழ்ந்து மரித்து, உயிர்த்து விண்ணுலகத்திற்கு எழுந்தருளிப்போய், தேவனுடைய வலது பாரிசத்தில் எல்லா அதிகாரமுடையவராய் வீற்றிருக்கிறார்.

அவர் தேவனுடைய திருமைந்தனாக இருந்தாலொழிய வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரம் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்க [illegible]டார். [illegible] அவர் பரலோகத்தில் போய், தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கிறார். தமது திருப்பணிக்கு உலகத்தின் செல்வம் எல்லாமும், நல்ல பூமியும், பரலோகத்தில் மீட்கப்பட்டவர்களும், தமது ஆட்சிக்குட்பட்ட தேவ தூதர்களும் உறுதுணையாக ஊழியம் செய்யும்படி வைத்துள்ளார்.

உலகத்தை இரட்சிக்கும் தமது சொந்த திருப்பணியின் வெற்றிக்கு அவர்தாமே உத்திரவாதியாகவும் வீற்றிருக்கிறார். இந்த அளவு வெற்றி நிலைக்கு அவர் தமது பன்னிரண்டு சீடர்களை வைத்து வைத்தார். பவுலை அழைத்தார். இவர்களையும் மாற்குவாக்கா, தமது புதிய ஏற்பாட்டினை முழுமையானதும், நிறைவுடையதுமாய் எழுதும்படி ஆவியினால் நிறைப்பி ஏவினார். தமது ஆவியினாலே திருச்சபையில் வாழ்கிறார். திருச்சபையின் ஒவ்வொரு உண்மையான சீடருடனும் அவர் ஒத்துழைக்கிறார்.

புதிய ஏற்பாட்டின் சாரம் பெரிய கட்டளையாகும். விசுவாசமுள்ளவர்களாகி, திருமுழுக்கு பெறும் எல்லோருக்கும், அது இரட்சிப்பை வாக்குறுதி செய்கிறது. எல்லா நாடுகளுக்கும் சென்று, எல்லா மக்களுக்கும் நற்செய்தியை பிரசங்கித்து, அவருடைய திருப்புதல்வனின் பெயரில் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பையும் அறிவிக்கின்ற அவருடைய சீடர்கள் யாவருடனும் கிறிஸ்து பிரசன்னமாய் இருந்து, கிரியை செய்கிறார்; அதற்கு உறுதியளித்துள்ளார்.

அப்போஸ்தலர் கட்டளையிட்டு திருமுழுக்கு பெறும் விசுவாசிகளுக்கும் எல்லாவற்றையும் போதிக்க வேண்டுமென்றும வற்புறுத்துகிறது கர்த்தா முதலில் பன்னிருவரை தம [illegible] படுத்தினார். ஏனென்றால் அ[illegible] டன் வாழ்ந்தவர்களானதால் அத[illegible] தகுதியுடையவர்களாய் [illegible]

விண்ணுலகிலும், [illegible] எல்லா அதிகாரமும் [illegible]

என்று சொன்ன இந்த ஒருவரைபற்றி நாம் மறுபடியும் சிந்திக்கலாம் ஏனென்றால் அவர் நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுபோனால் எதனால் சாரமாக்கப்படும் வெளியில் கொட்டப்படுவதற்கும், வெளியில் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறென்றுக்கும் உதவாது என்றார் (மத். 5:13).

நாம் இங்கே நமது நற்செய்தியை பரப்பும் செயல் நோக்க அளவு என்ன என்பதை சரியாக கவனிப்போமாக. கிறிஸ்தவ வாழ்க்கை முரண்பாடில்லாத வாழ்க்கையாகும். நமக்கு பரலோகம் கட்டளையிட்ட ஒரு பெரும் பொறுப்புண்டு. அதே வேலையில் தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் நாமும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் மூலம் உலகத்தை இரட்சிக்கவேண்டுமென்றும் கடவுளின் செயல் நோக்கத்தில் நம்முடைய பங்கு எவ்வளவு என்பதை சிறப்பாக கவனம் செலுத்தவேண்டும்.

பாவத்திலே இழந்துபோன இந்த உலகத்தை குறித்து, அக்கரை ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் இருக்க வேண்டும் [மத். 5:13]ல் நீங்கள் உலகத்துக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்று சொன்னபோது, இயேசு ஒவ்வொரு கிறிஸ்தவர்களையும் நினைத்து பேசுகிறார் என்று கவனிக்க வேண்டும். இந்த வசனத்தில் இயேசு உப்பின் கூர்மையான உபயோகத்தை அல்லது செயல் நோக்கத்தை கொடுத்துள்ளார். அப்படியென்றால் மத். 5:13ன்படி நமது நோக்கம், நாம் வாழுகின்ற வாழ்க்கைக்கு நாம் ஒரு தனிச்சுவை அல்லது நருமணம் கொடுக்க வேண்டும் என்பதாம்.

நாம் யார்? நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம், அல்லது நாம் ஏன் இங்கே இருக்கிறோம் என்று அறியாமல் வாழ்வோமாயின் நமது வாழ்க்கை அவ்வளவு பிரயோஜனமாயிருக்காது. உண்மையிலே வாழ்க்கை சலிப்பை தருவதாயிருக்கும். இந்த கேள்விகளுக்கு விடை சொல்லுவது கிறிஸ்தவனின் கடமை. நாம் யார்? அறிவில்லாத உயிர்கள், கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள் (ஆதி 1: 26-28). நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம், இந்த வாழ்க்கையின் மூலமாக நாம் நமது வழியில் பரலோகத்தில் அல்லது நரகத்தில் நித்தியமாய் வாழ்வதற்கு, சென்று கொண்டிருக்கிறோம்.

பரிசுத்த விவாகம

மணமகன்	மணமகள்	இடம்	காலம்
Bro S பவுல்	Sis Y விஜயக்குமாரி	[illegible]	15-6-96
Bro [illegible]	Sis [illegible]	[illegible]	12-7-96

இங்கே நாம் ஏன் இருக்கிறோம். கடவுளை (நம்மை உண்டாக்கினவரை) பரம தந்தையை மகிமைபடுத்துவதற்காக நாம் இருக்கிறோம். நாம் இதனை செய்வதில் நமக்காக நாம் விரும்பும் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் பெறலாம். இதற்கு பதில் சரியானபடி ஒவ்வொருவருடைய வாழ்க்கையில் உண்மையாய் நிகழுமானால் தனிச் சுவையை அவர்களுக்கு கொடுக்கும். ஆனால் உப்பு சாரமற்றுப்போனால் அதனால் என்ன உபயோகம். நீங்கள் வாழுகிற வட்டாரத்திலுள்ள நண்பர்களுக்கு இந்த நறுமணத்தை கொடுக்கப்போவது யார்?

மேலும் அவர் நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள் என்றும் சொன்னார் [மத். 5:14-16]. விழுந்துபோன இந்த உலகத்திற்கு நாம் ஒளி கொடுக்க முடியுமா? வேறே ஒரு நல்ல ஒளி தேவை. உங்கள் இருதயத்தின் எண்ணம் இதுவா. ஒருவேளை இது உங்கள் உதடுகளிலிருந்து வரலாம். நாம் உலகத்திற்கு ஒளியாயிருப்பது இது விளங்கிக் கொள்ள முடியாத ஒன்று என்று நினைக்கலாம். உலகத்தில் ஒரு பெரும் பகுதி இருள், சிறிய ஒளி இருக்கிறது என்பதுதான் ஒரு வருத்தத்திற்குரிய ஒரு செய்தியாயிருக்கிறது.

இந்த உலகத்தில் திட்டத்தட்ட 300 கோடி மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். பாரத நாட்டில் 54 கோடி மக்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 4கோடி மக்கள் இருக்கிறார்கள். மொத்தத்தில் கிறிஸ்தவர்களும், ரோம கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் சேர்ந்து இந்தியாவில் 2:6பிரசன்தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 5:8பிரசன். இந்த ஒளியின் அளவு எவ்வளவு பரவக்கூடியது. உங்களுக்குடல அறைகள் உள்ள ஒரு வீட்டில் எலக்டிரிக் இணைப்பு கொடுக்கும்படியாக ஒருவரை அழைத்து வேலை கொடுக்கும்போது, அவர் ஒன்று, இரண்டு அறைகளுக்கு மாத்திரம் ஏற்பாடு செய்துவிட்டு சம்பளத்தை கேட்டால், நீங்கள் என்ன சொல்லுவீர்கள். ஆனபடியினால் நாம் உலகம் முழுவதும் ஒளி கொடுக்கவேண்டும்: ஒளி கொடுக்கும்படியாக கடவுள் நம்மை நியமித்திருக்கிறார்.

என்பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதர்களை பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார் [மத். 4:19]. ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான் மனிதர்களைக் கொண்டு மனிதர்களைக் பிடிக்கிறவர். முதலாவது நாம் மனிதர்களைப் பிடிக்கும் திருப்பணிக்கு நம்மை இயேசு ஆயத்தப்படுத்த அவரோடு உடன் வேலையாட்களாக நாம் நம்மை இணைக்க வேண்டும்.

[தொடரும்]



மார்த்தின் லுத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம் (தொடர்ச்சி)

ஜான் டாலர் ஒரு தொமினிக்க சந்நியாசி. அவர் தம்முடைய ஜீவிய காலமெல்லாம் ஸ்தராஸ்புர்க் பட்டணத்திலும், கொலோன் பட்டணத்திற்கும் இடையிலுள்ள நாடுகளில் பிரசங்கம் செய்தார். அவர் 1361-ம் வருஷம் மரணமடைந்தார்

சில வருஷங்களுக்குள் லுத்தர் அகஸ்தினிய சந்நியாசியாக இருக்கும்போதே தேர்ந்த கல்விமான் என்றும், வித்தன்பர்க் என்னும் சர்வ கலாசாலையில் முதன்மையானவர் என்றும், பெயர் பெற்றார். 1516-ம் வருஷத்தில் வித்தன்பர்க்கில் பெருவாரி நோய் வந்தது.

அநேகர் பயந்து ஊரை விட்டு ஓடிப்போனார்கள் லுத்தரோ தம் உத்தியோக ஸ்தானத்திலேயே இருந்தார். சிலர் லுத்தருக்கும் அவர் ஊரை விட்டு ஓடிவிடும்படி சொன்னார்கள். லுத்தர் அவர்களுக்குக் கொடுத்த மறுமொழி. "சகோதரனாகிய மார்த்தின் இறந்துபோனால் முழு உலகமும் முடிவுக்கு வராது என்று நம்புகிறேன்" என்பதே. பெருவாரி நோயைவிட அதிக மோசமான ஒரு சத்துருவோடு அவர் சீக்கிரமாய் எதிர்த்து போராட வேண்டியதிருந்தது. அந்த போராட்டத்தில் அவர் தம் எல்லா பெலத்தையும், வரத்தையும், முயற்சியையும் ஆயுள்பரியந்தம் செலவிட்டார்.

8 பாவமன்னிப்பு சீட்டு விற்றது:-

1513-ம் வருஷத்திலிருந்த 10 அம் லேயோ என்பவர் ரோமாபுரியில் போப்பாக வீற்றிருந்தார். பரிசுத்த பேதுருவின் ஆலயத்தில் வீற்றிருந்து போப்புவாயிருந்த, அவர் முந்தின போப்புவின் காலத்தில் பரி. பேதுருவின் ஆலயத்தில் மண்டபம் கட்ட ஆரம்பித்திருந்தார்கள். அதைக் கட்டி முடிப்பது போப்புவாகிய 10-ம் லேயோவின் பொறுப்பாயிருந்தது. மைக்கேல் எஞ்சலோ என்னும் பேர்போன சிற்பாசாரி குறிப்பிட்ட சிறந்த மாதிரிபடி அதைக் கட்டி முடிக்க பாப்பு தன் பொக்கிஷத்திலிருந்து எடுத்து கட்டிடத்துக்காக செலவழிக்க மனமற்றவராயிருந்தார்.

சிற்றின்பத்திலும், ஆடம்பரத்திலும் செலவழிக்க அவருக்கு அதிக பணம் வேண்டியதிருந்தது. அவர் மட்டுமல்ல அவருக்குக் கீழாக [illegible] ஆலோசனைக்காரரும் அவரைப் போல் [illegible] சிலர் [illegible] வது ஒரு உபாயத்தால் தங்கள் பொக்கிஷசாலைகளை நிரப்ப எண்ணங்கொண்டார்கள். இந்த உபாயம் என்னவென்றால்; ஜர்மானிய தேசத்தில் பாவமன்னிப்பு சீட்டு விற்க ஆரம்பித்ததே. மார்க்டெபுர்க். அத்தியட்சர், அத்தியட்சர் பதவிக்காக பாப்புவுக்கு 30,000 [முப்பதாயிரம்] கில்டர் லஞ்சம் கட்டி ஆக்ஸ்புர்க் திரவிய சாலைக்காரராகிய புகர்ஸ் என்னும் கம்பனியாருக்கு அதிக கடனபட்டார். பழிக்கு அஞ்சாத இந்த அத்தியட்சரை பாப்புவானவர் பாவமன்னிப்பு சீட்டு வியாபாரத்திற்கும் தலைவனாக நியமித்தார். வரும்படியில் பாதியும் அவருக்கு வாக்களிக்கப்பட்டது. விலைக்கு வாங்கப்படக்கூடிய இந்த பாவமன்னிப்பு வியாபாரத்திற்காக நியமிக்கப்பட்ட கீழ்த்தர உத்தியோகஸ்தர்களில் மகா ஊக்கமும் உற்சாகமும் உள்ளவன் யோவான் தெத்ஸெல் என்பவனாகும். இவன் ஒரு தொமினிக்க சந்நியாசி. நா[illegible]ந்த மகா நிந்தையான ஊழியம் செய்தான்.

அவன் ஏல விலை கூறுவதற்குத் தக்க பலத்த தொண்டையும், பேச்சு வல்லமையும் கொண்டவன். அவன் ஒரு பட்டணத்துக்குள் நுழையும்போது மணிகள் அடிக்கப்பட்டன. பாடசாலை பிள்ளைகளும், நகர அதிகாரிகளும் பவனி கோலமாய் போய் அவனை சந்திப்பார்கள். பாப்புவின் விருதுகுறி சித்தரிக்கப்பட்ட ஒரு உயர்ந்த சிவப்பு சிலுவையும், ஒரு மக்மல் பட்டு மெத்தையின்மேல் வைக்கப்பட்ட பாப்புவின் அதிகார பாத்திரமும் ஊர்கோலத்திற்கு முன் கொண்டுபோகப்பட்டன.

கோயிலுக்குள் நுழைந்தவுடன் பேர் சொன்ன சிலுவையும், பணப் பெட்டியும் பீடத்திற்கு முன் வைக்கப்பட்டன. அப்போது யோவான் தெத்ஸல் ஜனங்களைப் பார்த்து தேவனுடைய மகா விலையுயர்ந்த பேறாகிய இந்த பாவமன்னிப்பு [illegible] நீங்கள் இதுவரையிலும் செய்ததும், இனி செய்யப்போகிறதுமான உங்கள் எல்லா பாவங்களுக்கும் [illegible]

கைகண்ட ஔஷதமும், முத்தரிக்கும் ஸ்தலத்திலுள்ள உங்கள் முன்னோர்களையும் அவ்விடத்திலிருந்து மீட்கும் வல்லமையுள்ளதென்று மகா துணிகரமாய் வெட்கமில்லாமல் ஊத்தை வாயால் உரக்கக் கத்துவான்.

இந்த நேர் நெறியற்ற அயோக்கியனுடைய வெட்கமில்லாத படுபொய்யைக் கேட்டு உணமையுள்ள சில ஆத்துமாக்கள் அருவறுப்புற்றுர்கள். ஆனால் சாமானிய ஜனங்களோ அதை நம்பி உயர்ந்த விலை கொடுத்து பாவமன்னிப்பு சீட்டை விலைக்கு வாங்கினர்கள். தெத்ஸல் இவவிதமாய் ஊர் ஊராய் போய் வியாபாரம் செய்தான். அவன் வித்தன்புர்க்குக்கு 4 மைல் தூரத்திலுள்ள ஜிட்டர்பர்க் என்னும் இடத்திற்கு வந்தபோது. பாப்புவின் நாடோடி வியாபாரியாகிய தெத்ஸல் என்பவனுடைய அயோக்கிய வேலை லூத்தருடைய குரு ஊழியத்திற்கு இடையூறு உண்டாக்கிற்று. எப்படியென்றால் தம்மன்டை பாவசங்கீர்த்தனம் செய்ய வந்தவர்களுக்கு அவர்கள் தங்கள் பாவங்களுக்காக தபசு செய்யவேண்டும் என்று லூத்தர் புத்திசொனனபோது, அவர்கள் தாங்கள் பாவமன்னிப்புச் சீட்டு வாங்கிக் கொண்டபடியால் தபசு செய்ய அவசியமில்லை எனறு தடை சொன்னர்கள். ஆகையால் இந்தப் பரிசுத்தக்கேடான வியாபாரத்தை நிறுத்துவது தன்மேல் விழுந்த கடமை என்று லூத்தர் உணர்ந்தார்.

9. சீர்திருத்தலின் துவக்கம :-

லூத்தருடைய மகா விசேஷித்த வேலையாகிய சீர்திருத்தலின் கிரியையை துவக்க அவருக்குக் காலம் வந்தது. லூத்தர் இந்த யுத்த களத்திற்குப் பலவந்தமாய் இழுக்கப்பட்டார். ஆனால் முதுகு காட்டி ஓடவில்லை. முதல் அவர் வித்தன்புர்க் ஆலய பிரசங்கபீடத்திலிருந்து தெத்ஸல் என்பவனுடைய தேவதூஷணமான செய்கைகளைக் குற்றப்படுத்தி, பயாறுத்திப் பேசினபிறகு அவர் தாம் செய்ய வேண்டிய முடிவான ஏற்பாடு யாது என்று தீர்மானம் செய்தார். லூத்தர் பாவமன்னிப்பு சீட்டு வியாபாரத்தைக் கண்டனம்பண்ணி உலகமெங்கும் கீர்த்திபெற்ற 95 நியாயங்களை எழுதி வித்தன்புர்க் பட்டணத்தின் அரண்மனை தேவாலயக் கதவில் 1517-ம் வருஷம் அக்டோபர் மாதம் 31-ம் தேதி ஒட்டி ஆணியறைந்தார். அது முழு ஜெர்மனிய தேசத்தில் பெரிய பரபரப்பை உண்டுபண்ணிற்று. இந்த ஏற்பாடு எவ்வளவு வல்லமையாய் வேலை செய்யும் என்று லூத்தருக்கே முதலில் தெரியாமலிருந்தது.

"நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குணப்படுங்கள் என்று சொன்னபடியால், ஒரு விசுவாசியின் முழு ஜீவியமும் குணப்படுவதாகவே இருக்க வேண்டுமென்பதே அவருடைய சித்தம்." என்கிற இந்த முதல் நியாயத்திலேயே தமது அஸ்திபாரம் என்ன என்பதை லூத்தர் காட்டினார் லூத்தர் இந்த நியாயங்களில் தாம் பாவமன்னிப்பு சீட்டுக்கு விரோதமாகச் சொல்லக்கூடிய பலருடைய அபிப்பிராயங்களுக்கு ஏற்ற சகல நியாயங்களையும் சொல்லாவிட்டாலும் இந்த நியாயங்களை மட்டும் ஒட்டி ஆணி அறைந்தது அம்மட்டும் பாப்புவின் அடிமைத்தனத்தில் கட்டுண்டிருந்த எல்லா ஜனங்களுக்கும் நித்திய சுவிசேஷ விடுதலையை அறிவிக்கும் முதல் மணி சத்தமாயிருந்தது. இச்செய்தி எல்லோருக்கும் பிரமிப்பு உண்டாக்கும் விதமாய் அவ்வளவு சீக்கிரம் ஜர்மானிய தேசம் முழுவதும் அதற்கு அப்பால் வெகுதூரமும் பரவிற்று. பாவமன்னிப்புச் சீட்டு வாங்க வந்தவர்கள் லூத்தருடைய நியாயங்களை வாசித்து பிரதிகள் எழுதி தங்கள் வீடுகளுக்குக் கொண்டுபோய், அவைகளைப்பற்றி ஆழ்ந்து யோசித்தார்கள். சுவிசேஷ பணிவிடைப் பெண்ணுகிய அச்சு எந்திரம் விடுதலை அடைந்த சத்தியத்தை நாலா பக்கங்களிலும் வெகு சீக்கிரம் பரவச் செய்தது.

பாவ மன்னிப்பு சீட்டு விற்பனைக்கு விரோதமாய் லூத்தர் எழுதி ... கொடுத்

போது பாப்புவையாவது, பாப்பு மார்க்க ஏற்பாடுகளையாவது அவர் எதிர்க்க எண்ணங்கொண்டதில்லை. அடுத்த வருஷம் வசந்த காலத்தில் 95 நியாயங்களுக்குள அவர் ஒரு வியாக்கியானம் எழுதி அதை 10-ம் லேயோவுக்கு பிரதிஷ்டை செய்து பிரசுரம் செய்தார். அதில் ஒரு பிரதியை பிராண்டன்பர்க் அத்தியட்சருக்கு அனுப்பினர். அதுபோன்று தம் பழைய சிநேகிதராகிய ஸ்தௌபிதஸ் சாஸ்திரியார் மூலமாய் பாப்புவுக்கு வேறொரு பிரதியையும் அத்துடன் ஒரு கடிதத்தையும் அனுப்பினர். கடிதத்தில் லுத்தர் பாப்புவை பூலோகத்தின் கிறிஸ்துவின் பிரதிநிதி என்று வணக்கமாய் வக்கணையிட்டு எல்லா விஷயங்களையும் விபரமாய் சொல்லி எழுதினதாவது:

எழுதினதை நான் மறுதலிக்க முடியாது: ஆகையால் மகா பரிசுத்த பிதாவே நான் எனக்குரியது, உள்ளது, எல்லாவற்றோடும் உம்முடைய பரிசுத்த பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிகிறேன், உம்முடைய இஷ்டபடி ஜீவனை கொடுத்தாலும், எடுத்தாலும், உறுதிபண்ணினாலும், தடுத்தாலும், அங்கீகரித்தாலும், கடிந்து பயமுறுத்தினாலும், என்னபண்ணினாலும்சரி அதையெல்லாம் உம்மை அரசாண்டு உம்மைக் கொண்டே பேசும் கிறிஸ்துவின் சத்தம் என்றே அங்கீகரித்துக் கொள்ளுவேன் என்பதே.

(தொடரும்)

"அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே [இயேசுவின் நாமத்தினாலே] பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக் 24.47).

வேத பாடம்

[தொடர்ச்சி]

எண்ணாகமம்

எண். 33அதி.

தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களை வரிசைக்கிரமமாக எழுதும்படியாக.

எண். 33:1-49

[illegible] மாதம். [illegible] முதல் மாதமாக எண்ணப்பட்டது. அந்த மாதத்தின் பதினாலாம் தேதி [illegible] பஸ்கா ஆசரிக்கப்பட்டது. மறுநாள் அதிகாலையில் முதலாம் மாதம் 15-ம் தேதி அவர்கள் ராமசேசை விட்டு எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள். [illegible] காலத்தில் [illegible] பிரயா

ணத்தை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பஸ்காவுக்கு மறுநாளிலே எகிப்தியர் எல்லோரும் பார்க்க பெலத்த கையுடன் புறப்பட்டார்கள். இவ்விதமாய் புறப்பட்டு அவர்கள் காதேஸ்பர்னேயா போய் சேர்ந்தார்கள். இப்பொழுது தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படியாக தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காமல் காதேஸ்பர்னேயாவிலிருந்து தேசத்தை வேவுபார்க்க ஆட்களை அனுப்பி பார்த்துவிட்டு அப்புறம் போகிறோம் என்று கேட்டுக் கொண்டார்கள்.

வேவு பார்த்துவிட்டு திரும்பி வந்தவர்களில் எப்புன்னேயின் குமாரனாகிய காலேப்பும், நூனின் குமாரனாகிய யோசுவாவும் தவிர மற்றவர்களெல்லாரும் துர்ச்செய்தி கொண்டு வந்தார்கள். அதுதேசம் நல்ல தேசம்தான்; அதின் கனிகள் இது; அங்கே ராட்சதர்களை கண்டோம்; பட்டணங்கள் அரணானவைகளாயிருக்கிறது; நாம் அதை ஜெயிக்க முடியாது; அவர்கள் பார்வையில் நாங்கள் வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம்; அவர்கள் மகா பெரிய உருவமுடையவர்களாயிருந்தார்கள் என்று பயத்தை உண்டுபண்ணினார்கள்; இதனால் ஜனங்கள் பின்மாற்றமடைந்து, திரும்பி எகிப்துக்குப்போக எண்ணி கலகம் செய்தார்கள்; எண். 13,14-ம் அதிகாரங்களில் இது எழுதப்பட்டுள்ளது. அப்பொழுது கர்த்தர் அந்த ஜனங்களைக் குறித்து தீர்ப்பு செய்தார். இவர்கள் நாங்கள் காடுகளுக்குப்போனால் செத்துப்போவோம் என்று சொன்னதினிமித்தம், இவர்களெல்லாரும் மடிந்துபோவார்கள், இவர்களுடைய சந்ததியாரை கானானை சுதந்தரிக்கச் செய்வேன், திரும்பிக்கொண்டு சிவந்த சமுத்திரம் வழியாய் நடவுங்கள் என்று கட்டளையிட்டார்.

அப்படியே அவர்கள் சுற்றி நடந்தார்கள். எகிப்திலிருந்து புறப்பட்டு கானான் மட்டும் வந்து சேர 43 இடங்களில் பாளயமிறங்கினார்கள். 38 வருஷ அலைச்சலுக்குப்பின்பு மறுபடியும் அதே காதேஸ்பர்னேயா வந்து சேர்ந்தார்கள். இதன் மத்தியிலே பிரயாணங்களில் எங்கெங்கே தங்கினார்கள் என்கிற விபரம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்தந்த இடங்களில் நடந்த சம்பவங்களும் தேவனுடைய செயல்களும், மக்களுடைய இருதயத்தின் சீர்கேடுகளும், அவர்களுக்கு நடந்த சம்பவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்படியாக யுத்த புருஷராக இருந்தவர்கள் யுத்தம் செய்து தேசத்தை சுதந்தரிக்க மறுத்ததினிமித்தமும், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, கானானுக்குள் பிரவேசிக்க மறுத்ததினிமித்தமும் அவர்கள் எல்லோரும் செத்துத் தீரும்வரை அவர்களை தேவன் சுற்றி அலையப்பண்ணினார். இப்படியாக அவர்கள் 38 வருஷம் சுற்றித் திரிந்தார்கள் (உபா. 2:1-16).

பாவத்தினுடைய பலன், அவிசுவாசத்தினுடைய பலன் அற்புதமாய், விடுதலையாய் எகிப்திலிருந்து புறப்பட்டு, சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோனாலும்; அவிசுவாசத்தினிமித்தமும், கீழ்ப்படியாமையினிமித்தமும், முறுமுறுத்ததினிமித்தமும் புறப்பட்டவர்களில் 20 வயதுக்கு மேற்பட்ட யுத்தசேனைத்தரான ஆண் பிள்ளைகளில் 2பேர் தவிர மற்ற எல்லோரும் செத்து மடியும்படியாக தேவன் அவர்களை சுற்றி நடக்கப்பண்ணினார்.

அப்படியே கிறிஸ்தவ வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையை, [illegible] விசுவாசித்து நாம் கிறிஸ்தவ வாழ்க்கையை சுதந்தரித்துக் கொள்ளவேண்டும். விசுவாசிக்காவிட்டால் சுற்றி, சுற்றி இஸ்ரவேலர்கள் வந்ததுபோல இந்த அவிசுவாசிய வாழ்க்கையில் [illegible] நடக்க வேண்டியதிருக்கும். அவிசுவாசத்தினிமித்தம் [illegible] இரண்டு வருஷத்திற்குள் போய் சேரவேண்டிய இடத்தை 40 வருஷமாக நடந்து, அலைந்து

தார்கள். ஆம், திரும்பிக்கொண்டு நீங்கள் நடவுங்கள் என்று தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார் [உபா. 1:39,40]. இந்த பிரயாணங்களில் 43 இடங்களில் அவர்கள் பாளயமிறங்கினார்கள். அவர்களுக்கு உணவும், தண்ணீரும், வஸ்திரமும், வியாதி இல்லாதபடியும், கால் வீங்காதபடியும் கர்த்தர் காத்தார். ஆனால் கீழ்ப்படியாமல் கலகம் செய்த எல்லோரும் இறந்துபோகும்படியாக, கானானை கண்டடைய முடியாதபடி தேவன் தடுத்தார்.

அநேகர் தங்களுடைய ஜெபம் கேட்கப்படுகிறதினாலும், தாங்கள் செய்கிற காரியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கிறபடியினாலும், கடவுள் தங்களோடுகூட இருக்கிறார் என்று சொல்லி எண்ணிக் கொள்ளுகிறார்கள். கர்த்தர் புறப்படச் செய்ததினிமித்தம் உணவும், உடையும், பாதுகாப்பும் கொடுக்கிறது; தேவனுடைய காரியம்தான். ஆனால் தேவன் அவர்கள்மேல் பிரியமாயிருக்கவில்லை. தேவனுக்குப் பிரியமாக ஜீவித்து, ஜெயம்பண்ணி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுவது, விசுவாசமாயிருந்து தேவனால் நற்சாட்சி பெறுவது, முடிவுபரியந்தம் கிறிஸ்தவ ஜீவியத்தில் வெற்றியடைவது மிகவும் அவசியமாகும். அதைவிட்டு, வீட்டு உலகப் பிரகாரமாக ஆசீர்வாதம் கிடைப்பதால் தேவன் நம்மேல் பிரியமாயிருக்கிறார் என்று எண்ணக்கூடாது.

மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படியாக இந்த 40 வருஷமாக உன்னை வனாந்தரத்தில் அலையப்பண்ணினேன் என்று தேவன் சொல்லுகிறார். மனிதனுடைய இருதயத்தில் உள்ளதை அவன் அறிந்து கொள்ளும்படியாய் உபா. 8:2,3 தேவன் விட்டு விடுகிறார்.

நாம் இரட்சிக்கப்பட்டவுடனே, தேவன் நம்மை பரலோகத்தில் எடுத்துக் கொள்ளுகிறதில்லை. நம்மில் இருக்கிற கீழ்ப்படியாமையும், இச்சைகளையும் நாம் கண்டு கொள்ளவும், நாம் இந்த கிறிஸ்தவ ஜீவியத்தில் போராடி ஜெயங்கொண்டு வெண் வஸ்திரம் தரிக்கவும் "ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்" [வெளி 3:5] என்று தேவன் சொன்னபிரகாரம் நற்சாட்சி பெறவும், ஜெயங்கொள்ளும்படியாக இந்த கிறிஸ்தவ வாழ்க்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மை பரிசுத்தப்படுத்தவும் இந்த கிறிஸ்தவ வாழ்க்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. சோதனைகளை சகித்து, தேவனுடைய பட்சத்தில் நின்று, சாட்சியாய் விளங்குவதினால் கிரீடம் பெறும்படியாக கிறிஸ்தவ வாழ்க்கைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர்கள் 38 வருஷமாக சுற்றி, சுற்றி அலைந்த பின்பு அவர்கள் காதேஸ்பர்னேயாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இப்பொழுது இஸ்ரவேலர்கள் கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டுகளின் பிரயாண விபரம் நாமும் நம்முடைய வாழ்க்கையில், ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்முடைய வாழ்க்கையில் நடந்ததுமான சம்பவங்களை எழுதி வைப்போமென்றால் நம்முடைய காரியங்கள் நமக்கு தெளிவாய் தெரியும். அவ்வப்பொழுது நம் ஞாபகப்படுத்திக் கொள்ளுவதும் நல்லதே. தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலேயும், இந்த பிரயாணங்களைப் பற்றிய விபரங்களும், ஞாபகார்த்தமும் நமக்காக எழுதப்பட்டிருக்கிறது. அவைகளிலே நாம் வாசிக்கும்பொழுது தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை ஞாபகப்படுத்தினதாக நாம் பார்க்கிறோம் (மீகா 6:3-5).

"நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து மீட்டு நடத்தும்படியாக மோசே, ஆரோன், மிரியாம் போன்றவர்களை உனக்கு முன் அனுப்பினதையும், மோவாபின் ராஜாவாகிய பாலாக் உனக்கு விரோதமாய் பண்ணின ஆலோசனையையும், பிலேயாம் அவனுக்குப் பிரதியுத்திரம் சொன்னதையும் இன்னின்னதென்றும், சித்தீம் தொடங்கி கில்கால் மட்டும் நடந்தது இன்னதென்றும், நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்து கொள்ளும்படி நினைத்துக்கொள் என்று எழுதப்பட்டுள்ளது. இவ்விதமாகவே இஸ்ரவேலருடைய பிரயாணங்களில் இடங்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கிற இடங்களில் அநேக இடங்களில் சில முக்கியமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவைகள் தியானிக்கப்பட வேண்டியவைகள்.

நம்முடைய வாழ்க்கையிலேயும் தேவன் செய்த நன்மைகள், கிருபைகள், கைதாங்கல்கள், உதவிகள், வாழ்க்கையில் சம்பவித்த சம்பவங்கள், இடைபட்ட ஆட்கள் இவைகளை நினைவுகூர்ந்து தேவனுக்கு முன்பாக பயந்திருக்கவும், ஒழுங்காக இருக்கவும், கடவுளுடைய வார்த்தையை விசுவாசித்து, அவருடைய கட்டளையை நிறைவேற்றவும் எப்பொழுதும் ஜாக்கிரதையாக இருப்போமாக! இஸ்ரவேலருடைய பிரயாணங்கள் வரிசைக்கிரமமாக மோசேயினால் எழுதப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய காரியமாகும். அதை எழுதி வைக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டார் என்று நாம் அறிவது மிகவும் ஆச்சரியமான காரியம். நாமும் அவைகளைத் தியானித்து இஸ்ரவேலர்கள் செய்த தவறுகள் நம்முடைய வாழ்க்கையில் வராதபடி கவனமாய் நடந்துகொள்ள இந்த அதிகாரம் நம்மை எச்சரிக்கிறது. அதற்காய் நாம் தேவனை ஸ்தோத்தரிப்போம். இப்பொழுது இஸ்ரவேலர்கள் கானானின் ஓரமாகிய யோர்தானின் இப்புறமாக எரிகோவின் அருகே யோர்தானைச் சேர்ந்த மோவாபின் சமனான வெளியிலே பாளயமிறங்கி இருக்கிறார்கள். அடுத்தாற்போல் இருப்பது யோர்தான் நதி; அதைத் தாண்டினால் கானான்.

இறைவன் அவர்களுக்கு சில கட்டளைகளைக் கொடுக்கிறார். இவர்கள் கானானுக்குள் போய் சேரும்பொழுது அந்த குடிகளைத் துரத்திவிட்டு அவர்களுடைய சிலைகள், விக்கிரகங்கள், மேடைகள் இவைகளையெல்லாம் தகர்த்துப்போட்டு, அந்த தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். சீட்டுப்போட்டு யார் யாருக்கு எந்த பாகம் விழுகிறதோ அது அவர்களுக்குரியதாகும். தேசத்தின் குடிகளை நீங்கள் துரத்திவிடாமல் விட்டுவிட்டீர்களென்றால் அவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும், உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள். நான் உங்களைத் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொன்னார்.

எண். 33:50-56

நாம் கிறிஸ்தவ வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும் பொழுது எல்லா சிலைகளையும், புறஜாதியார் பழக்கங்களையும், அவர்களுடைய வழிகளையும் நம்மில் ஒட்டியிருக்கிற சகல பாரம்பரியங்களையும் அகற்றிவிட வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

[தொடரும்]

"...உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" [உபா. 8:2]

சமாரியர்

சமாரியர் Samaritans: கி.மு 722ல் அசீரிய அரசனாகிய சர்கோன் இஸ்ரவேலரின் வட இராஜ்யத்தின் தலைநகர் பட்டணமாகிய சமாரியாவை ஜெயித்துச் சிறையாகத் தன் தேசத்திற்கு அனுப்பின இஸ்ரவேலருக்குப் பதிலாக அவன் குடியேற்றின அந்நிய ஜாதியாராகும் சமாரியர். இந்த அந்நியர் முதலில் வந்தபோது, அவர்கள் தங்கள் தேவதைகளை விட்டுவிடாமல் அசீரியாவிலே அவைகளை வணங்கினதுபோல இங்கேயும் வணங்கினார்கள். அதினிமித்தம் அவர்களுக்கு அநேக துன்பங்கள் வந்தன என்பதை அறிந்து, அரசனிடம் பிரதுயஹோவாவின் யெகோவாவின் [மெய்த்தேவனின்] ஆசாரியன் ஒருவனை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த ஒரு ஆசாரியன் அனுப்பப்பட்டான். ஆசாரியனின் போதனையினால் யெகோவாவையும் வணங்கினார்கள். மேலும் இவர்கள் ஈனமானவர்களை தங்களுக்கு ஆசாரியர்களாக ஏற்படுத்தினார்கள் [2 இராஜா. 17:32]; இதினிமித்தம் யூதர்கள் இவர்களைப் பகைத்தார்கள். பிற்காலத்தில் ஏறக்குறைய எண்பது (80) வருஷங்களுக்குப்பின் அசீரிய இராஜா இன்னும் அநேக அந்நியரை சமாரியாவில் குடியேற்றினார் [எஸ்றா 4:10]

கி.மு 536ல் யூதர்கள் சிறையிருப்பிலிருந்து வந்தவுடனே அவர்களுக்கும் சமாரியர்களுக்கும் விரோதம் உண்டானது (எஸ்றா 4:7; நெகேமி. 4:7). சமாரியர் பிற்காலத்தில் கெரிசீம் மலையில் ஒரு பெரிய தேவாலயத்தை கட்டினார்கள். இதினிமித்தமும் யூதர்கள் இவர்களைப் பகைத்தார்கள். இந்தப்பகை புதிய ஏற்பாட்டின் காலத்தில் நீடித்தது [லூக். 17:18; யோ. 4:12].

இயேசு நல்லசமாரியன் ஒருவனுடைய நற்குணத்தை வியந்து பேசினதும், சமாரியனான குஷ்டரோகிக்கு சுகம் அளித்ததும், சமாரிய ஸ்திரீக்கு உத்தம போதனைக் கொடுத்ததும், அவருடைய இராஜ்யத்தில் ஜாதிபேதம் இல்லை என்பதைக் காட்டுகிறது (லூக். 10:33; 17:16; யோ. 4:9). சமாரியர் மெய்த்தேவனையும், விக்கிரகங்களையும் வணங்கின கலப்பு இனமாகும். சமாரியர்களை யூதர்கள் அற்பமாய் எண்ணினார்கள்: கீழ் ஜாதி என்று சொன்னார். இயேசு கிறிஸ்துவையும் சொல்லாத யூதர்கள் இப்படி தூஷித்தார்கள் [யோ. 8:48]. நம்மையும் இப்படி தூஷித்தால் நாம் ஆச்சரியபடுவதற்கில்லை; பிசாசினால் உண்டானவர்கள் அப்படிச் செய்வார்கள் [யோ. 8:44].

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd. No. [illegible]
Postal Regd. No. MH BY [illegible]5
Tamil Monthly Magazine

புதிய எருசலேம் சபையின் 28வது ஆண்டு விழா (8-8-1968ல் 8-8-1996)

"கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார்; துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார்" (சங். 147:2).

28- ஆண்டுகளாக "புதிய எருசலேம் சபையை" உயர்த்தி உலகமெங்கும் வியாபிக்கச் செய்து வருகிற தேவனை ஸ்தோத்தரிப்போமாக! தேவனுடைய இந்த மகத்துவமான கிரியைக்காய் தேவனை ஸ்தோத்தரித்து, சபையின் இந்த 28வது ஆண்டு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுவீர்களாக!!

CHIEF PASTOR: N. LAZAR

அறிவிப்புகள்

முழு இரவு விழிப்பு ஜெபம்

30 [செவ்வாய்] ஜூலை 1996
28 [புதன்] ஆகஸ்டு 1996
26 [வியாழன்] செப்டம்பர் 1996

புதிய எருசலேம் செய்தி பத்திரிகை

ஆண்டு சந்தா Rs 30-00
வெளிநாடு Rs. 400-00

அனுப்ப வேண்டிய முகவரி :

CHIEF PASTOR N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR,
BARGA CROSS ROAD, BHANDUP,
BOMBAY-400 078. INDIA.

3. மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.

5 "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ. 30 [முப்பது] சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 145 - AUG. '96



EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும் சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள் :

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.
2. விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).
3. திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20
4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.
5. அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.
6. இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)
7. நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும். இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப. 1 : 1; 10:40-43)

CHIEF PASTOR· N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

பாவம் ஆயிரம் ஆயிரமாய்ப் பெருகுகிறது. பாவம், பாவத்திலிருந்து பாவத்துக்கு நடத்துகிறது. மனிதனின் உள்ளத்தில் பாவம் இருக்கிறது. பெருமை இருக்கிறது. அகங்காரம் இருக்கிறது, அகம்பாவம் இருக்கிறது. மாம்ச சிந்தை இவனில் உண்டாகும்போது பாவம் வெடிக்கிறது. அது அநேகரைத் தீட்டுப்படுத்தும். "முதற்கோணல் முற்றும் கோணல்" என்ற பழமொழிப்படி மனிதன் பாவத்தை அகற்றாவிட்டால் அவன் தீட்டுப்பட்டுப் போவான்; தேவ சமுகம் சேரமுடியாது. ஆனபடியால் பாவத்தை அகற்றி விடு. இருதய சுத்தமுள்ளவனிடத்தில் இராஜா பிரியமாயிருப்பார். இருதய சுத்தமுள்ளவனில் எவ்வளவு வெளிதாக்குதல் உண்டானாலும் உள்ளம் அமைதியாயிருக்கும். துன்மார்க்கரோ அப்படியிராமல் கொந்தளிக்கும் கடலைப்போல் இருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும், அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது (ஏசா. 57: 20,21). மரம் நல்லதோ, கெட்டதோ என்று அதின் கனியினால் அறியப்படும் மத் 7.16-20. ஆதலால் பாவத்தை அகற்று அல்லது பாடுபடுவாய். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் மத். 5:8.

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

திருச்சபையின் செயல் நோக்கம்:-

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முதலாவது நம்மை, மனிதர்களைப் பிடிக்கிறவர்களாகப பக்குவப்படுத்துகிறார். அதற்கு

1. முற்றும் ஒப்புக் கொடுத்தல் முதலாவது தேவை. 2. அடுத்து ஆத்துமாக்களைபபற்றிய ஆழ்ந்த கவலையும், 3. அவர்களை கிறிஸ்துவுக்காக ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும். 4. இடைவிடா முயற்சியும் தேவை அதோடுகூட 5. கல்வாரி காட்சியை தியானிக்கவும், 6 உலகமெங்கும் புறப்பட்டுப் போங்கள் என்ற அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். 7. அதை நிறைவேற்ற வேண்டும் என்ற இடைவிடாத கவலையும் வேண்டும்.

"எங்கள் சுவிசேஷம் வசனத்தோடு மாத்திரமல்ல வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது நாங்களும், உங்கள் மத்தியிலே எப்படிப் பட்டவர்களாயிருந்தோம் என்று அறிந்திருக்கிறீர்களே" (1 தெச, 1:5). ஆத்துமாக்களை வலையில் ஒட்டுபவர் கடவுளே. நம்முடைய சுயமுயற்சியினால் ஏதும் ஆகிறதில்லை. "நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்" [1 கொரி.3:9; 2 கொரி. 6:1]. ஆனபடியால் மீன் பிடிக்கிறதற்கு அவர் நம்முடன இராவிட்டால் ஒன்றும் ஆகாது. தேவன உங்களையும் ஓர் உடன் வேலையாளாய் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார். நாம் தேவன ஏவுகிற பிரகாரம் உடன் வேலையாளாய் செயல்பட வேண்டும். ஆதிச்சபையார் அப்படிச் செய்தார்கள். "சிதறிபபோனவர்கள் எங்கும் சுற்றித் திரிந்து சுவிசேஷ வசனத்தைப பிரசங்கித்தார்கள" [அப். 8:4]. வல்லமையும், வரங்களையும் குறைவாய்ப பெற்றிருந்த ஒரு மனிதனை தேவன் வல்லமையாய் எடுத்து உபயோகித்து அநேக ஆத்துமாக்களை இரட்சிக்கிறதைப பார்க்கிறீர்களே, அம். தேவன மனிதர்களைப்பக்குவப்படுத்தி மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குகிறார். நீ தேவனுக்கு உடன் வேலையாளானால் கடவுளை, நீ எவ்வளவு அதற்காக ஸ்துதிக்க வேண்டும்; உன்னைப்போன்று ஒருவரைக் கூட கடவுள் தமக்கு உடன் வேலையாளாய் தெரிந்து கொண்டாரானால் நீ அவருடைய திரு நாமத்தை எவ்வளவாய் துதிக்ககடன் பட்டிருக்கிறாய். தமக்கென்று பிடிக்கப் பட்டவர்களுக்கு நன்மை செய்யும்படி கடவுள் தமக்கு உன்னை சொந்தமாக்கிக் கொண்டார். மனிதர்களைப பிடிக்கும் திருப்பணியைச் செய்வது எவ்வளவு மேன்மையுள்ளது.

நீ மற்றவர்கள் ஒழுக்கங்கெட்டு ஊதாரித்தனமாகச் செய்யும் உரையாடல்களைக் கேட்டு நம்பிக்கை இழக்காதே; மனக்கசப்படையாதே. பின்மாற்றக்காரர்கள், சுயநலக்காரர்கள், கலப்பையின்மேல் கைவைத்துவிட்டு பின்மாறுகிற, விழுந்து போனவர்களைப் பாராதே நிலையாய் நின்று சாதிக்கிறவர்கள், எழுந்து நிற்கிறவர்களைப் பார்; எங்களைப் பலப்படுத்துகிறவர் தேவனே "நாங்கள் எப்பக்கத்திலே நெருக்கப்பட்டாலும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே விழத்தள்ளப்படும் மடிந்துபோகிறதில்லை" [2 கொரி 4:8,9].

இரட்சிக்கப்படாத மக்கள் ஏன் தன்னையிலுள்ள மீன்களுக்கு ஒப்பிடப்படுகின்றார்கள்?

1. மீன்வாழ்வதற்கு இயற்கையான நிலை பொருள் தண்ணீர் அதுபோல இரட்சிக்கப்படாத மக்களுக்குப் பாவம் இயற்கையான வாழ்வாக இருக்கிறது. மீனைத் தண்ணீரி

ருந்து எடுத்துவிடுங்கள் மீன் பிழைக்காது. அப்படிப்போல மனிதனிடமிருந்து, அவன் விக்கிரகங்களை விலக்கி விடுங்கள் அவன் எல்லாவற்றையும் இழந்தவன் போல் காணப்படுவான்.

2. வெய்யில் நன்றாக அடிக்கும்போது மீன்கள் மேல் மட்டத்திற்கு வந்து விளையாடும். அப்படியே இரட்சிக்கப்படாதவர்கள் வாழ்க்கையில் எத்தகைய துன்பம் உடையவர்களாய் இருப்பினும், கடும் புயல் உள்ளிருந்து தோன்றினாலும், உபத்திரவங்கள் வெளி உலகத்திலிருந்து தோன்றியதாயிருப்பினும், அல்லது மனசாட்சி கடிந்துரைக்கினும் இவைகள் எல்லாம் நீங்கிய பிறகு அவர்கள் நல்ல சமமான நிலையை அடைந்தபின் அவர்கள் மறுபடியும் பாவத்தின் வழியில் உழலுவார்கள்.

3 பாவத்தின நிலையில்லா இன்பத்தில் புரளுவார்கள். முடிவில் அதன் விளைவை சிறிதும் எண்ணிபார்க்கமாட்டார்கள். இந்த உலகத்தில் சுகபோக, செல்வச் செழிப்பான வாழ்வு எத்தனை ஆத்துமாக்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. மதியீனர்களின் செல்வச் சிறப்பு அவர்களை அழித்து விடும்.

4. தூண்டில் போடப்பட்டிருக்கும்போது மீன் பேராசையுடன் தூண்டில் முள்ளைக் கூடக் கவனிக்காமல் அதிலுள்ள தீனியைக் பறித்துக் கொண்டு போகிறது; அப்படியே பாவமுள்ள மனிதர் எருது தண்ணீரை உறிஞ்சிக் குடிப்பதுபோல் பாவத்தைக் பருகுகின்றனர். அவர்கள் பாவத்தைப பாயாசம்போல் பருகுகிறார்கள். அது அவர்கள் வயிற்றில் கசப்பாயிருந்தாலும், அவர்கள் வாயில் இனிப்பாய் இருக்கிறது. மீன் இரையுடன் விளையாடுவதுபோல் அவர்கள் பாவத்துடன் விளையாடுகிறார்கள். ஆ! ஐயோ! அவர்கள் சர்ப்பத்தை தங்கள் மடியில் வைத்துக் கொண்டு அதன் நச்சுப பல்லுக்கு எப்படி தப்ப முடியும் [நீதி.9 17,18].

தூண்டிலுக்கு எவ்வாறு தீனிபோட வேண்டுமென்று சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஐயோ மனிதர்களுக்கு இயற்கையாக அதனை எவ்வாறு வேறு படுத்தி அறிவது என்பது தெரியாது. தங்கள் ஆசை இச்சைகளை வெற்றியுடன் திருப்தி செய்து கொள்ளுகிற மக்களுக்காக பரிதாபப்படு. அவர்கள் தூண்டிலுள்ள தீனியைக கவனிக்கிறார்கள். ஆனால் முள்ளைக் கவனிக்கவில்லையே; ஐயோ! அவர்கள் பேதையும், குருடுமான ஆத்துமாக்களாய் இருக்கிறார்கள். வாயின் ஓரத்தருகே அத்தினி அசைந்தாடுவதுபோல் அவர்களுக்குக் காணப்படுகிறது ஆகையால் குதிரை போருக்குப் பாய்வதுபோல் வரப் போகும் தீங்கினை நினையாமல் அவர்கள் பாவம் செய்ய தங்களை ஒப்புக் கொடுக்கிறார்கள். பாவச் சேற்றில் புரளுகிற இரங்கத்தக்க குடிகாரன், சத்தியம் செய்கிறவன் அசுத்தன் இவர்களுக்காகப் பரிதாபப்படுவோம்.

நீ தூண்டில் முள்ளை நினையாமல் தூண்டில் தீனியோடு விளையாடிக் கொண்டிருந்த காலத்தில்; கடவுள் சத்தியத்தின் மூலம் உன் கண்களைத் திறந்தருளி நீ பிடிப்பட்டிருந்த பாவத்திலிருந்து தப்பிச் சென்று பிழைக்கும்படி உன் பேதமையையும், ஆபத்தையும் காணச் செய்த ஆண்டவரைப் போற்று.

பிசாசின் தூண்டில் இரைகளைக் கடிக்காதபடி கவனமாய் இரு. இல்லையென்றால் அவன் முள்ளோடு உன்னைப் பிடித்துவிடுவான். ஒருவேளை நீ அந்த பிடியிலிருந்து கிருபையினாலே விடுவிக்கபபடலாம். இருந்தாலும் காயம் இல்லாமல் விடுவிக்கபபட முடியாது. சில வேளைகளில் தூண்டில் முள்ளைக்கடித்தாலும் மீன் தப்பிப்போவதுண்டு. ஆனால் காயத்துடனேதான தப்பிச செல்லும். அந்த காயம் உனக்குத் துக்கத்தைத் தரலாம்; அந்தப புண் ஆறுவதற்கு நீண்ட காலமாகலாம், நீ உன் அநுபவத்தில் கண்டிருப்பாய்

5. தண்ணீரிலுள்ள மீன் ஆழமான இடங்களையும், கிணறுகளையும் விரும்பும். அவைகளை அங்கே அடிக்கடி காணப்படும். அவ்வாறே தான் கொடிய தீயவர்கள் உடலின் பந்திலே தங்களுக்குப் பாதுகாப்பைத் தேடுவார்கள். நதியின் வேகத்தை எதிர்த்துச் செல்ல அவர்களுக்கு மன வலிமை இல்லை. அதிகமான சத்தமில்லாத ஆழமான இடங்களை மீன் மிகவும் விரும்பும். பாவம் நிறைந்த மனிதர்கள் தங்கள் பயங்கரமான பாவத்தை மறைத்துவிட்டு, அப்பாவிகள் போல் அமைதியாய் தோன்றுவார்கள். அவர்கள் பாவத்தில் பெரும் ஒய்வுக்கு இடையூறு எதும் நேரா வண்ணம் ஒதுங்கி அமைந்திருப்பார்கள். அவர்கள் பாதுகாப்போடு இருக்க விரும்புவார்கள். ஆனால் அதுதான் அவர்கள் அழிவு என்பதை உணரமாட்டார்கள். என் ஆத்துமாவே சிற்றின்ப பாதுகாப்பைக் குறித்து எச்சரிக்கையாயிரு. அங்கே பாதுகாப்பு இருப்பது போல் தோன்றினாலும் தலைக்கு மேலாய் பாவத்தில் ஆழ்ந்து போவதே உறுதியான முடிவு.

6. மீன் தண்ணீரில் இருக்கும் வரைக்கும் மற்றவர்களுக்கு உபயோகப்படாது. இயற்கையான பாவ சுபாவத்திலே வாழ்கிற மக்களும் அப்படியே இருக்கிறார்கள். நன்மையான எதையும் அவர்களால் செய்ய முடியாது. அவர்கள் தங்களுக்கும் உபயோகம் இல்லாதவர்கள் மற்றவர்களுக்கும் அவர்களால் எந்த நன்மையை சாதிக்க முடியும்.

7. தீயவர்கள் அவர்கள் வாழ்கிற பகுதியில் மிகுதியும் பயன்படுவார்கள் என்று நினைக்கிறவர்கள் எவ்வளவு தவறுகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மெய்யாகவே சாத்தானுடைய நோக்கங்களை அல்லது அவர்களுடைய வீணான மகிமையை நிறைவேற்றுவதில் உபயோகமுள்ளவர்களாக இருக்கலாம்; ஆனால் உண்மையிலே கடவுளுக்கு உபயோகமாக இருந்து அவரது திருவுளச் சித்தத்தை நிறைவேற்றுவதில் அவர்கள் பயனற்றவர்களே!

கிறிஸ்தவர்களின் வேலை அலுவல் ரீதியில் என்னும் போது அவர்கள் மீன் பிடிக்கிறவர்கள். அவர்கள் மனிதர்களின் ஆத்துமாக்களைப் பிடிக்கிறவர்கள் அவர்கள் மக்களை இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும். சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திருப்பும்படிக்கு அவர்கள் கண்களைத் திறக்கும் பொருட்டு அனுப்பப்பட்டவர்களாவர். நற்செய்தி பிரசங்கிமார் அனைவரும் மீன் பிடிக்கிறவர்களே; அவர்களுடைய திருப்பணியும் மீன் பிடிக்கிற வேலையும் பல காரியங்களில் ஒப்புமைப்படுகிறது.

மீன் பிடிக்கிறவர்களின் நோக்கமும், திட்டமும் மீன் பிடித்தலாகும். கிறிஸ்தவர்கள் இத்திருப்பணியைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டுள்ளார்கள். அதாவது ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை கொண்டு வருவது அவர்களது திருப்பணி. இத்திருப்பணியில் அவர்களது நோக்கம் அதுவாகவே இருத்தல் வேண்டும்.

அவர்களுடைய வேலை கடினமான வேலை. அவர்கள் தண்ணீரில், கடுமையான குளிரில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நமது வேலையும் அப்படித்தான். மற்றவர்களை அச்சுறுத்தி திசை திருப்பச் செய்யும் கடும் புயலுக்கும், காற்றுக்கும் அவர்கள் அஞ்சாமல் முன்னேறிச் சென்று மீன்பிடிக்கத் தவறமாட்டார்கள். நற்செய்தியின் பிரசங்கிமாரும் அவ்வாறே திருப்பணியாற்ற வேண்டும்.

(தொடரும்)

"இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு எனப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்" [மத். 4:18,19].

குற்றஞ்சாட்டி குற்றவாளியாகாதே, நிறையுள்ளவனாயிருக்க குறைகூறாதே

உலகமக்களுக்குள்ளும், கிறிஸ்தவாக ளுக்குள்ளும், ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதும், குறை சொல்லுவதுமான பழக் கம் இருக்கிறது. ஒருவரை குற்றப்படுத்து கிறோம் என்றால், அவருக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறோம் என்று அர்த்தம் யாக். 4:11 முதலாவது நமது உள்ளமாகிய நியாயசனத் தில் தீர்ப்புக் கொடுக்கிறோம். அதன்படி வாய் அவரைபபற்றி குறை சொல்லுகிறது. சட்டத்தைக் கொடுத்தவருக்கு மட்டும்தான் நியாயத்தீர்ப்பு கொடுக்க அதிகாரமுணடு; அவரது தீர்ப்பு சரியாக இருக்கும்.

"There is one law giver who is able to save and to destroy who art thou that jubgest an other?" (James 4:12). தேவ ஜனங்களை குற்றப்படுத்துகிற வேலையை சாத்தான் ஓயாமல் செய்து கொண்டிருக் கிறான் [வெளி. 12:10]. பிசாசின் வேலையை அவன் பிள்ளைகள் செய்யட்டும். நாமோ நமது பரம பிதாவின் கிரியைகளை நடப் பிப்போம். அவர் பூரணசற்குணராக (Perfect) இருப்பதுபோல் நாமும் இருபபோ மாக

பிறர்மேல் குற்றம் சாட்டுகிறவன், குறை சொல்லுகிறவன், சொல்லில் தவறுகிறவனும், தன நாவை அடக்கவுமுடியாத அபூர்ண தன்மை உள்ள மனிதன் (Imperfect man) [யாக். 3:2]. பிறர்மேல் குற்றம் சாத்துகிற பாவம், விழுந்த ஆதாம் காலம் முதல் மனிதனில் இருக்கிறது பிறர்மேல் குற்றம் சாட்டுவதற்கும், குறை சொல்லுவதற்கும் பல காரணங்கள் உணடு

1 ஆதாம் மீறுதல் செய்தார். தன குற் .த்தை மறைக்க பழியை ஏவாள் மீதும், அவளை அவருக்கு மனைவியாகக் கொடுத்த தேவன் மேலும் போட்டார் ஆதி. 3 11,12. "இவர் போல் தனது பாவத்தை மூடி மறைக்க முயல்வோர் பிறர்மேல் குற்றம் சாட்டுவதுண்டு (யோபு 31:33).

2. தாவீது ராஜாவின் மகன் அப்சலோ முக்கு ராஜாவாக வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. ஆனால் சிங்காசனம் காலி யாக இல்லை; தாவீது அதிலே உட்கார்ந் திருந்தார். அவரை இறக்கிவிட்டால், சிங் காசனத்தைப் பிடிக்கலாம் என்று சதிகாரன் அப்சலோம் எண்ணினான். ஆகையால் திட்டமிட்டு கிரியை செய்தான். தினமும் காலையில் அரண்மனைக்கு போகிற வழியிலே நின்று ராஜாவினிடத்தில் நியாயவிசார ணைக்கு போகிறவர்களை விசாரணை செய்வார் ஒருவரும் இல்லை, என்று ராஜாவை குற்றப்படுத்தி பேசி, தான் ராஜா வானால் நலமாக இருக்கும் என்று, நயமாய் பேசி, மாயமான தாழ்மையைக் காண்பித்து, போலியாக அன்பு செலுத்தி, மக்களை தன் பக்கம் கவர்ந்து கொண்டான் [2 சாமு. 15: 2-6].

யூதா தன் சகோதரர்குள் பலத்து ராஜாதிபத்தியத்தை கைப்பற்றினது போல் 1 நாளா. 5 2, தங்களது திறமையாலும், கடின உழைப்பாலும், தியாகத்தாலும், உயர்வடைய முயற்சியாமல், "இருக்கிற வனை கீழே தள்ளிவிட்டு ஸ்தானத்தைப் பிடிக்க விரும்புகிற அப்சலோமைப்போன்ற பதவி ஆசை பிடித்த சுய நல வாதிகள் மற்றவர்களை குற்றப்படுத்துவதுண்டு.

3. தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது, ஆகையால் அவரை இராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான் இதை அறிந்த பிரதானி களும், தேசாதிபதிகளும் தானியேலை குற்ற படுத்த முகாந்திரம் தேடினார்கள் [தானி. 6 3,4]. ஒருவர் தங்களுக்கு மேல் உயர்

வடையப் போகிறார் என்பதை அறியும் போது, இந்த பிரதானிகள்போல் தடுக்கும் படியாக குற்றஞ்சாட்டுகிறவர்களுண்டு.

4. அகாஸ்வேரு ராஜா, ஆமான் என்கிற வனுடைய ஸ்தானத்தை உயர்த்தினான். ஆகையால் ராஜாவின் அரமனையிலிருக்கிற ஊழியக்காரர் எல்லோரும் ஆமானை வணங்கி, நமஸ்கரித்து வந்தார்கள். ஆனால் மொர்தெக்காய் என்கிற யூதன் ஆமானை வணங்கவும் இல்லை, நமஸ்கரிக்கவும் இல்லை. தன்னை இந்த யூதன் கனம்பண்ண வில்லை, மதிக்கவில்லை என்றறிந்த ஆமான் மூர்க்கங்கொண்டு மொர்தெகாயைமட்டு மல்ல யூத வம்சத்தையே ஒழிக்க தீர்மானித் தான். ஆகையால் ராஜாவிடம் ஆமான் "தேசத்திலே ஒருவித ஜனங்கள் பரவியி ருக்கிறார்கள், அவர்களுடைய வழக்கங்கள் விகற்பமானது, அவர்கள் ராஜாவின் கட் டளைகளை கைக்கொள்ளுகிறதில்லை" என்றான் (எஸ 3:1-9). இந்த துஷ்ட ஆமானைப்போல் தன்னை மதியாதவர்களை ஒழித்துக் கட்டும் படி குற்றம் சுமத்துவாருமுண்டு.

5. ஆசாரியரும், வேதபாரகரும் இயேசு நாயர் செய்த அற்புதங்களினால், ஜனங்கள் எல்லோரும் அவர் பக்கம் சாய்வதைக் கண்டு, இவரை இப்படியே விட்டால் தங் களுடைய ஸ்தானம் போய் விடும் என்று (யோ. 11:47,18), பொறாமைக் கொண்டு மத 27:17, அவரை இல்பொருளாக்கும் நோக்கோடு, இயேசுவைக் குறித்து பிலாத்து விடம் பிடிவாதமாக குற்றஞ்சாட்டிக் கொண்டே நின்றார்கள் (லூக். 23:10). இந்த ஆசாரியர், வேதபாரகர் போல தாங்கள் [illegible] உயர்வதைக் கண்டு பொறாமை கொண்டு குற்றப் படுத்துவோருமுண்டு.

6. பிறனுடைய கண்ணில் உத்திரம் இருப் பதைக் கண்டு சரியாக தெரியாது. ஆகை யால் அடுத்தவன் கண்ணில் துரும்பு இருக்கிறது என்று குறை சொல்லுவோர்கள் [மத் 7:3,4]. பொதுவாக பல குறைபாடுள் ளவர்கள் தெளிவில்லாதவர்களாக இருந்து, மற்றவர்களைக் குற்றப்படுத்துவார்கள். ஒரு வனுக்கு வேலை எப்போதும் மற்றவர்களை குறை சொல்லுகிறதாக இருக்கிறதென்றால் அவன் அநேக காரியங்களில் குறை உள் ளவனாக இருப்பான்.

7. தேவாலயத்தில் ஜெபம்பண்ண சென் றான் ஒரு பரிசேயன், தான் செய்த நற் கிரியைகளை மட்டும் பார்த்தான்; துர்கிரியை களை பார்க்கவில்லை. ஆயக்காரன் ஒருவ னும் ஜெபம்பண்ணினான். அவனோ தனது துர்க்கிரியைகளை மட்டும் கவனித்து அழுது மன்னிப்புக்காக தன்னை தாழ்த்தி மன்றாட்டு செய்தான். அந்த பரிசேயன் வந்த வேலையை முடித்து போவதை விட்டு, இந்த ஆயக்காரனைப்போல் இல்லாதபடியால் ஸ்தோத்திரம் என்றான் [லூக். 18:10-14]. இந்த பரிசேயன் போல் தங்களை தாங் களே அளந்து கொண்டு, மெச்சிக்கொண்டு மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிறவர்கள், அடுத்தவர்களைப்பற்றி குறை பேசிக் கொண்டே இருப்பார்கள். ஆவிக்குரிய ஜீவி யத்தில் ஒருவன் உயர வேண்டுமானால் ஒருவன் தன்னுடைய குறைவுகளையும், செய் யத் தவறியவைகளையும், உணர்ந்து அறாய வேண்டும். அதே சமயம் மற்றவர்களு டைய உயரிய காரியங்களை மட்டும் கவ னிக்க வேண்டும்

ஆவிக்குரியவர்களாகிய நாம் பிறர் மேல் குற்றம் சாட்டுவதற்குமுன் அவரது ஒருவரைப்பற்றி குறைவாக பேசுவதற்கு முன் நல்யோசனை செய்து, இப்படி சொல் வதால் என்ன பிரயோஜனம் என்று சிந்த வித்து பிரயோஜனமற்றவைகளை பேசா மல், நாலு வார்த்தை பேசினால் அது நன்மை பயக்கும் வார்த்தைகளாகப் பேசு வது நலம்.

[illegible]
[illegible]
யத்தை [illegible]

ஒரு குறைவாக பேசுவதால் நமக்கே பாதிப்பை உண்டு பண்ணும் சன்மார்க்கரை துன்மார்க்கருகளும், துன்மார்க்கரை சன்மார்க்கருகளும் தீர்த்தால் சாபம் வரும். நாம் ஒருவர் செய்த காரியத்தை எப்படி தீர்க்கிறோமோ, அதே விதம் நமக்கும் தீர்ப்புண்டாகும்.

சீஷர்கள் பசியாக இருந்தபடியால் ஓய்வுநாளில், கதிர்களை கொய்து தின்ன ஆரம்பித்தார்கள். அதைக்கண்ட பரிசேயர்கள், ஐயோ பாவம் பசியினால் இப்படி செய்து விட்டார்கள் என்று இரங்குவதற்கு பதிலாக, ஓ! ஓய்வுநாளில் செய்யத்தகாததை செய்து விட்டதாக குற்றம்சாட்டினார்கள். அதனால், இயேசு தாவீது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? பலியை அல்ல இரக்கத்தை விரும்புகிறேன் என்பதின் கருத்தை அறிந்திருந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை குற்றப்படுத்த மாட்டீர்கள் என்றார். ஆகையால் குற்றப்படுத்துமுன், ஏதோ ஒரு காரணமாக தவறு செய்திருக்க முடியும் என்று இரக்க சிந்தையோடு பார்ப்பது நல்லது.

மேலும் பிறரை பற்றி குறைசொல்லுவதற்கு நமக்கு யோக்கியதை உண்டோ என்று சற்று சிந்தித்து பார்ப்பது நல்லது. நம்மிடம் ஆயிரம் குறையை வைத்துக் கொண்டு, அடுத்தவர்களுடைய குறையை சொல்லல் எப்படி? விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயை இயேசுவினிடம் கொண்டு வந்து வேதபாரகரும், பரிசேயரும் குற்றம் சாட்டினார்கள். இயேசு சொன்னார், உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல் லெறியக்கடவன் என்றார். எல்லோரும் [illegible] காலி செய்தனர். [illegible] [illegible] [illegible] சொல்லுதுபோல [illegible] [illegible]

[illegible]

[illegible]

[illegible]

இயேசுவின் சீஷர்கள் கை கழுவாமல் சாப்பிட்டதை; பரிசேயரும், வேதபாரகரில் சிலரும் கண்டு குற்றம் பிடித்தார்கள். உடனே இயேசு அவர்களுடைய பல குறைகளை வெளிப்படுத்தி அவர்களை சாடினார் (மாற். 7:2). எச்சரிக்கை. நாம் ஒருவர்மேல் ஒரு குறையை காட்ட, நம்முடைய பல குற்றங்கள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட ஏது உண்டாகும்.

எஜமானிடத்தில் அவனுடைய வேலைக்காரன்மேல் குற்றஞ்சுமத்தாதே. அவன் உன்னைச் சபிப்பான்; நீ குற்றவாளியாக காணப்படுவாய் என்று தாழ்மையுள்ள ஞானியும் சொல்லியிருக்கிறார் (நீதி. 30:10). யாதாமொருவன் தீங்கு செய்தால் நம்முடைய வாயால் அவன் மேல் ஆக்கினை வரவழைப்பானேன்? முதியோர் மொழிப்படியே ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும் [Wicked ness proceeds from the wicked] என்றபடி துஷ்டனை அழிக்க வேறொரு துஷ்டன் எழும்புவான், (1 சாமு 24.13) நமக்கு ஆகாதவனை அழிவில் பங்கென்ன? ஒருவன்மேல் குற்றம் சுமத்த அவனை ஆக்கினைக்குள் நீக்கப்பட்டு கர்த்தர் இரக்க அவன் நம்மை சபிக்க நமக்கேன் இந்த வேலை? [1 சாமு 26·19]. நமக்கு நியமித்த ஓட்டத்தில் பொறுமையுடனும் செலுத்தி ஓடுவோமாக.

[தொடரும்]

"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் [illegible] [illegible] தீர்க்காதிருங்கள்" (மத். 7:1)

மார்த்தின் லுத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

10. லுத்தர் அகஸ்டாபுரிக்கு கயத்தானுக்கு முன்பாக அழைக்கப்பட்டது:-

மேலே கண்ட லுத்தருடைய வணக்கமான மனுவுக்கு பதில் ஒன்றும், பாப்புவினிடமிருந்து வரவில்லை. ஆனால் லுத்தர் ரோமாபுரிக்கு வந்து அவர் எழுதிய வேதபுரட்டுகளுக்காக விபரம் சொல்லி நேரில் மறுமொழி கொடுக்க வேண்டுமென்று பாப்பு அவரை அழைத்தார். ஆனால் சற்குணமும், நீதியும், நேர்மையும், நிறைந்த நியாமக பிரபுவாகிய பிரதரிக் என்பவருக்கு அது பிரியமில்லை. பாப்பு தன் சர்வ கலாசாலையின் வேலையில் இப்படி தலையிடுவது தனக்கு இஷ்டமில்லாதபடியினால் நேர்முக பிரபு இந்த வழக்கு ஜர்மானிய தேசத்திலேயே அதிக நன்றாய் விசாரித்துத் தீர்க்கப்படலாமென்று தாவா செய்தார்.

லுத்தர் அகஸ்தாபுரியில் கயத்தான் என்ற பிரதிநிதிக்கு முன்பாக வரும்படி உத்தரவு ஆயிற்று. அந்த கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டாமென்று பலர் ஆலோசனை சொன்னார்கள். ஆனால் லுத்தர் தனது பரமனுமான் மேல் முழு நம்பிக்கை வைத்து கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கால்நடையாகவே போனார். லுத்தர் அகஸ்தாபுரிக்கு அக்டோபர் மாதம் 7-ம் தேதி வந்தவுடனே கயத்தான் [illegible] உர்பனே லுத்தருடைய எண்ணங்கள் [illegible] அறிய அனுப்பினான். தந்திரசாலியாகிய அந்த இத்தாலியன் லுத்தருடைய அபிபிராயங்களை அளந்து அறிந்த பிறகு "[illegible]" என்ற ஒரே வார்த்தையை மட்டும் லுத்தர் சொல்லிவிடுவாரானால் எல்லாம் [illegible] [illegible]. [illegible]யால் லுத்தர் அப்படிச் செய்ய [illegible]

சமார்த்தியமெல்லாம் செய்து பார்த்தான். அப்போது லுத்தர் தாம் செய்தது தப்பிதம் என்று நிரூபித்துக் காட்டினால் மறுதலிப்பதாகச் சொன்னார். உடனே உர்பன உன் நியாமிகப்பிரபு தன் நாட்டை இழப்பாரா என்று லுத்தரை ஒரு கேள்வி கேட்டான். ஒருக்காலும் நான் அப்படி நினைக்கிறதில்லை என்று லுத்தர் பதில் சொன்னார். அதற்கு உர்பன் எல்லோரும் உன்னை கைவிட்டால் நீ எங்கே போய் அடைக்கலம் பெறுவாய் என்றதற்கு உடனே லுத்தர் வானத்தின் கீழ் என்று பதில் சொன்னார். இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே உர்பன் அவரைவிட்டு கோபமாய் போய்விட்டான்.

லுத்தர் அகஸ்தாபுரிக்கு வந்த மூன்றும் நாள் அவருக்கு ராயனிடமிருந்து உயிர் காப்பு சீட்டு வந்தது. பிறகு அவர் லிங் சாஸ்திரியாருடன் பாப்புவின் பிரதிநிதியாக காயத்தானிடம் போனார் வழக்கப்படி ஒருவரையொருவர் வாழ்த்திக் கொண்டபிறகு வெகுநேரம் ஒருவரும் பேசாமல் அமைதியாய் இருந்தபடியால் லுத்தர் பேசத் தொடங்கி நியமுகப்பிரபுவின் கட்டளைப்படியும் தான் பிரசுரம் செய்த 95 [illegible] விஷயமாக பாப்புவின் கட்டளை இன்னதென்று அறிந்து கொள்ளும்படி தாம் வந்து ஆஜராகியிருப்பதாகச் சொன்னார். அப்போது காயத்தான ஒரு தகப்பன் பா[illegible]னையாக அன்பு பட[illegible] [illegible] சொன்னதாவது: என் பிரிய [illegible]! [illegible] சபையில் ஒரு அமைய[illegible] [illegible] விரும்பி பாப்புவை [illegible] [illegible] அங்கீகரித்தால் [illegible] சொல்லும் வார்த்தைகளைக் [illegible].

1. [illegible] எழுதிய [illegible] [illegible]டும்.

2. இ[illegible]ல் உன் [illegible] அபிப்பிராயங்களை

பிரசித்தம் பண்ணக்கூடாது.
3. திருச்சபையின் சமாதானத்தை கெடுக்கக் கூடிய எல்லாவற்றையும் விலக்க வேண்டும்

லூத்தர் அதற்கு தாம் செய்த தப்பிதங்கள் என்ன என்று எடுத்துக் காட்ட வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டார். அப்போது கயத்தான் லூத்தர் எழுதிய 95 நியாயங்களில் 58ஐத் [illegible] காட்டி இது வேதப்புரட்டு என்று சொல்லி அதை வாசித்தான்.

அதாவது பாப்புவின் பாவமன்னிப்புச் சீட்டுக்களாகிய பொக்கிஷங்கள் கிறிஸ்துவின் புண்ணியமல்ல என்பதே. லூத்தர் தம்மைக் காத்துக்கொள்ள சத்திய வேதமாகிய ஆயுதத்தை உபயோகித்தார். ஆனால் கயத்தனோ தனக்கு அதிகார சாட்சியாக 6-ஆம் கிளெமெந்துவின் கட்டளையை எடுத்துக் காட்டி அந்த அதிகாரத்தின்படி தான பாப்புவாகிய 10-ஆம் லெயோ விக்கிரகங்களுக்கு பாவமன்னிப்பு சீட்டின் மூலமாக கிறிஸ்துவின் புண்ணியங்களை பகிர்ந்து கொடுத்தாரென நிரூபிக்க முயன்றான். லூத்தர் சத்திய வேதத்தை மட்டுமல்ல, பழைய காலத்து வேத சாஸ்திரங்களையும் [illegible] கற்றிருந்தனர்.

6-ஆம் கிளெமெந்துவின் கட்டளையை நன்றாய் அறிந்திருந்தும் அவைகள் தம்மைக் கட்டுப்படுத்துவதாக லூத்தர் [illegible] எண்ணவும். லூத்தர் கொடுத்த மறுமொழியாவது: கிளெமெந்தின் கட்டளை பாவமன்னிப்பு சீட்டுகளாகிய பொக்கிஷம் கிறிஸ்துவின் புண்ணியமே என்று சொல்லுகிறதாக நிரூபித்தால் நான் எழுதியவைகளை மறுதலிப்பேன் என்பதே. அப்போது தான ஜெயமடையலாமென்ற நம்பிக்கையோடு கயத்தான் புத்தகத்தைத் திறந்து அந்தப் பாகத்தை எடுத்து கிறிஸ்து தம்முடைய பாடுகளினாலே ஒரு பொக்கிஷத்தை சம்பாதித்தார் என்று வாசித்தான். உடனே லூத்தர், வாசிப்பதைத் தடுத்து நயமாய் செய்து சம்பாதித்தார் என்கிற வார்த்தையை கவனியுங்கள். கிறிஸ்து தம்முடைய புண்ணியத்தினாலே பொக்கிஷத்தை சம்பாதித்தார் ஆகையால் புண்ணியமும், பொக்கிஷமும் ஒன்றல்ல. அவைகள் வெவ்வேறு என்று சொன்னார்.

பாப்புவின் பிரதிநிதி அடைக்கலம் புகப்போன இடத்திலே அகப்பட்டுக் கொண்டான். கயத்தானோ தன் தோல்வியை மறைக்கும் பொருட்டு வேறு பேச்சு பேசப் பார்த்தான். ஆனால் லூத்தர் பிடித்த பிடியை விடாமல் சுருக்க இறுக்கி, இழுத்து எதிர்த்து பேசக்கூடாதபடி வலைக்குள் சிக்கப்பண்ணி மேன்மை பொருந்திய பிதாவே கர்மானியர் இலக்கணம் தெரியாத [illegible] நாங்கள் [illegible]. பொக்கிஷம் [illegible] தென்பதற்கு பொக்கிஷத்தை சம்பாதிக்கிறதற்கும் [illegible] என்று தடுமாற்றமின்றி [illegible] குரலோடு [illegible] சொன்னார்.

அப்பொழுது பாப்புவின் பிரதிநிதி தாம் லூத்தருக்கு ஒரு [illegible]

பரிசுத்த விவாகம்

டால் நீ திரும்பி வரவேண்டாம் என்று கோபமாய்ச் சொல்லி லூத்தரை அனுப்பி விட்டான். உண்மையிலே லூத்தரோடு தர்க்கிக்க அவனுக்குப் பிரியமில்லை. அசைக்கப்படாத வல்லமைசாலியும், பயங்கரமான நியாயங்களை உபயோகிக்கும் அந்த கர்மானியா நாட்டாரோடு தர்க்கம் செய்ய பயந்தான். அவன் திரும்பி ஸ்தொபித்சாஸ்தியாரை நோக்கி பார்த்து, இனி இந்த மிருகத்தோடு நான் கூடியோசிக்க முடியாது. அவன் கண்கள் ஆழ்ந்ததும், அவன் அறிவு ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்கிறது என்று சொன்னான். இதினாலுண்டான ஒரு நன்மை என்னவெனில், இதற்குப் பின்பு கயத்தான் சத்திய வேதத்தை கருத்தாய் படிக்க துவங்கினான். இது அவனுக்கு ஒரு கௌரவமான காரியமே.

லிப்சிக் நகரத்தில் நடந்த தர்க்கம்:-

தொல்லைப்பண்ணும் சந்நியாசியை நசிக்கிப்போட முடியாமல் போனதால் பாப்பு எரிச்சலடைந்து லூத்தர் வாயை அடைக்க வேறு ஒரு எத்தனம் செய்தார். தர்க்கம் தங்கள் பக்கம் அனுகூலமாக முடிந்து வரும்படி பாப்புவின் உள்ளரை விசாரணைக்காரராகிய கார்வென்மில்க்ஸ் என்பவரை திருந்தபடி போதித்து அனுப்பியதே அந்த எத்தனம். பாஸ்டர்பர்க் நகரத்தில் பாலாத்தின என்பவருடைய இருப்பிடத்தில் லூத்தரும், மில்ல என்பவரும் சந்தித்து சம்பாஷித்தார்கள். லூத்தர் கர்மானியா முழுவதும் கீர்த்தி பிரஸ்தாபம் பெற்றவர் என்று அறிந்து மில்ஸ் யோசனைபண்ணி தர்க்கத்தில் இதமான வழிகளைக் கையாடினார். ஆனால் லூத்தரை மறுதலிக்க வேண்டுமென்ற நோக்கம் வாய்க்கவில்லை என்று[illegible]ம் அவர்களுடைய தர்க்கத்தின் முடிவு பின் வரும் ஒப்பந்தமே.

1. தர்க்க விஷயங்கள் எல்லாம் முடிவாய் தீர்மானம் செய்யும்படி அதற்காய் நியமிக்கப்படும் அத்தியட்சர்களால் ஆகிய ஒரு கர்ம கர்த்தர் சபைக்கு ஒப்படைக்க வேண்டும்.

2. லூத்தர் பாப்புவுக்கு ஒரு வணக்கமான கடிதம் எழுதவேண்டும்.

3. எதிரிகள் தர்க்கத்தை நிறுத்தி வைத்தால் லூத்தரும் நிறுத்த வேண்டும். இந்த தர்க்கத்தில் மிகஸ் செய்யக்கூடியது இவ்வளவுதான். எதிரிகளின் வாயை அடைப்பது முடியாத விஷயமாயிருந்தது.

மேற்சொன்ன ஒப்பந்தத்தை எக் சாஸ்திரி மீறினார். பேச்சு, எழுத்து புரட்டுக்கு வல்லாதி வல்லவன் எட்டு கர்வ க்லாசாலைகளின் வெகுமதியடைந்தவன். லூத்தர் திடீரென்று கீர்த்தியடைந்து எழுந்தது தனக்கு அவமானமாக எண்ணி அவன் பொறாமையடைந்தான். அவன் கார்ல்ஸ்டாட் சாஸ்திரியாருக்கு விரோதமாக ஒரு புஸ்தகம், எழுதி பிரஸ்தாபம் பண்ணினான். அதில் எழுதிய விசயங்களில் அநேகம் லூத்தருக்கு விரோதமாகக் குறிப்பிட்டிருந்தது. ஆகையால் லூத்தரை போருக்கு அழைக்கும் அந்த சதத்தை அங்கீகரித்து போருக்கு தயார் என்று சொன்னார். போர்க்களம் லைப்சிக் பட்டணத்தில் தெரிந்து கொள்ளப்பட்டது.

லைப்சிக் பட்டணம் கோயார்க் பிரபுவின் நாட்டில் இருந்தபடியால் லூத்தர் அங்கு வந்து தர்க்கம் ஆடுகிறவர்களில் ஒருவராய் இருப்பது தமக்கு சம்மதம் இல்லை என்று சொன்னார். ஆனால் எக் என்பவன் கார்ல்ஸ்டாட் என்பவரோடு தர்க்கிக்க விரும்பினதைவிட லூத்தரோடு தர்க்கித்து, தன் சாமார்த்தியத்தைக் காட்ட அதிக பிரயப்பட்டபடியால் லூத்தர் லைப்சிக் நகரத்துக்கு வர கேய்யார்க் பிரபு இடம் கொடுத்தான். கேயோர்க் பிரபு பிளைசென்பர்க் என்னும் அரமனையை ஜோடித்து, வேண்டிய எல்லாம் செய்து, இந்த பெரிய வாய்ச்சிலம்பத்திற்காக [illegible]

இரண்டு பீடங்கள் எதிரெதிரே நாட்டப்பட்டன. ஒரு பீடத்திற்கு மேலே பரிசுத்த ஜேயார்க்கின் படம் அலங்காரமாக தொங்கினது. அந்த பீடத்தில் எக் என்பவன் உட்கார்ந்தான். மற்றொரு பீடம் பரிசுத்த மார்த்தின் என்பவரது படத்தால் அலங்கரிக்கப்பட்டது. கார்ல்ஸ்டாட் சாஸ்திரியார் என்பவர் ஆசனம் வகித்தார். 1519ம் வருஷம் ஜுலை மாதம் 4-ம் தேதியிலிருந்து லூத்தரும் எக் என்பவரும் பாப்புவின் சிரேஷ்ட அதிகாரத்தைப்பற்றி வாக்குவாதம் செய்தார்கள். லூத்தர் அப்பொழுது 35 வயது இளைஞராயிருந்தும் பூரா விரத துணிவோடு பீடத்தின் மேலேறி தம்முடைய கம்பீர சாதுரிய வார்த்தைகளால் கேட்போரின் கவனத்தைக் கவர்ந்து இழுத்தார். பாப்புவின் தத்துவமும், அதிகாரமும் மனுஷ ஏற்பாடு என்று லூத்தர் சாதித்துப் பேசினார்.

ஆனால் எக் அதை மறுத்து அது தேவனுடைய ஏற்பாடு என்று வாதாடினான். தர்க்க தோரணையில் லூத்தர் போராடும் திருச்சபையின் சிரசு கிறிஸ்துவேயன்றி மனுஷனல்லவென்று முழங்கிச் செய்தார். எக் சாஸ்திரி தான் சொன்னதை நிரூபிக்க திருச்சபை பிதாக்களின் பிரபந்தங்களுக்கு அபயமிட்டான். ஆனால் லூத்தர் அதே பிரபந்தங்களைக் கொண்டே அவனைத் தோற்கடிக்க உடன்பட்டார். லூத்தரின் வல்லமையான நியாயங்களால் தான் தோல்வியுற்றதை அறிந்து எக் பேசலான பொருந்திய சத்தியங்களை நான் [illegible] அதிகாரம் காட்டுவதற்கு என்னை மன்னியுங்கள். நான் தர்க்கம் செய்ய இங்கே வந்தேனேயல்லாமல் ஒரு புஸ்தகம் எழுத வரவில்லை என்று [illegible] ஆதியிலிருந்த பாப்பு [illegible] போதகத்தை எதிர்த்ததுபோல லூத்தரும் அப்படியே செய்தார் என்று நிரூபிக்க முயன்று [illegible] [illegible] சாவுக்குப் பயமில்லை [illegible] என்று சொன்னாலும், [illegible] [illegible] சரி எல்லாம் [illegible]

தான் அது உண்மையே என்று தைரியமாய் சொன்னார். கேட்டோர் எல்லாரும் திடுக்கிட்டார்கள். அதைக்கேட்டு கோயர்க் பிரபு கோபாவேசம் கொண்டு பெருவாரி காய்ச்சல் வாரிக் கொண்டு போகட்டும் என்று சாபமிட்டார்.

ஜுலை மாதம் 8-ம் தேதி உத்தரிக்கும் ஸ்தலத்தைக் குறித்து தர்க்கம் செய்தார். அர்சயத்தில் உத்தரிக்கும் ஸ்தலம் இல்லை என்று லூத்தர் மறுக்கவில்லை ஆனால் அதற்கு சத்திய வேதத்தில் ஆதாரம் இல்லையென்று மட்டும் லூத்தர் சொன்னார். எக் சாஸ்திரியாருக்கும், லூத்தருக்கும் நடந்த இந்த வாக்குவாதம் ஜுலை 14-ம் தேதி முடிவுக்கு வந்தது.

லூத்தர் சொன்ன கடைசி வார்த்தைகளாவன:-

எக் சாஸ்திரி நீர் சிலந்தி பூச்சி தன்னிருக்குள் எவ்வளவு மூழ்குமோ அம்மாத்திரம் சத்திய வேதத்தில் மூழ்கிப் பார்த்து, பிசாசு சிலுவையைப் பார்த்து பயந்து ஓடுவதுபோல் மிரண்டு ஓடுகிறீர். திருச்சபை பிதாக்களை நான் எவ்வளவு மதிக்க வேண்டுமோ அவ்வளவு நானும் மதிக்கிறேன். ஆனால் சத்திய வேதத்தை அதற்கு அதிகமாக மதிக்கிறேன் இவ்விஷயத்தை இங்கிருக்கும் மத்தியஸ்தர்களின் மனதில் உறுத்துகிறேன் என்பதே இந்த தர்க்கத்தின் விசேஷித்த முடிவுகளாவன.

1. திருச்சபைக்கு கிறிஸ்துவே தலை என்றும், பாப்புவின் போலி தத்துவத்திற்கு சத்திய வேதத்தில் ஆதாரம் இல்லையென்று வெளிப்படையாய் அறிவித்தார்.

2. சத்தியத்தை [illegible] [illegible] நியாயமான [illegible] [illegible] வெளியரங்கமாயின. [illegible] கோயர்க் பிரபு சொல

ளது "தேவ அதிகாரத்தினுலோ, மனுஷ அதிகாரத்தினுலோ, எப்படியானுலும் சரி அவர் பாப்புவே". இந்த வார்த்தைகளைக் கேட்ட லூத்தர் மனதிற்குள் மகிழ்ந்து சொன்னதாவது: என் நியாயங்கள் மெய் என்று அவர் மனதை உறுத்தியிராவிட்டால் அவர் மேற்சொன்ன வார்த்தைகளைப் பேசியிருக்கமாட்டார் என்பதே.

(தொடரும்)

"உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானுல், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்"
(யாக். 3 14).

வேத பாடம்

[தொடர்ச்சி]

எண்ணுகமம்

எண். 34:1-15

இஸ்ரவேல் புத்திரர் கானானுக்குள் பிரவேசித்து அதை சுதந்திரமாகப் பெறப் போகிறார்கள். கானானின் எல்லை; அதனுடைய Border இன்ன இடத்திலிருந்து இன்ன இடமட்டும் என்று சொல்லி வசனம் 12 முடிய சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே 9 1/2 கோத்திரங்களுக்குத் தேவன் இதை பங்கிடும்படியாக சீட்டுப் போட்டு சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய தேசம் இதுவே என்று சொன்னார் [வச. 13]. 14,15வது வசனங்களில் ரூபன் புத்திரர், இன்னும் காத் புத்திரர், மனாசேயின் பாதி கோத்திரத்தார் தங்களுடைய சுதந்திரத்தை சூரியோதய திசையாகிய யோர்தானுக்கு இப்புறத்திலே தங்கள் சுதந்திரத்தை ஏற்கனவே பெற்றுக் கொண்டார்கள்.

எண். 34:16-29

தேசத்தைப் பங்கிடும் தலைவர்கள், ஆசாரியனாகிய எலெயாசாரும் யோசுவாவுமே. அவர்கள் இருவரோடுங்கூட ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒரு பிரபு தலைவனாயிருந்து தேசத்தைப் பங்கிட வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டார். எலியேசர் யோசுவாகூட தேசத்தை பங்கிட்ட தலைவர்கள். ஒன்பதரை கோத்திரத்தார்களும் பத்து கோத்திரமாக எண்ணப்பட்டது; இன்னார் இன்ன கோத்திரத் தலைவர் என்று சொல்லப்பட்டுள்ளது. காலேப யூதா கோத்திரத்து தலைவன், சாமுவேல் சிமியோன் கோத்திரத்து தலைவன், எலிதாத பென்யமீன் கோத்திரத்து தலைவன், அன்னியேல் மனாசே கோத்திரத்து தலைவன், கேமுவேல் எப்பிராயீம் கோத்திரத்து தலைவன், எலிசாப்பான செபுலோன் கோத்திரத்து தலைவன், பல்த்தியேல் இசக்கார் கோத்திரத்து தலைவன், அகிூத் ஆசேர் கோத்திரத்து தலைவன், பெதாக்கேல் நப்தலி கோத்திரத்து தலைவன்.

கானானுக்குள் பிரவேசித்த பின்பு இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த கோத்திரங்களை பங்கிட்டு கொடுக்க நியமிக்கப்பட்ட தலைவர்கள் இவர்களே தேசத்தை அவர்கள் சுதந்

தரித்து சீட்டுபோட்டு இன்னின்னருக்கு இன்ன சுதந்திரம் என்று சொல்லி பங்கிட்டு கொடுத்தார்கள். அதிலே மீதியாயிருக்கிற ஜனங்களை துரத்திவிட்டு தங்களுடைய எல்லையை சுதந்தரித்துக்கொள்ள வேண்டியது அந்தந்த கோத்திரத்தாருடைய கடமை. சீட்டு மாத்திரம் போட்டு தேசத்தை பங்கிட வேண்டும் (யோசு. 13:6,7).

எண். 35:1-8

லேவியர்களுக்கு அவர்கள் வாசம்பண்ணுகிறதற்கு அவர்களுக்கும், அவர்களுடைய மிருக ஜீவன்களுக்கும் பட்டணங்களை தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டார். லேவியர்களுக்காக ஒதுக்கப்பட்ட பட்டணங்கள். இதிலே கொலை செய்தவன் தப்பியோடி அடைக்கலமடைவதற்கு அடைக்கலப்பட்டணங்கள் லேவியர்கள் பட்டணத்திலிருந்து பிரித்து ஒதுக்கும்படியாக கர்த்தர் கட்டளையிட்டார்.

எண். 35:9-15

ஒதுக்கப்பட்ட பட்டணங்கள் ஆறு என்று பார்க்கிறோம். கானான் தேசத்தில் அவர்கள் பிரவேசித்த பின்பு கொலை செய்தவன் நியாய சபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் சாகாமல் பழிவாங்குபவன் கைக்குத் தப்பியோடி அடைக்கலமாய் அடைக்கலம் புகும்படியாக இந்தப் பட்டணங்கள் நியமிக்கப்பட்டன. இந்தப்பட்டணங்கள் இஸ்ரவேலருக்கும், அந்நியருக்கும் அடைக்கலப்பட்டணமாய் இருக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டார் (எண். 35:15). அடைக்கலப்பட்டணம் திருச்சபையைக் குறிப்பிடுகிறது. கொலைத்தண்டனைக்கு உட்பட்டவர்கள், பாவத்தின் சம்பளம் மரணத்திற்குட்பட்டவர்கள் இந்த அடைக்கலப்பட்டணத்திற்குள் ஓடிவந்து தஞ்சம் புகுகிறதினால் இவர்கள் பழிவாங்குகிறவனாகிய சாத்தானுக்கு தப்பிக் கொள்ளலாம். அடைக்கலப்பட்டணத்தை விட்டு, அதன் எல்லையை விட்டு அவர்கள் வெளியேவந்தால் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் [வச. 26,27] இந்த அடைக்கலப்பட்டணங்கள் அவைகளுடைய பெயர்கள், அவைகளுடைய விளக்கங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும். அடைக்கலப்பட்டணங்கள் ஆறும் லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்களில் காணப்பட்டது. இந்தப் பட்டணங்கள் இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து பிரித்தெடுத்துக் கொடுக்கப்பட்டது.

எண். 35:16-21 : கொலை செய்வதுபற்றி அதாவது மனப்பூர்வமாய்த் திட்டமிட்டு கொலை செய்கிறவர்களைப் பற்றிய விபரம்

எண். 35:22-29 : தற்செயலாய் கொலை செய்தவர்களைப்பற்றிய பிரமாணம். ஒருவன் திட்டமிட்டு ஒருவனைக் கொலை செய்தால் அவனுக்கு இரக்கம் பாராட்டக்கூடாது. அதற்குப் பதிலாக அவன் கொலை செய்யப்படவேண்டும். மீட்கும் பொருளை வாங்கக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

எண். 35:30-34 : வேறுமொன்றே ஜீவனுக்கு நஷ்டம் பண்ணினவனை அதின் பிராயச்சித்தம் அவனை கொலை செய்கிறதே. இவ்விதமாக தேசத்தை சுத்திகரிக்க வேண்டும் இல்லாவிட்டால் இரத்தப்பழி தேசத்தை தீட்டுபடுத்தும் என்று சொல்லப்பட்டுள்ளது

இன்றைக்கு உலகத்திலே, இந்திய தேசத்திலே கொலைகளுக்கு கணக்கே இல்லை. மக்கள் மறைக்கப்படுகிறது சரியான நீதி அநேக காரியங்களிலே மறுக்கப்பட

வில்லை. மனித ஜீவனின் அருமையைப்பற்றி இந்தியர்களுக்கும் உலகத்துக்கும் போதிக்கப்பட வேண்டும்.

அடைக்கலப்பட்டணம் கை பிசகாய் ஒருவனை கொன்று போட்டவன் ஓடி அடைக்கலம் புகும்படியாக அடைக்கலப்பட்டணம் நியமிக்கப்பட்டது. இந்த பட்டணங்கள் கிழக்கே யோர்தானுக்கு இப்புறம் மூன்றும், மேற்கே கானானுக்குள் மூன்று பட்டணங்களுமாக அமைக்கபபட்டிருந்தன. இந்த பட்டணங்களை கானான் தேச படத்தில் பார்ப்போமென்றால் ஒரு இஸ்ரவேலன் தான் இருக்கும் இடத்திலிருந்து அடுத்த அடைக்கலப் பட்டணத்துக்குப் போகும் தூரம் 30 மைல் தூரமே இருக்கும். கைபிசகாய் கொலை செய்தவன் ஓடிபோகத் தக்கதாக இடையிலே யாதொரு தடையும் இல்லாதவாறு இப்பட்டணங்களுக்குப் போகும் பாதைகள் செம்மையாக அமைக்கப்பட்டிருக்கும் (உபா. 19:3).

பழிவாங்குகிறவன் வந்து அவனை கண்டுபிடித்து கொன்று போடாதபடி அவன் அடைக்கலப்பட்டணத்துக்குள் ஓடி தப்பித்துக் கொள்ள வேண்டும். இந்த அடைக்கலப் பட்டணம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய திருச்சபையையும் குறிக்கிறது. பாவம் செய்கிற ஆத்துமா சாகும். மனிதன் மனசாட்சியின் படியும், நியாயப்பிரமாணத்தின்படியும் பாவம் செய்து குற்றவாளியாயிருக்கிறான். பழிவாங்குகிறவனாகிய சாத்தான் அவனை கொலை செய்யும்படி அவனை பின்தொடருகிறவனாயிருக்கிறான். தன்னை பாவி என்று உணருகிற மனிதன் உடனே அடைக்கலப் பட்டணத்தை நோக்கி ஓடக்கடவன். அடைக்கலப் பட்டணத்திற்கு ஓடிப்போகிறவன் அந்தப் பட்டணத்தின் வாசலில் நின்று கொண்டு அந்த பட்டணத்தின் மூப்பரின் காதுகள் கேட்க காரியத்தைச சொல்வானாக (யோசு. 20:4).

தன்னை பாவி என்று உணருகிற மனிதன மூப்பர்களின் செவிகேட்க தன் பாவங்களை அறிக்கையிட வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளையாகும். அப்படி அவன அறிக்கையிடும்போது அவர்கள் அவனை தங்களுடன் சேர்த்துக் கொண்டு அவனுக்கு குடியிருக்க இடங்கொடுப்பார்கள். பழிவாங்குகிறவன கைக்கு அந்த மனிதனை தப்புவிப்பது அந்த பட்டணத்தின் மூப்பர்களின கடமையாகும் [யோசு. 20:5] நியாயம் விசாரிக்கும் சபைக்கு முன்பாக அவன் நிற்குமட்டும், அப்பொழுது இருக்கும் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் உயிருடன் இருக்குமட்டும் அவன் பட்டணத்தில் குடியிருக்க வேண்டும். அந்த பட்டணத்தின் எல்லையை விட்டு அவன் வெளியே வந்தால் அவன கொலைசெய்யப்படுவான், அவனுடைய இரத்தப்பழி அவனுடைய தலையின் மேலிருக்கும். ஆனபடியால் சபையை விட்டு அவன் வெளியே வரக்கூடாது. வெளியே வருகிற ஆத்துமா சாகும்.

அடைக்கலப்பட்டணங்கள்:-

1. கேதேஸ் - கேதேஸ் என்றால் கோயில் என்று அர்த்தமாகும். இந்நாட்களில் அநேகருக்கு ஆலயம் வேண்டாம், சபை வேண்டாம் என்ற எண்ணம், சபை வேண்டாம், ஊழியக்காரன் வேண்டாம், ஒவ்வொரு மனிதனும் தானே பைபிள் படித்து ஏதாவது ஒரு உபதேசத்தைக் கைக்கொண்டு தான் முக்தியடையலாம், கர்த்தருடைய வசனத்தை கையில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று எண்ணியிருக்கிறார்கள். இது சில தேவ ஊழியர்கள் மூலம் போதிக்கப்பட்ட புதிய போதனையாகும். இவ்விதமான எண்ணம் கீழ்ப்படியாத சிலருக்குள் சாத்தானால் தூண்டப்படுகிறது. சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் என்றும் தீர்க்கதரிசிகள் என்றும் எண்ணிக்கொண்டு கொந்தளிக்கும் கடலைபோல்

இருக்கிறார்கள். அது அரசர்த்திருக்கக் கூடாமல் அடக்கையும், செற்றையும் ஒதுக்குகிறது போல இவர்களுடைய கபாலத் தலையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சபை வேண்டாம் என்பது இவர்களுடைய எண்ணம்.

2. சீகேம்:- சீகேம் என்றால் தோள் என்று அர்த்தமாம். சீகேமுக்கு 31 மைல் தூரத்தில் ஏபால், கெரிசீம் என்னும் மலைகளுக்கிடையில் (எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ளதாகும்) சீகேம் உள்ளது. ஆபிரகாம் சீகேமுக்கு அருகாமையான மோரே சமபூமியில் தங்கியிருந்த போது கர்த்தர் அவனுக்கு தரிசனமானார்; அங்கே அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டினார் (ஆதி. 12:6,7). யாக்கோபு சீகேமுக்கு அருகிலுள்ள சாலேம் என்ற இடத்தில் கூடாரம் போட்டு, அதை விலைக்கு வாங்கி, பலிபீடம் கட்டி ஏல் எலோகே இஸ்ரவேல் என்று பெயரிட்டான் [ஆதி 33:18-20]. யோசுவா சீகேமிலே கூடி தம்முடைய கடைசி பிரசங்கத்தை ஜனங்களுக்குச் செய்தார். இந்த சீகேம் எப்பிராயீம் பட்டணங்களில் ஒன்றாகும். கர்த்தருக்கு ஆராதனை செய்து, அவருக்கு தொழுகை செய்ய வேண்டும்.

"கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்" "எருசலேமே உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று" "நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும், அவருடைய ஆலயத்தின் பிரகாரங்களிலும் நிறைவேற்றுவேன்" [சங் 116:18,19; 122:1,2]. சபைகூடி வருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாம் விட்டுவிடக் கூடாது மனிதன் தேவனை ஆலயத்தில் போய் தொழுது கொள்வதும் ஆராதனை செய்வதும் அவசியம். தோளோடு தோள் சேர்ந்து நாம் தேவனை தொழுது கொள்ள வேண்டும், அவருக்கு சேவை செய்ய வேண்டும்.

3. எபிரோன்:- எபிரோன் என்றால் உடன்படிக்கை என்று அர்த்தம் (யோசு. 20:7). ஆறாவது அடைக்கலப் பட்டணம் யூதா தேசத்திலுள்ள எபிரோன் ஆகிய கீரியாத் அர்பாவாகும். இந்த பட்டணம் எருசலேமிலிருந்தும், பெயர்செபாவிலிருந்தும் 20 மைல் தூரத்திலுள்ளது. எபிரோன் எகிப்தின் பட்டணமாகிய சோவாருக்கு 7 வருஷத்துக்கு முன்னே கட்டப்பட்டது. பாலஸ்தீன பட்டணங்கள் எல்லாவற்றையும் பார்க்கிலும் இது பழமையானது. முற்காலத்திலே இந்த நாட்டை சந்ததியார்களாகிய ஏனாக்கியர் குடியிருந்தார்கள். ஆகையால் அதற்கு கீரியாத் அர்பா என்று பெயர் (யோசு. 14:15; நியா. 1:10). ஆபிரகாம் கூடாரம் போட்ட மம்ரே எபிரோனைச் சேர்ந்தது [ஆதி 13:18]. ஆபிரகாமும், சாராளும் இந்த இடத்தில் வெகுகாலமாகத் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. ஆபிரகாம் தன் மனைவி சாராளை அடக்கம் பண்ணுகிறதற்கு வாங்கின மக்பேலா குகையும் இங்கே உள்ளது [ஆதி 23:1-20].

இக்காலத்தில் கிட்டதட்ட பத்து பதினைந்தாயிரம் ஜனங்கள் அந்தப் பட்டணத்திலே குடியிருக்கிறார்கள். யோசுவா எபிரோனை காலேபுக்கு சுதந்தரமாய் கொடுத்தார் [யோசு. 14:12,13] அங்கிருந்து ஏனாக்கியரை காலேப் துரத்திவிட்டார் [யோசு. 15:13,14]. இது ஒரு அடைக்கலப் பட்டணமாக மாற்றப்பட்டது.

உடன்படிக்கை:-

பழைய, புதிய உடன்படிக்கைகள்: பழைய, புதிய ஏற்பாடுகள், பழைய ஏற்பாடு இஸ்ரவேல் மக்களோடு இறைவன் செய்த உடன்படிக்கை புதிய ஏற்பாடு ...

முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகில் உள்ள எல்லா ஜனங்களோடும் செய்த உடன்படிக்கை. இந்த உடன்படிக்கைக்கு உட்படுகிற மக்கள் அந்த உடன்படிக்கையின் சரத்துபிரகாரம் நடந்து கொள்ள வேண்டும். அந்த சரத்தில் எழுதியுள்ள பிரகாரம் அவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும்.

ஒரு மனிதன் மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மூழ்கி ஞானஸ்நானம் பெற்று கொள்ளும்பொழுது இந்த உடன்படிக்கையை அவன் செய்கிறான். தேவனுடைய ஜனங்கள் தேவாலயத்திற்குப்போய் கேதேஸ் தேவனுடைய ஜனங்களோடு சேர்ந்து வழிபட்டால் மட்டும்போதாது, ஞானஸ்நான உடன்படிக்கைக்கு உடன்பட்டு தேவனோடு ஒப்பந்தம் செய்யவேண்டும். தேவனோடு ஒப்பந்தம் செய்து, தன்னுடைய வாழ்க்கையை முற்றிலுமாய ஒப்புக்கொடுத்து அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஜீவிக்கிறவர்கள் கர்த்தருடைய வருகையிலே கூட்டப்படுவார்கள் (சங். 50:5).

4. பேசேர்: பேசேர் என்றால் தங்கம் அல்லது பெலன். அரண் என்று அர்த்தம். நான்காவது அடைக்கலப் பட்டணம் யோர்தானுக்குக் கிழக்கே ரூபன் கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்ட பேசேராகும். லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்களில் பேசேரும் ஒன்று. இது பின்பு அடைக்கலப்பட்டணமாக மாற்றப்பட்டது (யோசு. 21:36; 20:8). மனிதன் திருச்சபையாகிய அடைக்கலப் பட்டணத்திற்குள் சென்று தேவ ஜனங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க வேண்டும். ஞானஸ்நானம் பெற்று தன்னை தேவனோடு இணைத்துக் கொள்ள வேண்டும். தன்னை பூரணமாக ஒப்புக் கொடுத்து வெளிவேறு விதத்தில் தேவனோடு உடன்படிக்கை செய்ய வேண்டும்: பிரதிஷ்டை செய்ய வேண்டும். தேவன் அவனை ஆசிர்வதித்து தம்முடைய ஆவியினால் அபிஷேகிப்பார். பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் தேவன் நம்மை ஏற்றுக் கொண்டார், அங்கீகரித்து கொண்டார் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது. இது உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் அனுபவமாகும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பி, மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்பொழுது இயேசு கிறிஸ்துவை நாம் இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொண்டோம் என்பதற்கு இது சாட்சியாக இருக்கிறது. அதுவே நம்மை இரட்சிக்கிறது. "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்" [அப். 16:31]. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான் (மாற். 16:16). ஆனால் நம்மை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொண்டாரென்பதற்கு பரிசுத்தாவியின் அபிஷேகம் சாட்சியாயிருக்கிறது. இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்கு பரிசுத்தாவியைத் தந்தருளினது போல அவர்களுக்கும் தந்தருளி அவர்களைக் குறித்து சாட்சியும் கொடுத்தார் அப். 15:8. கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோம 8:9)

அநேகர் பரிசுத்தாவியின் அபிஷேகமற்றவர்களாகவும், இன்னும் அநேகர் பல ஆண்டுகள் கழித்து இறைவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளார்கள் இது உன்னதத்திலிருந்து வரும் பெலனும் பரிசுத்தாவியின் அபிஷேகம் ஒரு மனிதனை [Invisible Body of god] கிறிஸ்துவினுடைய, சரீரத்தினுடைய செய்யமான அங்கமாயிருக்கிறது அதினால் இது ஒரு தங்கமான அனுபவமாகும்.

[தொடரும்]

சாட்சி

எனது பெயர் சி. ஜோதி. நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தவள். எனது சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் செட்டியாபெட்டி என்ற கிராமம். நான் பத்தாம் வகுப்புவரை படித்திருக்கிறேன். எனக்கு இரண்டு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் இருக்கிறார்கள். எங்கள குடும்பத்தார் இந்து மதத்தில் மிகவும் பக்தியுள்ளவர்கள். இந்து கோவில்களுக்கு தர்மம் செய்வதும்; வருடந்தோறும் பழனி, திருப்பதி போன்ற கோவில்களுக்கு குடும்பமாக சென்று, வழிபட்டு வருவது வழக்கமாக இருந்தது. இந்த நிலையில் என்னுடைய இரண்டு சகோதரர்களுக்கும் திருமணமான உடன் என தாய், தந்தையை அடித்து துன்புறுத்தி தங்கள் சொத்தை பாகம் பிரித்துக் கொண்டு தனியே சென்று விட்டார்கள்

நல்ல செழிப்பாக வாழ்ந்த குடும்பம் இப்போது வறுமையாகிவிட்டது. இந்த நிலையில் 1994 ஆம் வருடம் நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது என் சரீரத்தில் பெரும்பாடு உதிரபோக்கு வியாதி ஏற்பட்டது. இந்த வியாதி என்னை மிகவும் வாட்டியது. 3 வருடமாக இந்த வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். இந்த நிலையில் என் பெற்றோர்கள் என்னை இந்து பூசாரிகளிடமும், மந்திரவாதிகளிடமும் அழைத்து சென்றார்கள். அவர்கள் உனக்கு பிசாசு, காளி, முனி பிடித்துள்ளது. பல கோவில்களில் கோழி அறுத்து பலி செலுத்துங்கள் சரியாகி விடும் என்று சொன்னார்கள்.

எனக்கு எப்படியாவது வியாதி சுகமாக வேண்டும் என்று என பெற்றோர்கள் பல இந்து கோவில்களுக்கு சென்று பூசாரிகள் சொன்னபடி பலி செலுத்தி வந்தார்கள் சுமார் ஒரு வருடமாக பல ஆயிரம் ரூபாய் செலவழித்து முருகன், காளி, முனி போன்ற எல்லா கோவில்களுக்கும் சென்று பலி செலுத்தி வந்தோம். ஆனாலும் வியாதி சிறிதும் சுகமாக வில்லை. மந்திரவாதிகளை அணுகி, நீங்கள் சொன்னபடியெல்லாம் செய்து வருகிறோம்; ஏன் சுகமாகவில்லை என்று கேட்டபோது அவர்கள் இது சரீரத்தில் உள்ள வியாதி, டாக்டரை பாருங்கள் என்று சொல்லிவிட்டார்கள். முதலில் பிசாசு பிடித்திருக்கிறது என்று சொன்ன அதே மந்திரவாதிகள் அப்போது எங்களை கைவிட்டார்கள்.

அதன் பிறகு என் பெற்றோர்கள் மிகவும் மன வருத்தத்தோடு என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றார்கள். புதுக்கோட்டையில் உள்ள பல டாக்டர்களிடம் பார்த்து பல ஆயிரம் ரூபாய் செலவழித்தும் வியாதி சுகமாகவில்லை. என் அம்மாவின் நகைகள், கிணற்றில் உள்ள மோட்டார், ஆடுமாடுகள் அனைத்தையும் விற்று, ஆஸ்பத்திரிக்கு கொடுத்தோம். ஆனாலும் என் பெரும்பாடு [உதிரப்போக்கு] வியாதி சுகமாகவில்லை பிறகு நாட்டு வைத்தியர்களிடம் சென்று மூலிகைகள், நாட்டு மருந்துகள் சாப்பிட்டு பார்த்தோம், வியாதி அதிகமானதே தவிர குறையவில்லை.

என் தாய், தகப்பன் மிகவும் கஷ்டப்பட்டார்கள். என் சகோதரர்கள் நிமித்தமாகவும் என் பெற்றோர்களுக்கு சமாதானம இல்லை. என் நிமித்தமாகவும் என் பெற்றோர்களுக்கு மேலும் கவலை, கண்ணீர். இந்த நிலையில் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று நினைத்து கண்ணீர் வடித்தேன்.

[தொடரும்]

"SEEK GOD"

நடக்கிறது TO WALK

CHIEF PASTOR N. LAZAR
NEW JERUSALEM CHURCH
CHURCH LANE TILAK NAGAR,
DARGA CROSS ROAD BHANDUP,
BOMBAY-400 073 INDIA



புதிய எருசலேம் செய்தி

PUDNIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 146 - SEP. '96



[illegible]

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

[illegible], INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக் காண்பித்து எனக்குக் கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள் :

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.
2. விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).
3. திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20
4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.
5. அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.
6. இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)
7. நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூறும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26.

நான், ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும். இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப. 1 : 1; 10:40-43).

CHIEF PASTOR: N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

தேவன் மனிதனை செம்மையானவனாகவே படைத்தார். அவர்களோ தங்க
ளைக் கெடுத்து அநேக உபாய தந்திரங்களைத் தங்களுக்குத் தேடிக் கொண்டார்கள்
பிர. 7:29 என்று வேதம் சொல்லுகிறது. மனுஷன் வேஷமாகவே திரிகிறான் (சங்.
39:6). தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு மக்களை வஞ்சிக்கிறவர்கள்
அநேகர் இந்நாட்களிலே திரிகிறார்கள்; அதை சோதித்து அறியவேண்டும். பருத்தி
என்னதான் பட்டு விழி விழித்தாலும், அது பருத்தியா, பட்டா என்று சலவைக்
கிட்டுப் பார்த்தால் தான் தெரியும், அது பட்டு விழிவிழிக்கிறதும், பருத்தி விழி
விழிக்கிறதும். அப். பவுல் சொன்னதுபோல் நான் போன பின்பு மந்தையை தப்ப
விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர்
எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவை
களைப் போதிப்பார்கள்...ஆனபடியால் நான் (அப்போஸ்தலன்) அவனவனுக்குப்
புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள் (அப்போஸ்தலன்
சொன்னதை, சொல்லுவதையே கேட்கவேண்டும்) .... தேவனுக்கும் அவருடைய
கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன் என்றார்
[அப். 20:29-32]. அப்போஸ்தலர் மூலம் சொல்லப்பட்ட வசனத்தையே கவனிக்க
வேண்டும். இடைத்தட்டில் வந்தவர்கள் இடைத்தட்டில் போய்விடுவார்கள். வச
னத்துக்கு மாறான காட்சி, தரிசனம், சொப்பனம் என்பதெல்லாம் சாத்தானுடைய
செயலே. உதாரணமாய்ப் பாருங்கள்: *மோசேக்குப் பின் யோசுவா, தாவீதுக்கு*
பின்பு சாலமோன், எலியாவுக்குப் பின்பு எலிசா என்பார்கள். வேதம் தெரி
யாத, வேத அறிவில்லாத ஜனங்கள் அதை நம்பவும் செய்வார்கள். ஆனால்
தேவன் யாரிடத்தில் சொன்னார்? மோசேயிடம் தான் சொன்னார், உனக்குப் பின்பு
யோசுவாவை ஏற்படுத்து என்று எண். 28:16-20; தாவீதிடம்தான் சொன்னார், சால
மோன் அதைக் கட்டுவான் என்று 1 இராஜா. 5:5; எலியாவிடம் தான் சொன்
னார், எலிசாவை உன் ஸ்தானத்தில் ஏற்படுத்து என்று 1 இராஜா. 19:16. இது
தான் வசனம். இதற்கு மாறாய் ஒருவன் போதிக்கிறானென்றால் அவன் பிசாசின்
கையாளல்லவா? *ஆனபடியினால் விழித்திருங்கள் பிசாசு வருவான்*
[1 பேது. 5:7].

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar (signature)

CHIEF PASTOR: N. LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

திருச்சபையின் செயல் நோக்கம்:-

மீன் பிடிக்கிறவர்கள் ஒரு வலையைக் கொண்டு மீன் பிடிக்கிறார்கள். அவ்வாறே ஆத்துமாக்களைப் பிடிப்பதற்கு நமக்கும் ஒரு வலை இருக்கிறது; அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற சுவிசேஷமே; இது சமாதானத்தின் சுவிசேஷமே; ஒப்புரவாக்குதலின் சுவிசேஷமே. இதைக் கொண்டே பாவிகளைப் பிடிக்கிறார்கள். மீன்கள் பிடிக்கப் பயன்படுத்தும் வலைக்கு அது ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஏனெனில்

1. அது தனக்குள்ளே வருகிற எல்லாவற்றையும் சேர்த்து பிடித்துக் கொள்ளத்தக்கதாக விரிவாய் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. "ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி, விலையுமின்றித் திராட்சரசமும், பாலும் கொள்ளுங்கள்" (ஏசா. 55:1) நற்செய்திகள், நன்மைகள் அனுபவத்திலிருந்து கடவுள் யாரையும் புறம்பாக்குவதில்லை. ஆனால் மனிதர்கள் தங்களைத் தாங்களே புறம்பாக்கிக் கொள்ளலாம். கிறிஸ்துவின் நற்செய்தி எல்லோருக்கும் விலையின்றி வழங்கப்பட்டுள்ளது.

2. மீன்கள் எதிர்பாராதபடி வலையிலே பிடிபடுகின்றன. அவ்வாறே பாவிகள் நற்செய்தியாலே பிடிபடுகின்றனர். சகேயு அத்திமரத்தினிடை சென்றபோது தனது இரட்சிப்பைக் குறித்து சிறிதுதான் சிந்தித்திருப்பார். சாத்தானுடைய வேலையாக பவுல் சென்று கொண்டிருக்கும்போது, தாம் துன்புறுத்தும் கிறிஸ்துவைக் கண்டபோது அவன் ஒரு இனிமையான சந்திப்பை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்த மனிதன் எதிர்பாராதபடி பிடிக்கப்பட்டான்.

3. சில வேளைகளில் மீன் வலையிடம் வந்து அதனைத் தொடுகின்றது; பிறகு தூரம் பின் வாங்கிச் சென்றுவிடுகிறது. அப்படியே பல ஆத்துமாக்கள் நற்செய்தியைக் கேட்கும் போது ஒருவகையான உணர்ச்சிவசப்படுகின்றனர் என்றாலும் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் தொடர்ந்து வாழ விரும்பி திரும்பிப் போய்விடுகின்றனர். ஏரோது அரசன் திருமுழுக்கு யோவானின் உபதேசத்தைக் கேட்டு மகிழ்ச்சியோடு அதன்படி சில காரியங்களைச் செய்தபோது அவன் சுவிசேஷத்தினால், நற்செய்தியினால் பிடிக்கப்படவில்லை. ஆம்! ஒரு ஆத்துமா நற்செய்தி, பிரசங்கம் கேட்கும்பொழுது விருப்பங்கொள்ளுகிறது மாத்திரமல்ல, அதை ஏற்றுக்கொண்டு அதற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். அல்லவென்றால் அது திரும்பப் போகும்பொழுது அந்த விருப்பமும் அவர்களை விட்டு விலகிச் சென்றுவிடும்.

4. சில மீன்கள் வலையில் அரைகுறையாகப் பிடிக்கப்படும்பொழுது அவைகள் திமிறியடித்து தங்களை விடுவித்து வெளியே ஓடிவிடுகின்றன. அப்படியே சில ஆத்துமாக்களும் பிடிக்கப்படுவார்கள் என்றாலும் சீக்கிரத்தில் அவர்களுடைய விசுவாசத்தை விட்டு பின்வாங்கிச் செல்பவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய நற்குணம் காலையில் தோன்றும் மேகத்தைப் போன்றும், காலை பனியைப் போலவும் இருக்கும். கிறிஸ்துவின் சொந்த நிபந்தனைகளின்படி ஆத்துமா அவரை ஏற்றுக்கொண்டு திருப்தி அடைகிறதா இல்லையா என்பதை எல்லா வழிகளிலும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரில் மன நிறைவு அடையவேண்டும். அவரே நமக்கு எல்லாவற்றிலும் போதுமானவராயிருக்கிறார். நடமுறையில் அநேக ஆத்துமாக்கள் புணராழமான பின்னரும் அதைக் குணப்

படுத்தக் கவனக்குறைவாக இருந்து விடுகின்றனர். இப்படியே தங்கள் புண்களை இன்னும் ஆழமாக்கி, புண் ஆக்கி விட்டு, சுகமடைவதற்குப்பதிலாக இறந்துவிடுகின்றன.

5. வலைக்குள்ளே சிக்கிக்கொண்ட எல்லா மீன்களும் அதிலிருந்து விடுதலை பெறுவதற்காக சிறிதாகிலும் திமிறி அடிக்கின்றன. அவ்வாறே ஆண்டவர் தம்முடைய திருவாக்கினாலும், ஆவியினாலும், ஆத்துமாக்களை சந்தித்து அவர்களை இரட்சிக்க முற்படும்போது ஆத்துமாக்கள் முற்றிலுமாக பிடிபடுவதற்கு முன்னால் எப்படியாகிலும் ஒரு வகையான எதிர்ப்பை உண்டாக்குகின்றன. இயற்கையான சுபாவத்தின்படி மனித இனத்தின் கொடுமை எவ்வளவு பயங்கரம். அது அவனுடைய நித்திய நன்மைக்கு எதுவான எல்லாவற்றுக்கும் விரோதியாக இருக்கிறது.

6. வலையில் நன்றாக இறுகச் சிக்கிக்கொண்டவைகளுக்கு இந்த திமிறி அடித்தல் ஒன்றும் பயன்படாது. ஆகையினாலே நீ ஆண்டவருடைய சத்தியத்தை வல்லமையாய் போதிக்க உன்னை நீயே எச்சரித்துக் கொள். கேட்போரின் மனச்சான்றினையும், உணர்ச்சிகளையும், அறிவையும் அடைந்து சேர்ந்து பிடிக்கத்தக்கவாறு சத்தியத்தை திட்டமாய் போதி.

7. ஒரு வலையில் மீன் பிடிப்பதற்கான பல கண்ணிகள் இருக்கின்றன. நற்செய்தியின் வாயிலாக பாவிகளுக்குக் கொடுக்கப்படும் அழைப்பு ஒரு வகையில் இத்தகையதே. ஆனால் அவை என்றென்றும் அழிவில்லாத நன்மைக்கு எதுவான கண்ணிகளே. அவை ஆத்துமாக்களை திருவருள் வயப்படுத்தும் கிருபையின் கண்ணிகளாகும். அவைகள் கிறிஸ்துவிடம் வருகிறவர்களுக்கு வாக்கருளப்படும் இனபமான வாக்குறுதிகளாகும். இனபமான வாக்குறுதிகளாகும். இத்தகைய கண்ணிகளாலேதான் ஆத்துமாக்கள் பிடிபடுகிறார்கள், இதுவே நற்செய்தி, பிரசங்கமாகும். இவ்வாறாகவே நற்செய்தியின் வலையை விரிக்க வேண்டும். இதில் பல்வேறு வகையான கிருபைக் கண்ணிகளாகிய அழைப்பையும், வாக்குறுதிகளையும் விரிக்கவேண்டும். இவற்றிடத்திற்கு மீன் வரும்போது அவை பிடிபடுகின்றன.

8. வலை தண்ணீருடன் மேலே காற்றினாலும், அலையினாலும் தூக்கப்படுமானால் நிலையாக நிற்காமலிருக்குமானால் மீன்களை பிடிப்பதற்கு ஏற்றதாயிருக்காது. மீன் அதனை பொருட்படுத்தாது தப்பிப்போய் விடும் ஆகையினால் மீன்களை பயமுறுத்தி, வலைக்குள் ஓட்டுவதற்கு சில நீதி முறைப்படியான அச்சுறுத்துதல்களையும், பயமுறுத்தல்களையும் பயன்படுத்த வேண்டும். ஆகையால் நற்செய்தியின் இரண்டு பண்புகளும் போதிக்கப்பட வேண்டுமென்பதை நன்றாய் அறிந்து கொள்ளவும்.

9. வலையிலுள்ள கண்ணிகள் மிகப்பெரிதாக இருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் மீன் அதின் வழியே தப்பிப் பாய்ந்து ஓடிப்போய்விடும். எனவே உன்னுடைய உபதேசம் பொதுவானதாய் குறிப்பிட்ட உபயோகமற்றதாய் இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்குமானால் நீ மனிதரைப் பிடிக்கும் ஆளாய் இருக்க இயலாது. தீயவர்கள் அதனுள்ளே தாராளமாய் போவதற்கும், அதன் வழியே தாராளமாய் வருவதற்கும் ஏதுவாகும். நீ உபதேசம்பண்ணினால் மனிதர்கள் மகிழ்ச்சியடைவார்கள். அவர்களுடைய பாராட்டு உனக்குக் கிட்டும். ஆனால் அதற்குப் பதிலாக மக்களுடைய மீறுதல்களிலும், பாவங்களிலும் பிடிக்கத்தக்கதாய் பிரசங்கம் செய்தால் மனிதனுடைய பாராட்டு உனக்குக் கிட்டாமல் இருக்கலாம். ஆனால் நீ மனிதருக்கு ஊழியம் செய்யாதே. கடவுளுக்குப் பிரியமாக, உத்தமமாக, உள்ளவாறாக ஊழியம் செய்.

10. வலை அளவுக்கு மீறி நேர்த்தியானதாய், நாதானமானதாய் செய்யப்பட்டதாயிருக்

கக் கூடாது அவ்வாறு இருக்குமானுல் வலை மின்களைப் பிடிக்காது. ஆகையால் "என் ஆத்துமாவே, உன்னைக் கேட்கிறவர்கள் விளங்கிக்கொள்ள இயலாத சொல், நய முள்ள நேர்த்தியானதும், நூதனமானது மான பேச்சாற்றலைக் குறித்து எச்சரிக்கை யாயிரு" தாமஸ் – பாஸ்டன் 1699.

நமக்கு அருளப்பட்டுள்ள செய்தியின் பண்பு அதனை எல்லோருக்கும் அறிவிக்கு மாறு வேண்டுகோள் விடுவிக்கிறது. நாம் சொல்ல வேண்டிய நற்செய்தி நமக்கு அருளப்பட்டுள்ளது. மக்கள் எந்த இடத் தில் வந்து கூடினுலும் என்ன செய்தி என்று கேட்கிருர்கள். ஒ இன்றைக்கு நான் சொல் லத்தக்க செய்திகள் உண்டு என்று நாம் சொல்லக்கூடியவர்களாக இருக்க வேண் டும். நாம் ஆத்துமா ஆதாயம் செய்கிறதில் நம்முடைய உயிரையே பணயம் செய்கிற அளவாய் திட்டமாய் ஈடுபட வேண்டும். "...பரிசுத்தவான்களுக்காக ஒருவிசை ஒப்பு விக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராடவேண்டும்..." யூதா 3.

(தொடரும்)

"இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்தால், பொழுது விடியும் மட்டும் சும்மாயிருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்.... வாருங்கள் அறிவிப்போம்" [2 இராஜா. 7:9].

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

12. லூத்தர் மேலும் செய்த வேலையும் சீர்திருத்தலின் வளர்ச்சியும்:-

லைப்சிக் நகரத்தில் நடந்த தர்க்கத்தில் லூத்தர் சத்தியத்துக்காக விரனாக போராடி னது அவருக்கு சத்துருக்களை அதிகரித்தது மட்டுமல்ல அவருக்கு சார்பான சிநேகிதர் களையும் ஏராளமாக்கிற்று. 1519-ம் வருஷம் அக்டோபர் மாதம் 3-ம் தேதி பிரேக் பட் டணத்தில் இருந்த யோவான் படுஷக்கா, வென்செலாவுஸ், ரேஸ்டியா லோவினஸ் என்னும் இரண்டு குருமாரும் லூத்தருக்கு கடிதங்கள் எழுதிச் சொன்னது உம்முடைய பிரபந்தங்களை அதிக சந்தோஷத்தோடு வாசித்தோம். கர்த்தருக்குள் திடனாய் நிலைத் திரும். ஆண்டவருடைய வேலையை விடா முயற்சியாய் நடத்தும். பொகிமயாவிலுள்ள அநேக புத்திமான்கள் உக்கிர ஜெபத்தால் உம்மை ஆதரித்து தாங்குகிருர்கள் என் பேத ரோஸ்டியா, ரோமினஸ் மேலும் சேர்ந்து எழுதியதாவது. பொகிமியாவுக்கு உஸ் என்பவர் எப்படி இருந்தாரோ அவ் வாரே மார்த்தீனியாவாகிய நீர் சச்சோனி யாவுக்கு இருக்கிறீர் என்பதே.

1520-ம் வருஷம் கர்மானியர்களாகிய கிறிஸ்தவ பிரபுகளுக்கு என்னும் ஒரு பத் திரிக்கை மூலமாய் குருக்கள் அல்லாத கர் மானிய கிறிஸ்தவர்களுக்கு லூத்தர் அபய மிட்டிருந்தார். அப்பத்திரிக்கையில் ரோமை மார்க்கத்தார் தங்களை காத்து தப்புவித்துக் கொள்ளும் பொருட்டு கட்டிக் கொண்ட மூன்று சுற்று மதில்கள் இன்னவை என்று காட்டுகிருர்.

1. பாப்பு எப்பொழுதும் லௌகீக அதிகா ரத்தையும், வல்லமையையும் எதிர்த்து லௌகீக அரசர்கள் மேல் அதிகாரம் செலுத்த தமக்குப் பாத்தியம் உண்டென்று ஸ்தாபித்திருக்கிருர்.

2. பாப்பு மார்க்க போதனைகளையும், சாதனைகளையும் தப்பென்று நிரூபிக்க சத்திய வேதத்தை ஆதாரமாகக் காட்டும்போதெல்லாம் தேவவசனங்களை வியாக்கியானம் செய்ய பாப்புவைத் தவிர வேறு யாரும் அருகரல்ல என்று வாதாடுகிறார்கள்.

3. பொதுச் சங்கங்களைக் கூட்ட பாப்புவுக்கு மட்டும் அதிகாரம் உண்டென்று சாதிக்கிறார்கள். மேலே சொன்ன மும்மதில்களையும் இடித்துக் தகர்க்க தேவனே தாமே நமக்கு உதவி புரிவாராக.

பத்திரிக்கையை முடிக்கும் வார்த்தைகளாவன: நான் உன்னத கதியோடு பாடி அசாத்தியமாய் காணப்படும் அநேக விஷயங்களைச் செய்யக் கருதி, அநேக காரியங்களை வெகு கண்டிப்பிப்பாய் தாக்கியிருக்கிறேன். ஆனால் என்னால் ஆவது என்ன? நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அவைகளைச் செய்ய என்னாலே கூடுமானால் நான் செய்ய வேண்டியவைகளைச் செய்ய மனமும் உள்ளவனாயிருக்கிறேன். தேவ கோபமல்ல மனுஷர் கோபம் என்மேல் வருவது நலமென்று தெரிந்து கொள்ளுகின்றேன். மனுஷர் என் ஜீவனை வாங்கலாமேயன்றி வேறொன்றையும் என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள முடியாது. அடிக்கடி நான் எதிரிகளிடமிருந்து சமாதானத்தை நாடினேன். ஆனால் ஆண்டவர் என் வாயை விரிவாய் திறந்து எதிராளிகள் பேசவும், குலைக்கவும், கத்தவும், எழுதவும் போதுமானதை அவர்களுக்கு கொடுக்க என்னை நெருக்கினார் என்று அறிகிறேன்.

ரோமாபுரியைப்பற்றி பாட எனக்கு இன்னொரு பாட்டு தெரியும். அதையும் கேட்க விரும்புவீர்களானால் அதை உரத்த தொனியோடு பாடுவேன், நான் எதை நினைத்து பேசுகிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். [illegible] திருச்சபையின் பாபிலோனிய சிறையிருப்பு என்னும் பத்திரிக்கையில் எழுதிய [illegible] நினைத்து [illegible] பேசுகிறேன். அடிக்கடி என் எதிரிகள் என் பிரபந்தங்களை கபடமின்றி நேர்மையாய் வாசிக்கவும் கேட்கவும் பிரசங்கம் செய்தேன், ஆனால் அது விருதாவாயிற்று. என் வழக்கும், நீதியும் செம்மையானதால் பூலோகத்தில் அது என்னை ஆக்கினைக்குள்ளாக்கினாலும் பரலோகத்தில் அது நியாயமென்று தீர்க்கப்படும். தேவன் நம்மெல்லாருக்கும் மெய் கிறிஸ்தவ அறிவையும், உணர்வையும் விசேஷமாய் கர்மானிய பிரபுகளுக்கு நமது ஏழை திருச்சபைக்கு தங்களால் ஆனபடியெல்லாம் செய்து உதவும்படி தங்களால் ஆனதையெல்லாம் செய்ய தெய்வீகத் தைரியத்தை தந்தருள்வாராக ஆமென்! விதன்பர்க் 1520-ம் வருஷம், யுத்த எக்காளமாகிய இந்த பத்திரிக்கை 4000 பிரதிகள் அச்சிடப்பட்டன. இந்த 4000 பிரதிகளும் சிலவாரங்களுக்குள் செலவாயின. ஆகையால் அப்பத்திரிக்கையை இரண்டாவது தடவை அச்சிடவேண்டியதாயிற்று

13. லூத்தர் பாப்புவின் சாபத்திற்கு உள்ளானது :-

லேப்சிக் நகரத்தில் நடந்த தர்க்கத்திற்குப் பிறகு எக் என்பவன் லூத்தரை பழிவாங்க நினைத்து சதி ஆலோசனை செய்தான். பாப்புவின் தத்துவத்தை புகழ்ந்து போற்றி, ஆதரித்து ஒரு புத்தகம் பிரசுரம் செய்தான். பாப்புவுக்கு தான் நேரில் பரிசளிக்க இந்த புஸ்தகத்தில் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு நேரே ரோமாபுரிக்குப் போனான். லூத்தர் அஞ்சா தைரியத்தோடு சத்தியத்திற்காகப் போராடி சத்தியத்தில் நிலைநின்றதால் பாப்புவுக்கு எல்லைகடந்த கோபம் பற்றி எரிந்தது. லூத்தரை பதிதனாக சபைக்குப் புறம்பாக்கி சபிக்கும்படி கார்டினல் அக்கோல்டி என்பவன் பட்டோலை ஒன்றை சட்டம் கட்டி எழுதினான். நான்கு [illegible] கர்த்தர் சபைகளில் பல திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்பட்டு முடிவாக 1520-ம் வருஷம் ஜூன் மாதம் 16-ம் தேதி பத்தாம் லெயோவாகிய பாப்பு எக் என்பவன் சமூகத்தில் பட்டோலையில் கையொப்பமிட்டான். இந்த பட்டோலையில்

லூத்தரை வேதப்புரட்டனும் பதிதனுகும்படி நாற்பத்தோறு [41] குற்றங்கள் இயற்றப் பட்டன. அவைகளில் இரண்டு குற்றங்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின் றன அவையாவன:-

1. உலகத்திலுள்ள எல்லா சபைகளுக்கும் பாப்பு கிறிஸ்துவின் பிரதிநிதி அல்ல என்று சொன்ன குற்றம் ஒன்று.

2. பதிதர்களை உயிரோடு அக்கினியில் தகனிப்பது பரிசுத்தாவியின் சித்தத்திற்கு அடாது என்று சொன்னது மற்றொரு குற் றம்.

லூத்தர்மேல் ஏற்பட்ட குற்றங்களான மேலே சொன்ன இரண்டு சங்கதிகளையும் 60 நாட்களுக்குள் மறுதலியாவிட்டால் மன கடினப்பட்ட ஒரு பதிதனுக்குச் செய்ய வேண்டியதுபோல, லூத்தரை அக்கினிக்கு இரையாக்க வேண்டும். அவருக்குச் சார் பானவர்களுக்கும் அப்படியே நடத்தப் படும். அவருடைய பிரபந்தங்கள் சுட்டெ ரிககப்பட்டு, அவருடைய ஞாபகம் அடி யோடு துடைக்கப்படவேண்டும். அவரோ டும், அவரை சார்ந்தவர்களோடும் எவரும் போக்கு வரவோ அல்லது எந்தவிதமான சம்பந்தமும் செய்யக் கூடாது மார்த்தின் லூத்தரைப் பிடித்து ரோமாபுரிக்கு அனுப்ப வேண்டுமென்று எல்லோருக்கும் ஒரு பொது உத்தரம் பிறந்தது. பாப்புவானவர் இந்த பட்டோலையைக் கொண்டு லூத்தரை பய முறுத்தி முற்றிலும் கீழ்ப்படியப் பண்ணலா மென்று நம்பினார். லோவேன், கொலோன் என்னும் பட்டணங்களில் லூத்தருடைய புத்தகங்கள் சுட்டெரிக்கப்பட்டன

ஆனால் மேயன்ஸ் நகரத்தில் பாப்புவின் பட்டங்களையே பிரசுரம் செய்தவர்களுக்கு கஷ்டங்கள் உண்டாயின. லூத்தருடைய எல்லா புத்தகங்களையும் ஒரு குவியலாக குவித்து அவைகளுக்கு நெருப்பு வைக்கிற என சுட்டெரிக்கப்பட வேண்டிய இந்த

புஸ்தகங்களின் ஆசிரியர் சட்டப்படியும் நீதி நியாயத்தின்படியும் ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்டாரா? என்றும் கேட்டான். அப்போது கூடியிருந்த கும்பல்களெல்லாம் இல்லை என்று சத்தமிட்டார்கள். உடனே தீயிடுபவன் சட்டப்படி ஆக்கினைத்தீர்ப்பு அடையாத எதையும் அழிக்கமாட்டேன் என்று எதிர்த்துச் சொன்னான். கும்பல்களெல் லாம் பாப்புவின் பிரதிநிதியாகிய அலியாண் டர் என்பவனை சதிகாரன், சண்டாளன் என்று கூப்பிட்டுச் சத்தமிட்டார்கள். அவன் உடனே ஒடி ஒழிந்து கொண்டான்.

அடுத்த நாள் சந்தைக் கடையில் சில புஸ்தகங்களை குழிவெட்டியான் நெருப்பி விட்டு எரித்தான். ஆனால் எரித்து சாம்ப லாக்கப்பட்ட புஸ்தங்கள், லூத்தருடைய புஸ்தகங்கள் அல்ல. எக் -கினுடைய புஸ் தகங்கள் என்று பிறகு சொல்லப்பட்டது. எர்புர்ட் நாகரத்தின் பண்டிதர்கள் பாப்பு வின் பட்டோலையை பிரசுரம் செய்யமாட் டோம் என்று எதிர்த்தார்கள். எக் என்ப வன் பட்டணங்களிலிருந்த ஒரு வியாபாரியி டம் பிரசுரம் பண்ணுவதற்காக அநேக பிர திகளைக் கொடுத்தான். ஆனால் மாணுக்கர் கள் அப்பிரதிகளை வாங்கி ஆற்றில் எறிந் தார்கள். லைப்சிக் நகரத்து ஜனங்கள் அப் பிரதிகளை பிரசித்தம் பண்ணக்கூடாதென்று ஆட்சேபனை செய்தார்கள். எக் அவர்கள் எச்சரிப்பை அசட்டை செய்தபடியால் மாணுக்கர்கள் அவனை சுற்றி சூழ்ந்து கொண்டு கோஷம் செய்தார்கள். அப் போது எக் அடிக்குப் பயந்து பரி. பவுல் மடத்தில் அடைக்கலம் புகுந்து புத்திசாலி தனமாய் பட்டணத்தை விட்டு ஒடிப் போனான்.

தம்மை சபைக்குப் புறம்பாக்கி பாப்புவின் சாபத்திற்குள்ளாக்கினது லூத்தருக்கு சற்றும் ஆச்சரியம் உண்டாக்கவில்லை. அந்த பட் டோலையை அமைதியாய் வாங்கி, வாசித்து விட்டு "சக்ரவர்த்தியாகிய 5-ம் ஜார்ஜ் தைரி யமாயிருந்து கிறிஸ்துக்காக சாத்தானுக்கு விரோதமாய் போராட வேண்டுமென்று ட வ

ளவாய் வாஞ்சிக்கிறேன்" என்று யூத்தர்
பெருமூச்செறிந்தார். அதே சமயத்தில் அர
சர்கள் பேரில் நம்பிக்கை வைக்காதே
என்ற வேதவாக்கியமும் அவர் ஞாபகத்
திற்கு வந்தது. வித்தன்புர்க் பாபபுவின்
பட்டோலே வந்த சில நாட்களுக்குப் பிறகு
மில்திதஸ என்பவர் இரண்டாம் தரம் இங்கு
வந்தார். பாப்புவுக்கும், லூத்தருக்கும்
நடந்த இந்தப் போராட்டத்தில் சமரசமாக சாந்
தப்படுத்தலாம் என்பதே; அவர் வந்ததின்
நோக்கம்.

(தொடரும்)



"தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்கு சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" (1 பேது. 3:17).



வேத பாடம் [தொடர்ச்சி]

எண்ணாகமம்

5. ராமோத் – இளைப்பாறுதல்

ஐந்தாவது அடைக்கலப்பட்டணம் கீலேயாத்திலுள்ள ராமோத் ஆகும் (உபா.
4:42; யோசு. 20:8; 21:28). இது லேவியராகிய மெராரி புத்திரருக்குக் கொடுக்கப்பட்டது
[யோசு. 21:38; 1 நாளா. 6:30]. சாலமோனின் மணியக்காரரில் ஒருவனாகிய கேபேரின்
குமாரன் இவ்விடத்தில் இருந்தான் [1 இராஜா. 4:13]. உம்ரியின் நாட்களில் சீரியர் இந்
தப்பட்டணத்தைப் பிடித்தார்கள். இதைத் திரும்ப கைப்பற்றும்படி ஆகாப் யூத ராஜா
வாகிய யோசபாத்தைக் கூட்டிக் கொண்டு போனபோது, காயப்பட்டு இறந்துபோனான்
[1 இராஜா. 22:1-40; 2 இராஜா. 8:28; 2 நாளா. 18 5]. இங்கே, யெகூ ராஜாவாக அபிஷே
கம் பண்ணப்பட்டான் (2 இராஜா. 9:1-4; 2 நாளா. 22:7).

ராமோத் நதிக்கு அப்புறத்திலுள்ள கீலேயாத பட்டணங்களில் ஒன்றும் அடைக்
கலப்பட்டணமுமாய் இருந்தது குற்றவாளி ஒருவன் உயிர்தப்ப அடைக்கலப்பட்டணத்
திற்குள் ஓடி, தான் அறியாமல் செய்த பாவத்தை மூப்பர்கள் காது கேட்க அறிக்கை
செய்ய வேண்டும். பின்பு மூப்பர்கள் விசாரித்து, அவன் அறியாமல் பாவம் செய்ததினி
மித்தம் அவனைப் பட்டணத்திற்குள் சேர்த்துக் கொள்வார்கள். இவனோ அந்த அடைக்
கலப்பட்டணத்திற்குள்ளே இருக்க வேண்டும். அடைக்கலப்பட்டணத்தின் எல்லையை
விட்டு வெளியே போகக்கூடாது. அப்படியே வெளியே போனால் பழி வாங்குகிறவன்
அவனைக் கண்டு கொன்று போடலாம். அடைக்கலப்பட்டணத்திற்குள் அடைக்கலம்
புகுந்தவன் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அவன் அதிலே இருக்க வேண்
டும் [எண். 35:1-34; யோசு. 20:16]. நியாயம் விசாரிக்கும் சபைக்கு முன்பாக அவன்
நிற்கும் வரைக்கும் அந்நாட்களில் இருக்கும் பிரதான ஆசாரின் மரணமடையுமட்டும்
அவன் அந்தப்பட்டணத்தில் குடியிருக்கக்கடவன் என்று எழுதப்பட்டுள்ளது.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நித்திய பிரதான ஆசாரியராயிருக்கிறார்.
அடைக்கலப்பட்டணத்திற்குள் சென்றவன், அதன் எல்லையை விட்டு வெளியே வரக்

கூடாது. அது போல திருச்சபைக்குள்ளானவர்கள் [கிறிஸ்துவுக்குள்ளானவர்கள்] திருச் சபையின் எல்லையை விட்டு வெளியே வரக்கூடாது. அப்படி வெளியே வந்தால் பழி வாங்குகிறவன் கொலை செய்ய ஏதுவுண்டு. அவர்கள் இரத்தப்பழி அவர்கள் தலையின் மேலிருக்கும்.

தேவனுடைய ஜனங்கள் கர்த்தரிடமாய் சேர்க்கப்படுகிறதும், திருச்சபையின் அங்கமாகிறதும் ஒன்றே. அப். 2:40,41ல் அன்றைய தினம் 3,000 பேர்கள் ஞானஸ்நானம் பெற்று சேர்க்கப்பட்டார்கள் என்று பார்க்கிறோம். எங்கே சேர்க்கப்பட்டார்கள், அப்போஸ்தலர்களுடன் கூடியிருந்த, காணப்பட்ட சபையினுடன் சேர்க்கப்பட்டார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்றும், அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் [அப். 2: 47,42] என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (அப் 5:14). சீஷர்களுடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று (அப். 6:7), அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய் சேர்க்கப்பட்டார்கள் அப். 11:24 என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிப்பது திருச்சபையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது.

திருச்சபையின் அங்கமாகிறதும், கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்படுகிறதும் ஒன்றே. சபைக்குள்ளிருக்கிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட மக்களையே சபை என்று வேதாகமத்தில் எழுதியுள்ளது. சபையென்றால் "எக்லீசியா" என்ற கிரேக்க வார்த்தையால் குறிப்பிடப்பட்டுள்ளது. "எக்லீசியா" என்றால் வெளியே அழைக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம். எகிப்திலிருந்து வெளியேறி சிவந்த சமுத்திரத்தைக் கடந்து பிரயாணத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்களை பழைய ஏற்பாட்டின் சபை என்று வாசிக்கிறோம் [அப். 7:38]. அப்படியே உலகமாகிய எகிப்திலிருந்து வெளியே அழைக்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்களே சபையாகும் பெந்தெகொஸ்தே நாளன்றும் அப். பேதுருவினுடைய பிரசங்கத்தைக் கேட்ட மக்களுக்கு அப். பேதுரு கொடுத்த உபதேசமானது:

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	இடம்	காலம்
ராஜசேகர் என்ற நெகேமியா	பிரபா	நாகர்கோவில்	13-8-96

மாறுபாடுள்ள இந்த சந்ததியைவிட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்பதே (அப். 2:40). இங்கே மாறுபாடுள்ள சந்ததியென்றால்; இரட்சிக்கப்பட்ட யூதர்களுக்கு, இரட்சிக்கப்படாத யூ த ர க ள் மாறுபாடுள்ள சந்ததியாகும். பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக உலக முழுவதுமுள்ள தேவபக்தியுள்ள யூதர்களே அங்கே கூடி வந்திருந்தார்கள் (அப். 2:5). அப். பேதுருவினுடைய பிரசங்கத்தை ஏ ற் று க் கொண்ட 3000 யூதர்கள் அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் அன்றையதினம் ஞானஸ்நானம் பெற்று அப்போஸ்தலர்களோடுகூட சேர்ந்து கொண்டார்கள் அப். 2 40-42

அப்படிப்போல இரட்சிக்கப்படாத பெயர்கிறிஸ்தவர்கள்; இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு, மாறுபாடுள்ள சந்ததியாகும். இரட்சிக்கப்படுகிறவர்கள், இரட்சிக்கப்படாத மக்களோடு சேர்ந்து பழைய ஆராதனை செ ய் ய க் கூடாது. இந்நாட்களில் இயேசு கிறிஸ்துவினால் தொடப்பட்டு மனந்திரும்பிய அநேக கிறிஸ்தவர்கள் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, அபிஷேகமும் பெற்றுக் கொண்டு (அந்நிய பாஷை அடையாளத்தோடும், வல்லமையோடும்) நாங்கள் மீதியுள்ளவர்களே இரட்சிக்கப்போகிறோம் என்று தாங்கள் இரட்சகர்போல, பெயர்கிறிஸ்தவக் கூட்டங்களிலிருந்து கொள்ளுகிறார்கள்.



இதினிமித்தம் சில நாட்களுக்குள்ளாக இவர்கள் பெற்ற மனந்திரும்புதலையும், ஆவிக்குரிய வாழ்க்கைக்குச் செத்து மறுபடியும் பழைய நிலைக்குள்ளாகி விடுகிறார்கள். உயிருள்ள எந்த ஒரு மனிதனும் மரித்தவர்கள் மத்தியிலே இளைப்பாற மாட்டான். உயிருள்ளவன் உயிருள்ளவர்களுடனே சேர்ந்து கொள்ளுவான். அப்படியில்லையென்றால் அவனும் செத்துப்போய் விட்டான் என்று அர்த்தம். இன்னும் சிலர் உயிரோடிருக்கிறவரை மரித்தோர்களிடத்தில் தேடுகிறார்கள் [லூக். 24:5,6] உயிரோடிருக்கிறவரை (இயேசு கிறிஸ்து) நீங்கள் உயிருள்ளவர்கள் மத்தியிலே தேடுங்கள். இன்னும் சிலர் மெய்யான திருச்சபையின் அடைக்கலத்தை விட்டு வெளியேறி, எல்லைக்கு வெளியே போய் தங்களுடைய ஆத்துமாவை இழந்து போகின்றனர்.

"சபை கூடி வருதலை சிலர் விட்டு விடுகிறதுபோல நீங்கள் செய்யாதிருங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் நன்றாய் எச்சரித்துள்ளார்" [எபி. 10:24,25]. ராமோத்துக்குள் அடைக்கலம் புகுந்தவர்கள் பிரதான ஆசாரியன் மரணம் அடையும் வரை அங்கே தங்கியிருக்க வேண்டும். நீங்களும் மெய்யான திருச்சபையில் நிலைத்திருங்கள்.

6. கோலான்:-

ஆறாவது அடைக்கலப்பட்டணம் கோலான், இது மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த பாசானிலுள்ள ஒரு பட்டணமாகும். லேவியரின் கோத்திரங்களில் கெர்சோன் புத்திரருக்கு இந்த அடைக்கலப் பட்டணம் கொடுக்கப்பட்டது. கலிலேயாக் கடலுக்குக் கிழக்கேயுள்ள மூன்று அடைக்கலப்பட்டணங்களில் கோலானும் ஒன்று (யோசு. 21:27; உபா. 4:41-43). குற்றம் செய்தவன் அடைக்கலப்பட்டணத்திற்குள் ஓடி தப்பிப் பிழைக்கும்படி அடைக்கலப்பட்டணம் நியமிக்கப்பட்டது. அடைக்கலப்பட்டணங்கள் லேவியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்திற்குட்பட்டதாயிருந்தன. லேவியர்கள் குடியிருக்கும்படியாகவும், அவர்களுடைய ஆடு மாடுகளின் மேய்ச்சலுக்காகவும் பட்டணங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. அவைகள் அவர்களுக்கு சுதந்திரமான பட்டணங்களாகும்.

இதினிமித்தம் லேவியர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் நடுவில் சுதந்தரம் கொடுக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். லேவி கோத்திரத்தாருக்கு பங்கும் சுதந்திரமும் கர்த்தரே [எண். 18:20; உபா. 10:9]. இஸ்ரவேலர்களின் காணிக்கைகள், தசமபாகங்கள், தகனபலிகள் லேவியர்களுக்கு கர்த்தர் சுதந்திரமாக கட்டளையிட்டார் (யோசு. 13:14; 14:3,4). இந்த அடைக்கலப்பட்டணங்கள் லேவியர்களின் சுதந்திரத்திற்குட்பட்டவை. இஸ்ரவேலர்களின் காணிக்கைகள் லேவியருக்குச் சொந்தமானவைகள் எண். 18-ம் அதிகாரம்; யோசு. 13:33). லேவியனை ஆதரிக்கும்படியாகவும் அவனைக் கைவிடாமல் காக்கும்படியாகவும் இஸ்ரவேலுக்கு கட்டளை உண்டாயிருந்தது [உபா. 12:19].

லேவியர்கள், ஆசாரியர்கள் காணிக்கை வாங்கும்பொழுது அதில் தசமபாகத்தை பிரித்துக் கர்த்தருக்கு ஏறெடுக்கும் படைப்பாக பிரதான ஆசாரியனுக்குச் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அது அவர்களுக்கு பாவமாகும். ஜனங்களின் பாவம் அவர்கள் மேல் சுமரும் (எண். 18:25-32). அடைக்கலப்பட்டணங்கள் லேவியர்களின் சுதந்திரத்துக்குள் இருந்தன. சபைகள் ஊழியர்களுடைய ஆளுகையில் இருக்க வேண்டும். கமிட்டி மெம்பர்கள் (Committee Mempers) ஆளுகையில் அல்ல. அடைக்கலப்பட்டணத்திற்குள் தஞ்சம் புகுந்தவனை பாதுகாக்க வேண்டியது லேவியர்களான ஆசாரியர்களுடைய கடமை. பிரதான ஆசாரியனின் பொறுப்பில் இது நடைபெற

வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தாம் உயிர்த்தெழுந்த பின்பு திருச்சபையைப்பற்றி கட்டளைகளைக் கொடுக்கும் பொழுது அப் பேதுருவிடம் மூன்று முறை அவருடைய அன்பைக் குறித்து விசாரித்து, மூன்று முறையும் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக, என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று ஆளுகையை ஒப்படைத்தார். எங்கே ஆளுகை உண்டோ அங்கே ஒற்றுமை (unity) உண்டு. எங்கே (unity) ஒற்றுமை உண்டோ அங்கே ஐக்கியம் உண்டு.

இந்நாட்களில் சபைகள் என்று சொல்லப்படுகிற கூட்டங்களில் ஆளுகை இல்லை. Bishop [பிஷப்] சொல்லுகிறதை குரு கேட்க மாட்டார். குரு சொல்லுகிறதை உபதேசியார் கேட்க மாட்டார். போதகர் சொல்லுகிறதை சபைமக்கள் கேட்க மாட்டார்கள். எங்கு பார்த்தாலும் அவரவர் இஷ்டம்போல பிரசங்கிக்கிறதும், போதிக்கிறதும், அபிப்பிராயம் சொல்லுவதும் பல முறைமைகளை கையாடுவதுமாயிருக்கிறது. "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமை பிரஸ்தாபத்திற்கென்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" என்கிறார்கள். சபைக்கு நடத்திப்புக்காரர், ஆத்தும உத்திரவாதி தேவை [எபி. 13:17,7]. சபைகள் என்று சொல்லப்படுகிற அநேக கூட்டங்களுக்கு நடத்திப்புக்காரர் கிடையாது; அவர்களுடைய ஆத்துமாக்களுக்காய் உத்திரவாதம் பண்ணுகிறவர்கள் (எபி. 13:17) கிடையாது. உங்கள் ஆத்துமாவுக்காக உத்தரவாதம் பண்ணுகிற ஒரு அப்போஸ்தலன் உங்களுக்கு வேண்டும்; மேய்ப்பன் உங்களுக்கு வேண்டும். அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தை நீங்கள் பின்பற்ற வேண்டும் [எபி. 13:7].

ஆனால் இந்நாட்களிலே தங்களை தேவ ஊழியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற அநேகருடைய நடக்கை, விசுவாசத்தை, மக்கள் பின்பற்றினால் நிச்சயமாக நரகத்திற்குப் போவார்கள், அவ்வளவு சீர்கேடாயிருக்கிறது (பிலி. 3:17-19; 2 பேது. 2:1-3,10-19; 1 யோவா. 4:1-6). ஆனால் அப்போஸ்தல ஐக்கியத்தில் உண்மையாய் ஊழியம் செய்து, உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியைகளினிமித்தம் அன்பாய் எண்ணிக் கொள்ள வேண்டும் (1 தெச. 5:12,13). அவர்களுடைய ஆகாரத்திற்கும், குடும்பச்செலவுக்கும் வேண்டிய நன்மைகளை நீங்கள் உங்களுடையதிலிருந்து பிரித்துக் கொடுக்க வேண்டும் [கலா 6:6; 2 தீமோ. 5:17,18; 1 கொரி. 9:13,14,11].

அடைக்கலப்பட்டணம் திருச்சபையாக இருக்கிறது; அதில் தஞ்சம் புகுகிறவர்கள் சபையின் ஆளுகைக்குள், பாதுகாப்புக்குள் இருக்கிறார்கள்; அவர்களை சத்துரு தொட முடியாது. அவர்களுக்குப் பயமில்லை; அவர்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்கள் உண்டு; அவர்களுக்கு நம்பிக்கை உண்டு; அவர்கள் சந்தோஷமாய் இருக்கலாம். மெய்யான உயிருள்ள திருச்சபையானது இந்த உலகத்தில் பாவிகளுக்கு அடைக்கலப்பட்டணமாக இறைவனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

"சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும், கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" (1 பேது. 2:25). தேவன் இந்த உலகத்தில் ஏற்படுத்திய அடைக்கலப்பட்டணத்திற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

(தொடரும்)

எச்சரிக்கை

ஒரு காட்சி:- ஒரு அழகான அறை, அந்த அறையில் ஒரு மூலையில் அழகான பூஞ்செடியொன்று தொட்டியொன்றில் பத்திரமாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. அறையின் இன்னொரு புறம் ஒருவர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அப்பொழுது ஒரு கருத்த உருவம் அந்த செடியைப் பிடுங்கிப் அதனிடம் நெருங்குகிறது. நாற்காலியில் இருந்தவர் உடனே அந்த உருவத்தை அடித்து விரட்டி விடுகிறார். சிறிது நேரம் கழிந்து சர்ப்பம் ஒன்று மெதுவாக வந்து தொட்டியிலிருக்கும் பூஞ்செடியினிடம் போகிறது. அது செடியைத் தீண்டி தொட்டியிலிருந்து பிடுங்கிப்போட முயற்சிக்கும்போது அறையிலிருக்கிறவர் அதையும் அடித்து கொன்று போடுகிறார். மூன்றாவதாக அறிமுகமான ஓர் ஆள் கையில் பூவாளியுடன் (செடிக்கு தண்ணீர் பாய்ச்சும் வாளி) உள்ளே வந்து செடிக்கு தண்ணீர் விடுவதுபோல் தண்ணீர் விட்டுக் கொண்டே அறையிலிருக்கிறவர் கவனியாத சமயம் பார்த்து செடியை வேரோடே பிடுங்கிப்போட முயற்சிக்கிறார். அதைக் கவனித்து விட்ட நாற்காலியிலிருக்கிறவர் அந்த மனிதனையும் அடித்து நொறுக்கிவிரட்டி விட்டார். பின் செடி வளர்ந்து மகிமையாய் விளங்கிற்று.

தேவ ஆவியானவர் கொடுத்த விளக்கம்:- அறை வீட்டிலிருக்கும செடி:- சபையிலிருக்கும் விசுவாசி என்றும், சபையை விட்டு விசுவாசியைப் பிரிக்க சாத்தான் முதலாவது நேரடியாக போராடுவான்; அதுவே அந்த கரிய உருவம் என்றும், இரண்டாவது வந்த பாம்பு சபையைவிட்டு விசுவாசியைப் பிரிக்க பாவம் போராடுவதுதான் அந்த சர்ப்பம என்றும், இதற்கும் விசுவாசி தப்பிவிட்டால் செடிக்கு தண்ணீர் வார்க்க வந்த அறிமுகமான ஆள் (விசுவாசி அல்லது ஊழியர்) நல்லது செய்வதுபோல வந்து சபையைக் குறித்தும், ஊழியர்களைக் குறித்தும குறை சொல்லி கொஞ்சம், கொஞ்சமாக விஷத்தை ஊற்றி சபையை விட்டு பிரிக்க முயலும சத்துருவினுடைய கையாள் என்றும தேவன் காண்பித்தார். அந்த செடி தொட்டியை விட்டு ஒரு முறை பிடுங்கப்பட்டு விட்டால் திரும்ப நாட்டினாலும் முதலிருந்த பிரகாரம செழித்து வளருமா என்பது சந்தேகமே. இதுவே சாத்தானுடைய கடைசி முயற்சி என்று தேவன் கூறினார். இதற்கு விலகி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்

[Revelation Vision]

சாட்சி

(ஆகஸ்டு மாத தொடர்ச்சி)

இந்த நிலையில் என்னுடைய உறவினர்களும், ஊர் மக்களும் என்னை பார்க்க வருவார்கள். அவர்கள் இந்த வியாதி உனக்கு சுகமாகாது, இப்படியே காலமெல்லாம் கஷ்ட பட வேண்டும் என்று கூறி, என் கண்ணீரை அதிகமாக்கினார்கள். கடைசியாக புதுக்கோட்டை அருகே கீரனூரில் உள்ள பெரிய டாக்டரிடம் சென்று பார்த்தோம். அவர்கள் ஸ்கேன் எடுத்து பார்த்து விட்டு ஆறு மாதம் தொடர்ந்து சிகிச்சை பெறுக் கொள்ளுங்கள், சரியாகி விடும் என்று சொன்னார்கள். வாரம் ஒரு முறை ருபாய் 200-க்கு மேல் செலவழித்து, சில வாரம் கீரனூர் சென்று வந்தோம். வியாதி அதிகமானதே தவிர குறையவில்லை.

வசதியாய வாழ்ந்த என் குடும்பம் என் வியாதியினிமித்தம் வறுமையில் வாடியது. எனக்கு மருந்து செலவு செய்ய என் அப்பா கூலி வேலைக்கு சென்றார். எனக்கு கவலை அதிகமானது. நம்முடைய தந்தை கூலி வேலை செய்து சம்பாதித்து நமக்கு வைத்தியம் பார்ப்பதா என்று, நான் செத்தாலும் பரவாயில்லை என்று 15 நாள் படுக்கையில் கிடந்தேன். என் பெற்றோர்கள் என்னை மிகவும் வற்புறுத்தி மறுபடியும் டாக்டரிடம் அழைத்து சென்றார்கள். அந்த டாக்டர் என் கஷ்டத்தை பார்த்து ஆப்ரேஷன் செய்து கர்ப்பப்பையை அகற்றி விட்டால் வியாதி சரியாகி விடும், எனவே ஆப்ரேஷன் செய்ய ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறிவிட்டார்.

ஆனால் என் தகப்பனார் என்னிடம் ஆப்ரேஷன் செய்ய பணம் இல்லை என்று கைவிட்டு விட்டார். நான் 3 வருடமாக இந்த வியாதியோடு போராடி கொண்டு உயிரோடு இருந்ததே என் தாய், தந்தையின் அன்புதான். ஆனால் இப்போது அந்த அன்பு மாறிப்போய் விட்டது. ஆப்ரேஷன் செய்ய, பணம் கட்ட மறுத்துவிட்டார்கள். என் வியாதியை குணப்படுத்த முடியாமல் என்னை கைவிட்டார்கள்.

என் வியாதியை குணப்படுத்த முடியாமல் கைவிட்டவர்கள் :-

1) இந்து தெய்வங்களும், பூசாரிகளும், மந்திரவாதிகளும்.

2) டாக்டர்கள், நாட்டு மருத்துவர்கள்.

3) என் தாய், தந்தை.

மேற்கண்ட இவர்களால் கைவிடப்பட்ட நான் அனாதையாக உயிரபோக்கு வியாதியோடு வீட்டில் படுத்துக் கிடந்தேன். என் தாய் என்னிடம் உனக்கு என்ன நல்லது, கெட்டது வேணுமோ, அதை கேள் வாங்கி தருகிறேன் சாப்பிட்டு "உயிரைவிடு" என்று சொன்னார்.

நான் மிகவும் வேதனையோடும், கண்ணீரோடும் மரண படுக்கையில் இருந்தேன். இந்த நிலையில் என் தோழியின் தகப்பனார் இஸ்தாக்கி என்பவர் "புதிய எருசலேம் சபை" யில் பக்தியுள்ள விசுவாசி. அவர் என்னுடைய நிலைமையை கேள்விப்பட்டு ஊழியர் "இஸ்ரவேல்" ஐயா அவர்களை என் வீட்டிற்கு அழைத்து வந்து எனக்காக ஜெபித்து சென்றார்கள்.

இந்த நிலையில் என் வியாதியோடு ஊழியர் இஸ்ரவேல் ஐயா வீட்டிற்கு சென்று, என் நிலைமையைச் சொல்லி அழுதேன். அவர்களும் இயேசுவின் அன்பையும், வல்லமையையும் எனக்கு அதிகமாக கூறி இயேசுவை விசுவாசிக்கும்படி செய்து ஊழியர் ஐயா வீட்டிலும் குடும்பமாக எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். மேலும் புதிய எருசலேம சபையின் தலைமை

பரிசுத்த மேய்ப்பர் ஐயா அவர்களுக்கும் என் நிலைமையை எழுதி எனக்காக ஜெபிக்கும்படியாக வேண்டிக் கொண்டேன்.

சபையாரும் எனக்காக மிகுந்த பாரத்தோடு ஜெபித்தார்கள். நானும் என்னை முற்றிலுமாக இயேசுவுக்கும், அவருடைய சரீரமான சபைக்கும் ஒப்புக் கொடுத்து வாஞ்சையோடு "புதிய எருசலேம் சபை"க்கு, ஆராதனைக்கு சென்று வருகிறேன். "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக். 1:37). மூன்று வருடமாக எந்த மந்திரவாதிகளாலும், இந்து பூசாரிகளாலும், தெய்வங்களாலும், டாக்டர்களாலும், குணமாக்க முடியாத என் பெரும்பாடு வியாதியை "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" அற்புதமாக சுகமாக்கினர். அல்லேலூயா!

7 ஆண்டுகளாக எங்கள் குடும்பத்தை பிரிந்து வாழ்ந்த, என் சகோதரர்கள் ஊழியர் ஐயா மூலம் என் தாய், தந்தையோடு சமாதானமாகியிருக்கிறார்கள், என் வியாதியை மாற்றி, என் குடும்பத்தை சமாதானத்தோடு வைத்திருக்கிறார். எனக்கு நன்மை செய்த "இயேசு ராஜாவுக்கு" கோடா கோடி ஸ்தோத்திரம். எனக்கு இப்படி ஒரு வியாதி வந்திராவிட்டால் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டேன் பாவத்தோடு வாழ்ந்து, அழிந்து போயிருப்பேன்.

"புதிய எருசலேம் சபை"யில் பரிசுத்தவான்களிடம் என் பாவங்களை அறிக்கை செய்து விட்டு, விட்டு திருச்சபையில் இயேசுவுக்கு சாட்சியாக இருக்கிறேன். தொடர்ந்து நான் பரிசுத்தமாக ஜீவிக்கவும், என் குடும்பம் முழுவதும் இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட, பரிசுத்தவான்களும், தேவபிள்ளைகளும் ஜெபிக்கும்படி தாழ்மையோடு வேண்டிக் கொள்ளுகிறேன். தேவனுக்கே மகிமை!

அல்லேலூயா!!

"உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன், என்று நான் என் மனக்கலக்கத்தினாலே சொன்னேன். ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டீர்" (சங். 31:22).

நாம் தீமையை எதிர்த்துப் போராட வேண்டும்

1. இப்பிரபஞ்சம் தீமையானதா?

மனுமக்களை மிகவும் கலக்கும் கேள்வியாகும் இது. இதற்கு கிறிஸ்தவம் அளிக்கும் விடை தெய்வ பராமரிப்பு எனபதே.

2. கடவுள் யாவற்றையும் சிருஷ்டித்து, நடத்தி ஆளுகிறவர், நடைபெறும், நேரிடும் சகல சம்பவங்களையும் தமது திருவுள நோக்கத்தை நிறைவேற்றும்படியாக அவர் நடத்துகிறார். அவருடைய நோக்கம் பரிபூரண பரிசுத்தமும், பரிபூரண அன்புமானது.

மனுமக்கள் ஒவ்வொருவரையும் இரக்கமுள்ள தமது விசாரணையில் வைத்து ஆதரித்து வருகிறார். அவரது சிருஷ்டிகள் யாவின் மேலும் அவருக்கிருக்கும் ஞானமும் தயவுமான கரிசனை, அவைகளின் சகல அவசியங்களையும் தீர்த்து வைக்கும் இடைவிடாத கவலை, பிரபஞ்சத்தை நன்மைக் கேதுவாய் நடத்தும் அவரது வல்லமை; இவை தெய்வ

பராமரிப்பில் அடங்கும். பூமி அதிர்ந்தாலும், ஆழி பொங்கினாலும், என்ன நேரிட்டாலும், நாசமோ, மோசமே, பட்டயமோ, எந்த அதிர்ச்சி தரும் நிலையிலும், நாம் தெய்வ பராமரிப்பை நம்பிபற்றிக் கொள்ளுகிறோம். இவ்வுலகம் கடவுளுடையது: அதின் இரா ஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தரும் அவரே, தமது சிருஷ்டியான ஒவ்வொன்றுக் காகவும் பிதா உருக்க, இரக்கமாய் கவலைப் படுகிறார்.

புத்தியை எட்டாததும், புத்தியைக் கலக்குவதுமான எச்சம்பவமும், விஷயங் களும் தேவனுடைய ஆளுகையிலே இருக் கிறது. அவைகள் யாவும் தேவ பார்வை யில் இருக்கிறது, என நாம் எண்ணும் போது கலக்கம் ஒழிந்து மன நிம்மதி அடைகிறோம். தெய்வத் திட்டத்துக்கு விரோதமான சம்பவங்களும், மக்களது பாவத்தால் விளையும் கேடுகளும் அவரது ஆளுகைக்குள்ளும், நோக்கத்துக்குள்ளும் அமைந்தவையே. இதை நம்பிக்கொள்ளும் பக்தர் சந்தேகம் பயம் அவிசுவாசம் என் னும் கொந்தளிப்பின மத்தியில் என்றென் றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் உறுதி நிலை யில் இருப்பார்.

பலர் துன்பம், துக்கம், வியாதி, நெருக் கடி, பயங்கள் மத்தியில் தேவன் அன்புள்ள தந்தையா, தேவன் சர்வ வல்லமையுடைய வர்தானா, என் வாழ்க்கையில், அவர்கள் வாழ்க்கையில் ஏன் இப்படி நடக்கிறது என்று அங்கலாய்ப்பர். தெய்வபக்தர் தேவன் நமது நன்மைக்காகக் கவலைப்படு பவர் என்று சொல்லி அவர்களைத் தேற்று வர். மக்களது வாய்ச் சொறகளல்ல, செய் கைகளே அவர்களது உண்மையான பக் தியைத் தெரிவிப்பதாகும். விசுவாசமும், விசுவாசமின்மையும் செய்கையிலும், நடக் கையிலும் விளங்கும்.

கடவுளுடைய தன்மை அன்பே. உலக சரித்திரத்திலும், தனி மனித வாழ்க்கையி லும் தீய சம்பவங்கள் நேரிடுவானேன்? சங்கீதக்காரரும் பாவிகளின் வாழ்வைக் கண்டு பொறாமை கொண்டேன் என்கிறார் (சங். 73:2,3). உற்றுப் பார்த்தார், உண்மை புரிந்தது. தெய்வ சிருஷ்டிகள் பாடுறுவதா லேயே முன்னேக் கூடும். உயிர் வரிசையில் மேலே செல்லச் செல்ல பாடு ஏற்பதும் அதை சகிப்பதுமான திறனும் அதிகரிப்ப தாகும். அணுவும் தீமை கலப்பற்ற ஒரு சன்மார்க்கனை எடுத்துக் கொள்ளுவோம். யாருக்கும் என்றும் நேரிடாததும், நேரி டக் கூடாததுமான துன்பம் அவன்மேல் விழுவதாகவும், இத்துன்பத்தில் அணு போன்ற நற்பயனும் இல்லாததாகவும் வைத்துக் கொள்ளுவோம். இதுவே உச்ச நிலையான பாடும் துன்பமுமாகும். இதிலும் கொடிது இல்லை.

கடவுள் ஒரு கண்ணோக்கம் வைத்துள் ளார். காலா காலத்தில் அதற்கு எதிர்ப்பும் இடையூறும் இருந்தே வரும். எனினும் அது நிறைவேறவே நிறைவேறும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய் இனிமேல் அறிவாய் (யோ. 13:7). தேவன் தாம் படைத்த உலகத்தின் சார்பாக இரண்டு இலட்சியங்களை அமைத்துள்ளார். மனிதனுக்கு அருளிய சுயசித்தம் சமூக இணைப்பு இவ்விரண்டையும் அதின் சரி யான கருத்தையும் நாம் அறிந்தோமாகில் தீமைப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது சுலபம்.

3. சிருஷ்டிகளுக்கு சுயாதீன சித்தம் அவ சியம் சுயாதீன சித்தமுடையோர் பாவத் தில் விழக்கூடும். பூரண சுயாதீன சித்தத் துடன் வாழும் மனிதரைக் கொண்டு தெய்வ மக்களின் குலம் அமைப்பது தெய்வ நோக்கம் என்று வேதம் காட்டு கிறது. ஜீவ இராசிகள் முன்னேற முன்னே றத் தாங்களாகவே நன்மை, தீமையைத் தெரிந்து கடைபிடித்துக் கொள்ள கூடிய தாகின்றன. என்பது சாஸ்திரம் நிரூபிக்கும் சத்தியம். சுயாதீனமுள்ளோர் நன்மை

யையோ, தீமையையோ இஷ்டப்படி தெரிந்து கொள்ளுவர். இதை தெரிந்தே கடவுள் நமக்கு சுயாதீனம் தந்தருளினார். தீமை தோன்றுவது அவர் சித்தமல்ல என்றாலும், மக்கள் தீமையைத் தெரிந்து கொண்டு பின்பற்றுவதற்கும் அதின் பலாபலனை அநுபவிக்கவும் அவர் தாராளமாய் விட்டுவிடுகிறார். ஏனெனில் நம்மைப் பொம்மைகளாக அல்ல, புத்தியும் சித்தமும் வாய்ந்த மக்களாகவே அமைத்துள்ளார். மக்களையும், உலகத்தையும் அவர் அமைத்த நிலையில், மனிதர் அவரைத்தள்ளி அவரது கட்டளைகளை மீறினல் பாடு ஏற்பட்டே தீரும்.

தரித்திரம்:- யாவரும் அறிவதும், பார்ப்பதுமான தொரு தீமை. கடவுள் தம் மக்களுக்கு உணவு கிடைக்காமல் தவிக்கவிடலாமா? இதைத் தீர ஆராய்ந்தால் மக்கள் உணவின்றித் தவிப்பது ஆகாரக்குறைவால்ல, ஆகாரத்தை ஏற்றவாறு பகிர்ந்து கொள்ளாததாலேயே என்று புலப்படும். இது கடவுளின் தவறல்ல, பேராசையால் ஏவப்பட்டு, மனிதரே நடப்பிக்கும் அநியாயம்.

4. அநேக மக்கள் பாடுகளைத் தீவிரமாய் எதிரிட்டு சகிக்கின்றனர். இவ்வுலகம் ஆத்துமாவை உருவாக்கும் பள்ளத்தாக்கு (ஏசா. 48:10). பாடுகளால் பயனுண்டு என்று உறுதிபூண்டு பின்னடையாது நிற்பதும்; வேதாகமம் தரும் சிருஷ்டிப்பு வரலாற்றை வாழ்க்கையின் மேற்கோளும், விசுவாசமுமாகக் கொள்வதால் ஏற்படும் விரத்துணிவே [யோபு 2:10]. தளம்புதலேயற்ற நிம்மதியும், பரிபூரண அமைதியும் இலேசாக கிடைத்துவிடுமென்று வேதாகமம்போதிப்பதேயில்லை. மனிதனுக்கு திடமான நம்பிக்கை அந்தியந்த அவசியம், ஆபத்தும் இடுக்கணுமான நிலையிலேயே இது உருவாதல் கூடும். ஆதலால் துன்பத்தை நேர் நிலையோடும், திடமனதோடும் எதிரிட்டால் மாத்திரமே திட நம்பிக்கை நம்பிக்கை நம்மில் தோன்றும் [ரோம. 5:3-4]. இரண்டாவது கடவுள் அருளிய சுயாதீனம் துர்ப்பிரயோகம் செய்வதால் தீமை நிகழ்கிறது என்று பார்த்தோம்.

5. அடுத்து மனுக்குலம் முழுவதையும் தேவன் குடும்பமாக அமைத்தும் இணைத்தும் ஒரே குடும்பமாகவே நடத்தியும் வருகிறார். நாம் மிகப்பயனுடன் அநுபவித்து வரும் பல நன்மைகளும், சிலாக்கியங்களும் நமது பிரயாசை சிறிதுமின்றிப் பிறரிடமிருந்து பிறர் மூலமாயும் நாம் பெறுவதாகும். எனவே மனுமக்கள் முழுமைக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். தீமையும் பாடும் அநேகமாகப் பாவத்தின் பயனும் தண்டனையுமே. தனி மக்களின் பாவம் மாத்திரமல்ல சமூகத்தின் பாவம், கூட்டத்தின் பாவம், தேசம் அடங்கலும் செய்த பாவம், மனுகுலம் அனைத்தும் கவிழ்ந்துள்ள பாவம்.

இப்பெருந்தொகுதியுடன் சரீர உறுப்புகள்போல் இணைக்கப்பட்டுள்ள தனிமக்கள் பெருங்கூட்டத்தின் பாவத் தண்டனையையும் அனுபவித்துத் தீரவேண்டும்; இதற்குத் தப்ப முடியாது. ஓர் உதாரணத்தால் இதை விளக்கலாம்: சமூகமானது பலவான குடும்பங்கள் சேர்ந்துள்ளது. குடும்பத்தின தலைவனான தகப்பன் நல்லவனாயின் குடும்பம் நற்சீரும், நல் வாழ்வும், பெற்றும் விளங்கும்; அவனது நடக்கைத் தீயதாயின் அவனது துர் நடக்கையில் எவ்வளவும் சம்பந்தமில்லாத மனைவியும், மக்களும் துன்புறுவர் ஏன்? அவனுடன் உடல் உறுப்புகள்போல இணைக்கப்பட்டதாலேயே அப்படியே சபையும். கள்ளத்தீர்க்க தரிசிகளுடன் பிணைக்கப்பட்ட மக்களும் அதன் பலனை அனுபவிக்காமல் தப்பமுடியாது. அசுத்த ஆவிகளின் தாக்குதல் அவர்களிலும் காணப்படும்.

6. பூமியதிர்ச்சி, ஜலப்பிரவாகம் முதலான இயற்கைச் சம்பவங்களைக் கவனிப்போம். இவைகள் மனுமக்களின் பாவத்துடன் சம்

பந்தப் பட்டவையல்ல. அவைகள் கட்டுக்குள் அடங்குவதுமில்லை. ஆனால் பேராபத்தும் அழிவும் விளைவிக்கின்றன. இவற்றிற்கு என்ன காரணம் கற்பிப்போம்? கடவுள் இயற்கை உலகத்திற்கு ஏற்படுத்தியுள்ள மாறாத நித்திய விதிகளே காரணமாகும்.

இயற்கை உலகிலும் ஏக அமைப்பு அமைந்தேயுள்ளது; அதின் சகல சிருஷ்டிகளும் ஒரே இணைப்புக்குள்ளும், விதிக்குள்ளும் அடங்கியதாகும். ஆதலால் ஜலப்பிரளயம் இல்லாது ஒழிய வேண்டுமாகில் ஆறுகளும், நீரோட்டங்களும் ஒழிதல் வேண்டும். மக்களுக்கு ஆகாரம் தரும் வயல்களும், தோட்டங்களும் இல்லாது ஒழிந்துபோகும்.

7. தீமையின் அதிபதி:-

ஆதியில் நன்மையாக இருந்ததொன்று தீமையாக மாறிவிட்டதே. உலகக் கேட்டுக்கு மூலக்காரணம்; ஆதியில் மனமறிய செய்யப்பட்டதொரு தீய செய்கையால் தீமை நுழைந்துவிட்டது. கடவுள் தீமை செய்பவரல்ல, தீமையை சிருஷ்டிப்பவருமல்ல, தீமையை தாமாக உண்டானதுமல்ல. சுயாதீன சித்தத்தை தகாதுபிரயோகித்து மனதார ஒரு தீய செய்கை செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த தீமையின் ஆதிகாரணனையே நாம் சாத்தான், பிசாசு என்கிறோம். இவனே தீமையின் உட்சத்து; அதோடு தீமையின் அதிபதி; இவன் ஆதாமைக் கெடுத்தான்.

ஆதாமோடு ஆதாமின் சந்ததியான மனுக்குலம் இணைந்துள்ளது; சரீரத்திலும், ஆவியிலும் உறைந்துள்ள தீமை கடவுளுக்கு விரோதமான கலகமே; இதைத் தூண்டிவிடுவோன் சாத்தானே. கடவுளுடைய தூதனாகப்படைக்கப்பட்டு பின்பு விழுந்துபோன தீமையின் அதிபதியான சாத்தானே. இவன் எவ்வளவும் எத்தனை யுகந்தான் எதிர்த்தாலும் இறுதியில் கடவுளுடைய தீர்ப்பைப் பெறவேண்டியவன்; அவனுக்கு முடிவு குறிக்கப்பட்ட காலம் உண்டு; அது வருகிறது [மத் 8:29] ஆனால் அதுவரையும் தீய சக்தியான சாத்தான் நடத்தும் கலகத்தில் மனிதர் அவனுக்கு உடந்தையாயிருப்பர். அவர்கள் செய்யும் பாவங்களும் அவர்களுக்கு உறும் கேடுகளும் இக்கலகத்தின் விளைவே.

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோ 17:21).

"நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" யோ. 17:22 என்று ஜெபித்தார் இயேசு. இந்ததேவ திட்டத்துக்குமாறாக எந்த செய்கையையும், வார்த்தையையும், தெய்வ சித்தத்தை எதிர்க்கும் எந்த சக்தியும், திட்டமும், சூழ்ச்சியும் சாத்தானே. அதை எதிர்க்கவும், அவசியப்பட்டால் பாடுறவும் கடவுள் பக்கம் நிற்போமாக. தீமையை எதிர்த்துப் போராடி வென்று கொள்வது நீரோ கடவுளைச் சார்ந்து திருச்சபையோடு ஐக்கியமாயிருந்தால் தான் நீ தீமையை எதிர்த்துப் போராட முடியும். இல்லையென்றால் ஐயா!

மாம்சம் : FLESH

1. தசை, இறைச்சி (லேவி. 13:16)
2. உயிர்ப்பிராணிகள், ஜீவஜெந்துக்கள் (ஆதி. 6:13; 7:15)
3. பந்துக்கள் சுற்றம் (ஆதி. 37:27; 2 சாமு. 19.12,13)
4. ஜென்ம சுபாவ சம்பந்தம் (ஏசா. 58:7; கலா. 4 23)
5. பலவீனமுள்ள மனிதன் (எரே. 17:5)
6. பாவமுள்ள உடல் (1 கொரி. 15:50, ரோம. 7 5,25)
7. இச்ஜீவன் (*லேவி. 17:11*)
8. லௌகீகம் (*மத். 16:17*)
9. புறத்துப் பிரமாணம் (ரோம. 1:1; எபி. 7.16)
10. கிறிஸ்துவின் மனுஷீகம் (எபி. 10 19)
11. வெளிப்பார்வை [யோவா. 8:15]
12. ஒரே மாம்சமாயிருப்பது; பிரியாதிருப்பதே (ஆதி. 2:21 எபே. 5:30,31)
13. மாம்சமான இருதயம் என்பது; இளகியதும் தாழ்மையுமானதைக் குறிக்கும் [எசே. 6;26] 14. மாம்சசிந்தை [Carnality]: அசுத்த இச்சைகளைக் குறிக்கும் (ரோம. 8;6,7)

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளசத்தம் 147 - OCT. '96



"புதிய எருசலேம் சபை"

"...வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்... விழித்திருங்கள்... உங்களுக்கு நான் சொல்லுகிறதை எல்லாருக்குந் சொல்லுகிறேன், விழித்திருங்கள்."

- மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது. (எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக்கு காண்பித்து, கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).

3 திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20

4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.

5 அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.

6 இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளாம், அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1:1; 10:40-43).

CHIEF PASTOR: N LAZAR

இதழினுள்ளே..

ஆசிரியர் உரை

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, *கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோல்களைப் போர்த்துக் கொண்டு வருவார்கள், உள்ளத்திலோ பட்சிக்கிற ஓநாய்கள் [மத். 7:15].* தீர்க்கதரிசனம் சொல்லப்படுகிறது மனிதர்களுக்கு ஆறுதலும், புத்தியும், அறிவும், தேறுதலும் உண்டாகும்படி சொல்லப்படுகிறதாகும் *[1 கொரி. 14:4].*

தீர்க்கதரிசனம் எல்லோரும் கற்றுக் கொள்ளுகிறதற்கும், தேற்சியடைகிறதற்கும் ஒவ்வொருவராய் சொல்லலாம். [1 கொரி. 14:31]. முந்தி சொல்லுகிறவர்கள் உட்கார வேண்டும். இன்னொருவருக்கு ஒன்று வெளிப்பட்டால் அவர் எழும்பி சொல்லலாம் (1 கொரி. 14:29,30) தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் பயிற்சிப்பிக்கப்பட வேண்டும் (2 இராஜா. 2:5). விசுவாசப் பிரமாணமும், ஏற்கனவே ஒப்புவிக்கப்பட்ட உபதேசத்திற்கு மாறாக தீர்க்கதரிசனம் சொல்லக் கூடாது (ரோம. 12:6).

அவர்கள் (தீர்க்கதரிசிகள்) முறையாக அப்போஸ்தலர்களுடைய ஆளுகையிலே அடங்கியிருக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் ஆளுகையில் தீர்க்கதரிசனம் சொல்லி பயிற்சி பெற வேண்டும் (1 கொரி. 12:28). அப்படியே பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு தலைவராக இருந்து, சாமுவேல் இளந்தீர்க்கதரிசிகளை பயிற்றுவித்தார் என்று பார்க்கிறோம் (1 சாமு. 19:20)

அப்படியே அந்த தீர்க்கதரிசிகளின் பயிற்சி, அந்தப் பள்ளிக்கூடத்திற்கு தொடர்ந்து எலியா, எலிசா போன்ற தீர்க்கதரிசிகள் தலைவர்களாயிருந்து பயிற்றுவித்தார்கள். மற்றபடி வசனத்திற்கு மாறாய், தேவ சித்தத்திற்கு, தேவ திட்டத்திற்கு மாறாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் எல்லோரும் [illegible] ஆவியினால் தூண்டப்பட்டு, அநேக வேளைகளில் பிசாசினால் தூண்டப்பட்டு தீர்க்கதரிசனம் சொல்லி விழுந்து போவார்கள்.

ஒரு ஆட்டோ டிரைவராயிருந்த ஒரு விசுவாசிக்கும், ஒரு கூர்க்காவுக்கும் ஒருநாள் வாக்குவாதம் உண்டாயிருக்கிறது. அன்று இரவே இந்த விசுவாசி ஜெபிக்கும்பொழுது, ஒரு ஆவி சொல்லியிருக்கிறது அவனை அடித்து கொன்றுவிடு என்று. மறுநாள் இந்த விசுவாசி அந்த கூர்க்காவை தேடியிருக்கிறார். அவனும் இவரைக் கண்டால் அடித்து கொன்றுவிட வேண்டுமென்று எண்ணியிருந்திருக்கிறான். இரண்டுபேரும் சந்தித்தபொழுது அடிதடி ஆகி கத்திக்குத்து நடந்ததாகக் கேள்வி. இப்படி கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லி இந்த ஆத்துமா பிழைத்துவிடும் என்று சொல்லி அந்த ஆத்துமா செத்துப்போகிறதையும் பார்க்கிறோம்.

தீர்க்கதரிசனத்தைப்பற்றி அறிவு இல்லாதவர்கள், முறையாக தலைவரின் கீழ் இருந்து பயிற்சி பெறாதவர்களுக்கு இவ்வித தவறுகள் ஏற்படும். எழுதப்பட்ட வேதவாக்கியங்கள் மாறாத தீர்க்கதரிசனங்கள், அதற்கு மாறாக தீர்க்கதரிசனங்கள் சொல்லி அதை நம்புகிறவர்கள் ஏமாந்து போவார்கள். **நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது, நிறைவானது வரும்போது குறைவானது அகன்றுபோம் என்று அப்போஸ்தலர் சொல்லியிருக்கிறார் 1 கொரி. 13ம் அதிகாரம்.** ஆனபடியினால் காட்சி, தரிசனம், தீர்க்கதரிசனம் என்று, ஆவிகளை பகுத்து அறியும் வரம் இல்லாத தலைவர்கள் நடத்தும் கூட்டங்களிலே தவறுகள் ஏற்படும். முறையாக தலைவரின் கீழிருந்து பயிற்சி பெறவேண்டியது எல்லோருடைய கடமையாகும். இப்படிச் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

திருச்சபையின் செயல் நோக்கம்:-

மீன்களைப் பிடித்துவிட்டால் மட்டும் போதாது அவைகளை கூடையிலே போட வேண்டும். அல்லது பந்தோபஸ்தாக அவைகளை வைக்க வேண்டும். அப்படியே ஆத்தும ஆதாயம் செய்து கொண்டு வந்து சேர்க்க கூடை போன்ற திருச்சபை தேவை. இந்நாட்களில் அநேகர் திருச்சபையைப் பற்றி அறியாதிருக்கிறார்கள். திருச்சபையைப்பற்றிய வெளிப்படுத்தலும் அநேகருக்கு கிடையாது.

ஒரு ஊழியரிடத்திலே சபையைப்பற்றி கேட்டபொழுது: சபை சபை என்று என்ன சபையைப்பற்றி சொல்லுகிறீர்கள்; ஆத்தும ஆதாயம் செய்யுங்கள். பிறகு பார்க்கலாம் என்று சொல்லி சொன்னார். இப்படி அவர் சொல்லும்பொழுதே தெரிகிறது என்னவென்றால்; ஆத்தும ஆதாயம்பண்ணி இயேசுவை விசுவாசியுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டால் மட்டும் போதுமா? அந்த மீன்களை பிடித்து கரையில் வைக்கப்பட்டால் மறுபடி துள்ளி தண்ணீரில் விழுந்து விடுமே. காக்கை, குருவி, கள்ளப்பருந்து வந்து அடித்துக் கொண்டு போய் விடுமே. ஆனபடியினால் தான் கூடை தேவை; சபை தேவை. அநேகர் ஞானஸ்நானம் மாத்திரம் கொடுப்பார்கள். சிலர்கள் ஆங்காங்கு கன்வென்ஷன் நடத்துவார்கள்; இரட்சிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கிற மக்களை ஞானஸ்நானப்படுத்தி விட்டு அம்போ என்று சொல்லி விட்டுவிட்டு போய் விடுவார்கள். இன்னும் சிலர் தங்களுக்குக் கிடைக்கிற ஆத்துமாக்களை பங்கு போட்டு கொள்ளுவார்கள்.

அநேகருக்கு ஞானஸ்நானத்திலுடைய நோக்கம் சரிவரத் தெரியாததினால் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ளுகிறார்கள், ஞானஸ்நானமும் கொடுக்கிறார்கள். அன்றைய தினத்தில் ஞானஸ்நானம் எடுத்து 3000பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம் பண்ணுகிறதிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என்று வாசிக்கிறோம் (அப். 2:41,42). ஆனபடியினால் சபை தேவை. சபையில் சேர ஞானஸ்நானம் முக்கியமான நியமமாகும். ஒருவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கலாம், கிறிஸ்தவனைப்போல் நடந்து கொள்ளலாம். தேவனுக்கு ஆராதனை செய்யலாம், சாட்சி கொடுக்கலாம். ஆனால் அவன் ஞானஸ்நானம் பெறுதவரை அவன் கிறிஸ்தவனல்ல.

ஒருவனை கிறிஸ்தவனாக்குகிறது ஞானஸ்நானமே. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டார்கள் என்று வேதத்திலே எழுதியிருக்கிறது [கலா. 3:27]. ஞானஸ்நானமே ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாகுகிறது;

தேவன் நமக்குச் செய்த மகாபெரிய கிருபை என்னவென்றால் நம்மை கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறதுதான். சமுத்திரத்திலுள்ள மீன்களுக்கெல்லாம் மொத்தமாக தேவன் சமுத்திரத்தைக் கொடுத்துவிட்டதுபோல. ஆகாயத்திலுள்ள பறவைகள், மிருகங்கள், பிராணிகள், மனிதர்களுக்கு ஆகாயத்தை மொத்தமாகக் கொடுத்துவிட்டதுபோல, ஒரு விசுவாசிக்கு தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொடுத்துவிட்டார். இயேசு கிறிஸ்துவுக்குள் அவனுக்கு வேண்டிய எல்லாம் இருக்கின்றது. ஆனபடியினால் நாம் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறோம். அவரே நமக்கு தேவனால் ஞானமும், நீதி

யும், பரிசுத்தமும், மீட்புமானவர் என்று
1கொரி. 1:30,31லே எழுதியிருக்கிறது.

ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக்
கொள்ளும்பொழுது அவன் மறுபிறப்பு
அடைகிறான். ஞானஸ்நானமும் பரிசுத்தாவி
யின் அபிஷேகமும் மறுபிறப்பை உண்டாக்
குகின்றது. இயேசு கிறிஸ்துவும் பின்வரு
மாறு திருவுளம்பற்றியிருக்கிறார். ஒருவன்
ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும்
பிறவாவிட்டால் [தேவனுடைய ராஜ்யத்
தைக் காணமாட்டான்], தேவனுடைய
ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று
சொல்லியிருக்கிறார் (யோ. 3:3,5). ஆனபடி
யினால் சபை முக்கியம்.

இன்னும் சிலர் பெரிய பெரிய பிரசங்
கிகள் என்று அவர்களிடம் ஓடிப்போய்
ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, பழைய
தங்களுடைய பாரம்பரிய சபைக்குள்ளேயே
இருப்பார்கள். ஞானஸ்நானம் பெற்றவர்
கள் வேறுபட வேண்டும்; இரட்சிக்கப்
பட்ட ஜனங்களோடே சேர்ந்து தேவனுக்கு
ஆராதனை செய்ய வேண்டும்; திருச்சபை
தேவை

ஞானஸ்நானம் மனந்திரும்பி, விசுவாசித்து
பிதா, குமாரன், பரிசுத்தஆவி நாமத்திலே
முழ்கி பெற்றுக் கொள்ளவேண்டும். மனந்
திரும்பமுடியாத குழந்தைகளும், விசுவா
சிக்க முடியாத குழந்தைகளும், பாவ
அறிக்கை செய்ய முடியாத குழந்தைகளும்,
அறிக்கை செய்ய முடியாத குழந்தைகளும்
ஞானஸ்நானம் பெறவேண்டியதில்லை.
குழந்தை ஞானஸ்நானம், தெளிப்பு
ஞானஸ்நானம் தவறு. அது விழுந்துபோன
சபைகளுடைய மாதிரிகள். முழுகி ஞானஸ்
நானம் பெற்றுக் கொள்ளுகிறதே வேதத்
தின் உபதேசம் நீங்கள் உலகமெங்கும்
புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷ
ராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்
நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம்
கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளை
யிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்

ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்
கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கட்ட
ளையிட்ட யாவையும் உபதேசிக்க திருச்
சபை தேவை. மக்கள் திருச்சபையில் அங்க
மாயிருக்கவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கட்டளை
யிட்ட யாவும் அப்போஸ்தலனுக்கு மாத்
திரமே தெரியும். அந்த பிரகாரம் அப்
போஸ்தலனாக தேவனால் அழைக்கப்பட்டு,
அனுப்பப்படுகிறவர்களுக்கே இயேசு
கிறிஸ்து கட்டளையிட்ட யாவும் வெளிப்
படுத்தப்படும்; உபதேசிப்பார்கள். நான்
உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும்
அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு
உபதேசம் பண்ணுங்கள். கர்த்தராகிய
இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருக்
கையில் 3 1/2 (மூன்றரை) வருஷம் ஊழி
யம் செய்தார். பகலெல்லாம் பிரசங்கித்தார்,
இராவெல்லாம ஜெபம் பண்ணினார். பிரசங்
கிக்கிறதற்காக உணவை மறந்தார், ஜெபிக்
கிறதற்காக தூக்கத்தை மறந்தார். அப்படி
அநேக நாட்கள் அவர் செய்ததாகப்
பார்க்கிறோம். ஆனால் நான்கு சுவிசேஷங்
களிலேயும் நாம் வாசிப்பது என்ன? கிட்ட
தட்ட 7 பிரசங்கிகள் கர்த்தராகிய இயேசு
கிறிஸ்து செய்த வார்த்தைகள் மாத்திரமே,
பிரசங்கம் செய்த வார்த்தைகள் எவ்வள
வோ அவ்வளவு வார்த்தைகள் மாத்திரமே
சுவிசேஷங்களில் காணப்படுகிறது.

இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட யாவும்
அப்போஸ்தலருக்கே தெரியும். விசேஷ
மாய் தாம் உயிர்த்தெழுந்த பின்பு அவர்
அப்போஸ்தலர்களுக்கு தரிசனமாகி தேவ
னுடைய சபைக்குறியவைகளை திட்டமாய்
அவர்களுக்குப் போதித்தார். மனந்திரும்பு
தலைப்பற்றி, விசுவாசத்தைப்பற்றி, ஞானஸ்
நானத்தைப்பற்றி, பாவ அறிக்கையைப்
பற்றி, சபை அங்கமாயிருந்து அவர்கள்
நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றி,
திருவிருந்தைப்பற்றி, கர்த்தருக்குக் கொடுக்
கிறதைப்பற்றி, பரிசுத்த வாழ்க்கையைப்
பற்றி, சாட்சியைப்பற்றி, ஊழியத்தைப்


பற்றி, மக்கள் இவ்வுலக வாழ்க்கையிலே எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும், பரலோக ராஜ்யத்தை எவ்வாறு தேடவேண்டும் என்பது குறித்த விபரங்களையெல்லாம் அப்போஸ்தலர்களுக்கே உபதேசிக்கப்பட்டன, கொடுத்து கட்டளையிட்டார். அப்போஸ்தலர்களே அவைகளை அறிவார்கள். புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற நிருபங்கள், அப்போஸ்தல நடபடிகள், வெளிப்படுத்தின விசேஷம் இவைகளிலே ஆங்காங்கு காணப்பட்ட சபைகளிலே உண்டான பிரச்சினைகளுக்கு பதில் எழுதியிருக்கிறார்களேயொழிய விபரமாக கர்த்தர் கட்டளையிட்ட எல்லாம் எழுதப்படவில்லை. ஆனால் அவைகளுக்குறிய அஸ்திபார வசனங்கள் புதிய ஏற்பாட்டிலே காணப்படுகின்றது.

எது திருச்சபையோ அதற்கு தேவன் அப்போஸ்தலர்களைக் கொடுக்கிறார். அவர்கள் வேத வசனத்தை ஜனங்களுக்குப் போதிப்பார்கள். ஆலோசனை கொடுப்பார்கள். அப்போஸ்தல உபதேசம் என்று சொல்லப்படுவது அப்போஸ்தலனுடைய ஆலோசனையே. ஆதி அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் வேதமாக, வேதாகமம் ஒப்புக் கொண்டுள்ளது. அப்போஸ்தனல்லாத யாவரும் அல்லது எந்த கூட்டமோ அல்லது தங்களை திருச்சபை என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட யாவும் எங்களிடத்திலே உபதேசிக்கப்படுகிறது என்று சொல்ல உரிமை பாராட்ட முடியாது. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட யாவும் அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியினால் ஞாபகமூட்டப்பட்டு வெளிப்படுத்தப்படும் என்று கர்த்தர் ஏற்கனவே வாக்களித்தார் [யோ. 16:13,14]. அந்த அப்போஸ்தலர்களே சபையை கட்ட வேண்டும். அவர்கள் திருவசனத்தை உண்மையுள்ள மனிதர்களிடத்தில் ஒப்புவிக்க வேண்டும். அவர்கள் உலகமெங்கும் உபதேசிக்க வேண்டும், பரப்பவேண்டும். இதுவே திருச்சபையின் முக்கியமான வேலைகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்நாட்களிலே அப்போஸ்தலன் இல்லாததினாலே ஞானஸ்நானத்தைக் குறித்தும், அபிஷேகத்தைக் குறித்தும், அந்நிய பாஷையைக் குறித்தும், நாமத்தைக் குறித்தும், திருத்துவத்தைக் குறித்தும், திருவிருந்தைக் குறித்தும், இன்னும் திருச்சபைகள் என்று சொல்லப்படுகிறவைகளில் காணப்படுகிற எல்லாவற்றிலும், எல்லா உபதேசத்திலும், எல்லா சாக்கிரமந்துக்களிலேயும் கூட குழப்பமும், சந்தேகமும், மாறுபாடுகளும் காணப்படுகிறது. காரணம் உண்மையான திருச்சபை இல்லாதவர்களுக்கு, அப்போஸ்தல உபதேசம் கிடைக்கவில்லை என்பதே.

[தொடரும்]

"நாம் இனி குழந்தைகளாயிராமல்.... நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக அப்படி செய்தார்" (எபே. 4:14,15).



மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அகஸ்தினிய சந்நியாச சங்கம், ஸ்தொப்பிக் சர்ஸ்திரி லின்க், நியமுகப் பிரபு ஆகிய இவர்களுடைய உதவியால் மறுபடியும் லூத்தர் பாப்புவுக்கு ஒரு கடிதம் எழுத மெய்யாய் இணங்கச் செய்தார். இந்தக் கடிதத்தில் பாப்புவின் செய்கைகளுக்கெல்லாம் எவ்வளவு நல்லர்த்தம் செய்யலாமோ அவ்வளவு நல்லர்த்தம் செய்து எழுதினார். பாப்புவின் பட்டோலையில் லூத்தருடைய போதனைகளெல்லாம் தப்பர்த்தப் பட்டிருந்தபடியால் அதை பாப்புவின் குற்றமாகக் காட்டாமல், பாப்புவிற்கு சொன்னவர்களுடைய குற்றமாகக் காட்டிக் கொண்டார்.

லூத்தர் எழுதியக் கடிதம் "இது உம்முடைய தெய்வ பக்தியற்ற முகஸ்துதிக்காரரால் நான் ஒருபொது சங்கத்திற்கு அபயமிடும்படி நெருக்கப்படுகிறேன். நான் அறிந்தமட்டும் உம்முடைய நாமத்தை கனணியக் குறைவாய் நான் பேசினதாக எனக்குத் தோன்றவில்லை. பாப்புவின் தோழர்களை நான் குற்றப்படுத்திப்பேசினது உண்மையே. பாப்புவின் நீதி ஸ்தானத்தின அக்கிரமம் சோதோம், கோமோராவின் அக்கிரமத்திலும் பெரிது என்று உமக்குத் தெரியும். அதின் அக்கிரமத்திற்குப பரிகாரம் இல்லை என்றும் கவனித்திருப்பீர்.

அநேக வருஷங்களாக பாப்பு மார்க்கம் ஆத்துமாவையும், சரீரத்தையும் நாசமாக்கும் கேடுகள் எவைகள் உண்டோ அவைகளால் நிரப்பியிருக்கிறது உலகத்துக்குத் தெரியாத விஷயமே. ஒரு காலத்தில் தெய்வபக்தி மிகச் சிறந்திருந்த ரோமாபுரி இப்பொழுது கள்ளர் கெபியும், மரண நரக ராஜ்யமுமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து தோன்றினாலும் அக்கிரமம் இப்பொழுது இருக்கிறதைவிட அதிகமாக முடியாது. நாய்களுக்கு நடுவில் ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், சிங்கங்களுக்கிடையில் ஒரு தானியேலைப்போலவும் இருக்கும் பரிசுத்த பிதாவாகிய லேயோவே இத்தனைக் கேடான அந்த ராட்ஷதர்களை நீர் தனியே எதிர்த்து என்ன செய்யக்கூடும். குதிரையும் இரதமும் சேர்ந்து மீறிப்போனால் ரதசாரதி என்ன செய்யக்கூடும். மெய்யாகவே பாப்புவின் நியாயஸ்தலம் ஒரு காலத்தில் மோட்ஷவாசலாயிருந்தது. இப்போது நரகக் குழிக்கு இரையாகிறதை நான் பார்க்கும் பொழுது நான் அவர்களை இரட்சிக்கும்படி என் சத்தத்தை உயர்த்தாமல் இருக்க முடியுமோ: இக்காரணத்தினால், அபாயத்தினின்று காக்கும் பொருட்டு நீர் அடைபட்டிருக்கும் நரகத்தையும், சிறைச்சாலையின் நகரத்தை இடிக்கும்படி இப்போர் புரிகிறேன்.

இப்போதும் பிதாவாகிய லேயோவே உம்மை சூழ்ந்திருக்கும் சமாதான சத்துருக்களாகிய முகஸ்துதிகாரர்களை நீர் அகற்றும்படி உம்முடைய பரிசுத்த பாதத்தில் விழுந்து கெஞ்சி மன்றாடுகிறேன். ஆனால் என் உபதேசத்தை ஒருக்காலும் மறுதலிக்க மாட்டேன். நீர் மனுஷனுக்கு மேற்பட்டவரென்றும் ஆம். கொஞ்சம் குறைய தேவனென்றும், சகலத்தையும் நீர் ஆளக்கூடும் என்றும், காதுக்கினிமையான வார்த்தைகளை சொல்லி உம்மை முகஸ்துதி செய்கிறவர்களுக்குச் செவிகொடாதிரும். யதார்த்தத்தில் நீர் அடியாருக்கு அடியாராயிருக்கிறீர். எல்லா மனுஷருக்கும் மேலாக நீர் மகா அபாயமும் நிர்ப்பந்தமுமான பதவியில் இருக்கிறீர். உம்மையன்றி ஒருவனும் கிறிஸ்தவனாயிருக்க முடியாதென்றும், உமக்கு மோட்ஷம், நரகம், உத்தரிக்கும் ஸ்தலம் ஆகிய இடங்களில் சகல அதிகாரம் இருக்கிறதென்றும், பொய் ஓதும் வேஷதாரிகளுடைய வஞ்சனை வார்த்தைகளால் மோசம் போகா

தேயும் அவர்கள் உம்முடைய சத்துருக்கள் அவர்கள் உம்முடைய ஆத்துமாவை அழிக்க வழி தேடுகிறார்கள். முழு கிறிஸ்தவ சபைக்கும் நீர் மேற்பட்டவர் என்று உம்மை உயர்த்துகிறவர்கள் தப்பு செய்கிறார்கள்.

சத்திய வேத வியாக்கியான உரிமை உமக்கே உள்ளது என்று சொல்லுகிறவர்களும் உண்மை பேசுகிறதில்லை. அப்படிச் செய்கிறவர்கள் உம்முடைய நாமத்திலே திருச்சபையில் கிறிஸ்து மார்க்கத்துக்கு அடாத ஏற்பாடுகளை ஸ்தாபிக்க நாடுகிறார்கள். ஐயோ சாத்தான் உமக்கு முந்தின பாப்புகளைக் கொண்டு அப்படிச் செய்திருக்கிறான். இக்கடிதத்தோடு கிறிஸ்தவனின் சுயாதீனம் என்னும் பிரபந்தத்தின் ஒரு நகலையும் பாப்புவிற்கு அனுப்பினார். அப்பிரபந்தத்தில் இரண்டு விஷயங்களைச் சொல்லுகிறார்.

1. ஒரு கிறிஸ்தவன் சகல விஷயங்களிலும் சுயாதீனன்: அவன் ஒருவனுக்கும் அடிமையல்ல.

2. ஒரு கிறிஸ்தவன் சகல பாவங்களிலும், பிறருக்கு ஊழியம் செய்யும் பணிவிடையாளும் எல்லாருக்கும் கீழ்ப்பட்டவனுமாயிருக்கிறான்.

லுத்தர், பாப்புவின் ஆக்கினை பத்திரத்தை அந்திகிறிஸ்துவின் செய்கை, என்று எண்ணி அதை தகர்த்து நொருக்கும்படி அந்திகிறிஸ்துவின் ஆக்கினை பத்திரத்திற்கு எதிர் பத்திரம் என்னும் ஒரு பிரபந்தத்தை பிரசுரித்தார். இதில் அவர் தம் விஷயங்களை நீதி நியாயமாய் விசாரணை செய்யும்படி ஒரு பொது சங்கத்துக்கு அபயமிடுகிறார். லத்தீன் பாஷையில் எழுதப்பட்ட இந்தப் பிரபந்தத்தின் முடிவில் எழுதும் குறிப்பாவது இந்த பாப்புவின் ஆக்கினை பத்திரத்திற்கு காரணர் பாப்புவும் அவருடைய கார்டினர்களும் என்று நான் நம்பாதிருக்கப் பிரயாசப்படுகிறேன். ஆனால் அதற்கு காரணன் யாராயிருந்தாலும் அவனை அந்திகிறிஸ்து என்று நான் எண்ணுகிறேன். அவர் ராயனுக்கும், மற்ற கிறிஸ்

"New Jerusalem News" ஆங்கிலப் பத்திரிக்கை வேண்டுவோர் தங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் **(Capital Letter)** தெளிவாக எழுதி, பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்; இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

சந்தாவிபரம்:-

உள்நாடு ஆண்டு சந்தா Rs. 40-00,
வெளிநாடு ஆண்டு சந்தா Rs. 700-00,
(20 U.S. Dollars).

முகவரி:-
NEW JERUSALEM NEWS,
POST BOX NO: 17320,
MUMBAI-400 078,
INDIA

தவ அரசர்களுக்குங்கூட ஒரு அபயம் எழுதி பிரசுரித்தார்.

லூத்தர், 1520-ம் வருஷம், டிசம்பர் மாதம் 10-ம் தேதி பாப்புவின் அதிகாரத்தை எதிர்த்து, அறைகூவி பாப்புவின் ஆக்கினை பத்திரத்தை பகிரங்கமாய் சுட்டெரித்தார். மாணக்கர், உபாத்திமார், சாஸ்திரிகளின் சங்கத்தில் எல்ஸ்டர் என்னும் வாசலுக்கு வெளியே பாப்புவின் [திருச்சபை சட்டங்களையும், கடவுளாலும், எல்லா மனுஷராலும் சபிக்கப்பட்டவர் என்று கூறும் பாப்புவின் பட்டோலையையும் அக்கினியில் போட்டு, லூத்தர் சொன்னதாவது: நீ ஆண்டவரின் பரிசுத்தரை சஞ்சலப்படுத்தினுய் ஆகையால் நித்திய அக்கினி உன்னை பட்சிக்கும் என்பதே. அடுத்தநாள் லூத்தர் தன் மாணக்கரை எச்சரித்து பாப்புவின் அதிகாரத்தினின்று மனப்பூர்வமாய் விட்டு ஒழியும்படி புத்தி சொன்னுர். இத்துணிகர செய்கையால் லூத்தர் தாம் நின்ற பாலத்தை சுட்டெரித்து பாப்புவோடும் அவர் சபையோடும் இருந்த சகல சம்பந்தத்தையும் விட்டு ஒழித்தார். இதனல் கர்மானியா தேசமுழுவதும் பெரிய ஆசைவும், கொந்தளிப்பும் உண்டாயிற்று.

மறுதலிப்புக்காக லூத்தருக்கு கொடுக்கப்பட்ட கருணைக்காலமாகிய 60 நாட்களும் சென்று போயின. அப்போது பாப்புவாகிய பத்தாம் லேயோ லூத்தரையும் அவரைச் சார்ந்தவர்களையும் சபைக்குப் புறம்பாக்கும்படி இரண்டாம் ஆக்கின பத்திரம் ஒன்றை 1521-ம் வருஷம், ஜனவரி மாதம் 3-ம் தேதி வெகு அவசரமாய் அனுப்பினுர். கர்மானியர் அதை பரிகாசத்தோடு ஏற்றுக் கொண்டார்கள். இதனுல் சத்துருவை எப்பக்கத்திலும் எதிர்க்கும்படி லூத்தருக்கு வீரமும், பராக்கிரமமும் உண்டாயிற்று. சிலர் யுத்தம் செய்து சுவிஷேசத்திற்காக உதவி செய்ய பிரியப்பட்டார்கள். ஆனுல் லூத்தர் அந்திக்கிறிஸ்து, சரீர பெலத்தால் அல்ல ஆவியின் பட்டயமாகிய ஆண்டவருடைய வார்த்தைகளால் மாத்திரம் முறியடிக்கப்பட வேண்டுமென்று அறிந்தபடியால் ஆயுத பெலமும், ஆயுத உதவியும் பரிச்சேதமாய் உபயோக்கக் கூடாதென்று தள்ளிவிட்டார்.

(தொடரும்)



"நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரிதுக் கொள்ளுங்கள்" (எபே.6:11).





ஞானஸ்நானம்

16-9-96 திங்கள் கிழமையன்று பம்பாய் [தலைமை சபை]யில் 2 பேர் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையாய் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேம்.



வேத பாடம் [தொடர்ச்சி]

எண்ணாகமம்
எண். 36-ம் அதி.

யோசேப்பின் குமாரனுகிய மனுசேயின் புத்திரர்களில் ஒருவராகிய செலோப்பியாத் என்பவர்களுடைய குமாரத்திகளுக்கு சுதந்தரம் வழங்கும் விஷயமாக யோசேப்பின் புத்திரர்களிலுள்ள கீலேயாத்தின் வம்சதலைவர்களாகிய பிரபுக்கள் மோசேயிடம் வந்து இவ்விதமாகக் கேட்டார்கள்- எங்கள் சகோதரனுகிய செலோப்பியத்துக்குக் குமாரர்கள் இல்லை. செலோப்பியாத்தின் சுதந்திரத்தை அவனுடைய குமாரத்திகளுக்குக் கொடுக்கும்படியாக கர்த்தரால் கட்டளை உண்டாயிருக்கிறது [எண். 27:1-11].

ஆனபடியினல் அவர்கள் வேறே கோத்திரத்தில் விவாகப்பட்டு போனல் எங்கள் சகோதரனுடைய சுதந்திரம் வேறே கோத்திரத்திற்கு கடந்துபோய் விடுமே. ஆனபடியினல் இந்தக் காரியமாக எங்களுக்கு ஆலோசனை வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆலோசனையின் பிரகாரம் மோசே இவ்விதமாக கட்டளையிட்டார். செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்கள் கோத்திரத்திலே தங்களுக்கு விருப்பமானவரை விவாகம் முடித்துக் கொள்ள வேண்டும் அவர்கள் வேறு கோத்திரத்தாரை விவாகம் முடித்துக் கொள்ளக்கூடாது. அப்படி செய்தால் அந்த சுதந்திரம் வேறு கோத்திரத்திற்கு உரிமையாகிவிடும். ஆனபடியினல் அவர்கள் தங்கள் பிதாவின் வம்சத்தாரில்தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகம் முடிக்கலாம் என்று சொல்லி உத்தரவிட்டார்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் அப்படியே கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தங்கள் கோத்திரத்தாரிலேயே விவாகம் முடித்துக் கொண்டார்கள். இவ்விதமாக அந்த சுதந்திரம் அந்தக் கோத்திரத்திலேயிருந்து. இஸ்ரவேல் ஜனங்களுக்கென்று தேவன் பிரத்தியேகமான சில கட்டளைகளைக் கட்டளையிட்டார். இஸ்ரவேல் கோத்திரம் பன்னிரெண்டு பிரிவுகளாக இருந்தன. கானனுக்குள் அவர்கள் போகும்பொழுது சீட்டுப் போட்டு தேசத்தை பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டுள்ளார் அந்தந்த கோத்திரத்தார்களுக்கு விழுந்த அந்தந்த சீட்டின் பிரகாரம் அவர்களுக்கு பங்கு பிரித்து கொடுக்கப்பட்டது.

இஸ்ரவேலர்கள் தங்கள் நிலங்களை அநாதியாய் விற்கக் கூடாதென்று கர்த்தரால் கட்டளையுண்டாயிற்று. ஒருவன் தரித்திரப்பட்டு தன்னுடைய நிலத்தை விற்றுப்போட்டாலும் அவன் திரும்ப தனக்கு சக்தியிருந்தால் அதை மீட்டுக் கொள்ளலாம். அல்லது அவன் சகோதரன் ஒருவன், அவன் விற்ற வீட்டையும், நிலத்தையும் மீட்டுக் கொள்ளலாம். அப்படியே இல்லாவிட்டால் 50 வது வருஷ (யூபிலி) த்தில் அந்த சுதந்திரம் விடுதலையாகி மீண்டும் அவனுக்குச் சொந்தமாகும் - என்று கர்த்தர் கட்டளையிட்டார்.

இந்நாட்களிலே உலகத்திலே வசதி படைத்தவர்கள் ஏழை எளியவர்களுடைய நிலங்களையும், வீடுகளையும் வாங்கிவிட்டு அவர்களைத் தெருவிலே விட்டுவிடுகிறதை நாம் பார்க்கிறேம். அவர்கள் சுதந்திரத்தையும் இழந்து, வீட்டையும் இழந்து, ஊர் ஊராய் வெளி இடங்களுக்கு கடந்து செல்லுவதும் அல்லது ஏழைகளாய், பிச்சைக்காரர்களாய் கூட மாறிவிடுகிறதைப் பார்க்கிறேம். பதவியிலிருக்கிறவர்களும், பணம் பெருத்தவர்களும் தங்களுக்குக் கோடி கோடியாய் ஏழைகளுடைய நிலங்களையும், சொத்துக்களையும்

வாங்கிக் குவிக்கிற அநியாயத்தைப் பார்க்கிறோம். ஆனால் இஸ்ரவேலர்களில் அவ்வித மாக நடக்க முடியாது.

ஒருவனுக்கு குமாரன் இல்லையென்றால் அந்த சுதந்திரத்தை குமாரத்திக்குப் பங் கிட்டுக் கொடுக்க வேண்டும். குமாரத்திகளும் த ங் க ள் கோத்திரத்துக்குள்ளே தங்க ளுக்கு கணவனை தெரிந்து கொண்டு, அந்த சுதந்திரம் அந்தக் கோத்திரத்துக்குள்ளே இருக்க வேண்டுமென்று கர்த்தர் ஒழுங்கு செய்தார். இவ்விதமாய் இஸ்ரவேல் ஜனங் களுக்கென்று பிரத்தியேகமாய் சட்டங்களும், விதிகளும் உண்டாயிருந்தது. அது உல கத்தில் மற்றவர்களின்மேல் செல்லாது. இவ்விதமாக எண்ணாகமம் முடிவிலே செலோப் பியாத்தின் குமாரத்திகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட சம்பவத்தைக் பார்க்கிறோம். அப் படியே கிறிஸ்தவ சமுதாயங்களிலேயும் குமாரத்திகளுக்கு பங்குண்டு. விவாகம் முடிக் கும்பொழுது அவர்களுக்கு பணமாகவோ அல்லது பொருளாகவோ இன்னும் சொத்தா கவோ எழுதிக்கொடுக்கிறதை நாம்பார்க்கிறோம்.

ஆனால் சில கள்ளக் கிறிஸ்தவர்கள், அவள் இரட்சிக்கப்பட்டுவிட்டாள் அல்லவா! ஆனபடியினால் அவளுக்கு நகையும் வேண்டாம். தேவனது சும்மா திருமணம் செய்து போகட்டும் என்று சொல்லி வம்பு பேசுகிறதைப் பார்க்கிறோம். இது ஒரு மோசமான புத்தியாகும். ஒரு மகளுக்கு லட்சக்கணக்கில் வரதட்சிணை கொடுத்து, ஆயிரக்கணக்கில் ரொக்கமும் கொடுத்து, சீர் சிறப்புடன் திருமணம் செய்து கொடுக்கிறதும், இன்னொரு மகள் இரட்சிக்கபட்டுவிட்டாள் என்றால் அவளை அப்படியே தள்ளிவிட்டு விடலாம் என்கிற கெட்ட எண்ணங்கள் இருக்கிறது. ஆனால் கிறிஸ்தவ மத சட்டத்தின் பிரகார மும், வேதத்தின் பிரகாரமும் பெண்களுக்கும் உரிமை உண்டு. அதோடுகூட அவர்கள் குடும்பத்தில் ஒரு பாகமாயிருக்கிறபடியால் விவாகமாகி போனபின்பும் தங்களுக்கு அவசியமான வேளையில் குடும்பத்திற்கு வரவும், போகவும் குடும்பத்திலுள்ள நன்மை, தீமைகளிலும் பங்கு பெற்றுக் கொள்ளவும் உரிமை உண்டு. சகோதரர்களோ அல்லது முக்கியமானவர்கள் இருந்தால் அவர்களுக்கு உதவி செய்ய கடமையும் பட்டிருக்கிறார்கள். அவளுடைய பங்கை அவள் வாங்கிக் கொண்டு போய்விட்டாள், அவள் இனி இங்கு வரக்கூடாது என்று சொல்லக் கூடாது.

இன்றைய நாட்களில் உலகத்தில் வரதட்சிணை கொடுமையை நாம் அதிகமாகப் பார்க்கிறோம். அவ்விதமான கொடுமைகள் கிறிஸ்தவர்களுக்குள் இல்லாமல் இருப்பது

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	இடம்	காலம்
Bro. D சின்னப்பதாஸ்	A. டெய்சி	பெரியகுளம்	7-11-96 11.9.96

மிகவும் நல்லது. பிறாதங்களிலே வரதட்சனை கொடுமைகளினால் கொலை செய்கிறதையும் பல அநியாயங்கள் செய்கிறதையும் பார்க்கிறோம். இவ்விதமான தீமைகள் கிறிஸ்தவத்துக்குள் இல்லாமலிருப்பது மிகவும் போற்றப்படத்தக்க காரியமே. ஆனால் குமாரத்திகள் என்றால் அவர்களை அற்பமாய் எண்ணி, வசதியிருந்தும் சும்மா அனுப்பிவிடுகிறது தவறாகும். வசதியில்லாதவர்கள் தங்கள் வசதிக்குத் தக்கப்படி செய்து கொள்ளலாம். வசதியுள்ளவர்கள் தங்கள் வசதிக்குத் தக்கப்படி குமாரத்திகளுக்கும் ஒரு ஏற்பாடு செய்வது நல்லதே

விவாகம் முடிக்கிறவர்களும் இவ்வளவு வேண்டும், அப்படியானால்தான் விவாகம் முடிப்பேன் என்று சொல்லாமல் நீதியாய், நியாயமாய் நடந்து கொள்வது நல்லது. ஒவ்வொருவருடைய தகுதிக்குத் தக்கப்படி நடந்து கொள்ள வேண்டும். இவ்விதமாக செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு தேவன் ஏற்பாடு செய்தது ஒரு நல்ல ஒழுங்கேயாகும். அது ஜாதி அடிப்படையிலான ஒரு காரியமல்ல. இஸ்ரவேலர் ஒரு கோத்திரத்திலிருந்து இன்னொரு கோத்திரத்துக்கு பெண் கொடுக்கவும், பெண் வாங்கவும் செய்யலாம்; அப்படி செய்கிறது சகஜம். ஆனால் இங்கே குமாரரில்லை பெயர் சொல்ல; குமாரனுக்குள்ள அந்த சுதந்திரங்கள் வேறு கோத்திரத்திற்கு சென்றுவிடாதபடி. தடுக்கும்படி இந்தச் சட்டம் கொடுக்கப்பட்டதாகப் பார்க்கிறோம்.

★எண்ணாகமம் முற்றிற்று★

உபாகமம்

மிகவும் முக்கியமான பழைய ஏற்பாடு புஸ்தகங்களிலே உபாகமமும் ஒன்று. பயபக்தியோடு இதை வாசிக்கும்போது ஆவிக்குரிய எழுப்புதலையும், ஆறுதலையும், பெலனையும், மிகவும் கண்டிப்பாயிருந்து உருக்கமான பழைய ஏற்பாட்டின் ஆவிக்குரிய

கர்த்தருக்குள் நித்திரையானார்

1) 9-8-96 அன்று அதிகாலையில் மூன்றரை [3 1/2] மணியளவில் ஆலங்கோட்டை (கிளை) சபையில் Bro. ஆல்பர்ட் நாயகம் (வயது71) அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பெரியவருடைய இழப்பினால் வருத்தத்தில் இருக்கும் குடும்பத்தாருக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஆறுதல் கூறிக்கொள்ளுகிறோம்.

2) 3-8-96 அன்று, மும்பை, சார்கோப்பில் வசித்த கபரியேல் (வயது32) எதிர்பாரா மரணம் அடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்துக் கொள்ளுகிறோம். கணவனை பிரிந்து வாழும் மனைவி, பிள்ளைகளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஆறுதல் கூறிக் கொள்ளுகிறோம்.

தன்மையையும் கண்டடையலாம்.

ஏசாயாவின் ஆகமம், சங்கீத புஸ்தகம் இவ்விரண்டைப்போலவே உபாகமமும் நமது ஆண்டவரால் பெரிதும், பாராட்டப்பட்டதும், உபயோகிக்கப்பட்டதும் ஆகும். இஸ்ரவேலர்களுடைய நாற்பது வருட பிரயாணத்தின் முடிவை உபாகமம் விவரிக்கிறபடியால் சோதனை, வனாந்தரத்தில் நாற்பது நாள் இரவு, பகல் முன்விட்டு முடிவுக்கு வந்த ஆண்டவரின் மனதில் முக்கிய இடம் பெற்றது. ஏனென்றால் உபாகமத்தில் அடங்கிய வார்த்தைகளைக் கொண்டே பிசாசை தோற்கடித்தார் [மத். 4:4,7,10; உபா. 6:13; 10:20] உபாகமத்தில் காணப்படுகிற வசனங்களைக் கொண்டே சாத்தானை முறியடித்தார்; பஞ்சாகம புஸ்தகங்களில் இது கடைசி புஸ்தகம்.

உபாகமம் என்றால் மறுபடியும் போதித்தல் என்று அர்த்தம். முந்திய ஆகமங்களை இது உள்ளடக்கி இருக்கிறது. உபாகமம் தேவனுடைய மனுஷனாகிய மோசேயினால் எழுதப்பட்டது. இடம் மோவாபின் சமவெளி, யோர்தான் நதியின் ஓரம் எரிகோவுக்கு எதிரான இடம், மோசே இந்தப் புஸ்தகத்தை எழுதினார் என்று பல காரணங்களினால் திட்டமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த புஸ்தகத்தின் கடைசி பாகம் யோசுவா எழுதினதாகும். மோசேயின் மரணத்தைப் பற்றி அவர் எழுதி இதோடு சேர்த்திருக்கிறார்.

இந்தப் புஸ்தகத்தில் 34 அதிகாரங்களும், 958 வசனங்களும், 28,461 வார்த்தைகளும் காணப்படுகிறது. கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட செய்திகள் 33 செய்திகள் இதில் அடங்கி இருக்கின்றன. உபாகமம் மோசேயினுடைய அந்திய காலத்தின் ஜனங்களைக் கூட்டி, உபதேசித்ததாக அறிகிறோம். இதைக் கவனமாய் பார்க்கும்பொழுது ஒரே நாளில் அது பிரசங்கிக்கப்பட்டதாக தோன்றுகிறது. எப்படியும் உபாகமம் ஒரு முக்கியமான புஸ்தகம். தேவனுடைய கற்பனைகளும், இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சட்டங்களும், தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிகிறதில் உண்டாகுகிற ஆசீர்வாதங்களும், அதை மீறுகிறதினால் உண்டாகிற சாபங்களும் திட்டவட்டமாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உபாகம புஸ்தகத்தை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய வாழ்வில் பல இடங்களில் உபயோகித்து இருக்கிறார். அப்படியே பேதுருவும் உபயோகித்திருக்கிறார், ஸ்தேவானும் உபயோகித்திருக்கிறார். மேசியாவைக் குறித்த திட்டவட்டமான தீர்க்கதரிசனங்கள் உபாகமத்தில் இருக்கிறது [உபா. 18:15-19; அப் 3:22; 7:37] ஒவ்வொரு 7-ம் வருஷத்தின் முடிவிலும், கூடாரப்பண்டிகையிலும் ஆசாரியர் இதை பகிரங்கமாக வாசிக்க கட்டளை பெற்றிருந்தனர் (உபா. 31:13-19).


உபாகமத்தினுடைய முக்கியத்துவத்தை நாம் பார்க்க வேண்டுமென்றால் புதிய ஏற்பாட்டில் 80 தடவைகளுக்கு மேலாக உபாகம புஸ்தகத்திலிருந்து மேற்கோளாக நம்முடைய ஆண்டவராலும், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களாலும் எடுக்கப்பட்டிருக்கிறது. மோசேயின் பிரசங்கமாக இது காணப்படுகிறது. இது மூன்று பிரிவாக, மூன்று பிரசங்கங்கள் மோசே செய்ததாக பகுத்தறியலாம்

1. உபாகமத்தை வாசிக்கும் பொழுது [illegible] கட்டுப்படுத்தாத [illegible] மாத்திரம் கொடுக்கப்பட்ட தற்கால விதிகள் உபாகமத்தில் இருக்கிறதை அறியலாம்

(கலா. 3:23,24). 2. பத்து கற்பனைகள் அதாவது சத்தியம், நீதி, பரிசுத்தம் என்பவை களுக்கடுத்த நித்திய பிரமாணங்களாக இருக்கின்றன. இது யூதருக்கு மாத்திரமல்ல புற ஜாதியாருக்கும்; அக்காலத்திற்கு மாத்திரமல்ல எக்காலத்திலுமுள்ள எல்லா மனிதர்களை யும் கட்டுப்படுத்தும் [மத். 5:17]. தேவ ஆவியால் அருளப்பட்ட வேதாகமத்தின் ஒரு பாகமே நியாயப்பிரமாணம். அது நமது போதனைக்காக ரோம. 15:4 எழுதப்பட்டிருக் கிறது அது பிரயோஜனமுள்ளது (2 தீமோ 3:17).

ஏனைய புஸ்தகங்களைப் போலவே நியாயபிரமாணமும் கிறிஸ்துவை சுட்டிக் காட் டுகிறது கிறிஸ்துவைப்பற்றி மோசே எழுதினார் என்று தெளிவாய் உரைக்கப்பட்டிருக் கிறது (யோ. 5:46; உபா. 18:17). எனவே நாம் அதை தேடி, வாசித்து, கிறிஸ்துவைக் கண்டடைய வேண்டும். இது நம்மை வழி நடத்துகிறதாக இருக்கிறது [கலா. 3 24]. தொடர்ந்து உபாகமத்தை தியானிப்போமாக.

(தொடரும்)



"வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதா யிராது . தேவனுடைய பரிசுத்த மனிதர்கள், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசி னார்கள்" [2பேது. 1:20,21].



சுவிசேஷம்

"விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்; பேதைகள் நெடுகப்போய் தண்டிக்கப்படுகிறார்கள்" நீதி. 22:3; 27:12.

இந்த உலகத்தில் அநேக மக்கள் விவேக மற்றவர்களாக இருக்கிறார்கள் என்று வேதம் நமக்கு காண்பிக்கிறது. அநேக மக்களுக்கு ஆபத்துக்கள் இருந் தாலும் அங்கே போய் பார்த்துக் கொள் ளலாம் என்று எண்ணுகிறார்கள். வேதாக மம் பேதைகளைப் பற்றியும், விவேகிகளைப் பற்றியும், மதியீனரைப் பற்றியும் சொல்லு கிறது. இந்த வேதாகம புஸ்தகம் எழுதப ...க்கம் நீதி 1:4ல் எழுதப்ப டிருக்கிறது. வேதாகமமானது மனிதனுக்கு ஞானத்தை கொடுக்கக் கூடியதாக இருக் கிறது: மனிதனுக்கு தேவன் அறிவை, புத் தியைக் கொடுத்திருக்கிறார். உலகத்தில் ஒரு விதமான நியமம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

நெருப்புத் தணலைத் தொட்டால் அது நமக்குச் சுடும் என்று தெரியும்; தண்ணீர் குளுமையாயிருக்கும். ஒரு உயரமான இடத் திலிருந்து குதித்தால், அது நமக்கு சேதத்தை உண்டாக்கும் என்று நமக்குத் தெரியும். அப்படியிருக்க அதைத் தொடர்ந்து தேடி தண்டனையை அனுபவிப்பது மதியீனமான காரியம் என்று வேதத் தில் எழுதியிருக்கிறது.

பொதுவாக வேதம் மனிதனுக்கு ஞானத்தைக் கொடுக்கிறதாக நாம் வேதத்தில் வாசிக்கிறோம். புத்திமதியைக் கேட்கிறவர்கள் எப்பொழுதுமே நன்மையை அடைவார்கள். புத்திமதியைக் கேட்காத ராஜாவைபற்றி நாம் வேதத்தில் காண்கிறோம். தேவ ஜனமாகிய நாம் எல்லோருக்கும் தேவன் கொடுக்கிற ஆலோசனை என்னவென்றால் நாம் தேவனுடைய வசனத்துக்கு, தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறது. இந்த வேதமானது உலகத்திலுள்ள எல்லா மக்களுக்குமாக அருளபபட்டிருக்கிறது. இங்கே நீதி. 8:32-ல் நீங்கள் புத்தியைக் கேட்டு ஞானமடையுங்கள், விவேகமடையுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த உலகத்தில் புத்தியைக் கேட்காத அநேக மக்கள் காணபபடுகிறார்கள். அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற மாட்டைபபோல இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உடனே அவன், அவள் பின்னே சென்றான்: ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டு தண்டனைக்கு போவதுபோலும், ஒரு குருவி தன பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல், அதில் விழ தீவிரிக்கிறதுபோலும், அவனுக்கு பின்னாலே போனான்: அம்பு அவன் ஈரலைப் பிளந்தது (நீதி. 7:22,23).

மனிதனானவன் விவேகமாக நடந்து தண்டனைக்குத் தப்பித்து நடக்க வேண்டும் என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. ஞானமானது தெருக்களிலும், வீதிகளிலும் நின்று கூப்பிடுகிறது என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம் (நீதி. 8:1-6). தானாகவே ஒரு பாறைமேல் ஒரு மனிதன் மோதிக் கொள்கிறான் என்றால் அவனைப்பற்றி என்ன [illegible].

[illegible] நாட்களில் இரட்சிப்பு என்றால் புத்தி [illegible] என்றால் விளங்கிக் கொள்ளாமல் இருக்கிறார்கள். [illegible]

இரட்சிக்கப்படுகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. பொதுவாக நாம் மலைகளில் பிரயாணம் செய்யும்போது வளைவுகள் இருப்பதை பிரயாணம் பண்ணுகிறவர்கள் அறிவார்கள், சில குறிப்படையாளங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இங்கே மெதுவாகச் செல், அந்தப் பக்கம் போ என்று எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு சொல்லப்பட்டிருக்க தொடர்ந்து போய் தண்டனை பெறுபவர்களை நாம் என்ன சொல்லுவோம். இந்த உலகத்தில் அநேக மக்கள் இப்படிபட்டவர்களாகவே இருப்பதை நாம் காண்கிறோம்.

ஆம்! அறிவிலிகள் நெடுகப்போய் தண்டிக்கப்படுகிறார்கள். உலகத்திலே இன்று சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷமானது புத்திமான்களுக்கு, விவேகமுள்ளவர்களுக்கு மிகவும் அருமையானதாக இருக்கிறது. ஆனால் விவேகமற்றவர்களுக்கு புத்தியீனர்களுக்கு அது விளங்குகிறதில்லை. அதைப் பின்னுலே பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள் சுவிசேஷம் என்று சொல்லப்படுகிறது. இறைவனுடைய மேலான அருளாக இருக்கிறது.

இன்றைக்கு நாம் ஒரு காட்டு மிராண்டியாகவோ, ஒரு தீவிலோ அல்லது ஆப்பிரிக்கா கண்டத்திலோ பிறந்து, வளர்ந்து அவ்விதமாக நாம் இறந்துபோக, [illegible] நம்மை விட்டு விடாமல், அதாவது நாம் அறிவற்ற இடத்தில் இல்லாதபடி சரியான இடத்தில் பிறப்பித்து, நமக்கு சுவிசேஷம் கிடைக்கச் செய்திருக்கிறார். இங்கு கூடி வந்திருக்கிற மக்களிலேயும் இன்னும் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு, நாம் சொல்லுவது என்னவென்றால் இந்த சுவிசேஷமானது இந்த உலகத்தில் [illegible] சொல்லபடாமல் இருக்கிறது: இயேசு கிறிஸ்துவை பற்றி சரியான செய்தி அவர்களுக்கு சொல்லபடாமல் இருக்கிறது.

இரட்சிப்பு என்று சொல்லப்படுவது, அதாவது இயேசு சொல்லும்பொழுது ஒருவன் பிதாவின் அருளைப் பெறுவிட்டால் அவன் அவரிடத்தில் வரான். பேதைகளுக்கு தண்டனை நிச்சயமாகக் கிடைக்கும் இப்பொழுதும் ஒரளவு தண்டனையை அனுபவிக்கிறார்கள். நித்திய தண்டனை, அது முடிவில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது இந்த சபையில் விசுவாசிகளாயிருக்கிறவர்களும் தேவ ஆலோசனையை, சபை ஆலோசனையை, ஊழியர்களுடைய ஆலோசனையை மீறிவிட்டு கஷ்டபபடுகிறவர்களாக இருக்கிறார்கள்.

சாராயம் குடிக்கிறவர்களைப் பற்றி வேதத்தில் எழுதியிருக்கிற பிரகாரம்; அவர்கள் கொஞ்சமாக குடிக்க ஆரம்பித்து, நாளடைவில் அதிகமாகக் குடிக்க ஆரம்பித்து, இன்னும் கொஞ்ச நாளிலே எல்லாவிதமான பெலனையும், செல்வத்தையும் இழந்து, அவனுடைய சரீரமும், உருவழியும்போது அவர்கள் இபபடி பிரலாபிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் அநேக மக்களுடைய வாழ்க்கை காணப்படுகிறது [நீதி 5:11-14].

அநேகர் கிறிஸ்துவைப்பற்றிக் கொள்ளுகிறதில்லை. அவரவர் தங்கள் விருப்ப பிரகாரம் தொடர்ந்து செல்ல விரும்புகிறார்கள். எல்லாம் கெட்டு அழிந்தபின்பு முறையிடுகிறதைக் காட்டிலும் தேவனால் புத்தியடைந்து இப்பொழுதே இரட்சிக்கப்படுங்கள். அறிவிக்கப்படும் பொழுது சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு பின்பு காலம் நீட்டிக் கொடுக்கப்படுவதில்லை. பின்பு அவர்கள் சுவிசேஷம் பெற முடியாதபடி தடுக்கப்படுகிறார்கள் (2 கொரி. 6:2) "இன்றே இரட்சண்ய நாள்; இன்றைக்கே இரட்சிக்கப்படுவதற்குரிய நாள்". ஒரு மனிதனுக்கு தெய்வீக செய்தி கடந்து வரும்பொழுது, தெய்வீக அழைப்பு அவனுக்கு கொடுக்கப்படும்பொழுது, சுவிசேஷம் அவனுக்கு கொடுக்கப்படும்பொழுது

அவன் அதை உடனே ஏற்றுக் கொண்டு கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க கடன்பட்டிருக்கின்றான்; விவேகி உடனே மனந்திரும்புகிறான்.

பொதுவாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டவர்களுக்கு திரும்ப, திரும்ப அறிவிக்க வேதம் அனுமதி கொடுக்கிறதில்லை. ஒரு தடவை அறிவித்தவர்களை விட்டு கடந்து போய் மற்றவர்களுக்கு அறிவிக்கும்படியாக சொல்லப்பட்டிருக்கிறது. அதனால ஒரு தடவை சரியாக சுவிசேஷம் சொல்லப்படாதவர்களுக்கு நாம் சொல்லக் கடமைபட்டிருக்கிறோம். கர்த்தருடைய வசனம் சமீபமாய் வரும்பொழுது, கர்த்தர் சமீபமாய் வரும்பொழுது அவரை நாம் பற்றி பிடித்துக் கொள்ள வேண்டும்; அவரை நோக்கி கூபபிட வேண்டும் கர்த்தர் உன் இருதயத்தை தொடும்பொழுது நீ விசுவாசித்து ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், கர்த்தர் உன்னை விட்டு கடந்து போய் விடுவார் [ஏசா 55 6].

அநேக மக்கள் இரட்சிபபை தள்ளிப்போடுவதற்கு காரணங்கள இருக்கின்றன. அவர்களுடைய விருபபமில்லாமை, ஜாதி வெறி இன்னும் அவர்களுடைய வாழ்வில் பற்றிக் கொணடிருக்கிற கொள்கையை விட்டு எவ்விதம் மாற முடியும் என்று எண்ணி நொண்டிச் சாக்குகள் சொல்லுகிறவர்கள் உண்டு. இவை உண்மையான சாக்குகள் அல்ல. தெய்வீக அப்பமானது ஒரு தடவை கொடுக்கப்படடது, அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பாக இருக்கிறது [ஏசா. 49·8] அந்த சந்தர்ப்பத்தை பற்றிக் கொள்ளாதவர்கள் எத்தனை பிரசங்கங்கள் கேட்டாலும், எத்தனைக் கூட்டங்களுக்கு போனாலும் எவ்வளவு காலங்கள் இருந்தாலும் அவர்கள் இரட்சிக்கப்பட முடியாமல் போய் விடும் அல்லது அவர்கள் இரட்சிக்கப்பட முடியாதபடி அவர்கள் இருதயம் கடினப்பட்டு விடும். இன்னும் சிலர் இப்

பொழுது பாவத்தை செய்துவிட்டு கடைசி காலத்தில் மனம் திரும்பிக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். ஆனால் எப்படிச் சாவார்கள் என்று தெரியாதிருக்கிறார்கள் அவர்கள் இருதயம் கடினப்பட காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் இரட்சிப்பை பயன்படுத்திக் கொள்ள முடியாதபடியினாலே அவர்களுடைய வாழ்வில் இரட்சிக்கப்பட முடியாதபடி தேவன் அவர்களைத் தள்ளிப்போடுகிறார். கர்த்தர் சமீபமாயிருக்கும் பொழுது அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். இல்லையென்றால் ஒரு நாள் நாம் அலற வேண்டியதாக வரும் (நீதி. 1: 25-27).


இங்கு ஏற்றுக் கொள்ளாதவர்கள் யாராவது இருந்தால் இப்பொழுதே விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுங்கள்; இதுதான் ஞானம். விவேகம் என்று சொல்லுவது. பிரசங்கி தேவனுடைய கோபத்துக்கு ஏதுவானவன் பாவத்தில் விழுவான் என்கிறார். இன்று கோடிக்கணக்கான மக்கள் பாவத்தில் விழுந்து கொண்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட மக்கள் எப்பொழுதுமே ஞானிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் அஞ்ஞானிகள், அவர்கள் இறைவனை அறியவில்லை; கர்த்தரை அறிகிறதே அறிவு.

"கர்த்தருக்கு பயப்படுகிற பயமே ஞானத்தின் ஆரம்பம்" ஆனால் அது முழுமை அல்ல. நாம் தொடர்ந்து செல்லும்போது நாம் அதை அடைந்து கொள்ளுகிறோம். அவிசுவாசிகளாயிருக்கட்டும், பேதைகளாயிருக்கட்டும் இது எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது.

முட்டாள்கள் தொடர்ந்து சென்று இம்மையிலும், மறுமையிலும் தண்டனையை வாங்கிக் கொள்ளுகிறார்கள். நாம் விவேகமாயிருந்து ஆபத்துக்கு மறைந்து அவருடைய கிருபைக்குள் அடைக்கலம் புகுந்து கொள்ளுவோமாக. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது ஞானவன் அல்லது உன்னதமானவருடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவீர்கள்.

அவர்களைப் பரிசுத்த ஜனமென்றும், கர்த்தரால் மீட்கப்பட்டவர்களென்றும் சொல்லுவார்கள். நீ தேடிக்கொள்ளப்பட்டதென்றும், கைவிடப்படாத நகரமென்றும் பெயர் பெறுவாய் [ஏசா. 62:12]

அதிசயமான ஜனங்கள், பரிசுத்தமான ஜனம், இவர்கள் இறைவனால் மீட்கப்பட்ட ஜனங்கள் என்று சொல்லி, எல்லோரும் சொல்லுவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவ ஜனங்களுடைய மேன்மையானது வசனம் 4-ல் எழுதப்பட்டிருக்கிறது. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாயிருக்கட்டும், சரீர பிரகாரமான ஆசீர்வாதங்களாயிருக்கட்டும் நாம் அனுபவிக்கும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம், [illegible] நீங்களும் கிறிஸ்துவை விசுவாசித்து எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளும்படி தேவன் உங்களை அழைக்கிறார்! நாங்களும் அழைக்கிறோம்!"



புது உடன்படிக்கையின் இரத்தம்

"பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காக சிந்தப்படுகிற என் இரத்தம்"
(மத். 26:28)

இது இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்திலே நமக்காகப் பலியாகும்படி, ஒப்புக்கொடுக்கும்படி வந்திருக்கும்போது திருவுளம்பற்றின ஒரு வார்த்தையாகும்.

இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்பதாம். இந்த உலகத்திலே கடந்து வந்து மகத்துவமான தியாகத்தைச் செய்தவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகும். முழு உலகத்துக்கும் தன்னை தியாயகம் செய்யும்படியாய் வந்தவர் இயேசுகிறிஸது வாகும். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாய் பூர்வத்தினுடையது [மீகா 5:2]

கடவுள், 1900 வருஷங்களுக்கு முன்பே இந்த உலகத்தில் வந்தபோதிலும், அவர் இயற்கையிலே இருக்கிறார் என்று வேதம் நமக்குக் காண்பிக்கிறது. ஆதாம் உருவாக்கப்படுவதற்கு முன்பே, ஆகாயம் உண்டாக்கப்படுவதற்கு முன்பே தேவன் இருக்கிறார் இந்த உலகத்திலே அநேகர் பிறந்து, மரித்து சென்றுவிட்டார்கள். கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அநேகர் பிறப்பார்கள். இந்த உலகத்திலே கடந்து வந்து, பெரிய, பெரிய காரியங்களைச் செய்து கடந்து சென்றவர்களை நாம் பார்க்கிறோம்.

சிலர் அந்தந்த சமயத்தில் வாழ்ந்த மக்களுக்காக, ஜாதிக்காக சில தியாயங்களைச் செய்திருக்கிறார்கள். பலவிதமான கொள்கைகளையும், இயக்கங்களையும், மதங்களையும் உண்டுபண்ணியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் தங்களை தியாகம் செய்த காரியங்கள் உலகத்தில் பூரணமாக நிறைவேறவில்லை, நிறைவேறவும் முடியாது. அவர்கள் உழைத்தார்கள், பிழைத்தார்கள், தியாகம் செய்தார்கள். இவர்கள் தான் அவர்களை போற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்த காரியங்கள் எல்லாம் இந்த உலகத்துக்குரிய சரீரப் பிரகாரமான காரியங்களாக இருக்கிறது. மனுஷன் படுகிற பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத் தானே.

1. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் விலையேறப்பெற்றது

2 அது நமக்கு விலைக்கிரயமாக சிந்தப்பட்டது (1 பேது. 1:18,19; அப். 20:28)

3. அது விடுதலையாக்குகிறது [1 பேது. 1: 18,19]

4 அது நித்திய மீட்பைக் கொண்டு வருகிறது [எபி. 9:12; 1:14].

5. அது ஒப்புரவாக்குதலைக் கொண்டு வருகிறது (கொலோ. 1:20).

6. அது தெளிக்கப்படுகிறது 1 பேது 1:1 2.

7. அது சுத்திகரிக்கிறது [1 யோவா. 1:7; 1 பேது 1 18,19].

"... எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபி. 9:22).

தேவனைத் தேடு

"SEEK GOD"

REGD NO 040088/84
POSTAL REGD. NO MH BY NE-94/95
Tamil Monthly Magazine

சுவிசேஷ ஊழியம்

புதிய எருசலேம் சபையின் தலைமை போதகர் **N. லாசர்** 19-9-96 அன்று சுவிசேஷ ஊழியமாக சிறிலங்கா புறப்பட்டு சென்றார்கள். சிறிலங்கா, வவுனியாவில் கட்டப்பட்ட *புதிய எருசலேம் சபை [கிளை]* 26.9.96 அன்று புதிய எருசலேம் சபையின் தலைமை போதகர் **N. லாசரால்** பிரதிஷ்டை செய்து, திறந்துவைத்து பிரசித்தம் செய்யப்பட்டது என்பதையும், அதன்பின்பு சிறிலங்காவில் அக்டோபர் '96' முதல் வாரத்தில், தலைமை போதகர் **N.** லாசர் அவர்கள், திரிகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் சுவிசேஷ கூட்டங்களும், ஆராதனைகளும் நடத்துவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். இந்த ஊழியம், பிரயாணம் இவைகளுக்காக ஜெபிக்கும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அறிவிப்புகள்

முழு இரவு விழிப்பு ஜெபம்

25 [வெள்ளி] அக்டோபர் 1996
25 [திங்கள்] நவம்பர் 1996
27 [வெள்ளி] டிசம்பர் 1996

புதிய எருசலேம் செய்தி பத்திரிக்கை
ஆண்டு சந்தா Rs 30-00
வெளிநாடு Rs. 400-00

அனுப்ப வேண்டிய முகவரி

CHIEF PASTOR N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR
DARGA CROSS ROAD, BHANDUP,
BOMBAY-400 078. INDIA.

3 மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது காணிக்கையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.

5 "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ. 30 [முப்பது] சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக பெரிய எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிக்கையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காள சத்தம் 148 - NOV/DEC-96

"புதிய எருசலேம் சபை"

'...வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ நடுராத்திரியிலோ, சேவல்கூவுற நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்... விழித்திருங்கள்... உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்..."

- மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF PASTOR N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கொப்பான பூரண வளர்ச்சியடையும்படியாகவும், தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிக்கை வெளியிடப்படுகிறது.

(எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப். 1:1-3)" எனக்கு காண்பித்து, கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்:

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் -மத். 28:18; மாற்கு 16:15.
2. விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள்-மத் 28:19 (இயேசு மாதிரி [Through Action] செய்து காண்பித்தார்).
3. திருச்சபையைக் கட்டி (மத். 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்-மத். 28:20
4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள்-யோவான். 20:23.
5. அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள்-யோவா. 21:15-17.
6. இவைகளை நடப்பிக்க காத்திருந்து பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டு (அப். 1:5-8)
7. நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூறும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார்-1 கொரி. 11:23-26.

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே, அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும், அதிகாரங்களுமாகும். இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1 : 1; 10:40-43).

CHIEF PASTOR: N LAZAR

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை

மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி? தேவன் மகா நீதிபரரும், மகா பரிசுத்தருமாயிருக்கிறார். அவர் யாரையும் ஒடுக்கமாட்டார். அவருக்கு முன்பாக நம்முடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போலவும், அழுகிப்போகிற இலைகளைப்போலவும் இருக்கிறது. ஆனால் நமக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதிக்குள் நுழைந்து கொள்ளுவதே அது. அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயில் வஞ்சனைக் காணப்படவில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமல், பாடுபடும் போது பயமுறுத்தாமலும் இருந்தார். அவர் மகா நீதிபரர் அவரை விசுவாசித்து, அவருக்குள்ளாகுகிறவன் தேவநீதியால் பொதியப்படுகிறான். நீதியால் அலங்கரிக்கப்படுகிறான். இப்படி நீதிகரிக்கப்பட்டவன் நீதிமானாய் வாழும் அருள் பெறுகிறான். இந்த தேவ நீதிக்குள்ளிருக்க நாம் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருப்போமாக. சுயநீதியைப் பாராட்டி தன்னை நீதிமானென்று எண்ணுகிறவன், தேவநீதியை விட்டு இறங்கிவிடுகிறான். சீக்கிரமாய் அவன் சீர்கேடு எல்லோருக்கும் தெரியவரும். ஆனபடியினால் பரிசுத்தவான்களை குறை சொல்லாதே உன்னை பெலவீனம் தாக்கும். நீ விழப்போகிறாய், சத்துருவினால் தாக்கப்படப்போகிறாய் என்பதற்கு அடையாளம் நீ பரிசுத்தவான்களை குறை சொல்லுவதே. தேவ நீதியைத்தேடு அப்பொழுது பிழைப்பாய்.

கிறிஸ்துவுக்குள்,

N. Lazar

CHIEF PASTOR: N LAZAR

திருச்சபை

(தொடர்ச்சி)

சபையை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்த அப்போஸ்தலனால் மட்டுமே முடியும். "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தப்படியால் உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்" [2 கொரி. 11:2]. என்று அப். பவுல் சொல்லுகிறார்.

சில ஊழியங்கள், சிலரது ஊழியங்கள் தங்கள் சுயநலத்தை திருப்திபடுத்துவதற்காக துவக்கப்பட்டு, அது நிறைவேறவில்லை என்றால் அந்த ஆத்துமாக்களையும், அந்த ஊழியத்தையும் விட்டு ஓடிப்போவார்கள். உன் ஆத்துமாவுக்காக உத்தரவாதம் பண்ணுகிற ஊழியக்காரன் வேண்டும். ஆம்! உனக்கு ஒரு அப்போஸ்தலன் வேண்டும்; தலைமை வேண்டும், "உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காய் உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால அது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (எபி. 13:17).

"அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் உங்களுக்கு இரட்சிப்பாயிருக்க மாட்டாதே" என்று ஸ்பானியா பாஷையில் எழுதப்பட்டுள்ளது. ஊழியக்காரனாயிருக்கிறவனே நிலைத்திருக்க மாட்டான். மக்கள் எங்கே பூரண இரட்சிப்படையப் போகிறார்கள். கிறிஸ்தவ மார்க்கம் திருச்சபையையுடையது. பிறமதங்களில் சபை கிடையாது; எந்த ஒழுங்கோ, சட்டமோ கிடையாது; யாதொரு திட்டமான விதியும் இல்லை; முடிவும் இல்லை; இலக்கும் இல்லை. கிறிஸ்தவர்களாகிய நமக்கோ நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகையே முடிவு, இலக்கு, எதிர்பார்ப்புமாகும்.

ஒரு இடத்தில் ஒரு கிறிஸ்தவ கன்வென்ஷன் நடந்தது. பிரசித்திப் பெற்ற பிரசங்கி ஒருவர் பிரசங்கித்தார். பிரசங்க முடிவில் இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வருவாரென்றால் உங்களில் யார்? யார்? எடுத்துக் கொள்ளப்படுவீர்கள் கையை உயர்த்துங்கள் என்றார். கூட்டத்தில் இருந்த ஒருவரும் கையை உயர்த்தவில்லை. அதில் பரிதாபம் என்னவென்றால் பிரசங்கியாரும் கையை உயர்த்தவில்லை இப்படியே பெரும்பாலான கிறிஸ்தவர்களுடைய நிலை உள்ளது. உங்கள் காரியம் எப்படி?

தெசலோனிக்கேய சபையைக் குறித்தும், கொரிந்து சபையைக் குறித்தும், பிலிப்பியர் சபையைக் குறித்தும் நாம் வாசிக்கிறது என்ன.. அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும் இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும் அறிவிக்கிறார்களே [1 தெச. 1:6-10].

நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும், எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும, சம்பூரணமுள்ளவர்களாக்கப் படடிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கபபட்ட தேவ கிருபைக்காக நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள் 1கொரி. 1:5-7 என்றும், நம்முடைய ஆடி

யிருப்போ பரலோகத்திலிருக்கிறது அங்கே யிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம் [பிலி. 3:20] என்று எழுதப்பட்டுள்ளது.

அப்பொழுதிருந்த ஒவ்வொரு சபையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருந்தது: சபைதான் ஆயத்தமாகும். சபையை அப்போஸ்தலன் தான் சீர்படுத்தி, சுத்திகரித்து, பலப் படுத்தி கர்த்தருடைய வருகைக்கு ஆயத் தப்படுத்த முடியும் (2 கொரி. 11:2).

திருச்சபை என்றால் எல்லா உபதேச மும், எல்லா அறிவும், கிருபையும் எல்லா வரங்களுமுடையதாய் சம்பூர்ணமுள்ளதாய் காணப்படும் [1 கொரி. 1:5-7]. எல்லா ஊழி யர்களும் 5 வகை ஊழியங்கள் (எபே. 4: 11-13; எல்லா வரங்களும் 1 கொரி. 12:8, 11,28. உடையதாய் இருக்கும். முக்காடு போடுகிற சபை, முக்காடு போடாத சபை, செருப்பு போட்டு ஆராதிக்கிற சபை, பாத ரட்சையைக் கழட்டி விட்டு தொழுது கொள்ளுகிற சபை, நகை போடுகிற சபை. நகை போடாத சபை. பெண்கள் ஆளும் சபை இப்படி பல கூட்டங்களைப் பார்க் கிறோம். ஒரு இடத்தில் பல சபையைச் சேர்ந்த போதகர்கள் வந்திருந்தார்கள்.

எல்லாம் அஸ்திபாரம் இல்லாத சபை கள், ஒருவர் இப்படிச் சொன்னார், நகை போடக் கூடாது என்று, வேதத்தில் சொல்ல வில்லை நகையினால் அலங்கரிக்கக் கூடாது என்றுதான் சொல்லியுள்ளது. ஒரிரு நகை கள் போடுவது பாவமல்ல என்றார். நான் எபே. 5:18 எடுத்து வாசித்து துன்மார்க்கத் துக்கு ஏதுவான மதுபான வெறி கொள் ளாமல் ஆவியினால் நிறைந்து என்று எழு தியிருக்கிறதே. அப்படியானால் வெறி கொள் ளத்தான் கூடாது: கொஞ்சம் குடிக்கலாம் என்று நீர் சொல்லுகிறீரோ? என்றேன். ஆள் வாயடைத்துப் போனார்.

நகை போடக்கூடாது என்று சொல் அல்லது போடலாம் என்று சொல்: அதை விட்டு விட்டு ஒன்றிரண்டு போடலாம் என்று ஏன் கள்ள உபதேசம் செய்கிறாய். தெளிவுள்ளவனாயிரு, மயக்கத்திலிருக்காதே. திருச்சபையினுடைய கடைசி பணி மக் களை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப் படுத்துதலே. தேவன் ஏன் குடும்பத்தை நியமித்திருக்கிறார்? நல்ல குடும்பத்தில்தான் குழந்தைகள் பிறந்து, நல்லவர்களாக வளர்ந்து தேவனுக்கும், மனிதருக்கும் பிர யோஜனமுள்ளவர்களாயிருப்பார்கள். குடும் பத்தில் பிறக்காதவர்களெல்லாம் தறுதலை களாக அலைவார்கள். திருச்சபையே தேவ னுடைய குடும்பமாகும்.

1.) சபை என்றால் என்ன?

ஒரு கூட்டத்திற்கு நாம் சபை என்று சொல்லக்கூடாது. உலகில் பல காரியங்க ளுக்காக பல கூட்டங்கள் கூட்டப்படுகின் றன; கலைந்து போகின்றன [அப். 19:41] பழைய ஏற்பாட்டிலும் சபை என்ற வார்த்தை காணப்படுகிறது. எகிப்திலிருந்து தேவனால் வெளியே அழைக்கப்பட்ட ஜனங்களை சபை என்று குறிப்பிடப்பட் டுள்ளது (அப். 7:38; எண். 10:1-3). புதிய ஏற்பாட்டின் சபையோ மிகவும் மேன்மை யுள்ளது. இயேசு கிறிஸ்து தாமே சபை யைப்பற்றி, புதிய ஏற்பாட்டின் சபையைக் குறித்து முதன் முதல் பேசினார். நீ பேதுரு வாய் இருக்கிறாய் இந்த கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை என்றார் (மத். 16:18).

புதிய ஏற்பாட்டின் சபை, இயேசுவா னவர் பூமியில் இருந்தபோது இருந்ததில்லை அவர் எடுத்துக் கொள்ளப்பட்டபோதும் பின்னும் பெந்தேகோஸ்தே நாள் வரை இருந்ததில். அவர்கள் ஒரு மனப்பட்டு கூடி வந்து மரியாளும் மற்ற சகோதர, சகோதரி களும், அப்போஸ்தலர் 11 (பதினொன்று) பேரும் கூடி தேவனை ஆராதித்த போதும்

சபை இருந்ததில்லை [அப் 1:11-14] இவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள்; ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள்; அற்புத அடையாளம் செய்தார்கள்; மனந்திரும்புதலின் பிரசங்கத்தை அறிவித்தார்கள்; வியாதியஸ்தர்களை சுகமாக்கினார்கள்; பிசாசுகளும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தன [மத்.10: 1-15; லூக். 10:17]. அவர்கள் கூடி வந்து நாடோறும் கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள். ஆனால் அவர்கள் புதிய ஏற்பாட்டின் சபையில்லை.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர், கூடி வந்த சீஷர் கூட்டத்தின் மேல் இறங்கினார். அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு அந்நிய பாஷைகளில் பேசினார்கள். புதிய ஏற்பாட்டின் சபை ஆரம்பமாயிற்று [அப். 2: 1-4]. பேதுருவின் முதலாம் பிரசங்கத்தைக் கேட்டு 3000 பேர் அந்த சபையோடு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் அது முதற்கொண்டு தேவன் மனுமக்களை இயேசுவோடும், சபையோடும் கூட்டிச் சேர்த்து வருகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து முழுகி ஞானஸ்நானம் பெற்று பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றுக் கொண்டவர்களே புதிய ஏற்பாட்டின் சபை.

[தொடரும்]

எங்களுக்கு கல்லறை வேண்டாம்

இந்நாட்களில் பெயர்கிறிஸ்தவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டும், மனந்திரும்பி பாவ மன்னிப்பிற்காக பாவ அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற வேண்டும் தூய்மையான வாழ்க்கை வாழ வேண்டும் என்று சொல்லி திருச்சபைக்கு வாருங்கள் என்று அழைப்புக் கொடுத்தால் உங்கள் சபையில் எல்லாவற்றையும் [illegible] இருக்கிறார்கள்? சொந்த [illegible] இருக்கிறதா? கல்லறைத் தோட்டம் இருக்கிறதா? என்று கேள்வி கேட்கிறார்கள்.

இன்று அநேக சபைகளில் மக்கள் [illegible] காரணம் இந்[illegible] பிறந்தால் பெயர் வைக்க வேண்டும்; ஞாயிறு தோறும் கடமைக்காக ஆராதனை செய்யவேண்டும் [illegible] சொந்தக்காரர்களை [illegible] வயது வந்து விட்டால் கல்யாணம் பண்ணி வைக்க சபையார் வேண்டும், மரணம் ஆகிவிட்டால் அடக்கம் பண்ண வேண்டும். இதுதான் சபையின் பணி என்று மக்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்!

இன்று அநேகருடைய சாட்சி என்னவென்றால் எனக்கு வேலை கிடைத்தது; எனக்கு பதவி உயர்வு கிடைத்தது, சம்பள உயர்வு கிடைத்தது, திருமணம் ஆனது, வீடு கட்டினேன், வியாதியில் இருந்து சுகம் அடைந்தேன் என்பதுதான். நான் இரட்சிக்கப்பட்டேன், பாவத்திலிருந்து விடுதலை பெற்றேன், [illegible] [illegible] இரட்சிக்கப்படுவதுதான் இவ்வுலகிலேயே மிகப் பெரிய அற்புதமாக இருக்கிறது. [illegible]

டைய வல்லமையினாலேயல்லாமல் மனித னுடைய முயற்சியினால் அல்ல.

இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1 கொரி. 15:19). நாம் பரலோக நன்மைகளை, மேலானவைகளை நாடும்போது இம்மைக்குறிய ஆசீர்வாதங்கள் தானாக நமக்கு கூடந்து வருகிறது. "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" (மத் 6:33).

ஒவ்வொரு மனிதனும் நிரந்தரமாக இந்த உலகில் வாழ்கிறதில்லை. ஆதாம் பாவம் செய்ததினிமித்தமாக மரணமானது மனித சமுதாயத்திற்கு சாபமாய் ஆனது. "மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார் தேவன் [ஆதி. 3:19]. மரணம் அடைந்த சரீரம் நல்லடக்கம் பண்ணப்பட வேண்டும். சரீர உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவர்கள் சரீரத்தை அடக்கம் செய்கிறார்கள் [1 தெச. 4:15-17]. அடக்கம் பண்ணப்படாமல் சரீரம் சிதரடிக்கப்படுகிறது சாபமாகும் [யேசபேல் - 2 ராஜா. 9:33-37].

அநேகருடைய சரீரங்கள் விமான விபத்துக்களிலும், சாலை விபத்துக்களிலும், தீ விபத்துக்களிலும் சிதறடிக்கப்படுகிறது. வட இந்தியாவில் பார்சி மக்கள் மரித்தவருடைய சரீரத்தை கழுகு தின்பதற்கு என்று வைக்கிறார்கள்; இந்துக்கள் சரீரத்தை எரித்துவிடுகிறார்கள்; ஏனென்றும் அவர்களுக்கு சரீர உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லை. மோசேயின் சரீரத்தை கர்த்தரே அடக்கம் பண்ணினார் [உபா. 34: 5,6: யூதா 9].

கல்லறை தோட்டத்தில்தான் அடக்கம் பண்ண வேண்டும் என்று கட்டாயம் அல்ல, அரசாங்கத்தார் ஒவ்வொரு ஊரிலும் நகரத்திலும், மாநகரிலும் ஒவ்வொரு மதத்தினருக்கும் கல்லறைத் தோட்டம் வைத்திருக்கிறார்கள். அதில் உரிமையாக நாம் போய் அடக்கம் பண்ணலாம். பரந்த இந்த பூமியிலே அடக்கம் செய்வதற்கு ஆறடி நிலம் கிடைக்காமலா போய் விடும்? ஏழை குடும்பங்களுக்கு சபையின் மூலம் பண உதவி செய்து பொதுவான கல்லறையிலோ சொந்த இடத்திலோ எவ்வளவு செலவானாலும் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகவே கல்லறை ஒரு பெரிய காரியம் அல்ல.

நம்முடைய மேலான விசுவாசம் என்னவென்றால் எல்லாரும் மரிக்க வேண்டியது கட்டாயம் அல்ல; சரீரம் அழிவைக் காணாமல், மரணத்தைக் காணாமல் எடுத்துக் கொள்ளப்படலாம். கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு (சங். 68:20). பரிசுத்தவான்கள் மரணத்தைக் காணமல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏனோக் (ஆதி. 5:24; எபி. 11:5), எலியா [2 ராஜா. 2:11] கர்த்தராகிய இயேசுவின் சரீரம் அழிவைக் காணவில்லை (அப். 1:9,2:24,31,32) நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து பின்பு பரமேறிப் போனார் [அப். 2:31,32]. அவர் சரீரத்தை வைத்த கல்லறை இன்னும் திறந்தே கிடக்கிறது

ஆத்தும இரட்சிப்பு மட்டுமல்லாமல் சரீர மீட்பு அடைவது விசேஷித்த சிலாக்கியமாகும் [ரோம. 8:23, 11,12, கலா 4-6, எபே. 1 6].

மறுரூபம் அடைதலைபற்றி கிறிஸ்தவ மண்டலத்திலே பல குழப்பங்கள் உண்டாகி இருக்கிறது. சிலர் அந்திக்கிறிஸ்துவின் உபதேசம் என்றும், பிசாசின் உபதேசம் என்றும் தூற்றித்திரிகிறார்கள். உயிர்த்தெழுதலைப்பற்றி இயேசுகிறிஸ்து சிலர்களுக்கு அறிவித்திருந்த போதிலும் அவர்கள் நம்பவில்லை. உயிர்த்தெழுந்து வி

டார் என்று சொன்னபோதும் நம்பவில்லை [லூக். 24;10,11]. இயேசு அவர்களை நோக்கி தீர்க்கத்தரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத இருதயமுள்ளவர்களே என்று கடிந்து கொண்டார் (லூக். 24:25-27). மரித்துப்போன லாசருவை உயிருடன் எழுப்புவதற்கு முன்பாக மார்த்தாளிடம் "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் இதை விசுவாசிக்கிறாயா? என்றார்" (யோவா. 11:25,26). மறுருபம் நடக்க கூடாத காரியமா? இது ஏற்கனவே நடந்ததும் நாம் எதிர்பார்க்கிற சம்பவமுமாயிருக்கிறது.

இயேசு இவ்வுலகில் இருந்தபோதே மறுருபமாய் தரிசனமானார் [மத். 17:1-3]. அப்போது மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்கு காணப்பட்டார்கள். மறுருபம் யோவேல் தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது யோவே. 2:7-9. அப். பேதுரு சிறைச்சாலையில் இருந்து வெளியே வந்த சம்பவம், சுவிசேஷகனாகிய பிலிப்புவை ஆவியானவர் வேறு இடத்திற்கு கொண்டு சென்ற சம்பவம் எலியா தீர்க்கத்தரிசி அடிக்கடி காணப்படாமல் போய் மறுபடியும் காணப்பட்ட சம்பவங்கள் பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட ஒருவகை மறுருப சம்பவங்களாகஎழுதப்பட்டிருக்கிறது. அப். பவுல் பரதீசுக்குள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பரம தரிசனங்களை கண்டதாக எழுதுகிறார் 2 கொரி. 12:1-4.

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன. நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுருபமாக்கப்படுவோம்.

"New Jerusalem News" ஆங்கிலப் பத்திரிக்கை வேண்டுவோர் தங்கள் விலாசத்தை ஆங்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் **(Capital Letter)** தெளிவாக எழுதி, பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்; இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

சந்தாவிபரம்:-

உள்நாடு ஆண்டு சந்தா Rs 40-00,
வெளிநாடு ஆண்டு சந்தா Rs 700-00,
(20 U.S. Dollars).

முகவரி:-
NEW JERUSALEM NEWS,
POST BOX NO: 17320,
MUMBAI-400 078,
INDIA

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும், அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி. 15:51-57).

மந்த இதயமுள்ளவர்களே! அவிசுவாசமுள்ளவர்களாக! உணர்வடையுங்கள்; மறுரூபத்தின்மேல் நம்பிக்கையாயிருங்கள், அப்படியில்லாதவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையில் கைவிடப்படுவார்கள்.

கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும். தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடுகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் (1 தெச. 4:15-17).

கர்த்தருடைய வருகையின்போது உயிரோடிருந்தால் நாம் மறுரூபமாக்கப்படுவோம். ஆகையால் கல்லறை வேண்டியதில்லை.

விசுவாசிகளே! சபையாரே! மறுரூபத்தில் நம்பிக்கை வையுங்கள். வாக்குத்தத்தம் நிறைவேற ஜெபம்பண்ணுங்கள். இவ்வுலக வாழ்க்கையிலும் மறுரூபத்தை எதிர்நோக்குங்கள். கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். "எங்களுக்கு கல்லறை வேண்டாம்!"

"....நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3:21).



விளக்குகள் எங்கே?

ஐரோப்பா தேசத்தின் ஒரு மலையடிவாரத்தில் ஒரு சின்ன கிராமம் இருந்தது. அதிலே ஒரு வயது சென்ற முதியவரும் வாழ்ந்து வந்தார். அங்குள்ள ஜனங்கள் தங்களுக்குள்ளே ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண இந்த முதியவரிடமே செல்வர். அவர் ஞானி மாத்திரமல்ல ஒரு செல்வந்தரும்கூட. அவருடைய ஆலோசனையே மக்களை நல்வழிபடுத்துவதாக இருந்தது.

ஒரு நாள் அந்த முதியவர் தனக்குள்ளே சிந்திக்கலானார். என்னுடைய ஆலோசனையை அவ்வப்பொழுது இந்த ஜனங்கள் கேட்டு அதின்படி நடந்து வருகிறார்கள், ஆகையால் நான் மரித்துப்போனபின்பு ஜனங்கள் என்னுடைய ஆலோசனையை மறவாமல் இருக்க என்ன செய்வது என்று தீவிரமாக சிந்தித்து கடைசியாக அந்த ஊரிலுள்ள மக்களுக்காக ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்று எண்ணி பணியையும் துவக்கினார். ஆனால் கட்டுமான பணியாளரிடம் ஒரு கட்டளையை பிறப்பித்திருந்தார். அது என்னவென்றால் இந்த ஆலயம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்படும்வரை இதன் உள்ளே எவ்விதம் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த ஊரிலுள்ள ஒருவரும் அறியக்கூடாது என்பதே அந்த கட்டளை.

சில மாதங்கள் உருண்டோடின. மக்கள் எல்லாரும் மிகுந்த ஆவலோடு ஆலயத்தை என்று நாம் உள்ளே சென்று பார்க்கமுடியும் என்று ஏங்கிக் கொண்டிருந்தனர். கடைசியாக பணிகள் எல்லாம் முடிவடைந்து ஆலய திறப்பு விழாவிற்கு ஊரிலுள்ள அனைவரும் வரவேண்டும் என்று முதியவர் கட்டளையிட்டார். எல்லோரும் பெருங்கூட்டமாக கூடி வந்தார்கள். ஆலயத்தின் வெளியிலே செய்யப்பட்டுள்ள பல வேலைப்பாடுகளை பார்த்து ஒவ்வொருவரும் புகழ ஆரம்பித்தனர். ஆனால் அவர்கள் உள்ளே சென்றபோதோ ஆலயம் முழுவதும் கும்மிருட்டாக காணப்பட்டது.

எல்லாரும் ஆலயத்தின் வெளிப்பாகத்தை இவ்வளவு அழகாக செய்து விட்டு உள்ளேயோ அதின் அலங்காரத்தை நாங்கள் பார்க்கக் கூடாதபடிக்கு இருக்கிறதே. "விளக்குகள் எங்கே?" என்று கேட்க ஆரம்பித்தனர். அப்பொழுது அந்த முதியவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விளக்கை கொடுத்து இதை பற்றவையுங்கள் என்றார். அவர்கள் எல்லாரும் தங்கள் தங்கள் விளக்கை பற்றவைத்தபோது ஆலயம் முழுவதும் பிரகாசமடைந்து அதின் அழகை முழுமையாக கண்டு களித்தார்கள்.

அப்பொழுது அந்த முதியவர் இவ்வாறு கூறினாராம். "சபை கூடிவரும்போதெல்லாம் நீங்கள் ஒவ்வொருவரும் வந்து, தங்கள் இடங்களில் அமர்ந்து தங்கள் விளக்கை பற்றவைக்க வேண்டும். அப்பொழுதே ஆலயம் முழுவதும் பிரகாசமடையும் ஆனால் ஒருவர் வர தவறினால் அந்த அந்த காலி இடத்தில் விளக்கின் வெளிச்சம் இல்லாமல் இருட்டாக இருக்கும். ஆகையால் தேவனுடைய வீட்டின் எந்த ஒரு சிறு பகுதியும் இருட்டாயிருப்பதற்கு யாதாமொருவன் காரணமாயிருந்து விடாதீர்கள்" என்று போதித்தாராம். அன்றிலிருந்து ஜனங்கள் சபை கூடிவருதலை விடாமல் இருக்க தீர்மானித்தது மாத்திரமல்ல தேவன் அந்த முதியவருக்கு கொடுத்த ஞானத்தை எண்ணி தேவனை துதித்தார்களாம்.

அதைப்போல நாம் ஒவ்வொருவரும் விளக்குகளாய் உள்ளோம். தேவனுடைய வீட்டை பிரகாசிப்பிக்க வேண்டியவர்கள் நாங்கள். இந்த விஷயத்தில் [illegible] உற்சாகம் [illegible] ஒருவருக்கொருவர் [illegible] தேவனுடைய இருதயத்தை சந்தோஷப் படுத்துவோமாக! (எபி 10:25)

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அதிகாரம்-14

இராயனின் அழைப்பும், கட்டளையும், லூத்தர் வேர்ம்ஸ் நகரத்திற்குபோன பிரயாணமும்.

சந்நியாசியாகிய மார்த்தின் லூத்தரை சுகபத்திரமாய் காத்துக் கொள்ளும், அவர் நமக்குத் தேவை என்று ராயன் நியமுகப் பிரபுவாகிய பிரதரிக் என்பவருக்குத் தாக்கீது அனுப்பினான். மார்க்ஸ்மிலியன் என்னும் ராயன் இறந்தபோது, அப்பட்டம் நியமுகப்பிரபு பிரதரிக் என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார், என்றபோதிலும் அவருடைய செல்வாக்கினாலே மார்க்ஸ்மிலியனுடைய பேரனாகிய ஸ்பானியா தேசத்து அரசன் சார்லஸ் என்பவர் கர்மானிய இரத்த சம்பந்தமுள்ளவரானதால் மெயின் ஆற்றங்கரையிலுள்ள பிராங்க்போர்ட் என்னும் நகரத்தில் 1519-ம் வருஷம் ஜூன் மாதம் 28-ம் தேதி சக்கரவர்த்தியாக நியமிக்கப்பட்டார்.

ஆனால் பாப்புவானவர் பிரான்ஸ் தேசத்து அரசனாகிய பிரான்ஸிஸ் என்பவரை சக்கரவர்த்தி ஆக்கும்படி தன்னால் இயன்றமட்டும் பிரயாசப்பட்டும் முடியாமல் போய்விட்டது. 1519-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ம் தேதி ஏய்லா சாபெல் என்னும் பட்டணத்தில் சார்லஸ் என்பவருக்கு பட்டாபிஷேகம் நடந்தது. பிரான்ஸிஸ் அரசனைக் கொண்டு சீர்திருத்தம் எங்கும் பரவாதபடி, தடை செய்யலாம் என்று பாப்பு எண்ணின எண்ணம் வாய்க்காதே போனது.

பாப்பு தன் பிரதிநிதியாகிய அலியாண்டர் என்பவனை கர்மானியாவுக்கு அனுப்பி லூத்தர் எழுதிய பிரசுரங்களை எல்லாம் சுட்டெரிக்க கட்டளையிட்டார். மேலும் அவர் லூத்தரை மரணாக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தும் ஒரு அதிகார பத்திரத்தை இராயனிடம் வாங்க வேண்டுமென்றும் கட்டளை அனுப்பினார். ஆனால் சக்கரவர்த்தி நியமுகப் பிரபுவாகிய பிரதரிக் என்பவரிடத்தில் இருந்த அபிமானத்தினிமித்தம் பாப்புவின் இந்த வேண்டுகோளுக்கு இணங்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார். பிறகு அலியாண்டர் நியமுகப்பிரபுவினிடம் போய் லூத்தரையும், அவருடைய எல்லா பிரபந்தங்களையும் உடனே அக்கினிக்கு இரையாக்க வேண்டுமென்று அதிகாரத்துடன் கேட்டான். இதற்கு பிரதரிக் பிரபு ஞானமாய் கொடுத்த மறுமொழியாவது "இவ்விஷயம் மகா பயபக்தியுடனே செய்ய வேண்டியது, இதை நினைத்தவுடன் நிறைவேறக் கூடியதல்ல" என்பதே.

இதற்குப் பிறகு நியமுகப்பிரபு லூத்தருடைய பிரபந்தங்களை சரியான விசாரணையின்றி அடாதவைகள் என்று தீர்ப்புச் செய்யக்கூடாது என்றும், லூத்தர் அபாயமின்றி பிரயாணம் செய்வதற்கு அவருக்கு ஒரு உயிர் பாதுகாப்புச் சீட்டு கொடுக்க வேண்டுமென்றும், லூத்தர் தம் எதிர் உரைகளையும், முறைபாடுகளையும் அறிவில் நிபுணரும், பாரபட்சமில்லாதவருமான நியாயாதிபதிகளால் ஆன ஒரு நியாயஸ்தலத்தில் நேரே சொல்லிக் கொள்ளும்படி அனுமதி அளிக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தி போராடினார்.

இந்த விவகாரத்தின் பயனாக லூத்தர் வேர்ம்ஸ் நகரத்திற்கு வந்து ஆஜராக வேண்டுமென்று ராயர் கட்டளை பிறப்

பித்தார். ராயனின் இக்கட்டளைக்கு லூத்தர் தாம் சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்கும்படி தம்மை அழைக்கும் தேவ அழைப்பாக எண்ணினார். அவருடைய சிநேகிதர்கள் அவருக்கு என்ன ஆபத்து நேரிடுமோ என்று நடுங்கினார்கள். ஆனால் அவரோ ஆண்மையும், அமைதியும் நிறைந்தவராய் இருந்தார். அழைப்புப்பத்திரம் பிரசுரமாகு முன் லூத்தர் சொன்னது. "பல்லக்கில் என்னை பலவந்தமாய் தூக்கிப் போனாலும், போக சம்மதிக்கிறேன். மறுதலிக்கவும்மாட்டேன், பயந்தோடவுமாட்டேன். மற்றெதையும் நான் செய்யலாமென்று எதிர்பாருங்கள்".

1521-ம் வருஷம் மார்ச் மாதம் 6-ம் தேதி அழைப்புப் பத்திரத்துக்கும் அத்துடன் உயிர்காப்புச் சீட்டுக்கும் சக்கரவர்த்தி கையெப்பமிட்டார் ஏப்ரல் மாதம் 2-ம் தேதி லூத்தர் தேவனுடைய ஆசீர்வாதத்திற்காக ஜெபித்து வேர்ம்ஸ் நகரத்திற்கு புறப்பட்டார். அவருடைய பிரயாணம் வெற்றி கோலமாய் இருந்தது. ஒவ்வொரு இடத்திலும் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து அவரை சூழ்ந்து கொண்டார்கள்.

அதில் ஒருவன் ஆ! நீர் உயிரோடு தகனிக்கப்படுவீர் என்று சொன்னான். அதற்கு லூத்தர் சொன்ன மறுமொழி "இது அவர்கள் வேர்ம்ஸ் பட்டணத்திலிருந்து விட்டன்பர்க் வரையில் அக்கினி வளர்த்து அந்த அக்கினி வானபரியந்தம் அளாவித்து, ஜுவாலித்து எரிந்தாலும், நான் அந்த அக்கினி ஜுவாலை வழியாய் சென்று அவர்கள் முன் நிற்பேன். நான் பயங்கர மிருகமாகி நீர் யானையின் வாயில் நுழைந்து அதன் பல்லுக்கிடையில் நின்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுவேன் என்பதே

பாப்பு மார்க்கத்தார் வெகு தந்திரமாய் சிக்கிங் என்பவரை அவருடைய அரண்மனையாகிய எபர்ன் பாக்கில் வந்து காணும்படி லூத்தருக்கு ஒரு அழைப்புக் கொடுத்து அவ்விடத்தில் லூத்தர், சக்கரவர்த்தியின் குடும்ப குருவாகிய கிலாப்பியோ என்பவரோடு சிநேகிதமான ஒரு சம்பாஷனை செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள். அதன் நோக்கம் லூத்தர் குறிக்கப்பட்ட காலத்திற்குள் வேர்ம்ஸ் நகரம் போய் சேராதபடி தடைபண்ணி இவ்விதமாய் சக்கரவர்த்தியால் லூத்தருக்குக் கொடுக்கப்பட்ட உயிர் காப்புச் சீட்டு அப்பிரயோஜனம் ஆக வேண்டுமென்பதே. லூத்தர் இந்த அழைப்புக்கு இணங்கியிருந்தால் வேர்ம்ஸ் நகரம் போய் சேர்ந்திருக்க முடியாது.

லூத்தர் அந்த அழைப்புக்கு அனுப்பிய மறுமொழியாவது சக்கரவர்த்தியினுடைய குடும்பக்குரு என்னுடன் பேச வேண்டுவாரானல் வேர்ம்ஸ் நகரத்தில் பேசிக் கொள்ளலாம் என்பதே. லூத்தருக்காக அதிக கவலையாயிருந்து அவருடைய சிநேகிதராகிய பாலாடின் என்பவர் லூத்தர் பரிச்சேதமாய் வேர்ம்ஸ் நகரம் போகக்கூடாது என்று சொல்லி, அப்படிப்போனால் யோவான்உஸ் என்பவருக்கு சம்பவித்ததுபோல் அவருக்கும் பிராண நாசம் நேரிடும் என்று ஞாபகப்படுத்தினார். இதற்கு லூத்தர் கொடுத்த மறுமொழி; "வீடுகளின், கூரைகளில் எத்தனை ஓடுகள் இருக்கின்றனவோ அத்தனைப் பிசாசுகள் வேர்ம்ஸ் நகரத்தில் இருந்த போதிலும், நான் போகவே போவேன்" என்பதே.

லூத்தர் ஏப்ரல் மாதம் 16-ம் தேதி காலை 10 மணிக்கு வேர்ம்ஸ் நகரத்திற்குள் பிரவேசித்தார். லூத்தர் பட்டணத்திற்குள் வந்து விட்டார் என்று ஜனங்களுக்கு தெரிவிக்க, அத்தியட்சர் ஆலயத்தின் உப்பரிக்கையிலிருந்து எக்காளசத்தம் தொனித்தது.

அதிகாரம் 15

லூத்தர் வேர்ம்ஸ் நகரத்தில், இராஜ்ய சங்கத்தின் முன் நின்றது:-

1521-ம் வருஷம் ஏப்ரல் 17-ம் தேதி பிற்பகல் 4 மணிக்கு லூத்தர் இராஜ்ய சங்

கத்திற்கு முன்பாக ஆஜராக வேண்டுமென்று கட்டளைபிறந்தது. ஜனங்கள் ஏராளமாய் கூடினார்கள். பிரதான வீதி ஜனக்கூட்டத்தால் வழியடைபட்டது. இந்த பக்திமானை சற்று பார்க்கும்படி சிறியோரும், முதியோரும் பேராவலோடு கூரையில் மேல் தொத்தித், தொத்தி ஏறினார்கள். அன்போடு அவர் பக்கத்தில் கிட்டிச் சேர்ந்தார்கள்.

ஒருவர் அவருக்கு எச்சரிப்பாய் ஆத்துமாவையல்ல, சரீரத்தை மட்டும் கொல்லக் கூடியவர்களுக்கு பயப்படாதிரும் என்று ஆற்றித் தேற்றினார். வேறொருவர் இயேசு கிறிஸ்துவுடைய வார்த்தைகளை அவர் காதில் ஓதினார் அவையாவன.

என்னிமித்தம் நீங்கள் ராஜாக்களுக்கு முன்பாக கொண்டுப் போகப்படுவீர்கள். அவர்கள் உங்களை ஒப்புக் கொடுக்கும் போதோவெனில் எப்படி அல்லது என்னத்தைப் பேசுவோம் என்று கவலைப்படாதீர்கள். ஏனெனில் பேச வேண்டியது அந்நேரத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படும் [மத். 10:18,19].

லூத்தர் இராஜ சங்கம் கூடியிருந்த மண்டபத்தில் பிரவேசித்த போது, கேயக் ஃப்ரூர்ஸ்புர்க் என்னும் பேர்போன யுத்தவீரர் அவருடைய புயத்தை தட்டி சொன்னதாவது. உம்முடைய போதகம் சரியானதும், உம்முடைய விவகாரம் உறுதியானதுமானால் நீர் தாழ்ந்து போகாமல், வேதாகமத்தில் உம்முடைய விசுவாசத்தை வற்புறுத்தும்; திட்டமும், தைரியமுமாய் இரும். தேவன் உம்மை கைவிடமாட்டார்" என்பதே.

(தொடரும்)



"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே..." (யோவா 5:39).



வேத பாடம்

(தொடர்ச்சி)

உபாகமம

உபாகமம் இஸ்ரவேலர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை, தேவனுக்கு பூரணமான ஒப்புக் கொடுத்தலும், கீழ்ப்படிதலும், அன்புமான மனம் ஆகிய இவற்றை தேவன் இஸ்ரவேலர்களிடத்தில் கேட்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் இவைகள் இஸ்ரவேல் மக்களுடைய பகிரங்க ஆராதனை, தனித்த வாழ்க்கை, இவைகள் சம்பந்தமான சட்டத்திட்டங்களை அடக்கியுள்ளன. ஆனால் உபாகமத்திலே சடங்குகளோ, ஆச்சாரக் கிரியைகளைப்பற்றியோ ஒன்றையும் நாம் வாசிப்பதில்லை. இஸ்ரவேலர்களுடைய சன்மார்க்க வாழ்க்கையைப்பற்றி உபாகமம் சுட்டிக் காட்டுகின்றது.

உபா. 1:1-5; 4:40

பதினொரு (11) நாள் பிரயாணத்திலுள்ள காதேஸ்பர்னேயா என்று எழுதப்பட்டிருக்கிறது. வனாந்திர முடிவிலே யோர்தானின் இக்கரையிலே இந்த உபந்நியாசம் முதலாவது மோசேயின் பிரசங்கம் செய்யப்படுகிறது. முதல் அதிகாரம் வசனம் 4ல் இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி தனக்கு கர்த்தர் விதித்த யாவையும் அவர்களுக்குச் சொன்னார். யோர்தானுக்கு இப்புறத்திலிருக்கிற மோவாபின் தேசத்தில் மோசே இந்த நியாயப்பிரமாணத்தை விவரித்துக் காண்பித்தார் என்று 5-வது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தனக்குச் சொன்னவைகளையும், கட்டளையிட்டவைகளையுமே மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசித்தார். நீ போய் அதை சுதந்தரித்துக் கொள் என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னார். வேவுகாரர்களை அனுப்ப தேவன் சொல்லவில்லை; நீ போய் அதை சுதந்தரித்துக் கொள் என்று தேவன் சொன்னார் 8,20,21-ம் வசனம். ஆனால் இஸ்ரவேலர்களோ வேவுகாரர்களை அனுப்பி அதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு மோசே அனுமதி கொடுத்தார் (உபா, 1:22,23).

இதன் மூலமாக நாம் அறிகிறது என்னவென்றால் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை தேவன் வாக்குத்தத்தம் கொடுத்தாலும் நாம் அதை சுதந்தரிக்க சந்தேகிக்கிறோம் என்று அறிந்து கொள்ள முடிகிறது. நீ போய் அதை சுதந்தரித்துக் கொள் என்று கர்த்தர் சொன்னார். ஆனால் அவர்கள் அவிசுவாசத்தினால் அதை சுதந்தரிக்க முடியாமல் போயிற்று எபி. 3:19. நாற்பது [40] வருஷமாக அவர்கள் நடந்தார்கள். தூரத்தினிமித்தம் அல்ல கீழ்ப்படியாமையின் நிமித்தம் மந்த நடையுடையவர்களாய் அவ்விதம் நடந்தார்கள். தேவன் மகா பொறுமையுள்ளவராய் அவர்கள் விசுவாசத்தைக் கற்றுக் கொள்ளும்படி அவர்களை 40 வருஷமாக நடத்தினார்.

பள்ளிக் கூடங்களில் ஒருநாள் ஒரு பாடம் சொல்லிக் கொடுக்கப்படும். அன்றைய தினத்தில் ஒரு மாணவன் வரவில்லை என்பதற்காக மறுநாள் அதே பாடம் திரும்பவும் சொல்லிக் கொடுக்கப்படமாட்டாது அடுத்தபாடம் நடந்துகொண்டிருக்கும். வராதிருந்த மாணவன் முதல் நாள் இருந்த மாணவனிடம் கேட்டு எழுதிக்கொள்ள வேண்டும், படித்துக் கொள்ள வேண்டும். ஆனால் ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் ஒருவருக்கு போதிக்கும் பொழுது, ஒரு படியைக் காண்பிக்கும் பொழுது, அதை அவர் முழுவதும் கற்றுக் கொண்டு அதில் ஏறும்வரைக்கும், தேறும் வரைக்கும் அடுத்த படியைக் காண்பிப்பதில்லை. "மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்கிற விசுவாசத்தை இஸ்ரவேலர்கள் கற்றுக் கொள்ள 40 வருஷங்கள் ஆயிற்று (உபா. 8:3,4). அப்படிக் கற்றுக் கொண்ட பின்பு அடுத்த படியைக் காண்பிப்பார். சிலர் வாழ்நாள் முழுவதும் ஒரு படி ஏறாமலேயே இருப்பர். இவ்வளவு மந்த நிலையில் [illegible] யும் இருந்தது.

இஸ்ரவேலர்கள் வேவுகாரர்களை அனுப்பி சோதிக்க விரும்பினர். மோசே அதற்குச் சம்மதித்தார்; கர்த்தரும் அனுமதி கொடுத்தார். ஆனால் அது தேவனுடைய சித்தமல்ல. தேவனுடைய சித்தம் என்பது வேறு, அனுமதி என்பது வேறு. பிள்ளைகள் பொ

றோர்களிடத்திலே வெளியே விளையாடப் போகும்படியாக கேட்பார்கள். இல்லை; இப பொழுது நீ போகக்கூடாது, நீ படி என்று பெற்றோர்கள் சொல்லியும் அவனுக்குப் படிக்க மனமில்லையென்றால், அவன் திரும்ப, திரும்ப [கொஞ்ச நேரம் போய் நான் விளை யாடி விட்டு வருகிறேன் என்று கேட்டால்] சரி போய் தொலை என்று சொல்வார்கள். இது அனுமதி ஆனால் பெற்றோர்களுடைய சித்தம் என்று சொல்லப்படுகிறது வேறு ஒன் றாகும். இப்படி கிறிஸ்தவ வாழ்க்கையிலே அநேகருக்கு தேவன் அனுமதி கொடுக்கிறார். ஆனால் அது தேவ சித்தமல்ல, அநேகருடைய ஊழியங்களும் இப்படியே; இவர்கள் போய் அந்த தேசத்தை சோதித்துப்பார்த்து நல்ல தேசம் என்று அறிந்த போதிலும் அவிசுவாசத்தினால் அவர்கள் போய் அதை சுதந்தரிக்க விரும்பவில்லை. இந்த காரியத ல் அவர்கள் கர்த்தரை விசுவாசியாமற் போனார்கள் [உபா. 1:33]. இவர்களிமித்தம் மாசே மேலும் கர்த்தர் கோபம் கொண்டார் (உபா. 1:37).

பிடிவாதமான ஜனத்திடம் பொறுமையிழந்து மோசே தேவ சமுகத்தில் பிரியமில் லாத காரியத்தைச் சொல்லவும், செய்யவும் நேரிட்டது. இக்காரணத்தினால் மோசே கானானுக்குள் பிரவேசிக்கக் கூடாமல் போயிற்று எண். 20:10-12. நமது பிரசங்கிமார், போதகர்கள் முற்றிலும் மனம் சோர்ந்துபோகும் வரை எத்தனை முறை நாம் குறை கூறிக் கொண்டிருக்கிறோம். நமது நிமித்தமாக அவர்களும் சோர்ந்து அவிசுவாசத்திற்கு ண்டனைக்கு நம்மோடுகூட பாடு அனுபவிக்கும்படியாக நேரிடுகிறது. உண்மையான றிஸ்தவ ஊழியர்களுக்கு விரோதமாக குற்றம் கண்டுபிடிப்பது எவ்வளவு தூரத்திற்கு மது சுய அவிசுவாசம் கீழ்ப்படியாமை என்பதை தேவ ஜனங்கள் கண்டுகொள்ள வண்டும். உண்மையான ஊழியர்களை குறை கண்டுபிடிக்கும் சுபாவத்தை நாம் விட்டு ட வேண்டும். மோசே இந்தக் காரியத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது இறைவன் அவர்களை நோக்கி நீங்கள் திரும்பி வனாந்தர வழியாய் நடவுங்கள் என்று சொன்ன பொழுது இவர்கள் ஒரு பொய்யான பாவ அறிக்கை செய்தார்கள். கர்த்தருக்கு விரோ தமாய் பாவம் செய்தோம் என்றார்கள் உபா. 1:41-46. இந்த பாவ அறிக்கை மிகவும் பிந்திபோயிற்று. அது உண்மையான மனஸ்தாபமுமல்ல. நெருக்கங்களின் மத்தியில் வெடுவெடுப்புடன் இணங்குவதாகும்,

வேவு பார்க்க போனவர்கள் நாம் வேவுபார்க்கபோன தேசம் நல்ல தேசம்தான் ஆனால் அங்கே உள்ள ஜனங்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்களும், நெடியவர்க ளும், அவர்கள் பட்டணம் பெரியவைகளும், வானத்தை அளாவும் மதில்களுள்ள நகர முமாயிருக்கிறது என்றும், ஏனாக்கின் புத்திரரையும் அங்கு கண்டோம் என்று நம்முடைய இருதயத்தை கலங்கப்பண்ணினார்கள் என்று சொன்னீர்கள்.

இஸ்ரவேலர்கள் துணிந்து யுத்தம் செய்ய மலையின்மேல் ஏறினார்கள் கர்த்தரு டைய ஆலோசனைக்கு மாறாக, கர்த்தர் கட்டளையிட்டபொழுது அதை சுதந்தரிக்க இவர்கள் விரும்பவில்லை. பிந்திக் கீழ்ப்படிகிறார்கள், பிந்திக் கீழ்ப்படிவது ஆரம்பத்தி லேயே கீழ்ப்படியாததற்கு ஈடு செய்யாது. உடனே கீழ்ப்படிவதுதான் சரியான விசுவா சம் முந்தி கீழ்ப்படியாமல் பிந்திக் கீழ்ப்படிந்தபடியினால் எந்த நன்மையும் இல்லை. கர்த்தர் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை. அவர்களுடைய சத்தத்தைக் கேட்கவும் இல்லை. தோல்வி உண்டாகி நஷ்டமடைந்தார்கள்.

(தொடரும்)

இலங்கை ஊழியம்

தலைமை போதகர் N. லாசர் அவர்கள் இலங்கை சுவிசேஷப் பிரயாணம்

18-9-1996--17-10-1996 வரை இலங்கையில் தெய்வபணியாற்றினார்கள்.

26-9-1996 வியாழன் வவுனியாவில் கட்டப்பட்டிருந்த "புதிய எருசலேம் சபை" தேவாலயத்தை திறந்து வைத்து, அருளுரை ஆற்றினார்கள். யுத்த நெருக்கடி மத்தியிலும் அநேக மக்கள் வந்து, ஆலயப்பிரதிஷ்டையில் கலந்து கொண்டார்கள்.

வவுனியா, திரிகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் கன்வென்ஷன்கள் நடைபெற்றன. வவுனியாவில் 9பேரும், திரிகோணமலையில் 25பேரும், கொழும்புவில் 11பேரும் ஆக மொத்தம் 45பேர் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்ந்து கொண்டார்கள்.

இலங்கை தலைநகராகிய கொழும்பு [வட்டாலா] வில் பாஸ்டர். ஜான் (பாஸ்டர் ஜான் பிள்ளை) மறுபடியும் திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் நடத்தி வந்த கூட்டம் புதிய எருசலேமாய் சேர்த்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்த "புதிய எருசலேம் சபை" கொழும்பு நகரத்திலும் ஸ்தாபிக்கப்பட்டது.

இப்படியாக தலைமை போதகர், N. லாசர் அவர்கள் இலங்கை சுவிசேஷ பிரயாணத்தை வெற்றிகரமாக முடித்து 17-10-1996 வியாழனன்று இலங்கையிலிருந்து சென்னை (தமிழ் நாடு இந்தியா) வந்து சென்னை சபையைச் சந்தித்து ஆசீர்வதித்து விட்டு 18-10-1996 வெள்ளிக்கிழமையன்று வெற்றிகரமாய் பம்பாய் தலைமை சபைக்கு வந்து சேர்ந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்ளுகிறோம். உங்கள் எல்லோருடைய ஜெபங்களுக்காகவும், உதவிகளுக்காகவும் நன்றி! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். விபரங்கள் பின்னால் வெளியிடப்படும்.

அறிவிப்பு

புதிய எருசலேம் சபையை, புதிய எருசலேம் சபையின் தலைமை போதகரும், அப்போஸ்தலருமாகிய பாஸ்டர் N. லாசர் அவர்களை, புதிய எருசலேம் சபையின் உபதேசத்தை குற்றம் சொல்லுகிறவர்களுக்கு ஒரு பகிரங்கஅழைப்பு :-

வருகிற 15-1-1997 புதன் 9 AM TO 7 PM வரை Coimbatore "புதிய எருசலேம் சபை" Compound ல் புதிய எருசலேம் சபையின் பொதுக்கூட்டம், (Genaral Body Meeting) நடைபெறுகிறது. சபையை விட்டு ஓடிப்போனவர்களாயிருக்கட்டும், பிரிந்து போனவர்களாயிருக்கட்டும், சபை நீக்கம் செய்யப்பட்டவர்களாயிருக்கட்டும், அப்படியே வெளியே உள்ள பிற கிறிஸ்தவர்களாயிருக்கட்டும்; அல்லது சபையின் உள்ளே சந்தேகமாயிருக்

கிறவர்களாயிருக்கட்டும் 15th Jan 1997 புதன் கிழமையன்று வந்து தங்கள் குற்றச் சாட்டுகளை ஆதாரத்துடன், சாட்சிகளுடன் வந்து நிரூபிக்கலாம் என்று இதன மூலம் அறிவிக்கப்படுகிறது.

சந்தேகங்கள் உள்ளவர்களுக்கு சந்தேகங்கள் நிவிர்த்தியாக்கப்படும்; VIDEO Set Up பண்ணப்படும் என்பதையும் முன்கூட்டியே அறிவிக்கிறோம்; தகுதியுள்ளவர்கள் வரலாம். அதைத் தொடர்ந்து 16,17,18 -1- 1997 வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களு ...ய எருசலேம் சபை ஊழியர் மாநாடு Coimbatore புதிய எருசலேம் ஆலயத்திலும் .0,21 -1- 1997 ஞாயிறு மாலை, திங்கள் மாலை, செவ்வாய் மாலை மூன்று (3) நாட்கள் புதிய ...சலேம் சபையின் Convention நடைபெறும் (Coimbatore Townshipல்) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அல்லேலூயா!

தலைமை போதகர் N. லாசர்,
புதிய எருசலேம் சபை,
Mumbai - 78,
India.

...றிஸ்மஸ் செய்தி

கிறிஸ்து பெருமான் தோற்று வாய்

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார் [யோவா. 1:1,2]. (வார்த்தை என்பது எல்லாவற்றையும் வெளிப்படுத்துவதே வார்த்தை) இதுவே கிறிஸ்துவின் வாழ்க்கை தொடக்கம். உலகப் பெரியார்களின் வாழ்க்கையை இவ்வுலகில் அவர்கள் தோன்றிய பிறப்புமுதல் கூறுதல வழக்கம். அதுவே அவர்கள் தோற்றம். எம்பெருமான் வாழ்க்கைத் தோற்றங் கூறுங்கால், அவரது நித்திய உலகத்தை நோக்குதல் வேண்டும். அவ்வுலகை நோக்கும்போது, நமது உலகம் தற்காலந் தோன்றிய தென்றறியலாம்.

நமக்குத் தெரிந்த இவ்வுலகையும், சூரிய, சந்திர, நட்சத்திரங்களையும், கிரகங்களையும், சடப்பொருள் வெளி, காலம் முதலியவற்றையுங் கடந்து நிலவும் நித்திய உலகம் உளது. அது தெய்வ உலகம். தெய்வ தூதர் உலகம். இவ்வுலகமும் மற்ற உலகங்களும் அதினின்றே தோன்றின.

அவ்வுலகை நாம் பார்க்க முடியாது. அதன் கண்டங்களையும், கடற்கரைகளையும் நாம் வரைய முடியாது. அவ்வுலகிலுள்ள பொன், வைரங்களின் காட்சியை நம்முடைய கண்கள் கண்டதில்லை. ஆயினும் அது நித்திய காலமாக நமக்கு எப்புறத்திலும் இருக்கின்றன. என்று நாம் விசுவா

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd No. 040088/84
Postal Regd. No. MH BY NE-94/95
Tamil Monthly Magazine

அல்லேலூயா! தேவனுக்கு மகிமை!!

ஆலய பிரதிஷ்டையும் கன்வென்ஷனும்

கர்த்தருக்கு ஆராதனை செய்ய வாருங்கள்.

தேவ கிருபையினால் கோயம்புத்தூரில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் புதிய எருசலேம் ஆலயத்தை 14-1-1997 செவ்வாய்க் கிழமை காலை 10 AMக்கு தலைமை போதகர் பாஸ்டர்: N. லாசர் அவர்கள் திறந்து வைத்து, பிரதிஷ்டை செய்து அருளுரை ஆற்றுவார்கள். அதை தொடர்ந்து பொதுக்கூட்டமும், ஊழியர் மாநாடும், 19,20,21-1-1997 ஆகிய நாட்களில் Coimbatore (கோயம்புத்தூர்) டவுனில் கன்வென்ஷனும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ADDRESS:-

"New Jerusalem Church"
Samanaickan Palayam,
No. 4 VeeraPandi -Post,
Coimbatore - 641019,
Tamil Nadu - India.

அறிவிப்புகள்

முழு இரவு விழிப்பு ஜெபம்

27 [வெள்ளி] டிசம்பர் 1996
23 [வியாழன்] ஜனவரி 1997
21 [வெள்ளி] பெப்ருவரி 1997

புதிய எருசலேம் செய்தி பத்திரிக்கை,
ஆண்டு சந்தா Rs 30-00
வெளிநாடு Rs 400-00

அனுப்ப வேண்டிய முகவரி:
CHIEF PASTOR N LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR
DARGA CROSS ROAD, BHANDUP,
BOMBAY-400 078, INDIA.

3. மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா [எண்] நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

4. பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்

5. "புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ. 30 [முப்பது] சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிக்கையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

Edited, and Published by: Chief Pastor N LAZAR, New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Mumbai-400 078 Printed at: NEW JERUSALEM Printing Work, Tilak Nagar, Bhandup, Mumbai-400 078